<u>இன்றைய உலகம்</u>

மலேசியா

நாற்பது ஆண்டுகளாக அனுபவமிக்க பத்திரிகையாளராக எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவர், திரு. சிவராம். செய்தி நிலையங்களுக்காகவும் அரசாங்க நிறுவனங்களுக்காகவும், சிங்கப்பூரின் தி ஸ்ட்ரெயிட் டைம்ஸ் (The Straits Times), ஹாங்காங்கின் தி சைனு மெயில் (The China Mail), பேங்காக்கின் தி ஷங்காய் ஈவினிங் போஸ்ட் (The Shanghai Evening Post), மெர்குரி ஆப் ஷங்காய் (Mercury of Shanghai), தி டெய்லி மெயில் (The Daily Mail), பம்பாயின் தி ஃப்ரி பிரஸ் ஜர்னல் (The Free Press Journal), கோலாலம்பூரின் தி மலேயன் டைம்ஸ் (The Malayan Times) முதலான பத்திரிகைகளிலும் இன்னும் பல பத்திரிகைகளிலும் திறமையாகப் பணியாற்றியவர். அவருடைய நூல்கள்: உருவாகி வரும் புது சயாம் (The New Siam in the Making), வியட்நாம் போர் ஏன்? (Vietnam War; Why ?), தில்லியை நோக்கி (The Road to Delhi).

மலேசியா

எம். சிவராம்

தமிழாக்கம் :

செ. இரவீந்திரன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புது தில்லி

1978, (1899)

விலை ரூ. 13-75

MALAYSIA (TAMIL)

விநியோகிப்பாளர் :

பாரி நிலையம்

59, பிராட்வே,

சென்னை—600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA. A-5, GREEN PARK, NEW DELHI-110 016, AND PRINTED BY TAX AND COMPANY LAW PRESS, GUINDY, MADRAS-600 032.

முகவுரை

மலேசியா பல்வேறு துறைகளில் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த நாடு. ஆசியாவின் ஒரு சில நாடுகளே மண் வளம் மிக்கனவாகவும், விருந்தோம்புதலில் மிக்க விருப்ப முடைய மக்களைக் கொண்டதாகவும், பரந்துபட்ட பொது நோக்குடைய வாழ்க்கை வழிமுறை பெற்றதாகவும் வசதிகளையும் வாய்ப்புகளையும் உடையதாகவும் உள்ளன. 1957ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் தேதி மலேயா கூட்டாட்சி சுதந்திரப் பிரகடனம் செய்ததிலிருந்து, மலேசியாவின் வரலாற்றிலே அமைதியான சாதனையே அதன் அடி நாதமாக இருந்து வந்திருக்கின்றது.

1963ஆம் ஆண்டு மே மாதம் இந்தோனேசிய எதிர் தாக்குதல் போருக்கு இடையே அமையப் பெற்ற மலேசியாவின் வளர்ச்சி, ஆசியாவின் அநேக நாடுகளைப் போலல்லாமல் குறிப்பிடத்தக்க முரணிய நிலையில் காணப்படுகிறது. இராணுவத் திடீர்ப் புரட்சிகளின்றி, பிறநாட்டு மூலதனங்களைத் தேசீயப் பொதுவுடைமை யாக்காமல், மொழி மற்றும் பிற பிரச்சினைகளின்மீது இரத்தக் களறியின்றி, மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்ந்து மேன்மையுற்று வந்திருக்கிறது.

1969ஆம் ஆண்டில் நடந்த மூன்றும் பொதுத் தேர்தல் முடிந்த உடனே தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சந்திப்பு மையமான மலேசியாவில் பல்வேறு இன மக்கள் சேர்ந்து வாழும் சமுதாயம் அமைக்க வேண்டும் என்னும் மலேசியாவுக்குப் பெருமை அளிக்கும் சோதனையானது, கோலாலம்பூர் வீதிகளில் தவிடுபொடியாகியது. பின்னல் நடந்தது என்னவென்றுல் மலேசியாவில் பெரும் பகுதிகளை ஆயுதக் கலவரத்திஞல் ஏற்பட்ட இரத்த வெறி அடித்துச் சென்றதேயாகும். பாராளுமன்ற முறை அகற்றப்பட்டு, அவசரகால நிலை அறிவிக்கப்பட்டதோடு, மேலும் தேசீய நடவடிக்கைச் செயல்முறைக் கழகம் (National Operations Council) ஒன்று தலைநகரத்தி லுள்ள பாராளுமன்றக் கட்டடத்தில் நிறுவப்பட்டது.

ஆளுங்கட்சியான அலயன்ஸ் கட்சி (Alliance Party), ஐக்கிய மலேய தேசீய நிறுவனம் (United Malay National Organisation), மலேசிய சீனச் சங்கம் (Malaysian Chinese Association), மலேசிய இந்தியக் காங்கிரஸ் (Malaysian Indian Congress) முதலியவற்ருேடு கூட்டுச் சேர்ந்து வெளியிட்ட தனது தேர்தல் அறிக்கையில் "எல்லோரும் ஓர் இனம் என்னும் சமநிலை பாதிக்கப்படும்போது நாட்டுப் பிரிவினையும், அதஞல் விளையும் படுகொலையும் தவிர்க்க முடியாத நடைமுறையாகிவிடலாம்" என்று கூறியது.

1969ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி, அந்தக் கடுமையான எச்சரிக்கை உண்மையானது. கலகங்கள் பரவ ஆரம்பித்த சில நாட்களிலே, மலேசியா முடமாக்கப் பட்டது போலாகிவிட்டது. ஆஞல் அரசாங்கம் திறமை யாகச் செயல்பட்டதால் மலேயர்கள், சீனர்கள், இந்தி யர்கள், மற்றும் பல்வேறு இன மக்களிடையே நம்பிக்கை நிலைநாட்டப்பட்டது. சிறிது சிறிதாக மலேசியா அமைதி நிலைக்கு வந்தது. இந்த ஆண்டு பாராளுமன்றம் திரும்பக் கூட்டப்பட்டது. இன ஒற்றுமை ஏற்பட்டது. மேலும் நாட்டுக்கு என்றுமில்லாத அமைதியான வாழ்வு திரும்ப வந்தது.

மலேயர்களுக்கும் மலேயர்களல்லாதவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையைத் தீர்த்து வைப்பதில் மலேய அரசியல் நயத்திறம் வெற்றி பெற்றது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. மாறிவரும் சமூகச் சூழலுக்கேற்ற வாறு தங்களை மாற்றிக் கொண்டுவரும் மலேயர்களல்லா தவர்களில் குறைந்தது பத்து லட்சம் பேர் இந்தியர்கள், இந்தியர் வழிவந்தவர்களாவர். பொதுவாக மலேசியாவில் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய ஐயத்துக்குட்பட்டவர்கள் மெது வாக இந்தியாவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நூலில் நான் மலேயாவின் மற்றும் மலேசியாவின் மெர்டேகாவரைக்குட்பட்ட பதினைந்து வருடங்களின் வரலாற்றினைச் சொல்ல முயற்சி செய்திருக்கின்றேன். பல்வேறு காலங்களில் ஏற்பட்ட இடைவேளைகளைச் சேர்த்து மொத்தமாக நாற்பது ஆண்டுகளாகப் பத்திரிகை யாளன் என்ற என்னுடைய தொழில் முறையினால் மலேயா நாட்டையும் தென் கிழக்கு ஆசியாவின் எல்லாப் பகுதிகளையும் அறிந்தவன் நான்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் இயக்கத்தைச் சேர்ந் தவனாக, இரண்டாம் உலகப் போர் நடந்த வருடங்களில் சிங்கப்பூரிலும் மலேயாவிலும் வேலை பார்த்தேன். 1957ஆம் ஆண்டில், மெர்டேகா விழாவின்போது, அகில இந்திய வானொலிச் செய்திகள் ஒலிபரப்பு இயக்குநர் என்ற முறையில் கோலாலம்பூர் சென்றேன். 1962ஆம் ஆண்டுக்கும் 1965ஆம் ஆண்டுக்கும் இடையே, நான் கோலாலம்பூரில் ‘மலேயன் டைம்ஸ்’ பத்திரிகையின் ஆசிரியனாக இருந்தபொழுது அந்நாட்டுத் தலைவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன். மலேசியா புதிய நாடாக உருவெடுத்ததையும் அதன் பின்னால் வேகமாக நடந்தேறிய நிகழ்ச்சிகளையும்நேரடியாகக்கண்டறிந்தவன்.

1929–1930 ஆண்டுகளின் பிற்பகுதியில் சிங்கப்பூரிலும் மலேயாவிலும் பல செய்தித் தாள்களில் பணிபுரிந்திருக் கிறேன். கோலாலம்பூரில் 1966ஆம் ஆண்டிலிருந்து

1967ஆம் ஆண்டு வரை, தென்கிழக்காசியப் பத்திரிகை நிறுவனத்தில் ஜூரிக்கிலுள்ள உலகப் பத்திரிகை நிறுவனத்தின் ஆலோசகராகப் பணிபுரிந்தது மலேசியாவில் நான் வகித்த கடைசிப் பதவியாகும்.

இந்த எல்லாத் தொடர்புகளும் சில வேளைகளில் என்னை ஏறக்குறைய மலேசியாவின் குடிமகனாகவே ஆக்கிவிட்டது. அந்த எண்ணத்தில்தான் உண்மையிலே நான் மலேசியாவில் நல்ல முறையில் செயலாற்றினேன். என்னுடைய சொந்த நண்பர்களைப்போலக் கூடியவரையில் மலேசியாவின் தலைவர்களை எண்ணவும், அதைப் போன்று சமூகத்திலுள்ள எல்லா மக்களிடையேயும் நண்பராகப் பழகவும் முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

உண்மையிலேயே இந்தச் சின்னஞ்சிறு நூலில் என்னால் மலேசிய வாழ்வின் பல்வேறு வகையில் பரந்துபட்ட பகுதிகளை எடுத்துச் சொல்ல முடியவில்லை. இந்த நூலில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட குறிப்புக்கள் என்னுடைய தன்னனுபவக் கல்வியாலும், கூர்ந்த நோக்காலும் பெறப்பட்டவைகளாகும். மலேசியாபற்றிய இச் சிறு நூலில் உள்ளடக்க மிகவும் வெவ்வேறு வகையினதாகவும் எண்ணற்றதாகவும் அவை உள்ளன.

நம்முடைய நண்பர்களும், பகைவர்களும், நம்மவர்களும் உலகம் நம்மைத் தவறாகப் புரிந்துகொள்ளுமாறு இயன்ற எல்லா முயற்சிகளும் செய்து வருகின்றனர் என்றாலும், மலேசியா என்ற ஒரு நாடுதான் இன்னமும் இந்தியாவையும், இந்தியர்களைப்பற்றியும் நன்கு புரிந்துகொண்டிருக்கிறது என்பது மலேசியாவைப்பற்றிய என்னுடைய உறுதியான கருத்தாகும்.

எம். சிவராம்

உள்ளடக்கம்

விளக்கப் படங்களின் பட்டியல்

படம்

1. இஸ்லாம் மதத்தின் 5 தூண்களையும் மலேசியாவின் 13 மாநிலங்களையும் குறிக்கின்றதொரு 18 பக்க நட்சத்திர வடிவம் கொண்ட கூறையையும் 240 அடி உயரம் கொண்ட கோபுரத்தையும் உடையதும், பொதுவாக எல்லோராலும் மஸ்ஜித் நெகரா என அழைக்கப்படுவதுமான தேசிய மசூதி.

2. மலேயாவின் மண்பாண்ட வேலையில் உள்ளூரிலிருந்து எடுக்கப் பட்ட சீனக் களிமண்ணும் சுண்ணும்பும் உபயோகிக்கப்படு கின்றன. படத்தில் ஒரு சீனர் தம்முடைய திறமை வாய்ந்த விரல்களால் குயச் சக்கரத்தில் பாத்திரங்களை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

3. விலை மலிவாகவும், குளிர்ச்சியாகவும், இலேசாகவும், கண்ணைக் கவரும் பலவித வண்ணங்களில் கிடைக்கும் "மெங்குவங்" (Menkuang) சிசல் நாரினால் செய்யப்பட்டது. இத் தொப்பிகள் சுற்றுலா வருவோர்களின் கண்ணைக் கவரவல்லன.

4. "கெபாயா" (Kebaya —ரவிக்கை) வும், பாதி "சராங்கும்" (Sarong —மேலாடை) அணிந்த உள்ளூர் அழகி.

5. நம்பிக்கையுடனும் திடமான கையோடும் சித்திர வேலைப் பாடமைந்த அணிகலன் ஒன்றை உருவாக்கி வரும் கெலந்தன் வெள்ளி வேலை செய்பவர்.

6. தகரச் சுரங்க மூலப் பொருள்களைச் சேறு வாரும் இயந்திரமானது தண்ணீரை வெளியே பாய்ச்சியும் தகரங் கலந்த மண்ணை வெளியே தள்ளியும் தகரத்தையும் மண்ணையும் பிரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது.

7. ஜப்பானுக்காக ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பான்மையான பொருள்களுள் ஒன்றான உருட்டுக் கட்டைகள் சபாவிலுள்ள தவாவு (Tawau)விலிருந்து கப்பலுக்கு ஏற்றப்படுகின்றன.

8. தென்னையின் முக்கியப் பொருளான தென்னை நார் கொண்டு செய்யப் படும் கயிறு திரித்தலும், தரை விரிப்புகள் செய்வதும் மலேசியாவின் இரண்டு முக்கிய குடிசைத் தொழில்களாகும்.

9. சுத்தப்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகளுக்கு ரப்பர்ப் பால் வண்டிகள் (Tankers) மூலம் ரப்பர்ப் பால் கொண்டு செல்லப் படுகிறது.

10. உலகத்தின் தேவைக்கான தகரத்தில் 40 விழுக்காடுகளுக்குக் குறை வில்லாமல் மலேசியாவிலிருந்து வழங்கப்படுகிறது. படத்தில் பல லட்சக்கணக்கான விலையுள்ள தகர வாரி இயந்திரம் இயங்குவதைக் காணலாம்.

11. ஜோகோரிலுள்ள ஒரு தோட்டத்திலிருந்து ஒரு நாளில் சேகரித்த அன்னாசிப் பழங்கள்.

12. ரப்பர் வெட்டுதல்—ரப்பர்ப் பால் வடிவதற்கு ஏற்ற வகையில் 1/16 அங்குல அளவிற்கு மரப்பட்டையை வெட்டுவதில் திறமை தேவைப்படுகிறது.

வண்ணப் படங்கள்

1. மெர்டேகா

1957ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ஆம் நாள்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மையமும், பஸிபிக் கடலுக்கும் இந்தியப் பெருங்கடலுக்குமிடையேயுள்ள அழகிய பைம்புலமும் ஒற்றுமையோடும் அமைதியோடும் வாழுகின்ற எழுபது லட்சம் மக்களைக் கொண்டதும், உலகப் பொது நோக்குடைய சமூகத்தை யுடையதுமான மலேசியக் கூட்டாட்சி நாடு—ஆசியாவின் ஒரு புதிய நாடாகப் பிறப்பெடுத்தது.

மெர்டேகா. சுதந்திரம்.

இந்தச் சொல்லிலே மந்திரம் உண்டு. அந்த நாளில் மலேயாவில் எங்குப் பார்த்தாலும் சிறப்பு வாய்ந்த புதிய சுதந்திர நாடெனப் பறைசாற்றும் "மெர்டேகா" என்ற சொல், தாய்லாந்துக்குக் கீழேயுள்ள தென்கிழக்கு எல்லைப்புறத்திலிருந்து, ஆசியாக் கண்டத்தின் முனையிலே இருக்கின்ற வளர்ந்து வரும் சிங்கப்பூர் துறைமுகம் வரை, நாடு பூராவும் திரும்ப எதிரொலிக்கும் குரலாக இருந்தது.

கூட்டாட்சித் தலைநகரான கோலாலம்பூரிலும், மலேயா ஆற்றங் கரைகளில் அமைந்துள்ள சிற்றூர்களிலும், மலைப்பக்கங்களிலே அமைந்துள்ள உழவர் குடில்களிலும், கடற்கரையிலுள்ள செம்படவர்க் குடிசைகளிலும், குறுக்கும் நெடுக்குமாக வளர்ந்துள்ள ரப்பர்த் தோட்டங்களிலும், தகரச் சுரங்கங்களில் ஓயாது ஓடிக் கொண்டிருக்கும் மண்வாரிகளைச் சுற்றியும்—நாடு முழுவதிலும் அணையிட முடியா மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அடையாளமாக ஒரு விழாக் கொண்டாட்டமாக இருந்தது.

பதினொன்கு வருடங்களுக்கு முன்னால் அந்த நாளிலே, கோலாலம்பூர் கற்பனை நகரமாக, எல்லாப் பக்கங்களிலும் விளக்குகள் ஒளிகாட்ட, காற்றிலே கொடிகள் சிறகடித்துப் பறக்க, மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய மக்கள் கூட்டங்கள் வீதிகளில் நடமாட, மன்றங்களிலும், கழகங்களிலும், உணவு விடுதிகளிலும்

(ஹோட்டல்களிலும்) கண்கவர் விருந்துகளும் விழாக்களும் நடைபெறும் நகரமாகக் காட்சியளித்தது. அதே களியுணர்வு பணவசதி பெருகிய சிறு நகரங்களிலும், சிற்றூர்களிலும், நாடு முழுவதிலும் பரவியிருந்தது.

நல்ல சிவப்பிலே வெண்கோடிட்டு அதன் உள்ளே நீல நிறமுடைய கால்பங்குப் பகுதியிலே பிறையும் பதினொரு நட்சத்திரமும் கொண்ட மலேசியக் கூட்டாட்சி நாட்டின் கொடி, சிறியதும் பெரியதுமாக மொத்தத்தில் எங்குப் பார்த்தாலும் பறக்க விடப்பட்டிருந்தது. முன்பொரு காலத்தில் சேருக இருந்த ஆற்றின் சங்கமுகப் பகுதியிலே எழுப்பப்பட்ட வானளாவிய கட்டடங்களின் மேலேயும் நிறைய கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

உலகின் பல்வேறு இனச் சமூகங்கள் இணையும் இடமாக ஆக்கும் பணியினால் வேகமாக இன்று வளர்ந்துவரும் நகரம், ரப்பர் வளம் பொருந்திய மலேயாவிலுள்ள கோலாலம்பூர் நகரம், ஒரு காலத்தில் ஆங்கிலேயர்களின் குடியேற்ற உரிமைக் கோட்டையாய், வங்காள விரிகுடாக் கடலில் தானே ஓடித் தூர்ந்து கிடக்கும் ஆறு கடலோடு கலக்குமிடத்தில் உண்மையிலேயே அன்று பொய்க்கால்களில் நிற்கும் சிறு நகரமாகத்தான் இருந்தது.

1957ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கோலாலம்பூர் கொண்டாட்டங்களும் விழாக்களுமுடைய நகராக இருந்தது. அந்த நாள், பதினைந்கு வருடங்களுக்கு முன்னால் மலேயாவின் சுதந்திர நாளாக இருந்தது.

வரலாற்றுப் புகழ் வாய்ந்த அன்று, கோலாலம்பூரில் உள்ள மெர்டேகா அரங்கத்திலிருந்துகொண்டு மலேயாவின் பிறப்பை அறிவிக்கும் அரசாங்க விழாவின் பொலிவான தோற்றத்தைக் கண்டேன். ஆனால், அந்த நிகழ்ச்சிக்குச் சிறிது முன்னால் பெய்த சிறு தூறலானது நன்னிமித்தமாகத் தோன்றவே மக்களின் உற்சாகம் கரைபுரளத் தொடங்கியது. அரங்கம் பாதி ஈரமாயிருந்தது. எங்குப் பார்த்தாலும் நல்லெண்ணம் நிரம்பியிருந்தது. தேசீய உணர்வும் தேசீயத் தன்னம்பிக்கையும் ஒளி வீசத் தொடங்கின.

பல்வேறு வண்ணங்களாலான சாராங்குகளைத் தொள தொள வென இருக்கும் காற்சட்டைகளுக்கும், சட்டைகளுக்கும் மேலாகத் தங்கள் இடுப்பிலே சுற்றிக்கொண்டு விழாக்கோல உடையில் காட்சியளிக்கும் மலேயர்களும், தங்கள் பாரம்பரிய உடைகளில் சீனர்களும், சேலையணிந்த இந்தியப் பெண்களும், எல்லா நாட்டி லிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுள் தங்கள் நாட்டுடையிலே வந்திருந்தவர்களும், மற்றும் கண்கொள்ளா மக்கள் கூட்டத்தாலும் மெர்டேகா அரங்கமானது நிரம்பியிருந்தது. மிடுக்கான நடை யுடன் பொலிந்த தோற்றத்துடனும் கூடிய சாரணர் படைகளும், பெண் வழிகாட்டிகளும், தேசீய மாணவர் படையினருமாக நீண்ட தொரு வரிசையாய் அணிவகுத்து நின்றனர்.

சிவப்பும் பொன் முலாமிடப்பட்ட இடம் நிகழ்ச்சியின் கண் கவர் மையமாக இருந்தது. மேடையின் நடுவில் மலேயாவின் ஆளுநர்களுக்கும், பிரிட்டிஷ் முடியரசின் பிரதிநிதிகளுக்கும், அவர் களுக்குப் பாதுகாப்பாகச் சீருடைகளில் வந்திருந்த அரசாங்க அலுவலர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் நீண்ட சித்திர வேலைப் பாடமைந்த பெரியதொரு மேசை போடப்பட்டிருந்தது.

தங்கள் நாட்டின் சுதந்திரத்தை வரவேற்பதற்காக மலேயாவின் சுல்தான்களும் அரச குலத்துக்குரிய எல்லாவிதமான ஆடம்பரத் துடனும் ஒவ்வொருவராக வந்து சேர ஆரம்பித்தார்கள். மலேயக் கூட்டாட்சி நாடானது, 1957ஆம் ஆண்டில் இருந்தது போல முன்பிருந்து சுல்தான்களுடைய நிலப் பகுதிகளும், தீபகற்பகத்திலுள்ள பிரிட்டனின் இரண்டு குடியேற்றப் பகுதி களும் சேர்ந்த பதினொன்கு மாநிலங்களைக் கொண்டது. ஐந்தாண் டுக்கு ஒரு முறை எனத் தேர்ந்தெடுக்கப்படும் மாநிலப் பிரதி நிதிகளைப் போல, உலகின் முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்—கூட்டாட்சியின் தலைமை ஆளுநர் தான் விழாவுக்குக் கடைசியாக வந்து சேர்ந்தவர்.

பிறகு, வரலாற்றுப் புகழ் வாய்ந்த அந்தக் கூட்டத்திற்கு அரசியால் அரசிக்குப் பதிலாக அனுப்பப்பட்ட கிளஸ்செஸ்டர் பிரபு வந்தார். விழாவின் சம்பிரதாயச் சடங்குகள் முடிந்த பிறகு, பிரபு, அரசியின் நல்வாழ்த்துகளை மலேயா மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மலேயாவின் ஆளுநர்களுக்கும் மக்களுக்கு

மாக, புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கும் மாற்றத்திற்கான பேச்சுவார்த்தையை முதலில் தொடங்கிவைத்த, கூட்டாட்சியின் பிரதம மந்திரியான துங்கு அப்துல் ரகுமானிடம், அதிகார மாற்ற அரசியலமைப்புச் சாஸனத்தை வழங்கினார்.

துங்கு அப்துல் ரகுமான் அவர்களை வெகு காலமாக எனக்குத் தெரியும். மெர்டேகா நிகழ்ச்சியின்போது மெர்டேகா பற்றிய அதிகாரபூர்வமான அறிக்கையை வானொலிக்காகப் பதிவு செய்து விட்டு, மலேயா வானொலி நிலையத்தை விட்டு வெளியே வரும் பொழுது சந்தித்தேன். அவர் மகிழ்ச்சியான மனோநிலையில் இருந்ததோடு நிலையத்திலிருந்து திரும்பிவந்தவுடனே முன்னறிவிப் பின்றி அகில இந்திய வானொலிக்காக என்னிடம் பேட்டி கொடுத்தார்.

ஆனால், அந்தக் காலை நேரத்தில் மெர்டேகா அரங்கத்தில் உணர்ச்சியினால் தன் வார்த்தைகள் தடைபடவும், கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பவும் துங்கு அறிக்கையை வாசிப்பது, மனம் ஒன்றிய உள்ளத்தோடும் பயபக்தியுடனும் வாசிப்பதாக இருந்தது.

அடுத்த வினாடியே மலேயாக் கூட்டாட்சியின் கொடியானது மெதுவாக அழகாகப் பிறையும் நட்சத்திரமும் காலைக்கதிரவனின் ஒளியில் ஒளிவீசக் கொடிக்கம்பத்தில் ஏற்றப்பட்டது. அரங்கின் மேலே பரிபூர்ணமான தெய்வீக அமைதி இறங்கியிருந்தது. தொழுகைக்காக அழைக்கப்படும் வாத்திய ஒலிகளுக்கிடையே ஆகாயத்தை நோக்கித் தன் உள்ளங்கையை உயர்த்திக்கொண்டு தொளதொளவென ஆடையணிந்த வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரிய ஒரு வயதான முஸ்லிம் பக்திமான் முன்னால் வந்தார். மேலும், கடைசியாக ஆசியாவின் இன்னுமொரு புதிய நாடான மலேயாக் கூட்டாட்சியின் பிறப்புக்கு அடையாளமாக முரசங் களின் முழக்கமும், நூற்றியொரு துப்பாக்கிகளின் வெடியோசை யும் வணக்கம் தெரிவித்தன.

1957ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் மலேயாவின் மெர்டேகா ஆசிய எழுச்சியின் ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

1943ஆம் ஆண்டு கோடைக்காலம், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் திருப்பு மையமாக இருந்ததால் அதுவே ஆசிய நாடு

களுக்குச் சுதந்திரத்தின் முதல் மினுமினுப்பையும், பிறகு ஆதிக்கவாதிகளின் நுகத்தடியில் பூட்டப்பட்டுப் புலம்பவும் அல்லது வேற்றுநாட்டவர்களின் இராணுவக் குடியேற்றத் தினையும் கொண்டு வந்தது எனலாம்.

அந்த வருடம் ஐரோப்பாவில் ரஷ்ய ஜெர்மானிய யுத்தம் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. பிரிட்டனின் எதிர்ப்பானது குறைய ஆரம்பித்தது. அமெரிக்க ஐக்கிய நாடு களின் கடற்படையை ஜப்பானியர்கள் பன்னிரு தடவைக்கு மேலே மொத்தத்தில் அழித்திருந்தாலும், அவைகளின் நடமாட்ட மும் இயக்கமும் பஸிபிக் பெருங்கடலில் இன்னும் இருந்து கொண்டிருப்பதாகத்தான் தெரிந்தது. மலேயா, சிங்கப்பூர் இன்னும் பல தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஜப்பானியர்களின் ஆதிக்கத்தின்கீழ் அடங்கியிருந்தன. ஜப்பானின் பெரிய தென் கிழக்காசிய எல்லைக்குள் கிட்டத்தட்ட எங்கும் அமைதியின்மை யும், அதிருப்தியும், ஜப்பானிய எதிர்ப்புக் கொரில்லா யுத்த முறைகளும் பரவியிருந்தன.

நெருக்கடியான நேரத்தில் டை டோவ அறிக்கை எனப்படும் (Dai Toa Declaration) புதியதொரு முடிவினைக் கைப்பற்றிய நாடுகளில் உள்ள ஆசியாவினர்களுக்காக வெளியிட்டது. இந்த அறிக்கை யில் பர்மாவுக்கும், இந்தோனேஷியாவுக்கும், பிலிப்பைன்சுக்கும் சுதந்திரம் வழங்கவும், மலேயா மற்றும் பிரிட்டனின் ஆதிக்கத்திற் குட்பட்ட நிலப்பகுதிகளுக்குச் சிறப்புச் சலுகை அளிக்கவும் உறுதிமொழி கூறப்பட்டது. கடுமையான பஞ்சத்திற்கும், இரக்கமற்ற கொடுங்கோலாட்சிக்குமிடையே அந்த நாளில் தென் கிழக்கு ஆசியாவில் சிலர் டை டோவ அறிக்கையில் கவர்ச்சி யடைந்தனர். போரில் யார் எப்படி வெல்லுவார்கள் என்பது கொண்டு சில மக்கள் இதுவே விரைவில் வரப்போகும் மிகப் பெரிய மாறுதல்களுக்கு முன்னோடி என்று கற்பனை செய்தார்கள்.

ஏறக்குறைய டை டோவ அறிக்கை வெளிவந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஐரோப்பாவின் பணிவிற்குப் பின் சண்டை முடிந்தது. ஆனால், சண்டைக்குப் பின்னால் ஆசியாவின் மறுமலர்ச்சியாக இருந்தபோதிலும், அதுவரைக்கும் ஆசியாவின் முகத்தோற்றத்தில் மாற்றம் ஏற்படத் தொடங்கியிருந்தாலும்,

அம் மறுமலர்ச்சியே ஆசியாவுக்கு அருறுடைய பிரச்சினைகளை உண்டுபண்ணியதோடு, அது கால் நூற்றுண்டளவில் கணிசமான அளவுக்கு உலக நிகழ்ச்சிகளுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளது.

மாற்றத்தின் காற்றுனது ஆசியா எங்கும் வேகமாக வீசப்பட்டு ஆப்பிரிக்காவிலும் உடனே பரவியது. கலகங்களுக்கும் நெருக்கடிகளுக்கும், வழக்குகளுக்கும், சோதனைகளுக்கும், தோல்விகளுக்கும் வெற்றிகளுக்கும், ஆசிய ஆப்பிரிக்க மக்களுக்கு வெறுப்பூட்டும் ஒரு கொள்கையின் பின்னணியில் புதிதாக வருகின்ற ஏகாதிபத்திய அபாயத்துக்குமிடையே ஓர் இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

முன்னுள் பிரஞ்சு இந்தோ சைனுவில் அல்லது நெதர்லாந்தின் கிழக்கிந்தியத் தீவுகளில் ஏற்பட்ட குடியேற்ற அரசுக்கெதிராக நெடுநாள் நடைபெற்ற போராட்டத்தைப்போல் இல்லாமல், மலேசியாவினரின் தேசீயப் பற்றும் பிரிட்டனின் நிர்வாகத் திறமையும் சம அளவில் சேர்ந்த ஒரு பரிணும வளர்ச்சியின் விளைவாகவே சுதந்திரமானது மலேயாவுக்கும் மலேயாவினருக்கும் வந்தது.

1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் யுத்த நாசத்துக்குட்பட்ட மலேயாவும் சிங்கப்பூரும் திரும்பிவந்த பிரிட்டிஷாரை வரவேற்றன. ஏறக்குறைய நான்கு வருடத்திற்கும் குறையாமல் இருந்த ஜப்பானிய ராணுவ ஆட்சியைவிட—பிரிட்டிஷாரின் குடியேற்ற ஆதிக்கத்தின்கீழ் எல்லாவிதமான கொடுமைகளுக்கும் உள்ளானபோதிலும்—சிறந்தது என மக்களை நம்பச் செய்தது. திரும்பவும் வந்த டச்சுக்காரர்களின் குடியேற்ற அரசுக்கெதிராக இந்தோனேசிய மக்கள் ஆயுதமேந்திய வன்முறைப் போராட்டத்தை தொடங்கியபொழுதும், இந்தோசைனு மக்கள் தங்கள் நாட்டை மாற்றுன் திரும்பவும் கைப்பற்றிக்கொண்டபொழுது எதிர்த்தெழுந்தபொழுதும், பிரிட்டன் தனது ஆட்சிக்குட்பட்ட இந்திய, பர்மா போன்ற ஒரு சில நாடுகளிலிருந்து தலைவணக்கத்தோடு வெளியேறியபொழுதும், மலேயாவும் சிங்கப்பூரும் பிரிட்டிஷ் கொடியின்கீழ் மகிழ்ச்சியாகக் காணப்பட்டதே அதன் விளைவாக இருந்தது.

யாராவது ஒருவர், சண்டைக்கு முன்னும் ஜப்பானிய இராணுவ ஆதிக்கத்தின்போதும் மலேயாவையும் சிங்கப்பூரையும் அறிந்திருந்தாரானல், ஜப்பானின் சரணுக்குப் பின்னல் மலேயர்களும் சிங்கப்பூர்க்காரர்களும், குடியரசின்கீழ் உள்ள மக்களுக்குச் சிறிது மாறுபட்ட முறையில் மலேயர்களும் ஏன் நடந்து கொண்டார்கள் என்பதனை மிகவும் எளிதில் அறிந்துகொள்ளுவார்கள். உண்மையிலே அவர்கள் இந்தியா, பர்மாவிலுள்ள மக்களைவிட, ஏன் இந்தோனேசியா, வியட்நாம் மக்களைவிட, அரசியல் உணர்வு குறைந்தவர்களாக இருந்தார்கள். ஆனல், பொருளாதார வசதியில் ஜப்பானின் ராணுவ ஆதிக்கத்தின்கீழ் இருந்த மொத்தக் காலத்தையும் விட பிரிட்டிஷ் அரசின்கீழ் நிறைவு பெற்றிருந்தார்கள். குடியேற்ற ஆட்சியைத் தீவிரமாக மாற்றியமைக்காமலும் கடுமையான எதிர்ப்பின்கீழ் இருந்த போதிலும் அவர்களுக்குத் தனிமனித சுதந்திரமும் அதோடு வியாபாரத்திலும் சமுதாயத்திலும் அவர்களுக்குரிய பாதுகாப்பும் பிரிட்டிஷ் சட்டத்தின்கீழ் கிடைத்தன.

ஆனல், ஜப்பானின் இராணுவ ஆதிக்கம் மலேசியாவிலும் மற்றத் தென்கிழக்கு ஆசியாவிலும் நேர்மாருக இருந்தது. நாட்டின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரை பாதிக்கப்பட்ட சமூகத்தின் எல்லா நிலைகளிலும் இரக்கமற்ற கொடுங்கோலாக அது இருந்தது. ஜப்பானிய ராணுவத்தினரால் எவராலும் எண்ணமுடியாத அளவுக்குச் சீனர்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும், தற்காலத்தில் சிங்கப்பூர் அரசாங்கத்தாரால் அந்தப் பயங்கரக் குற்றத்திற்காக ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு ஈட்டுத் தொகை பெறுவதற்குக்கூட உரிமையோடு கேட்கமுடியவில்லை. தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் இடையே ஜப்பானின் "மரண ரயில்" போக்குவரத்துமூலம் குறைந்தது ஒரு லட்சம் இந்தியத் தொழிலாளர்களும் அந்த எண்ணிக்கையில் பாதியளவாவது பிரிட்டானியர்களும் ஆஸ்திரேலியர்களும் இறந்திருப்பார்கள். மலேயர்களில் பெரும்பான்மையோர் நாட்டுப்புற மக்களாக இருந்ததனலும், எந்த வழியிலும், ஜப்பானுக்கெதிராகத் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட எதிர்ப்பு இயக்க அமைப்பு அணிக்குத் தலைமைதாங்கிச் செல்ல இயலாத நிலையில் இருந்ததனலும்,

ஜப்பானிய யுத்த ஆயத்தங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் ஓரளவு பங்குண்டு என்னும் சிறு காரணத்தினாலும் இந்தப் பேராபத்திலிருந்து தப்பிப் பிழைத்தார்கள்.

ஜப்பானியப் பணிவுக்குப் பிறகு உடனடியாகச் சில ஆண்டுகளில், பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் அதிகமாக மலேயா செழித்து வளர்ந்தது. மலேயாவின் ரப்பரும் தகரமும் உலகச் சந்தைகளுக்குச் செல்லத் தொடங்கின. சிங்கப்பூரும் அந்த அளவில் கொந்தளிக்கும் இந்தோனேசியாவுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதினாலும், ஒரு முக்கியமான இடமாக விளங்குவதினாலும், உள்நாட்டுக்கும் தென்கிழக்காசியாவின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வியாபார வளர்ச்சியின் பலத்தினாலும் முன்னேற்றம் அடைந்தது. ஆனால், மலேயாவிலும் சிங்கப்பூரிலும் சண்டைக்குப் பின்னால் காணப்பட்ட இந்த முன்னேற்றத்தின் அறிகுறியானது, போட்டியிடும் பல்வேறு சக்திகளுடனும் இருந்தது.

பொதுவுடைமை எழுச்சியின் பிரசவ வேதனைகளுக்கிடையே தீபகற்பகத்தின் வடக்குப் பகுதி முழுவதும் இருந்தபொழுது முன்னேற்றத்தின் பாய்ச்சலுக்குப் பின்னால் சிங்கப்பூர் அமைதியின்றி இருந்தது. 1945ஆம் ஆண்டில் லண்டனில் நடந்த மகத்தான வெற்றி ஊர்வலத்தில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தின் வீரர்களை வழிநடத்திச் சென்றவர்களே பொதுவுடைமை எழுச்சிக்கும் தலைமை தாங்கினார்கள்.

ஆயுதமேந்திய பொதுவுடைமைவாதிகளுக்கும் மொத்தத்தில் சீனர்களுக்கும் பிரிட்டனின் பாதுகாப்புப் படையினருக்கும் களமில்லா, தலைமையில்லாக் கடுமையானதொரு போராட்டமாக இருந்தது. அதிகார வர்க்கத்தினருக்கெதிராகப் பொதுவுடைமைப் புரட்சிவாதிகள் கடுமையான கொரில்லா யுத்தத்தை நடத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான மலேயர்களுக்கு இரத்தத்துக்கும் இரும்புக்கும், வேர்வைக்கும் கண்ணீருக்குமான ஒரு கதையாக இருந்தது. நேச நாடுகளின் படைகளிடமிருந்து கிடைத்த ஆயுதங்களையும் வெடிகளையும் கொண்டு ஜப்பானிய யுத்த முயற்சியைத் தடுத்துவருவதில் ஈடுபட்ட மலேயப் பொதுவுடைமைவாதிகள் 1948ஆம் ஆண்டின் முற்பகுதியில் அதிகார வர்க்கத்தினருக்கு

எதிராக ஆயுதமேந்திய புரட்சியில் குதித்தார்கள். 1947ஆம் ஆண்டில் நவ ஐரோப்பிய நாடுகளின் பொதுவுடைமை அமைப்பு மேற்கொண்ட புதிய தந்திர முறைகளுக்கிணையாக, மலேயாவின் பொதுவுடைமை எழுச்சியானது பர்மாவிலும், இந்தோனேசியாவிலும், இந்தோ சீனாவிலும், இந்தியாவிலும் அதே போன்று விளைந்த போராட்டங்களின் காலத்துக்குச் சமகாலத்தே தோன்றியது. அந்தக் காலத்தே பக்கத்து பிலிப்பைன்ஸிலும் பொதுவுடைமைப் போராட்டமானது தற்காலிக வெற்றியடைந்தது.

சுல்தான்களின் ஆட்சிக்காலத்திலிருந்து பிரிட்டிஷாரால் ஆண்டு வந்த மலேயாவில் அரசாங்கத்தைத் தூக்கியெறிய வேண்டும் என்பதற்காக ஒன்று சேர்ந்த பொதுவுடைமை இயக்கத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. நாட்டின் ரப்பரையும் தகரத்தையும் அந்நியச் செலாவணிக்காகப் பயன்படுத்தி ஏராளமாகப் பணம் திரட்டும் மலேயாவின் ஆற்றலை அழிப்பதன்மூலம் மலேயாவின் பொருளாதாரத்தைச் சீர்கேடு அடையச் செய்யவும் அதோடு, பிரிட்டிஷாரின் வலிமையைப் பொதுவாகக் குறைக்கவும் அவர்கள் எண்ணம் கொண்டிருந்தார்கள் என்று கருதலாம்.

பொதுவுடைமைப் போராட்டத்திற்கெதிராக அரசாங்கத்தாரே திறமையாக நடந்துகொண்டார்கள். 1957ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31ஆம் தேதி பிரிட்டனிடமிருந்து மலேயாக் கூட்டாட்சி அரசாங்கமானது ஆட்சிக்கேற்றபடி பன்னிரண்டு ஆண்டுகளாக இருந்துவந்த அவசரநிலையை ஒழித்தது. ஆனால், அதன் கடைசி நேரம் வரை அது ஒழுங்குமுறையுள்ள அரசியல் பகையாக இருந்தது. பொதுவுடைமைவாதிகளின் புரட்சியின் உச்ச கட்டத்தின்போது ஏறக்குறைய முப்பத்தைந்தாயிரம் பிரிட்டிஷ் வீரர்களும் ஆயிரக்கணக்கான மலேயர்களும்—பொதுவுடைமை வாதிகளோடு போரிட்டனர். பலர் இறந்தும் பலர் கைது செய்யப் பட்டும்கூடப் பல ஆண்டுகளாக எதிர்ப்பு அணிகளின் எண்ணிக்கை கூட எப்பொழுதும் ஏறக்குறைய ஐயாயிரம், ஆறாயிரம் என்று கூடிக்கொண்டே போனது. புரட்சியின் விளைவாக அரசாங் கத்துக்கு ஏறக்குறைய ஒரு கோடி அமெரிக்க டாலர் ஆண்டு தோறும் செலவாகியது.

முடிவாக, 1964ஆம் ஆண்டில் தாய்லாந்துக்குப் பக்கத்தில் நாட்டின் தென்கிழக்குப் பக்கமுள்ள காட்டுப் பகுதிவரை, கிளர்ச்சிக்காரர்களைப் பலவந்தமாகப் பின்னடையச் செய்த பொழுது அவர்களுடைய எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து ஐந்நூறு வரைக்கும் வந்துவிட்டது. 1970ஆம் ஆண்டின் இடையில் திரும்பவும் புரட்சி இயக்கத்துக்குத் தயார்படுத்திக்கொள்ளும் முகமாக அவர்களுடைய எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேற்பட்டதாக அதிகமாகியது.

பொதுவுடைமை இயக்கத்தின் எழுச்சியானது, பர்மாவிலும் இந்தோனேசியாவிலும் ஏற்படுத்திய மற்றைய புரட்சியையும் கொரில்லாப் போரையும் போன்றில்லாமல், அரசாங்கத்தின் வலிமைக்கு ஊறு விளைவிக்கும் ஒரு பயமுறுத்தலை ஏற்படுத்தத் தவறியதே மலேயப் பொதுவுடைமை இயக்கத்தின் குறிப்பிடத்தக்க பண்பாக இருந்தது. மலேயாவிலுள்ள பொதுவுடைமைப் புரட்சிவாதிகள் தங்கள் வசம் தங்களுக்கென ஒரு வலிமை வாய்ந்த அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஆயத்தம் செய்து கொள்ளவோ அல்லது மொத்தத்தில் பரந்துபட்ட அளவில் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவோ இல்லை. தங்கள் தாய்நாட்டில் பொதுவுடைமை இயக்கத்துக்குக் கிடைத்த வெற்றியிலேயே சீனர்களில் பலர் மலேயாவின் பொதுவுடைமை இயக்கத்துக்கு ஆதரவு கொடுக்கவில்லை. மலேயாவின் பொதுவுடைமைவாதிகளில் பலர் இருப்பதால் மலேயாவின் மக்கள்தொகையில் உள்நாட்டுக்காரர்களாக இருப்பர் என்று பலரால் சந்தேகிக்கப்பட்டார்கள். வியட்நாமில் உள்ள பொதுவுடைமைவாதிகளைப் போன்றில்லாமல், பொதுவுடைமைவாதிகளால் அதிகாரத்துக்காக அவர்களின் போராட்டத்துக்குத் தேசிய உணர்வை ஒரு முக்கியமான, சக்தி வாய்ந்த கருவியாகப் பயன்படுத்திக்கொண்டதைப் போன்றதொரு நிலை இதுவரை இல்லாமல் இருந்தது. மேலும், வியட்நாமியரைப் போலவோ அல்லது லாவோஸ்காரர்களைப் போலவோ எல்லைப்புறங்களைத் தாண்டிப் போய் பதுங்கிக் கொள்ளும் புகலிடங்கள் மலேயாவின் பொதுவுடைமைவாதிகளுக்கு இல்லை.

பொதுவுடைமைப் புரட்சியானது ஒடுக்கப்பட்டதும் இயக்கத்தில் ஈடுபட்ட பொதுவுடைமைவாதிகளில் தலையாயவர்கள் தாய்லாந்து மலேயாவின் எல்லைப்புற மலைகளில் ஓடிப்போய் ஒளிந்து கொண்டார்கள். அங்குள்ள சீன மக்களின் அளவில், தங்கள் செயல்களை அவர்கள் சுருக்கிக்கொண்டபோதிலும், எல்லைப்புறங்களில் உள்ள இரண்டு பாதுகாப்புப் படையினர்களுள் ஏதாவது ஒரு பக்கத்தில் பொதுவுடைமைவாதிகளின் மறைவிடங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் தீரச் செயல்களில் ஈடுபடுவதற்காக நடைபெறும் ஆலோசனைக் கூட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள்.

ஒரு காலத்தில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்க வீரராகவும், மலேயப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவும், மலைகளிலுள்ள கிளர்ச்சியாளர்களின் புரட்சித்தலைவராகவும் இருந்த சின் பெங் எப்படியோ சீனாவுக்கும் ஹனாய்க்கும் அடிக்கடி போய்வந்தார். அவருடைய போக்குகள் எப்பொழுதும் மர்மமாகவே இருந்தன. மலேயாவின் சுதந்திரப் பிறப்புக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னால், பின்பு பிரதம மந்திரியாகவும், அப்பொழுது இருந்த மலேயா பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தலைவராகவும் இருந்த துங்கு அப்துல் ரகுமான், பொதுவுடைமைப் பயங்கரவாதிகளின் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பளித்தால் அவர்களுக்குத் தண்டனையிலிருந்து மன்னிப்பு வழங்கப்படும் என, 1955ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அறிவித்த பொழுது, கடைசியாகத் தன்னுடைய மறைவிடத்திலிருந்து அவர் பகிரங்கமாக வெளிவந்தார்.

துங்குவும், அவர் அமைச்சரவையிலிருக்கும் இருவரும், சின் பெங்கும், அவருடைய இரண்டு தோழர்களும் கெடா (Kedah) என்னும் வடக்கு மாநிலத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடக் கட்டடத்தில் சந்தித்தார்கள். மலேயாவின் சுதந்திர இயக்கத் தலைவர்களும் பொதுவுடைமைவாதிகளும் ஒத்துவருவதில் ஒற்றுமையில்லாமல் போனாலும், முன்பாகவே வாக்களித்தபடி, துங்குவும் அவருடைய அமைச்சரவையினரும் அவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பைத் தாங்களாகவே திரும்ப எடுத்துக் கொள்ளும் முன்பாகப் பொதுவுடைமைவாதிகளின் தலைவர்களைத்

தங்கள் மலைவாழ் மறைவிடங்களுக்குத் திரும்பப் போவதற்கு அனுமதியளித்தார்கள். அதிலிருந்து பொதுவுடைமைப் புரட்சியானது முக்கியத்துவத்தை இழந்துவிடவே, அரசாங்கத் தலைவர்களுக்கும் மலேயப் பொதுவுடைமைவாதிகளுக்கும் இடையே நடந்த வரலாற்றுப் புகழ்மிக்க சந்திப்புக்கு ஏறக்குறைய ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் வழக்கம்போல அவசர நிலையை எடுத்துவிட்டார்கள்.

ஆகவே, 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் நாளில் தேசியச் சுதந்திரத்தின் வரவுக்காகவும் அல்லாமல் பொதுவுடைமைப் புரட்சியின் கொடுமையிலிருந்து கிடைக்கவிருக்கும் விடுதலைக்காகவும் மலேயா கொண்டாடியது. நாட்டில் குடியேறியுள்ள பல்வேறு இன மக்களுக்கும், பல்வேறு நாகரிகங்களுக்கும் ஒரு அரசியற் சந்திப்பு இடமாக மலேயாவை உருவாக்க வேண்டும் என்பது புதிய ஆட்சியினது நோக்கமாகும். பிரதம மந்திரியின் வார்த்தைகளில் சொல்லுவதானால், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மையமாகவும், ஆசியாவின் ஐக்கிய நாடுகளின் ஒரு முன்னோடியாகவும் மலேயாவை உருவாக்குவதில் புதிய கட்சியை ஈடுபடச் செய்வதேயாகும்.

மெர்டேகா நாளில், கோலாலம்பூரில் நாடு முழுவதும் கொண்டாடிய பெரிய விழாக்களிடையே ஜப்பானிய இராணுவ ஆதிக்கத்தின்கீழிருந்த கொடுமையான நாட்களையும், இரண்டாவது உலகப் போரில் நேச நாடுகளின் வெற்றிக்குப் பிறகு வந்த பொதுவுடைமைப் புரட்சியின்போதுள்ள கடுமையான நாட்களையும் மக்கள் ஒவ்வொருவரும் மறந்துவிட்டவர்கள்போலக் காணப்பட்டார்கள். ஏறக்குறைய எல்லோரும் ஏராளமான செல்வச் சிறப்போடு திறமை வாய்ந்த தலைமையின்கீழ், ஒளி பொருந்திய மகிழ்ச்சியான எதிர்காலத்தைக் கொண்ட பல்வேறு இன மலேயாவை ஏற்றுக்கொண்டார்கள். மலேயாவின் பல்வேறு இன மக்களையும் ஒன்றாக இணைப்பதில் உள்ள சிக்கலைப்பற்றியும், தென்கிழக்கு ஆசியாவில் இயல்பான முறையில் வளர்ந்துவரும் பொதுவுடைமை இயக்கத்தைப்பற்றியும் எழுகின்ற இரண்டு முக்கியமான நினைவுகளின்மேல் ஒரு வேளை ஒரு சிலர் ஆவலைத் தூண்டும் வகையில் வினாக்களை எழுப்பியிருக்கலாம்.

எவ்வாறுயினும், அந்த நேரத்தில் 'மெர்டேகா!' – சுதந்திரம் என்பதே மலேயா முழுவதும் எதிரொலித்துக்கொண்டிருந்த குரலாகும். அமைதியும் ஒற்றுமையும் கொண்டு வளர்ந்து வரும் பல்வேறு இனச் சமுதாயத்தை உடையதொரு புதிய நாடு அந்த நாளைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பிறந்தது.

2. நீண்ட பயணம்

பொதுவுடைமை இயக்கத்தின் எழுச்சிக்கு எதிராக நடைபெற்ற அடக்குமுறைக்குப் பின்னால் மலேயாவில் இயற்கையாகவே வீசிய அரசியல் மாற்றங்கள் என்னும் காற்றானது இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதி வரை தெற்காசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் வேகமாகப் பரவியது. 1947ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து வெளியேறிய பிரிட்டிஷாரால் தூண்டப்பட்ட குடியேற்ற ஆதிக்க ஒழிப்பு இயக்க வளர்ச்சியானது பரவியது. ஆனால், மலேயாவைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக உள்நாட்டு மக்களுக்கும் ஆட்சியிலிருக்கும் அயல்நாட்டு அதிகாரத்துக்குமிடையே பாதுகாக்கப்பட்டு வந்த தொடர்புகள் நாடெங்கும் வீசப்பட்டுப் பொதுவுடைமை இயக்கப் புரட்சியினால் சிக்கல்களுக்குள்ளாயின. ஆகவே, 1957ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ஆம் நாள் மலேயர்களால் கொண்டாடப்பட்ட மெர்டேகாவை நோக்கிய நீண்டதொரு பயணமாகும்.

அதிகார மாற்றம் எளிதாக நடைபெற்றது. பிரிட்டிஷாரின் வர்த்தக நலன்கள் பேணப்பட்டன. மலேயக் கூட்டாட்சி அரசாங்கத்தோடு பாதுகாப்பு உடன்படிக்கை செய்துகொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்தது. பிரிட்டிஷ் அதிகாரிகள் அரசாங்கம் மாறியபோதும் இன்னும் மலேய அரசாங்க அலுவல்களில் தொடர்ந்து பணி புரிகின்றனர். ஏற்கெனவே, தன்னாட்சி அரசாங்கம் என அறிமுகத்தோடு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்து வரும் தீவுகள் சிங்கப்பூரும், இந்தோனேசியர்களின் கையிலுள்ள போர்னியோ தீவுகளின் பகுதியான வடக்குப் போர்னியோவும், சராவக் எல்லைப் பகுதிகளும், பொதுவுடைமைச் சீன கண்டத்தில் ஒரு காலையும் வெளியே ஒரு காலையும் வைத்திருக்கும் ஹாங்காங் குடியேற்ற நாடும் என இந்த நான்கு பகுதிகளே மலேயாவின் சுதந்திரத்திற்குப் பின் பிரிட்டிஷ் பேரரசுக்கு ஆசியாவில் எஞ்சிய இடங்களாகும்.

1786ஆம் ஆண்டில் பினாங்கு என்னுமிடத்தில் பிரிட்டனின் முதல் குடியேற்றம் நிறுவப்பட்டது. ஏறக்குறைய இருபதாண்டுகளுக்குப் பின்னால், சிங்கப்பூரைத் தோற்றுவித்தவரான ஸ்டாம்போர்டு ரேபிள்ஸ் (Stamford Raffles) வந்தார். ஆனால், மெர்டேகாவுக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னால்தான் மலேயா அதனுடைய குடியேற்ற அரசின் உச்சநிலைக்குச் சென்றது. பிரிட்டிஷ் அதிகாரிகளால் அவர்கள் ஆட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள நிர்வாகத்தில் ஓர் ஒற்றுமை ஏற்படுத்த முயல வேண்டும் என்பதே அந்நாளைய மிகப் பெரிய அரசியல் போக்காக இருந்தது.

அந்நாளைய இயக்கத்தின் இரண்டு நிலைகளான ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் கடைசிக் கட்டமும், ஆசியர்களின் தேசிய உணர்வெழுச்சியுடனும் ஒத்திருந்ததால் இம் முயற்சி தோல்வி எனப்பட்டது. மலேயாவிலும் மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பகுதிகளிலும் பிரிட்டிஷாரின் ஆக்கிரமிப்புத் தொடர்ந்து வளர்ந்து கொண்டு வந்தது என்பதை இது குறிக்கின்றது. அதே நேரத்தில் ஆசியாவின் வேறெந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு பிரிட்டிஷ் அதிகாரத்தின் வீழ்ச்சியாகவும் இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தைப் போலவே மலேயாவில் பிரிட்டன் தன் செல்வாக்கை உறுதியோடு வளர்த்துக் கொண்டு வந்தது. ஏற்கெனவே, பேரக் (Perak), செலங்கோர் (Selangor), நெகரி (Negri), செம்பிலான் (Sembilan), பாகாங் (Pahang) முதலிய மாநிலங்களில் உள்ள பிரிட்டிஷ் அரசின் அரசாங்கப் பிரதிநிதி வழங்கிய "ஆலோசனை" பிரிட்டிஷ் அதிகாரத்துக்கான புனைகதையாய் விட்டது. இந்த மாநிலங்களில் உள்ள அரசாங்கப் பிரதிநிதிகளால் கூட்டாட்சி ஒப்பந்தம் என்ற பெயரில் உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு மலேயக் கூட்டமைப்பு மாநிலங்கள் என்ற ஒரு பெயரில் கோலாலம்பூரில் உள்ள அரசாங்கப் பிரதிநிதித் தலைவர் ஒருவரின் அதிகாரத்திற்குள் இயங்கும் ஆட்சிக்குழுவாக விரைவில் மாறியது.

1902ஆம் ஆண்டில் பிரிட்டிஷின் செல்வாக்கு மலேய தீபகற்பத்தின் வடக்குப் பகுதி வரை பரவியது. 1909ஆம் ஆண்டில் தெரங்கன்னு (Trengannu), கெடா (Kedah),

கெலந்தன் (Kelantan), பெர்லிஸ் (Perlis) முதலான இம் மாநிலங்கள், பிரிட்டிஷ் மலேயாவுடன் இணைக்கப்பட்டன. பின்னல் இம் மாநிலங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்துகொண்டு பிரிட்டிஷ் ஆலோசகர்களை ஏற்றுக் கொண்டன. 1914ஆம் ஆண்டில் ஜோகோர் சுல்தானும் ஒரு பிரிட்டிஷ் ஆலோசகரை ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு ஜோகோரும் (Johore) வடக்குப்பகுதி மாநிலங்களும் மலேயக் கூட்டாட்சியில்லா மாநிலங்கள் என்று குறிப்பிடப்பட்டன.

இந்தவிதமாக மலேயாவில் பிரிட்டிஷின் ஆக்கிரமிப்பு முதல் உலக மகாயுத்தத்துக்கு முன்னுள்ள வருடங்களில் உச்ச நிலையை அடைந்தது. எப்படியிருந்தபோதிலும் அரசியல் அமைப்பின் நிலையானது பல்வேறு வகையான நிலையிலிருந்தது. சிங்கப்பூர், மலாக்கா (Malacca), பினங்கு (Penang) முதலான ஜலசந்திக் குடியிருப்புகளும் (Straits Settlements), அரசுரிமைக் குடியேற்ற நாடுகளோடு வெல்லெஸ்லி பகுதியும் (Province of Wellesley) பிரிட்டிஷ் அரசுக்குட்பட்ட ஒரே பிரதேசமான திண்டிங்சும் (Dindings) இருந்தன. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் அலுவலகத்தின்கீழ் ஆளுநர் செயலாற்றவும், தீர்மானங்களை நிறைவேற்றவும்வல்ல சிறு குழுக்களோடு தன்னிச்சையாக ஆண்டுவந்தார். மலேயக் கூட்டாட்சி மாநிலங்களில் கொள்கையளவில் மலேயாவின் அரசர்கள் தங்கள் அரசுரிமையில் நிலைத்து இருந்தாலும் அவர்களுடைய அரசாங்கங்களை அரசாங்கப் பிரதிநிதிகளே ஆண்டு வந்தார்கள். அரசாங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனையின்கீழ் மலேயா சுல்தான்கள் ஆண்டுகொண்டிருந்த போதிலும் ஆட்சியை நடத்திவரும் அரசாங்கப் பிரதிநிதிகள் தலைவரின் மேற்பார்வையில் அரசாங்கம் இருந்தது. மலேயா கூட்டாட்சியில்லாக் குடியேற்ற நாடுகளில், ஆலோசனை என்ற பெயரில் இந்தக் குழுக்களுக்குச் சிறிதளவு மதிப்பு அளிக்கப்பட்டது. இந்த மாநிலங்கள் அதிக அளவில் மலேயா தன்மையைக் கொண்டிருந்தன.

எனினும் பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு ஒருவகையில் எதிர்ப்பு இருந்துகொண்டிருந்தது. 1903ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், மலேயாவில் மலேயக் கூட்டாட்சிப் பிரதிநிதித் தலைவரின் அளவுக்

கதிகமான அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனப் பேரக் சுல்தானால் வற்புறுத்தப்பட்டது. பின்னால் உயர்நிலைக் கண்காணிப்பாளரும் சுல்தான்களும் அடங்கிய கூட்டாட்சிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது சுல்தான்களின் அதிகாரத்தைக் குறைக்கும் அளவில்தான் முடிந்தது.

இரண்டு உலக மகா யுத்தத்திற்கு இடைப்பட்ட காலத்தே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அரசியல் திறமைகளைக் காண முடிந்தன. ஆனால், இவைகள் எல்லாம் முக்கியமாக மலேயாவின் மேலுள்ள பிரிட்டிஷ் ஆதிக்கம் சிதைந்துவிடாமல் இருக்க வேண்டும் என்றும் நோக்கத்திற்காகச் செய்யப்பட்டன. முதலாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் பிரிட்டன், இந்தியாவிலும், ஆசியாவின் பிற பகுதிகளிலும் தனி அரசாங்கம் ஏற்படுத்துவதைக் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டது. இன்னும் மலேயாவின் பகுதிகளில் முக்கியமாகப் பாதுகாக்கப்படவேண்டிய மாநிலங்கள் உள்ளன. இங்கு பிரிட்டிஷ் கொள்கை அவ்வளவு தெளிவாக இல்லை.

1925ஆம் ஆண்டில் அப்பொழுதிருந்த பிரிட்டிஷ் உயர்நிலைக் கண்காணிப்பாளர் (British High Commissioner), மாநிலங்களின் தனித்தன்மையைக் காக்கும் வகையில் மலேயாவின் ஐக்கிய சபை (Malayan Union) ஒன்று ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை கூறினார். சுல்தான்களும், மாநிலக் குழுக்களும் (State Counsils), அரசாங்கப் பிரதிநிதிகளும் (Residents) மலேயாக் கூட்டாட்சியில்லா மாநிலங்களிலே இருக்கின்றன நிலைக்கு ஒப்ப மதிப்பு இருக்கும் என்றும் உறுதி கூறினார். இதே அறிவிப்பு, மறுபடியும் 1931ஆம் ஆண்டில் வற்புறுத்தப்பட்டது. ஆனால், ஒன்றுபட்ட அளவில் தனியாட்சி செலுத்துகின்ற பிரிட்டிஷ் மலேயா ஒன்று பலவிதத் தூண்டுதல்களினால் உண்டாக்க வேண்டும் என்னும் திட்டம் பிரிட்டிஷ் அதிகாரிகளால் மறுக்கப்பட்டது. சுல்தான்களின் நிலை புனிதமானது என்றும், சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்து குடியேறியவர்களைச் சேர்த்தல் குடியரசு ஒன்று உருவாகுவது மலேயாவின் அழிவுக்கு அடையாளம் என்றும், அந் நாளைய பிரிட்டிஷ் ஆளுநர்களால், தனியரசு செலுத்துகின்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்ட பிரிட்டிஷ்

மலேயாவின் தோற்றத்துக்கெதிராக, காரணமாகச் சொல்லப்பட்டது.

இந்தச் சொற்போர்கள் எல்லாம் அலுவலகங்களில் பணிபுரிவோர்களுக்கும், பயிரிடுவோர்களுக்கும், வியாபாரிகளுக்கும் உரியதாக இருந்தன. பெரும்பான்மையான மக்கள் இவைகளில் அக்கறை எடுத்துக்கொள்ளவே யில்லை. மேலும், இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் நுழைந்தபோது பிரிட்டிஷ் அதிகாரம், அரசியலமைப்பு வேற்றுமை, இனப்பிரிவுகள் இவைகளின் பொதுவான விளைவு தென்கிழக்கு ஆசியாவில் எதிர்பார்த்துவந்த அமைதியைச் சுக்குநூருக்கவே. ஜப்பானை எதிர்ப்பதற்கு மலேயா நாடு என்று ஒன்றுமில்லை.

வலிமைவாய்ந்த ஒழுங்குமுறை ஒன்று அமைக்கப்பட்டது. அங்கே சட்டமும் ஒழுங்கும் பொருளாதார வளர்ச்சியும் புதியதொரு மாநிலத்துக்கான பல்வேறு பணிகளும் நிலைநிறுத்தப்பட்டன. ஆனாலும் சில மறைந்துகொண்டிருந்தன. சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஏன் மலேயர்களுக்கும்கூட மலேயாவின்மேல் எந்தவொரு பற்றும் கிடையாது. அங்கே உயரிய அரசியல் முன்னேற்றம் இல்லாதபடியால் குடியாட்சி வாக்கெடுப்புக்கு முயற்சியில்லை.

1941ஆம் ஆண்டு டிசம்பரில் ஆசியா முழுவதிலும், ஜப்பான் யுத்தத்தில் குதித்தபொழுது உண்மையிலே பிரிட்டனுக்கு மலேயாபற்றிய திட்டமான நோக்கம் எதுவும் இல்லை. 1942ஆம் ஆண்டுக்கும் 1945ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் ஆசிய வரலாற்றிலே ஒரு மகத்தான காலமாகும். பர்மாவிலும், பிலிப்பைன்ஸிலும் போல ஜப்பானியர்களால் மலேயாவுக்கும் சுதந்திரம் என்றதொரு தோற்றத்துக்கு அவர்கள் வெளியுருவம் அளிக்கவில்லை என்றபோதிலும், ஜப்பானிய இராணுவ ஆக்கிரமிப்புக் காலம் மலேயாவின் அரசியல் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கியக் காலமாகும். அங்கு ஜப்பானியர்கள் முதலில் பல்வேறு சமுகங்களாகப் பிரிக்க முயற்சி செய்தார்கள். மலேயர்களின் ஆதரவைப் பெறுவதற்குப் பலவழிகள் மேற்கொள்ளப்பட்டன; தாய்நாட்டை விடுவிப்பதற்காகத் திரட்டப்பட்ட படையில் இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னல் பொதுவுடைமைவாதி

கள் மட்டும் கொடூரமாக நடத்தப்பட்டனர். ஆனால், ஜப்பானியர் ஆட்சியின்கீழ்ச் சீனர்கள் பல்வேறு குறைகளுடன் நடக்கத் தலைப்பட்டனர்; ஐரோப்பியர்கள் பாதுகாப்பற்ற நிலையில் விடப்பட்டனர். மலேயா தீபகற்பகத்தை ஜப்பானியர்களால் இன்னும் முழுவதுமாக அடிமைப்படுத்த முடியவில்லை. மலேயாவின் காடுகளில் உள்ள பொதுவுடைமைவாதிகள், செல்வாக்குப் பெற்ற மலேயா மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் படையினர்களுக்கும், ஜப்பானியப் போர் முயற்சிகளுக்கும் பெரிய அளவில் நாசத்தை உண்டு பண்ணினார்கள்.

1945ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில் பிரிட்டிஷ்காரர்கள் திரும்பவும் மலேயாவுக்கு வந்தபொழுது, ஜப்பானியர்களின் அழிவுக்கும் பிரிட்டிஷாரின் நுழைவுக்கும் இடைப்பட்ட காலத்தே, பல்வேறு தேசீயக் கட்சிகள் வளர்ந்திருக்கின்றன என்று அவர்கள் காணமுடிந்ததே அதன் பலனாகும். மலேயாவுக்கான திட்டங்களின் புதியதொரு மாற்றமே இதன் பொருளாகும். யுத்தத்துக்கு முன்புள்ள கொள்கை சுல்தான்களால் பாதுகாக்கப்பட்டதினாலும், குடியரசின் முன்னேற்றத்தைத் தடை செய்ததினாலும், பிரிட்டிஷ் குடியேற்ற அலுவலகம் மலேயாவுக்காகச் சீர்திருத்தங்கள் தேவை என்று தீர்மானித்தது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட மலேயாவின் குடியேற்ற ஆதிக்க நுழைவுக் காலத்திலிருந்து முதன்முறையாக ஒரு பிரிட்டிஷ் அதிகாரி எல்லா மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்ததின் விளைவாக அரசின்மீது அசைக்க முடியாத நம்பிக்கையளிக்கும் வகையில் முழு அதிகாரமும் நீதி பரிபாலனமும் செய்யப் புதிய ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன.

ஆனால், பிரிட்டிஷ் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தங்களால் மலேயப் பிரபுத்துவக் குடும்பத்தினரின் உரிமைகளை யுத்தம் நடந்த இடைக்காலத்தே பாதுகாத்ததினால் அவர்கள் மீண்டும் தங்களோடு இணைந்துகொள்வார்கள் என்று குறைத்து மதிப்பிட்டார்கள். இவ்வழியாக மலேயா ஐக்கிய நாடுகளிடையே கடுமையான முரண்பாட்டினைத் தோற்றுவிக்கவும் அதுவே சுதந்திரத்திற்காகவும் விடுத்த வேண்டுகோளின் தூண்டுதலுமாகவும் இருந்தது.

1948ஆம் ஆண்டில் முதன்முறையாக மலேயக் கூட்டாட்சி யரசு ஏற்படுத்தப்பட்டபொழுது, நாட்டின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்குமான பொறுப்பு இன்னும் பிரிட்டிஷாரின் கைகளில் இருந்தது. பொதுவுடைமை இயக்கத்தின் பயமுறுத்தலை ஒழிக்க வேண்டும் என்றும், பல்வேறு இனச் சமுதாயத்தைக் கொண்டதொரு நாட்டினை உருவாக்க வேண்டும் என்றும், இரண்டுவித மான முக்கிய நோக்கங்களே அந்தக் காலத்தில் நிலவின. இந்த இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக உள்நாட்டு அரசியல் தலைவர்களின் துணையும் ஒத்துழைப்பும் தவிர்க்க முடியாதது என்பதனை பிரிட்டிஷ் சீக்கிரம் உணர்ந்தது. பொதுவுடைமை இயக்கத்தோடு போராடுவதற்குத் தேவையான சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இல்லை. மேலும், குடியேற்ற அரசு திறமையாக இருந்தபோதிலும் மக்களின் இதயங்களையும் எண்ணங்களையும் கடுமையான போராட்டத்தில் அர்ப்பணிக்க முடியாத நிலையில் மலேயாவுக்குப் பொறுப்பு ஒன்று இருந்தது.

தவிரவும், ஆண்மையினாலும் நல்லெண்ணத்தினாலும் மட்டுமே ஒரு நாடு உருவாகுவதில்லை. ஒரு புதிய நாடு எவ்வாறு உருவாக வேண்டும் என்று அந் நாட்டுக் குடிகளும் அவர்களின் தலைவர் களும் எவ்வண்ணம் விரும்புகின்றார்களோ, அவ்வண்ணம் அவர்களின் விருப்பங்களும் அதிகார வர்க்கத்தினராலும் வெளி நாட்டு விற்பன்னர்களாலும் தீர்மானிக்கப்பட வேண்டியவைக ளல்ல. 1948ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு மலேயா சுதந்திரம் அடைந்தது வரையுள்ள ஒன்பதாண்டுகளின் வரலாற் றுக்குள்ள முக்கியத்துவம் மலேயாவின் தேசீயவுணர்வின் வளர்ச்சியேயாகும். தங்களைத் தேசீயவாதிகள் என்று மலேயா பொதுவுடைமைக் கட்சியினர் உரிமை கொண்டாடுவதற்கு எதிராக இந்தத் தேசீயவுணர்வு ஒரு கோட்டையாக எழுந்தது.

அதுவே பெரும்பான்மை மக்கள் வேண்டும் சுதந்திரமும் பொதுத்தன்மையும் அளிக்கவல்லதொரு சக்தியாகவும் இருந்தது. ஆனால், பன்முகச் சமூகங்களிடையே தேசீயவுணர்வு எப்பொழு தும் சிக்கலானதொரு பிரச்சினையாகவும் இருந்தது. பர்மாவிலும் இந்தோனேசியாவிலும் போல உணர்ச்சிப் பிணைப்பினாலும் பாரம்பரிய இறுக்கத்தினாலும் ஒரே இன மக்களிடையே விளை

கின்ற தேசியவுணர்வுக்கு நேர்மாறானது மலேயாவினுடைய தாகும். பல மக்களின் தேசீயவுணர்வானது பல்வகை உறவு முறைகளின் தொடர்புகளின்மேல் பொருந்தியிருப்பதற்குப் பதிலாக நியாயமான கட்டுப்பாடுகளினாலும் சீர்தூக்கிச் செயல் படும் திறன்களினாலும் வெளிப்படுமானால், வேறெந்த அரசிய லமைப்பின்கீழ் இருப்பதைவிட மிகப் பெரியதொரு அளவுக்கு அறிவுடைமை, பொறுமையுடைமையின்பால் அது சார்ந்திருக்க வேண்டும் என வெகு விரைவிலேயே மலேயாவின் தேசீயத் தலைவர்கள் உணர்ந்தனர்.

பல்வேறு இனக் குழுவின் தேசீயவுணர்வோடு பணியாற்ற அரசியற் கட்சிகள் இரண்டுவிதங்களில் செயல்படவேண்டும். மலேயாவில் எல்லா இனங்களிலும் உள்ளவர்களை உறுப்பினராகக் கொண்டு இனமல்லாத வழிகளில் அமைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும்; அல்லது அவர்கள், இனங்களின் அடிப்படையில் நாட்டில் உள்ள மூன்று முக்கிய இனக் குழுவினர்களுக்குள் ஒரு இனத்தாருக்கு உறுப்பினராகும் தகுதியை வரையறுத்துக் கொள்ள வேண்டும். 1948ஆம் ஆண்டு வரை, சில வருடங்களாக மலேயா இந்த இரண்டு விதமாகக் காட்சியளிக்கும் அரசியல் கட்சிகளின் தோற்றங்களைப் பார்த்தது. எல்லோராலும் ஒட்டு மொத்தமாக விரும்பப்படும் சுதந்திரத்துக்கு இந்த இரண்டுவித அரசியல் அமைப்புகளுள் எது நாட்டுக்கு நல்லது செய்யும் என்று அறுதியிட்டுச் சொல்வதற்கு ஒருவருமில்லை எனலாம்.

ஐக்கிய மலேயத் தேசீய அமைப்பு (United Malay National Organisation), மலேயா சீனச் சங்கம் (Malayan Chinese Association), மலேயா இந்தியக் காங்கிரஸ் (Malayan Indian Congress) என்ற இந்த மூன்று பெரும் கட்சிகளே அந்தக்காலத்துத் தோன்றின. யு.எம்.என்.ஓ. பூர்வீக மலேயர்களின் கட்சியாக இருந்தது. ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட எல்லாச் சங்கங்களும் ஒன்றாக இணைவதற்குப் போய்க்கொண்டிருக்கையில் நாட்டில் குடியேறியுள்ள சீனர்களின் ஆதரவிலும் தலைமையிலும் நடைபெறும் கட்சியாக எம். சி. ஏ. இருந்தது; எம். ஐ. சி. இந்திய மக்களை உறுப்பினர்களாகக் கொண்டது. இந்த மூன்று கட்சிகளுக்குள்ளே சிறிதளவு ஒற்றுமைதான் இருந்தது

பிரிட்டிஷ் அதிகாரத்தினர்கள் தங்களின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த பிரித்தாளும் திறனை அவர்களுக்கெதிராக உபயோகப் படுத்துவதில் வல்லவர்களாக இருந்தனர்.

மலேயா அரசியல்வாதியும் யு.எம்.என்.ஓ.- வைத் தோற்றுவித்த வருமான தாடோ ஓன் பின் ஜாஃபர் (Dato Onn bin Jaafar) இந்தக் குழப்பத்திலிருந்து விடுபடும் வழியொன்று கண்டுபிடித்தார். அவர் மூன்று பெரிய இனக் குழுவிலுள்ள மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட இனச் சார்பற்ற, சுதந்திரமான மலேயாக் கட்சி ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால் இந்த அமைப்பானது, அதன் சொந்தப் பலத்துக்குக் கொள்கையளவில் பிடிப்பில்லாது போகவே யு.எம்.என்.ஓ., எம்.சி.ஏ., எம்.ஐ.சி. இவைகளுக்குள் ஏற்படும் பிளவுக்குக் காரணமாய் இருந்தது. மலேயா முழுதுக்கும் இனச் சார்பற்ற கட்சி ஒன்று தேவையென்பதைப் பெரும் பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளுவதற்கு இன்னும் தயாராகவில்லை என்பதைத் தெளிவாக்கியது. மேலும் ஒருமுறை இது தெளிவானபோது, முதலில் இரண்டு கட்சிகள் இணைந்தும் பின்னால் மூன்றும் சேர்ந்து ஒரு கொடியின் கீழ் கூட்டாட்சிக் கட்சி என்ற பெயரில் புதியதொரு வகையான அரசியல் சேர்க்கைக்கு வழி வகுத்தது.

இந்த நிலையில் இரண்டு தலைமுறைகளாக மலேயாவின் முக்கிய இடத்தையும் மலேயாவின் அரசியல் மேடையையும் கைக்கொண்ட துங்கு அப்துல் ரகுமான் அரங்கத்தின் அடிவானத்தே தோன்றினார். அவருடைய தகப்பனார் சுல்தானாக இருந்த வடக்கு மலேயாவின் மாநிலமான கெடாவில் யாருக்குமே விறுவிறுப்பில்லா அரசாங்க அதிகாரியாக இருந்த பிறகு, துங்கு தமது சட்டப் படிப்பைத் தொடர்ந்து படிப்பதற்கு இங்கிலாந்திற்குத் திரும்பப்போனார். 1949ஆம் ஆண்டில் தொடர்ந்து இலண்டனிலுள்ள இன்னர் டெம்பிளிலிருந்து வழக்குத்துறைக்கு வருமாறு அழைப்பு வந்தது. அப்பொழுது அவருக்கு வயது 46. வழக்குத் துறை விடுத்த அழைப்பின் பேரில், அவர் பேசிய பேச்சின்போது புகழ்பெற்ற இன்னின் (Inn) வரலாற்றிலே, வெள்ளிவிழாக் கொண்டாடியபோது வழக்குத்துறைக்குச் சேர்த்துக்கொள்ளப்

பட்ட ஒரே மாணவர் அவராகத்தானிருக்க வேண்டும் என்று கேலியாகக் குறிப்பிட்டார்.

1949ஆம் ஆண்டின் ஆரம்பக்காலத்தே மலேயா வந்தவுடனே ஐக்கிய மலேயா தேசீய அமைப்பின் கெடாக் கிளைத் தலைவர் பதவிக்குச் சம்மதித்தார். இரண்டு வருடங்களுக்குப் பின்னால் அரசாங்க வேலையிலிருந்து விலகிய பிறகு மலேயாவின் பல்வேறு இனப் பிரச்சினைகளுக்கும் முடிவாக இருக்கும் என்று நம்பியவரான தாடோ ஒன் பின் ஜாஃபர் சுதந்திர மலேயாக் கட்சியின் (Independence of Malaya Party) தலைமைப் பதவியிலிருந்து விலகியபோது, அவரைத் தொடர்ந்து ஐக்கிய மலேயா தேசீய அமைப்பின் தலைவர் (President) ஆனார்.

மலேயாவின் பல்வேறு இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற முறையில் தாடோ ஒன்னின் குறிக்கோளுக்கு மிகவும் மாறுபட்ட நிலையில் இன ஒற்றுமைக்குத் துரிதமான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார். (மலேயாவின் பொதுமக்களுக்குள் அன்புடன் போற்றப்படுபவர் துங்கு அப்துல் ரகுமான்) நாட்டில் குடியேறிய இனங்களுக்குள் ஏற்படும் நெருக்கடியான பிணைப்பின் அடிப்படையிலேதான் மலேயாவின் அரசியல் பிரச்சினைகள் அமைந்திருக்கின்றன என்று நெடுநாள் நம்பி வந்தார். அரசியல் கட்சிகள் இணைய வேண்டும் என்னும் இந்த நோக்கமே அவரை மறைந்த தாடோ தன் செங்லாக் (Dato Tan Cheng Lock) என்பவரால் நடத்திச் செல்லப்பட்ட மலேயா சீனச் சங்கத்தோடு ஐக்கிய மலேயா தேசீய அமைப்புக்கும் அரசியல் இணைப்பை ஏற்படுத்த வழி வகுத்தது. 1952ஆம் ஆண்டில் மலேயாவில் நடந்த முதல் நகரசபைத் தேர்தல்களில் போட்டியிட வேண்டும் என்னும் நோக்கத்துக்காக இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டது; அதுவே வெற்றியாக உருப்பெற்றது.

1953ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் துங்கு அப்துல் ரகுமானும் அவர் துணைவர்களும் ஒரு பக்கமாகவும், தாடோ தன் செங்லாக்கும் அவர் தோழர்களும் மறுபக்கமாகவும் நடத்திய பல வட்ட மேஜை மகாநாடுகளினால் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் நாடெங்கிலும் உள்ள யு.எம்.என்.ஓ.,எம்.சி.ஏ. கட்சிகளுக்கான உள்ளூர்க் கிளைக்கு இணைப்பை ஏற்படுத்தும் முகத்தான் தொடர்பு நிர்வாகக்

குழுக்களை ஏற்படுத்தும் அளவுக்கு இரண்டு கட்சிகளுக்கு இடையே நெருக்கம் ஏற்பட்டது. அதன் பிறகு சீக்கிரத்திலே, கூட்டாட்சியில் (Federation) பொதுத் தேர்தல் வைக்கவேண்டும் என்னும் அளவில் கட்சி இணைப்புக்களுள் பொதுக்கொள்கை ஒன்று உருவாகியது. சிறிது பின்னல், பல்வேறு இன அமைப்பும் நோக்குமே அதன் வெளிப்பாடாகக் கொண்டு சீக்கிரத்திலே கைவிடப்பட்ட மலேயா இந்தியக் காங்கிரஸ் (Malayan Indian Congress), யு. எம். என். ஓ. வினரும் சுதந்திர மலேயாக் கட்சியோடும் சேர்ந்துகொண்டது.

1955ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தல் துங்கு அப்துல் ரகுமானையும் இணைப்புக் கட்சியினரையும் அதிகாரத்திற்கு வர வாய்ப்பு நல்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பத்திரண்டு இடங்களுள் ஐம்பத்தொரு இடங்களை இணைப்புக் கட்சியினர் கைப்பற்றவும், துங்கு அப்துல் ரகுமான் முதன் மந்திரியாகவும் மலேயா அரசாங்கத்தின் உள் துறை மந்திரியாகவும் ஆனார். மலேயா சுதந்திரம் என்னும் தேசீயக் குறிக்கோளுக்காக பிரிட்டனோடு அரசாங்கத்தோடு நடத்தவிருக்கும் உண்மையான பேச்சுவார்த்தைக்கு அடையாளமாக அவ் வெற்றி இருந்தது.

பொதுவுடைமைப் புரட்சிவாதிகளுக்காக மன்னிப்பு வழங்கப்படும் என்னும் உறுதியுடன் நாட்டில் வழக்கில் இருந்துவரும் அவசரநிலைக்கு விரைவில் முடிவு காண வேண்டும் என்னும் உறுதியே இணைப்புக்கட்சியின் தேர்தல் அறிக்கையிலுள்ள வாக்குறுதிகளுள் ஒன்றாகும். அதன்படி பிரிட்டன் பாதுகாப்பு அதிகாரிகளிடம் பொதுவுடைமை இயக்கத்தினருக்காக மன்னிப்பு வழங்க வேண்டும் என்னும் வேண்டுகோளுக்கு இணங்கச் செய்து 1955ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் பொதுவுடைமை இயக்கத் தலைவர் சின் பெங்குடன் நேரடிச் சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்தார். பொதுவுடைமைவாதிகள் தங்கள் மறைவிடங்களாகிய காடுகளிலிருந்து வெளியே வந்து தங்களுடைய தேச பக்தியை நாட்டுக்கு வெளிப்படுத்தும் வகையில் தங்களை இனங்காட்டிக் கொள்ள வேண்டும் என்னும் வற்புறுத்தலினால் துங்குவின் குழுவினர் காடுகளில் வாழும் பொதுவுடைமைவாதிகளோடு

ஒப்பந்தம் செய்துகொள்ளுவதற்காக முன்வந்தபோதிலும் வெற்றி பெறமுடியாது என்பது உறுதியாயிற்று.

மலேயாவின் விடுதலைக்கான தன்னுடைய திட்டங்களுடன் துங்கு முன்னேறிச் சென்றார். பொதுவுடைமை இயக்கத் தலைவருடன் நிகழ்த்திய பேச்சு வார்த்தைகள் தோல்வி அடைந்தபிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையைத் தொடங்க மெர்டேகா குழு என்னும் பெயரில் லண்டனுக்குச் சென்றார். இந்தக் குழுவினர், தேர்ந்தெடுக்கப்பட்ட மலேயா அரசாங்கத்துக்காக, உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் தற்காப்புக்கும் ஆன முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தவும், நிதிவசதியைப் பெருக்கவும், பொதுப்பணித் துறைகளையெல்லாம் மலேசியமயமாக்கவும் ஆன அதிகாரத்தை அடைந்தது. இந்தக் குழுவின் சந்திப்பின்போது நாட்டிற்கானதொரு புதிய அரசியல் சட்டம் ஒன்று ஏற்படுத்துவதற்காக அரசியல் அமைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், 1957ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள், விடுதலை நாள் என அறிவிக்கவேண்டும் என்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முதலமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் ஏற்றிருக்கும் பொறுப்புகளுடன் மலேயாவிற்குத் திரும்பி வந்தபோது உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் தற்காப்புக்கும் ஆன அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

1957ஆம் ஆண்டில் துங்கு அப்துல் ரகுமான் திரும்பவும் லண்டனுக்குப் போனார். மலேயாக் கூட்டரசுக்கான விடுதலையின் பொருட்டு பிரிட்டனோடு கடைசித் தீர்வுக்கு வரவேண்டும் என்பதற்காக இணைப்புக் கட்சியிலிருந்தும் மலேயா அரசர்களிலிருந்து (ஆளுநர்களிலிருந்து) பிரதிநிதிகளைக் கொண்டதோர் குழுவோடு இம்முறை சென்றார். 1957ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள் மெர்டேகா அரங்கில் நடைபெற்ற கோலாகல விழாவே மெர்டேகாவிற்கான ஐரோப்பாவின் நீண்ட பயணத்தின் விடிவெள்ளியாக வந்தது.

அந்த நாளில் கோலாலம்பூரில், என்னோடு பல வருடங்களாக உழைத்தவர்களும் பெரும்பாலும் பத்திரிகையாளர்களாகவும் உடனிருக்கின்றவர்களுடனும் சிரிப்புக்கும் மகிழ்ச்சிக்குமிடையே

மலேயாவின் அரசியல் போக்குகளைப் பற்றி எனக்குள்ளே ஆராயத் தொடங்கினேன். மலேயர்களும், சீனர்களும், இந்தியர்களும் பக்கத்து நாடுகளின் நிருபர்களும் கொண்டதோர் குழு அது.

மொத்தத்தில் எல்லோரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரோடு கடினமான பேச்சுவார்த்தைகளை நடத்தியவிதத்திற்காகவும் அதே நேரத்தில் சுதந்திரத்தின் தேவைக்காக நாட்டிலுள்ள பல்வேறு வகையான இன அரசியல் சக்திகளையும் ஒன்று கூட்டி, ஐக்கிய முன்னணி அமைத்ததற்காவும் துங்கு அப்துல் ரகுமானுக்கு மிகப் பெரிய புகழ் மாலை சூட்டினார்கள்.

எவருக்கும் மலேயாவின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி ஒரு சிறிதளவேனும் ஐயமில்லை. நாட்டில் அதிக வருவாய்க்கான வழிகள் ரப்பரிலும் தகரத்திலும் இருப்பதால் அவைகளே பொருளாதார முன்னேற்றத்தைக் காக்கவல்லன. ஏற்கெனவே அவசர நிலைமையும் பொதுவுடைமை இயக்க எழுச்சிக்கு எதிராகவுள்ள நடவடிக்கையும் இருந்தபோதிலும் மலேயா மாறுதல் அடையத் தொடங்கியது. சுதந்திர மலேயாவின் ஒரு கூறாக நாடு தேர்ந்தெடுத்த, குறிப்பாக இனக்கூட்டு அடிப்படையில் அமைக்கப்பட்ட கூட்டாட்சி அரசாங்கத்தின் எதிர் காலம் என்ன என்பதே எல்லோருடைய மனதிலும் ஓரளவு ஐயத்தை விளைவித்தது எனலாம். எல்லாக் காலத்துக்கும் ஏற்ற தொரு சிறந்த அமைப்பு என்பதில் எவருக்கும் நம்பிக்கையைக் கொடுக்கும் அல்லது எல்லோருக்கும் நிறைவைக் கொடுக்கும் என்று சொல்லவே முடியாது. கூட்டாட்சிக் கட்சியின் மூலம் நாடு அரசியல் அடிப்படையில் ஒரு புதியதொரு நாட்டை உருவாக்க முடியும் என்று இதனால் நம்பப்பட்டது. பெரும்பான்மையான மக்களின் ஆதரவை மட்டுமே பின் பலமாகக் கொண்டதினால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பகைவர்களுக்கெதிராகத் தன்னைத்தானே காத்துக்கொள்ளும் அளவுக்குத் தகுதியை ஏற்படுத்திக்கொள்ளும் புதிய நாடு என்று இதனால் தெளியப்பட்டது.

அந்த நாளில் இந்த நியாயமான எண்ணங்களுக்கு எதிராகச் சிலர் முடிவற்ற ஊகங்களில் ஈடுபட்டனர். மூன்று தனித்தனி இனங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கிடையே

நிலவிவரும் இந்தக் கூட்டணித் தொடர்பு மலேயா போன்றதொரு சின்னஞ்சிறிய நாட்டில் எவ்வளவு காலம் செயல்பட்டுக்கொண்டு வர முடியும்? மலேயாவின் அடுத்த தலைமுறையினருக்காக அரசியல் போக்கிலும் நோக்கிலும் ஏற்படுகின்ற மாற்றங்களுக்காக மலேயாவின் அரசியல்வாதிகள் திட்டமிடத் தொடங்குவார்களா? பலமுகப்பட்ட இனக் கூறுகளோடு, ஐக்கிய நாடுகளின் மாதிரி போன்றதொரு வளர்ந்துவரும் நாடான மலேயாவைப் பற்றிப் பேசுவதற்கு எல்லாமே நன்றாக இருந்தது. அபாயத்துக்கு அழைத்துச் செல்லும் சில கசப்பான உண்மைகள் புறக்கணிக்கப் பட்டன.

எப்படியிருந்தபோதிலும், சிறிது காலத்துக்கு எல்லா மலேயர்களுக்கும் அந்த நாள் விழாக்கொண்டாடவும் நன்றி பாராட்டவும் உரிய பொன்னாளாக இருந்தது. மலேயாவுக்கு இரத்தமின்றி, அமைதியாக நாட்டுரிமை வாங்கிக் கொடுத்தவர்களுடைய அறுதியிட்டுரைக்க முடியாத அறிவுத்திறனுக்கு நாடெங்கிலும் மதிப்பு இருந்தது.

3. ஒரு புதிய நாடு

அமைதியில்லாத் தென்கிழக்கு ஆசியாவில் புதிய சுதந்திர மலேயாக் கூட்டாட்சியானது ஈடிணையற்றதொரு வெற்றியை அளித்தது. துங்கு அப்துல் ரகுமானின் தலைமையில் அமைக்கப் பட்ட கூட்டாட்சிக் கட்சி மக்கள் சபையில் (House of Representatives) அதிக அளவில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றிருந்தது. ஆளுங்கட்சியான கூட்டாட்சிக் கட்சி மலேயர்கள் சீனர்கள் இந்தியர்களுக்கான ஒரு அரசியல் இணைப்பிடத்தை ஏற் படுத்திக்கொடுத்தது. போர்னியோ தீவிலுள்ள பிரிட்டிஷ் பாது காப்பிலுள்ள சிறு பரப்பளவையுடைய புருநெய் சுல்தானுக்குட் பட்ட பகுதியிலிருந்து விடுதலை பெற்றிடவே மலேயா ஆசியா முழுமைக்கும் அதிக வருட வருமானம் உடையதொரு நாடாகியது. பொருளாதார வளர்ச்சியில் மிக வேகமாக முன்னேறிச் செல்லும் ஆசியாவின் பிற நாடுகளைவிட மலேயாவும் நிதானமாக முன் னேறிச் சென்றது.

மிகுந்த கவனத்துடன் துங்கு தமது அமைச்சரவைத் துணைவர் களைத் தேர்ந்தெடுத்தார். உள்நாட்டு விவகாரத்துக்காகவும், உள்நாட்டுப் பாதுகாப்புக்காகவும் ஜோகோரின் தென்கிழக்கு மாநிலத்திலிருந்து வெற்றிவாகை சூடியவரும், வயதானவரும் நம்பிக்கையுரிய நண்பருமான தாடோ (டாக்டர்) இஸ்மாயில் அவர்களைத் துங்கு அப்துல் ரகுமான் கொண்டுவந்தார். மலேயா சீனச் சங்கத்துக்குத் தலைமை தாங்கிய திரு தன் சியூ சின்னை நிதி மந்திரியாகத் தேர்ந்தெடுத்தார். மலேயா இந்தியக் காங்கிரஸின் பிரதிநிதியான இந்தியரான தாதோ வி. டி. சம்பந்தன் அவர்களை வேலை, தபால் தந்தித் தொடர்பு அமைச்சராக நியமித்தார். ஐக்கிய மலேயா தேசிய அமைப்பைச் சேர்ந்த மலேயப் பழங்குடி களுக்கு முதலிடம் கொடுத்ததுடன் பிற அமைச்சரவை பதவிகளைப் பல்வேறு இனங்களுக்குச் சம அளவில் பங்கிட்டுக் கொடுத்தார்.

மலேயாவில் சில காலத்துக்காவது இனச் சார்புள்ளவர்களின் பிரதிநிதிகள் நன்ருகப் பணிபுரிவதாகத் தெரிந்தது. திறமையிலும், அனுபவத்திலும், நடத்திச் செல்லும் துணிவிலும் துங்குவால் அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கான அமைச்சரவைப் பதவிகள் அவர்களுக்காக ஏற்பட்டது போன்று பணியாற்றும் அளவில் மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தன. புதிய தலைவர்கள் சிவப்பு நாடாவினுல் தடைசெய்யப்படவோ அல்லது பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகளால் உத்திரவிடப் படவோ இல்லை. அரசாங்கத்தின் உடனடித் தீர்மானமே நாட்டை உருவாக்கும் முக்கியக் கூறுகும்.

சிந்தனைவாதிகளும் வல்லுநர்களும் மலேயாவின் அரசியல் சட்டத்தை எழுத முனைந்தார்கள். மலேயாக் கூட்டாட்சியின் அரசாங்க அமைப்பானது குறிப்பாகக் கட்சிச் சார்பற்றவரை அரசாங்கத் தலைவராக ஏற்றுக்கொள்ளவும் இரண்டு சபைகளைக் கொண்டதொரு சட்டசபையும், அவற்றுள் ஒன்றில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தச் சபையில் கட்சிச் சார்பற்ற முறையில் பொது அலுவல்களைக் கவனிக்கவும் சுதந்திரமாக ஆட்சி செய்யும் முறையில் ஏறக்குறைய இந்தியாவை ஒத்திருந்தது. பிரிட்டிஷ் குடியேற்ற அரசாட்சியின் மிடுக்குகளின்கீழ் குறையாத அளவிலே மாவட்ட அதிகாரிகள் திகழ்ந்தார்கள்.

அவற்றில் மலேயா அரசின் மூலக்கூறுகளும் இருந்தன. அரசியலமைப்பிலே இந்த மலேயா ஆளுநர்கள் முக்கிய இடம் வகித்தனர். அவர்கள் பினங்கு, மலாக்காவின் ஆளுநர்களுடன் சேர்ந்து கொண்டு "ஆளுநர்கள் கருத்தரங்கு" (Conference of Rulers) ஒன்றை நடத்திஞர்கள். ஆளுநர்களும் மாநிலத் தலைவர்களும் மக்களிடமிருந்து உறுதியான ஆதரவைப் பெற்றிருந்தார்கள் என்னும் நம்பிக்கையே மலேயர்கள் ஏன் கூட்டாட்சி அரசியலமைப்பினைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கு முக்கியக் காரணமாகும்.

நடைமுறையில் மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவுக்குக் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்கள் அதிகமான அளவுக்கு இருந்தன. சட்டத்தைத் திருத்துகின்ற வகையில் கூட்டாட்சிச் சட்ட சபைக்குரிய அதிகாரங்களை மட்டுப்

படுத்துவதற்குச் சட்டத்தில் சில தடைகள் எழுப்பப்பட்டிருந்தன். எல்லா விதமான அரசாங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற முறையில் தோன்றியுள்ள தேசியப் பொருளாதாரச் சபை (National Finance Council), தேசிய நிலச் சபை (National Land Council), உள்நாட்டு அரசாங்கத்துக்கான தேசியச் சபை போன்றவற்றின் உதவிகொண்டு கூட்டாட்சி அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

மலேயா விடுதலையடைந்தபொழுது, எதிர்க்கட்சியினரின் பலவீனமே மக்கள் சபையின் முக்கிய அம்சமாக இருந்தது. எதிர்க்கட்சியினர் பல்வேறு பிரிவினர்களாகப் பிரிந்து சிதறியிருக்க, 1959ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னும், ஆளுங் கட்சியான கூட்டாட்சிக் கட்சியானது ஏறக்குறைய முக்கால் பங்கு இடங்களைக் கைப்பற்றியது. இனவெறி உணர்வைக் குறைக்கவும், மெர்டேகாவுக்குப் பிறகும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக இன்னமும் அவசர நிலைமையில் இருக்கின்ற காரணத்தால் சதி வேலை எனப்படும் எந்தவொரு செயலையும் அடக்கி ஒடுக்கவும் வேண்டும் என்று பதவியிலிருக்கும் கூட்டாட்சி அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தபோதிலும், நாட்டில் அந்நோக்கம் செயல்படுங்கால் அதன் கொள்கையாகப் பிரதிபலித்தது. மக்கள் சபைக்கு அடுத்துப் பாதி மாநிலத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டும், பாதி நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டும் அமைக்கப்பட்டது மேல் சபையாகும்.

திட்டமிட்ட நிர்வாக அமைப்பின்கீழ்ச் சிறந்த முறையில் பல்வேறு இனச் சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபடும்போதும் சமுதாயப் பணியில் ஈடுபடும்போதும் அதிலிருந்து சமுதாயச் சிக்கல்களும் கருத்து வேற்றுமைகளும் தோன்றுவனவாகும். இன வேறுபாடு, மொழி வெறி, மதப் போராட்டம் முதலியன வெளியார் உதவிகளினாலும் செல்வாக்குகளினாலும் தீவிரப்படுத்தப்பட்டன. 1957ஆம் ஆண்டு சட்டசபைத் தீர்மானத்தின் சுருக்கமும் அதைத் தொடர்ந்து வந்த அரசாங்கத்தின் கொள்கையும் ஆளுங்கட்சியான கூட்டாட்சிக் கட்சியில் உள்ள மலேயா சீனக் கட்சியாளர்களிடையே பேரம் பேசுவதற்குப் பதிலாக வழி ஏற்படுத்திக்கொடுத்தது.

மலேயாவின் புதிய ஆளுநர்களால் வழி வழியாக வந்ததொரு இனச் சித்திரத்தின் மதிப்பீட்டை, இன உணர்ச்சி பற்றியதொரு மதிப்பீட்டிற்காக மலேயாவைப்பற்றிச் சிறப்பாகவும், தென் கிழக்கு ஆசியாவைப்பற்றிப் பொதுவாகவும் காண்போமாக.

பழங்காலந்தொட்டுத் தென்கிழக்கு ஆசியாவின் பகுதி பல்வேறு இனங்களும் பண்பாடுகளும் சந்திக்குமிடமாக இருந்து வந்தது என்பதனை அதன் பல்வேறுபட்ட பண்புகளினாலும் மாறுபட்ட அரசியல் பொருளாதார விருப்புக்களினாலும் அறியலாம். தென்கிழக்கு ஆசியாவின் பல தீவுகளில் பெரும்பான்மை அளவில் குடியேறி வாழ்கின்ற இருபது கோடிக்கும் மேலான மக்கள் எல்லோரும் மங்கோலாய்டு இனத்தவர்களே.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் அவர்களின் மூதாதையர் களில் அநேகர் சீனாவிலிருந்து தெற்கு நோக்கி இடம்பெயர்ந்து வந்தவர்களே. இன்றைக்கு இருக்கும் மக்கள்தொகை அதிக முடைய மிகப் பெரிய பிரிவுகளுள் அந்தப் பகுதிக்குக் கி.மு. 2500-க்கும் கி.மு. 1500-க்கும் இடையே வந்தவர்களே மலேயர் களாவார்கள். (இந்தோனேசியர்கள் என்று இனப் பாகு பாட்டின்படி அழைக்கப்படுவார்கள்.) இந்தோனேசியாவிலும் பிலிப்பைன்ஸிலும் காணப்படும் மலேயர்கள் அங்குக் குடியேறியவர்களைவிடப் பெரும்பான்மையினர்களாக இருந்த போதிலும் மலேயாவில் அவர்களே முக்கியமான தனிப்பெரும் இனமாக இருக்கின்றார்கள்.

மலேயர்களின் ஆரம்பகால வெளித் தொடர்புகளே இந்தியாவி லிருந்து கடல் கடந்து வந்தவைகளாகும். இந்தியர்கள் வியாபாரத் துக்காகவே வந்தவர்கள். தகரமும், நறுமணக் கட்டைகளும், கிழக்கின் கலைப்பொருள்களும் ரோமானியர்களால் பெரிதும் வேண்டப்பட்டன. வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி தென்கிழக்கு ஆசியாவில் இந்தியர்களின் வருகைக்குப் புத்தமதப் பிரசாரத்தின் பேரார்வமே மற்றுமொரு காரணமாகும். கி.பி. 42ஆம் ஆண்டு அளவில் குணவர்மன் என்பவர் ஜாவா, சுமத்திரா போன்ற இடங்களுக்குச் சென்று, பல ஜாவா அரசர்களைப் புத்த மதத்துக்கு மாறச் செய்தார். சிலர் கடற்கரையோரங்களில் குடி யேறினர்; சிலர் இப்பொழுது வடக்கு மலேயா எனப்படும்

இடத்தை உருவாக்கினர். இன்றைய மலேயா இந்தியாவின் சில பண்பாட்டு இணைப்புக்குச் சான்ருக விளங்கக் காணலாம். இன்றும்கூட மலேயர்களின் பழக்கவழக்கம், கலை, மதம், சட்டம், வானியல், இலக்கியம், இசை, சிற்பக்கலை, உலோக வேலை, பட்டு நெசவு முதலானவற்றில் இந்தியப் பண்பாட்டினைக் காணலாம்.

பதினைன்காம் நூற்ருண்டிலே சீனர்கள் மலேயாவில் இருந்தார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளிருப்பினும், பதினறும் நூற்ருண்டில் போர்த்துக்கீசியர்கள் காலம் வரை, மலேயாத் தீபகற்பகத்தில் சீனர்களுடைய குடியேற்றம் ஏற்படவில்லை. வியாபாரமே சீனர்களுடைய விருப்புக்களின் எல்லைக்குட்பட்டதாக இருந்தது. இந்தியாவுக்கும் சீனவுக்கும் இடையேயுள்ள கடற் பாதையில் அமைந்திருப்பதால் மலாக்கா சீன வியாபாரிகளின் முக்கியத் துறைமுகமாக ஆகியது. மலேயர்களின்மேல் சீனர்களின் பண்பாட்டுச் செல்வாக்கும் அவர்களோடு அவர்கள் கொண்ட இனக்கலப்பும் மிகக் குறைவே. முதலாவது, சீனர்கள் மிகக் குறைந்த அளவில் குடியேறினர்கள். இரண்டாவதாக, மலேயர்கள் முழுவதுமாக முஸ்லீம் மதத்தைத் தழுவியபோது 17ஆம் நூற்ருண்டுக்குப் பிறகு கலப்புத் திருமணத்துக்குத் தடைகள் ஏற்பட்டன. பிரிட்டீஷ் அதிகாரிகள் தீபகற்பத்தில் மிக வேகமாக ஆட்சியைப் பரப்பிக்கொண்டு போகும்பொழுது, 19ஆம் நூற்ருண்டின் முடிவு வரை வேற்றவர்கள் இனம் இல்லாமல் இருந்தது. மலேயாவுக்கு மிகப் பெரிய அளவில் புதிதாக வருபவர்கள் வரத் தொடங்கினர்கள்.

கி.பி. 19ஆம் நூற்ருண்டுவரை மலேயாவில் ஏற்பட்டுள்ள வேற்றவர்களின் தற்காலக்குடியேற்றத்தின் வரலாற்றில் இரண்டு முக்கியமான கால கட்டங்களை இனங் காண முடியும். ஜலசந்திப்புப் பகுதிக்குக் குடியேற்றங்களான பினங்கும், மலாக்காவும், சிங்கப்பூரும் முதலான கரையோரப் பகுதிகள் கிழக்கில் பிரிட்டனின் ஆரம்பகால வியாபாரத்துக்கும் குறுகிய ஆசைகளுக்கும் சான்ருய் இருந்தன. 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தகரத்தின் மீதுள்ள வேகத்துடன் இரண்டாவது கால கட்டம் தொடங்குகிறது. மலேயாத் தீபகற்பத்தின் சுரங்கப் பகுதிகளுக்கு, குறிப்பாகச் சீனவிலிருந்து ஏராளமான தொழிலாளர்களைத் தகரத்தின் கவர்ச்சி குடியேறச் செய்தது.



1. இஸ்லாம் மதத்தின் 5 தூண்களையும் மலேசியாவின் 13 மாநிலங்களையும் குறிக்கின்ற 18 பக்க நட்சத்திர வடிவம் கொண்ட கூறையையும் 240 அடி உயரம் கொண்ட கோபுரத்தையும் உடையதும், பொதுவாக எல்லோராலும் மஸ்ஜித் நெகரா என அழைக்கப்படுவதுமான தேசிய மசூதி.

2. மலேசியாவின் மண் பாண்ட வேலையில் உள்ளூரிலிருந்து எடுக்கப்பட்ட சீனக் களிமண்ணும் சுண்ணும்பும் உபயோகிக்கப்படுகின்றன. படத்தில் ஒரு சீனர் தம்முடைய திறமை வாய்ந்த விரல்களால் குயச் சக்கரத்தில் பாற்குவளையை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.





3. விலை மலிவாகவும் குளிர்ச்சியாகவும், இலேசாகவும், கண்ணைக் கவரும் பல வித வண்ணங்களில் கிடைக்கும் "மெங்குவங்" **(Mengkuang)** சிசல் நாரினுல் செய்யப்பட்டது. இத் தொப்பிகள் சுற்றுலா வருவோர்களின் கண்ணைக் கவர வல்லன.



4. கெபாயா (Kebaya-ரவிக்கை)வும், பாதி "சராங்கும்" (Sarong-மேலாடை) அணிந்த உள்ளூர் அழகி.

அந்த நேரத்தில், முதலில் கரும்பு, காப்பி, பிறகு ரப்பர் பயிரிடப் பெரிய தோட்டங்கள் உண்டுபண்ணவும் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அதனால் ஆயிரக்கணக்கான தென்னிந்தியர்கள் வேலை செய்ய வருவதற்கு வழி ஏற்பட்டது. ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட தொழிலாளர்களைப்போல முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இந்த வழக்கம் கைவிடப்பட்டுக் குடியேற்றத்துக்கு உதவி செய்யும் முறையில் எல்லாத் தொழி லாளர்களால் அளிக்கப்பட்டதொரு நிதியிலிருந்து முதலீடு செய் யப்பட்டது.

இவ்விதமாக 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மலேயாவில் குடியேற்றங்களின் பரப்பையும் வேகத்தையும் ஒருங்கே கண்டது. ஆனால் இது ஒரு இயக்கமே தவிர வேற்றுநாட்டு மக்களின் விவ சாய, தொழிற்சாலை அலுவல்களின் தொடர்ச்சியன்று. ஆகவே மலேயாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கங்கள் புதிய நகர உற்பத்தி இடங்களாக மாறும்பொழுது, வேற்று நாட்டு மக்கள் கிழக்கிலுள்ள மலேயாக் கரையோர விவசாயப் பகுதிகளை ஒதுக்கி விட்டனர். நிலத்துக்காக அல்லது குடியிருப்புக்காகவும் மலேயா வுக்குக் குடியேறிய சீனர்களுக்கும் அல்லது இந்தியர்களுக்கும் சிறிது போட்டியிருந்தது. அவர்களுடைய புவியியல் பரிமாற்ற மும், அவர்களுடைய தொழில் முறையும், பொருளாதாரத் தொழில் முறையும் முற்றிலும் மாறுபட்டவைகளாகும்.

பல வருடங்களாக வளர்ந்து வந்த இன அமைப்பு வடிவம் இரண்டாம் உலகப் போர் மூண்டபோது ஈடு இணையற்றதாக மாறியது. பல இனங்களைக் கொண்ட இந்தச் சமூகத்தில், மொத்த மக்கள் தொகையில் எழுபது லட்சத்துக்கு மேற்பட்ட மலேயர் கள் 48 விழுக்காடாகவும், சீனர்கள் ஏறக்குறைய 4 விழுக்காடாக வும், இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் மற்றவர்களும் மொத் தத்தில் 12 விழுக்காடாகவும் இருக்கின்றனர். (அதற்கு மாறாக பக்கத்தில் உள்ள சிங்கப்பூரில் சீனர்கள் மொத்தத்தில் எழுபத் தாறு விழுக்காடாகவும் அந்த அளவுக்குப் பெரும்பான்மையினர் களாகவும் இருக்கின்றார்கள்.) மலேயாவில் மக்கள்தொகையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பழங்குடிகளின் எண்ணிக்கை சுமார் முப்பத்தைந்தாயிரம் ஆகும். நாகரீகம் மெல்ல மெல்ல இந்தப்

பழங்குடி மக்களிடையே பரவத் தொடங்கவே அவர்கள் படிப் படியாகத் தங்கள் காட்டுமிராண்டி வாழ்க்கையையும் கடவுள் நம்பிக்கையற்ற குணத்தையும் ஒழித்து, மலேயர்களோடு கொண்ட பல கலப்புத் திருமணங்களால் மலேயர்களுடைய பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மலேயாவில் பெரியதொரு அளவில் இந்த இனக்கலப்பு நடை பெறுவதும் பல வருடங்களாகக் கூட்டங்கூட்டமாக வெவ்வேறு இன மக்கள் இடம் பெயர்ந்து வருவதும் விடாது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 350 ஆண்டுகளுக்கு முன்னால் பிலிப்பைன் ஸில், அப்பொழுது அரசாண்டுகொண்டிருந்த ஜப்பானியர்கள் சீனாவிலிருந்து குடியேறியவர்களின் வியாபாரத் திறமையைக் கண்டு பயந்தனர். ஆகவே பிலிப்பைன்ஸில், திட்டமிட்ட கலகத்தில் 30,000 சீனர்களை ஜப்பானியர்கள் கொலை செய்தார் கள். இந்தக் கொடுமையான செய்தியை மஞ்சுப் பேரரசர் கேட்ட பொழுது ஒரு வலிமை வாய்ந்த படையை இந்தப் படுகொலைக்குப் பழிவாங்குவதற்கு அனுப்புவதற்குப் பதிலாக அதிசயப்படத் தக்க வகையில் அவர்களுடைய முன்னோர்களுடைய பூமியை விட்டுப் போனதற்காக அவர்களின் மரணம் அவர்களுக்குச் சரியான தண்டனையே என்று அறிவித்தார்.

பேரரசின் முடிவானது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குடி யேறிய சீனர்களுக்கான ஒரு வகை அமைப்பினை உருவாக்க வழி வகை செய்தது. வந்து குடியேறியவர்களும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும் புதிய நாடுகளில் எதிர்த்து வருகின்ற ஆபத்தின்போது அவர்களின் அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு உதவியையும் எதிர்பார்க்க முடியாதபடியும் இருந்தார்கள். மலேயாவில் முதன்முதலில் நுழைந்து சீனர்கள் குடியேறிய பொழுது இருந்த அந்தச் சூழலிலே சீனாவில் அந்த நாட்களில் அமைதியின்மை பெருகிக்கொண்டிருந்தது.

சிங்கப்பூரிலும் பிற நாடுகளிலும் உள்ள பிரிட்டிஷ் குடி யேற்றப் பகுதிகளில் முதன்முதல் உழைத்தவர்கள் மொத்தத்தில் ஏழைகளே. பிறகு திரும்பவும் பெருகிய அளவில் வர ஆரம்பித் தனர். தொடர்ந்து சிங்கப்பூரும் ஜலசந்திக் குடியேற்ற நாடுகளும் உருவான பிறகு மிகப்பெரிய அளவில் சீனர்கள் சிங்கப்பூரிலும்

மலேயாவிலும் குடியேற வந்தனர். இந்தச் சீனர்கள் எப்படியோ ஒரு வழியில் தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

முதலில் குடியேறியவன் தொழிலாளியாக இருக்க, அவன் மகன் வெள்ளைச் சட்டை வேலையாளாக இருந்ததால், அவன் மக்களை இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்ப முடிந்தது. முதலாம் உலகப் போருக்கு முன்னால் அதன் விளைவாக மலேயாவில் உள்ள சீனச் சமூகத்தில் வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், ஆசிரியர்களும், பல துறைகளுள் பணிபுரிவோரும் எனக் குறிப்பிடத்தக்க வகையில் பலர் தோன்றினர். இந்தோ சைனாவிலும், இந்தோனேசியாவிலும், தாய்லாந்திலும், ஏன் தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளிலும் சீனர்களின் முன்னேற்றத்தின் வடிவமாக இருந்தது.

இந்தோ சைனாவிலும், தாய்லாந்திலும், அதைப்போல பிற நாடுகளிலும் சீனாவிலிருந்து குடியேறியவர்கள் உள்ளூர்ப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் மலேயாவில் இது எளிதாக இல்லை. அதன் விளைவாகச் சீனாவிலிருந்து குடியேறியவர்கள் திருமணம் செய்துகொள்ளுவதற்காகத் தங்கள் தாய் நாட்டுக்குப் போக வேண்டியதிருந்தது. ஒரு தடவை அவர்கள் வந்து குடியேறிவிட்டால் அடுத்து அவர்கள் பெண்களின் திருமணத்துக்கான தகுந்த வசதியைத் தேடிக் கொள்ளவேண்டும். இந்தவிதமாக ஒரு சில தலைமுறைகளில் இந்தக் குடும்பங்களுக்குள் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டது. அதோடு ஒரு குடும்பத்தினர் தகரச் சுரங்கங்களின்மூலம் பணக்காரர்களானால் மற்றவர் அதன் வியாபார முயற்சியில் விற்பனையாளர்போன்றிருந்து செல்வந்தர்களானார்கள். இன்றைக்கு மலேயாவிலும் சிங்கப்பூரிலும் உள்ள பல சீனக் குடும்பங்கள் இந்த வகையில் முன்னேறி உள்ளன என்பதை இனங் கண்டு கொள்ளலாம்.

சிங்கப்பூரில் இந்தப் பழங்கால லட்சாதிபதிகளைப் பற்றிய கட்டுக்கதைகள் பல சொல்லப்பட்டன. பலத்தை அள்ளிச் செல்லுபவராக வாழ்க்கையைத் தொடங்கிய ஒருவர் பின்னால் அரண்மனை போன்றதொரு வீட்டைக் கட்டியபொழுது அதன் நுழைவாயிலில் தங்கத்தாலாகிய ஒரு இணை பெரிய வாளிகளும், அதனுடன் அவற்றை முதுகில் வைத்துத் தூக்கிச் செல்வதற்காக உப

யோகிக்கும் கம்பும் காட்சிக்குரிய முதற்பொருளாக வைத்திருந் தார். இந்தப் பழமையான "தௌகாய்" (Towkay) மருத்துவ மனைகள் போன்ற பல நிறுவனங்களை ஏற்படுத்தியப் பிறர் அவ ருடைய செயல்களைச் சிங்கப்பூரிலும் பாராட்டும்படி செய்தார்.

மஞ்சு வம்சம் வீழ்ந்த பிறகு, 1911ஆம் ஆண்டு சீனக்குடியரசு தோன்றியபொழுது பல நாடுகளில் தூதரகங்களும் அரசாங்க அலுவலகங்களும் ஏற்படுத்தப்பட்டன. புதிய அரசு, கடல்கடந்து வாழும் சீனர்கள் தாய்நாடு திரும்பலாம் என்றும், இன்றும்கூட அவர்கள் சீனர்களாக மதிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்தது. ஆனால் அது குழப்பம் மிகுந்த காலங்களில் கடல் கடந்து வாழ் கின்ற சீனர்களுக்கு எந்த வகையிலும் உதவி செய்யவில்லை. தென் கிழக்கு ஆசிய நாடுகள் சுதந்திரமடையும் வரைக்கும் புதிய காலங் களின் வடிவுக்கும் உணர்ச்சிகளுக்கும் பொருந்துகின்ற வகையில் தங்களுக்காகவே அல்லது தங்களுக்கு எதிராகவே தங்களுக்குள் போற்றிவந்த எண்ணங்களை மாற்றியமைத்துக்கொண்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவில் இந்தக் கதையை நான் கேள்விப்பட் டேன். சீனுவில் உள்ள புதிய ஆளுநர் ஜப்பானியர்கள் மலே யாவை வெற்றிகண்டபோது ஜப்பானியப் பாடங்களோடு சீனத் தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்திரவு இட்ட தாகத் தெரிகிறது. சியாங்கே ஷேக்கிடமிருந்து (Chiang Kai-Shek) விலகி, நான்கிங்கில் (Nanking) உள்ள சீனர்களுக்குத் தலைவராக இருக்கவேண்டும் என்னும் ஆசையுடைய அவர் பெயர் வாங் சிங் வே (Wang Ching-Wei). சீனுவில் உள்ள ஆளுநர்களின் இரட்டை வேடத்துக்கு மலேயாவில் உள்ள சீனர்கள் மாற்று வழி கண்டுபிடித்தார்கள். ஜப்பானிய வெற்றிக்கு உடனடி யாகச் சியாங்கே ஷேக்கைப் பின்பற்றுகின்ற சீனர்கள் பெரிய சட்டத்துள் வைக்கப்பட்ட படத்துக்கு பக்கத்தே வாங் சிங் வே வின் படத்தை வைத்தார்கள். எப்பொழுது ஜப்பானியர்கள் சுற்றிவருகின்றுர்களோ, அப்பொழுது வாங் பலகணிப் பகுதியிலே யிருந்து புன்சிரிப்புக் காட்டவும், தாயகத்தின் வளர்ச்சியைக் காண சியாங் திரும்பி வரும்பொழுது ஜப்பானியர்கள் கண் பார்வையி லிருந்து மறைந்து வருவதுமாக இருந்தார்.

இந்த நேரத்தில் ஜப்பானியர்கள் சிங்கப்பூரினுள் படையெடுத்

துச் சென்றபொழுது அது சீன நகரமாக இருந்தது. பிரிட்டீஷா ரோடு சிங்கப்பூருக்கு இருந்த பழைய உறவுகளுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஆனால் சிங்கப்பூரை வெற்றிகொள்ள ஜப்பானியர் முயற்சி செய்தார்கள். சிறிது காலம் சும்மா இருந்தபிறகு, ஜப்பானிய நோட்டுக்களைக் குவிக்கத் தொடங்கினர். ஆனால் அவர்களுடைய முக்கிய வியாபாரங்கள் அடைபட்டபொழுது அவர்களால் சேர்த்து வைத்திருந்த ஜப்பானிய நோட்டுக்களை என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்களுள் வெகு சிலரே அதற்குப் பதிலாக, நாட்டை விட்டு வெளியே போய் இங்கிலாந்திலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் தங்கள் குழந்தைகளைப் படிக்க அனுப்புவதற்குத் தயார்படுத்திக்கொண்டனர்.

இரண்டாம் உலகப்போர் மலேயாவில் உள்ள சீனர்களின் வரலாற்றில் திருப்புமையமாக இருந்தது. ஜப்பானுக்கு எதிரான மக்கள் படை அந்தக் காலத்துத் தோன்றவும், அந்தப்படை ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்களாக மலேயாவில் உள்ள குடாவில் தடையாக பிரிட்டீஷாரால் அடக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஆட்சிக்காகத் தாய் நாட்டில் சீனப் பொதுவுடைமை வாதிகளின் வெற்றிக்கு இணையாக முதலாம் போர் நடைபெற்றபொழுது சீனர்களால் சீனர்களுக்காக நடத்தப்படும் விடுதலைப்போர் என அழைக்கப்பட்ட யுத்தத்தை சீனப்படை துவக்கியது. அந்தப் போர் எப்படியோ பயனற்றுப்போய்விட்டது.

போரின் முதல் கட்டத்தின்போது விலகியிருந்த இந்தியர்கள் சீனர்களோடு இந்தத் தடவை சேர்ந்துகொண்டார்கள். சீனர்களைப் போன்று இந்தியர்களும் மலேயா உருவாகியபொழுதிலிருந்து மலேயாவுடன் வளர்ந்தவர்கள். எனவே நாட்டில் உள்ள இந்தியக் குடிகள் மலேயா அரசாங்கத்தில் தமக்கென ஓர் உரிய பங்குண்டு என்று நம்பினர். இந்தியச் சுதந்திரத்துடன் இந்தியக் குடிகள் எல்லோருக்கும் தாங்கள் எங்கெல்லாம் வாழ்கின்றோமோ அங்கெல்லாம் தங்களுடன் வாழ்கின்ற மக்களுடைய எண்ணங்களுடன் ஒன்றுபடுத்திக்கொள்ள வேண்டும் என்னும் இந்த இயற்கையான நல்ல எண்ணமே இந்தியர்களின் பக்கம் இருந்தது.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மலேயாவில் இந்தியர்கள் அதிக

அளவில் குடியேறியிருக்கிறார்கள். பயிரிடுதலும், திறமையில்லாதவர்களுக்காக வேலை வாய்ப்புகள் இல்லாமலிருப்பதாலும் பல ஆயிரக்கணக்கான இந்தியர்களை மலேயாவுக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கொண்டுவந்து விட்டன. மலேயாவின் ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்கின்றபொழுதும் நாட்டில் உள்ள பிற திட்டங்களில் உழைக்கும்போதும் எத்தனையோ இந்தியர்கள் உயிர் நீத்தனர் என்னும் துயரக் கதைகளைக் கேட்கலாம். பிழைப்புக்காக வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டதனாலும், அதற்காக அவர்கள் கடினமாக உழைத்தபோதிலும் அவர்களுடைய வேலையின் தன்மைக்கேற்ப, ஆட்சியினரின் கவனத்தை ஈர்க்க அவர்களுக்கு இரண்டு மூன்று தலைமுறைகள் பிறந்தன.

இந்த இடைக்காலத்தில், எழுத்தர்கள் அல்லது கணக்காயர்கள் மற்றும் பிற குடியேற்ற நாடுகளில் உள்ள பிற வேலைகளுக்கு என்பது இன்னொரு வழியில் இந்தியர்களின் குடியேற்றம் மலேயாவில் ஏற்பட்டது. இவற்றைத் தொடர்ந்து மலேயாவில் வியாபாரத்துக்கும், இந்தக் குடியேற்றத்தினர்களுக்கு நகரங்களில் தங்குவதற்கு ஆன வாய்ப்பினையும் அளித்தன. அதன்பிறகு இந்திய வியாபாரிகள் தாங்களாகவே சிறப்பாக இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தே மலேயாவில் வட்டிக் கடைக்காரர்களாகத் திறம்பட நடத்திய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் குடியேறினார்கள்.

மலேயாவிலுள்ள இந்தியத் தொழிலாளிகள் குறிப்பாக இந்தியர்களுக்காக வேலை செய்வதற்கு என அழைக்கப்பட்டு வந்தவர்கள், அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டவர்களால் கூலி காரணமாகவும், வேலை நேரத்தின் காரணமாகவும் இழிவாக நடத்தப்பட்டார்கள். தங்களுக்குக்கீழ் பயிரிடுதலிலும் அல்லது அரசாங்க அலுவல்களிலும் வேலை செய்கின்ற பெரும்பான்மையினரான இந்தியர்களைத் தங்கள் வேலையாட்கள் என வைத்திருப்பதன் காரணமாகத் தங்கள் வழியில் தொடர்ந்து அநீதி இழைக்க முயற்சி செய்துகொண்டிருப்பதினால் பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்த அநீதிகளைக் கவனிக்காதிருந்தார்கள்.

சண்டை வந்ததும் இந்தியக் குடும்பங்களின் நிலையில் பெரிய

தொரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது. சண்டையின் முடிவில் ஏறக்குறைய ஐம்பதினாயிரம் இந்தியர்கள் தாய்லாந்துக்கும் மலேயாவுக்குமிடையே ஓடிய "மரண இரயில்" போக்குவரத்தின் சோதனைக்குத் தப்பிப் பிழைத்தவர்களைக் காக்கவேண்டிய கடப்பாடு மலேயாவுக்கு ஏற்பட்டது. இதற்கு மேலும் பலர் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். 1946ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஜவஹர்லால் நேரு மலேயாவுக்குச் சென்றபொழுது, அங்குள்ள இந்தியர்கள் அனுபவித்து வரும் துயரங்களைக் கண்டு மனம் மிகக் கலங்கி தன்னைத்தானே நிவாரணக் குழுவின் தலைவராக நியமித்துக்கொண்டார். அதோடு மலேயத் தோட்ட முதலாளிகளுக்கு எச்சரிக்கையும் விடுத்தார். அவர் எச்சரிகையாவது: "இங்கே தோட்டவேலை ஒருவேளை சுரண்டலினாலேயே மிகக் குறைந்த ஊதிய உழைப்பாய் நடைபெறுகிறது. பழங்காலத்தைப்போல எதிர்காலத்தில் இந்தியத் தொழிலாளியை ஒருவரும் சுரண்டமுடியாது."

1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவுக்கு மலேயாவில் மிகப்பெரிய முக்கியத்துவம் கிடைத்தது. அடுத்த சில ஆண்டுகளில் அனேக இந்தியர்கள் மலேயாவுக்குள் வரத் தலைப்பட்டனர். அங்கே தங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், அறிஞர்கள் போன்ற பல்வேறு வகையினர்கள் அங்கிருந்தனர். அவர்களுக்கு எல்லாம் மலேயாவின் சுதந்திர நாளான 1957ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள் மிகப் பெரியதொரு திருநாளாகும். அவர்கள் மலேயாவைத் தங்கள் தாயகமாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் சுதந்திரம் அடைந்ததிலிருந்து எங்கோ ஒரு பக்கம் தவறு நடந்துகொண்டேயிருந்தது. முடிவாக இந்தியர்களின் இளைய தலைமுறையினர் சீனர்களுடன் ஒத்துப்போக வேண்டிய நிலையினைக் கண்டார்கள்.

மலேயர்களுக்கு அரசியலில் அதிகாரம் அளிக்க அதிலே மிகப் பெரிய அளவுக்கு அவர்களை நுழையச் செய்யவும், சீனர்களுக்கு வாணிபத்தில் ஈடுபடச் செய்ய அவ் வாணிபமே அவர்களுக்கு மிகுந்த அளவுக்கு இலாபத்தைக் கொண்டு வரவும், அரசாங்க அலுவல்களிலும் மற்றும் பிற வேலைகளிலும் இந்தியர்களுக்குக்

குறைந்த ஊதிய வேலைகள் கிடைக்கவும் செய்தன. ஒவ்வொரு பகுதியினருக்கும் அவரவர்க்கான வகையில் தொழில் அமைந்திருந்தாற் போன்றிருந்தது. குடியரசு நாட்டின் குடிமகனுவதற்குள்ள உரிமையைக் கோருவதற்கு எவ்வளவு இருக்கிறது என்று எண்ணுகின்ற படித்த சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும், 1957ஆம் ஆண்டு மலேயாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஆட்சியின்கீழ்ப் பார்ப்பதற்கு இயற்கையாகவே அமைந்த இத் தொழிற் பிரிவுகள் சீக்கிரத்திலேயே திகட்ட ஆரம்பித்தன.

4. வரலாற்றுப் பழைமை

மலேயாக் கூட்டாட்சி புதியதொரு நாடு. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னுல் வந்தாலும் இன்றும் மலேசியாக் கூட்டாட்சி புதியதொரு நாடாக இருக்கிறது. மேற்கத்தியக் குடியேற்ற அரசுகள் தென்கிழக்கு ஆசியாவில் நுழைவதற்கு முன்னுலே சிங்கப்பூரி லிருந்து ஆஸ்திரேலியா வரை பரந்துபட்ட மலேசியாவுக்கும் அதன் பக்கத்திலிருக்கின்ற தீவுக்கூட்டங்களுக்கும் நீண்டதொரு வரலாற்றுப் பழைமை உண்டு.

மலேசியாவில் ஆதிகாலந்தொட்டே மனிதர்கள் வசித்து வந்தார்கள். கி.மு. 50,000 ஆண்டுகளுக்கு முன்பே மனித வாழ்க்கை அங்கு இருந்தது என்பதற்கு சராவக் என்னுமிடத்தில் உள்ள நியா (Niah) குகைகள் சான்று பகர்வதைக் காணலாம். 2,500 ஆண்டுகளுக்கு முன்னுல் அங்குக் குடியிருந்த மக்கள் சீனு, இந்தியா, மற்றும் பிற கிழக்கு நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர்.

யுனுனிலிருந்தும் (Yunnan) சீனுவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பழுப்பு நிற மங்கோலியக் குடிகள் கி.மு. 2,000 ஆண்டு அளவில் மலேயாத் தீபகற்பத்தையும் மலேயாவின் பக்கத்தேயுள்ள தீவுக்கூட்டங்களையும் அடைந்தார்கள். அவர்கள் கழிகள் நடப்பட்டு மூங்கிலால் வேயப்பட்ட குடிசை களில் வசித்துக்கொண்டு வாழை, கொடிக்காய், கரும்பு, தென்னை முதலியவற்றைப் பயிரிட்டனர். தானியங்களும் பதப்படுத்தப்பட்ட மதுவகைகளுடனும் அரிசியும் தினை வகைகளும் உணவாக இருந்தன. அவர்கள் எருமையையும் பன்றி யையும் வீட்டுப் பிராணிகளாகப் பழக்கப்படுத்தி வந்தார்கள். கட்டுமரங்களைச் செலுத்தவும், மரத்தாலும் மூங்கில்களாலும் ஆன மீன்பிடி கண்ணிகள்கொண்டு மீன் பிடித்தார்கள். அவர் களுள் சிலர் தேர்ந்த வேட்டையாளர்களாக இருந்தார்கள். இறந்த தலைவர்களுக்காக நடுகற்களை எழுப்பினுர்கள்.

பிற இனத்தவர்களுடனும், வேற்றுக் குடிகளுடனும் திருமண உறவை ஏற்படுத்திக்கொண்ட யுனனிலிருந்து வந்த குடிமக்களிடையே இதுவே பொதுவான வாழ்க்கையாக இருந்தது. மேலும் அவர்களே கடைசியில் இன்று மலேசியர்கள், இந்தோனேசியர்கள் என மாறினர்.

கிறித்துவின் காலத்திலே, யூக்கள் (Yues), இந்துக்கள் எனப் படும் இரண்டு வேற்று இனங்களின் செல்வாக்கின்கீழ் இந்தப் பழங்குடி மக்கள் வந்தார்கள்.

மலேயா எங்கும் யூ வாணிபர்கள் காணப்பட்டார்கள். செலாங் கோரில் உள்ள கிளாங் பக்கத்திலும், பெகாங்கிலும் உள்ள ஆற்றில் அவர்கள் பித்தளை முரசங்களை விட்டுச் சென்றார்கள். பருத்தி ஆடை நெய்யும் கலையையும், கெட்டிச்சாயம் போடும் முறையினால் அதை அழகுபடுத்தவும் அவர்கள் கற்றுக்கொடுத்தனர். மலேயாவின் பழங்குடிகளின் மொழிக்குப் பெரியதொரு அளவில் கலைச்சொற்களை விட்டுச் சென்றனர். அவர்கள் வழங்கிய மொழி களின் சொற்கள் கலப்பதற்கான நிலையொன்று ஏற்பட்டது. அதிக அளவில் பித்தளையே அவர்களின் கலைக்கு வடிவப் பொரு ளாக இருந்ததால், முக்கியமாகப் பித்தளையின் குறைவின் காரணமாக அக் கலை மலேயாவில் சிறப்பு இடத்தைப் பெற முடிய வில்லை. இந்துக்களின் வருகையால் யூவின் செல்வாக்கு மறையத் தொடங்கிற்று.

ஏறக்குறைய புத்தருடைய காலத்திலிருந்து மலேசியாவுக்கு இந்திய வர்த்தகர்கள் வரத் தொடங்கினார்கள். இந்தியர்களின் செல்வாக்கு நாட்டிலிருந்த மற்றைய பண்பாட்டுத் தொடர்புகள் அனைத்தையும் மூழ்கடிக்கச் செய்து, மலேயர்களுக்கு அவர்களுக் கான எழுத்து வடிவம், மதம், சோதிடவியல், மருத்துவம் முத லானவைகளையும் பழங்குடிப் பழக்க வழக்கத்திற்குப் பதிலாகச் சட்டம், அரசியல் அமைப்பு, இலக்கியம், பொன், வெள்ளி, பட்டு நெசவு முதலான கைத்தொழில்களையும் நல்கின.

கிறித்துவ சகாப்தத்தின் ஆரம்பத்தே, பெர்சிய உரோமானியப் பேரரசுகளின் ஆடம்பரம் கிழக்கின் வாசனைத் திரவியங்களை நாடி யது. பெர்சியக் கப்பல்களின் வடிவில் கட்டப்பட்ட பல இந்தியக் கப்பல்களும், பருவக்காலங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த அரே

பியர்களின் அறிவை உலகம் அறிந்து பயன்படுத்தியதும், இந்தியாவின் கடற்பிரயாணத்தை மேற்கொண்டுள்ள புத்தமதத்தினரின் எழுச்சியும்—மொத்தத்தில் இவைகளும் இன்னும் பல கூறுகளும் மலேசியாவுக்கும் அதற்கு அப்பாலும் உள்ள இடங்களுக்குக் கடற் பயணங்களை மேற்கொள்ள இந்தியர்களுக்குத் தூண்டுதல் அளித்தன. பரந்துள்ள வடக்கு மலேயா, தாய்லாந்து, இந்தோ-சைனு வரை உள்ள பகுதியில் மலை என்றும் பொருள்படும் பெனேம் (Pnom) அரசே தென்கிழக்கு ஆசியாவில் ஏற்படுத்திய முதல் முக்கியமான இந்து அரசாகும். வடக்கு மலேயாவிலுள்ள இலங்காசுகா (Lankasuka) அரசு ஏறக்குறைய இந்த அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்ட அரசுகளுள் ஒன்று எனலாம். சீனர்களின் வம்சாவழியின்படி, நீண்ட மதிலுடன் கூடிய தலைநகரைக் கொண்ட இலங்காசுகா அரசு கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் தோன்றியிருக்கவேண்டும். தாய்லாந்துக்கும் இந்தோ-சைனுவுக்கும் தரை வழியாக வியாபாரத் தொடர்பு கொள்ளவும் சீனுவுடன் நான்காம் நூற்றுண்டு வரை வாணிபம் செய்துகொண்டு வரவும் செய்தது.

தலைசிறந்த தொல்பொருள் நிபுணரான ஹெச். ஜி. கியுயாரிட்சு (H. G. Quaritch) அவர்கள் கருத்துப்படி கெடா மாநிலத்திலும், பினங்குக்கு அடுத்த நிலப்பகுதியில் உள்ள வெல்லெஸ்லி பகுதியிலும் கிடைத்த நான்காம் நூற்றுண்டுச் சமஸ்கிருதக் கல்வெட்டுகளிலும், அதைப்போலவே கெடா, பேரக் முதலிய மாநிலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஏராளமான பித்தளை உலோகங்களாலான புத்த படிமங்களும் மலேசியாவிலுள்ள இந்தியர்களின் முன்னேர்கள் புத்த மதத்தினர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கு அரண் செய்கின்றன. பெனேம் அரசின் வீழ்ச்சியிருந்து ஸ்ரீ விஜய அரசின் தோற்றம் வரைக்கும் மலேயாவின் எல்லாப்பகுதிகளிலும் மகாயான புத்தமதமே செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனுடைய செல்வாக்கு ஏழாம் நூற்றுண்டுக்கும் பதினென்காம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மறைந்தது.

வெகு காலமாக மலாக்கா ஜலசந்தியும் கடல்கடந்த தீவுக் கூட்டங்களும் ஸ்ரீ விஜயப் பேரரசின் ஆளுகைக்கு அடங்கியும் கிழக்கு நோக்கி வரத் தொடங்கிய அரேபிய வர்த்தகர்களின் ஆதிக்கத்தின்

கிழும் இருந்தன. இந்தப் பகுதிகளில் நடைபெற்ற வாணிபத்தின் மேலுள்ள ஸ்ரீ விஜயப் பேரரசின் ஆதிக்கம் அவர்களுக்கும் அரே பியர்களுக்கும் இடையே இடைவிடாத போர்களுக்கு வழி நடத்திச்சென்றது.

கடைசியாகப் பேரரசு சிதையத் தொடங்கியது. சுமத்திராவி லும் பல இடங்களிலும் உள்ள எதிர்ப்புக்களும் எதிரிகளும், அதே போன்று மலேசியாவில் உள்ளவர்களும் ஸ்ரீ விஜயப் பேரரசை எதிர்த்துக்கொண்டு கிளம்பினர். ஜாவா தன்னுடைய மகாபாஜித் பேரரசை (Mahapajit Kingdom) நிறுவியது. மலேயா வின் வடக்குப்புறத்திலிருந்து தாய் (Thais) முற்றுகையிட்டது. மலேயாவிலும் தென்கிழக்காசியாவிலும் நிலவிய சமூக முறைக்கு இஸ்லாமிய மதப் பிரச்சாரகர்களால் சாவு மணி அடிக்கப் பட்டது.

15ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தே பிற்காலத்தில் பரமேஸ்வரா என்னும் பட்டப் பெயருடன் தெமாசேக் (Temasek) என்றழைக்கப்பட்ட ஜாவானிய இளவரசர் சிங்கப்பூர்த் தீவை ஆண்டுவந்தபொழுது, அதற்கு அடுத்த எல்லா வகைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த மலாக்கா அரசு ஏற்படுத்தப்பட்டது. பிறகு தாய்கள் [Thais (Siamese)] அந்தத் தீவைக் கைப்பற்றிக் கொண்டு ஆண்டபோது தாயின் ஆளுநரைக் கொன்றுவிட்டு பர மேஸ்வரா அதனுடைய ஆட்சியாளராக ஆனார். தாய்லாந்தினர் பழிவாங்கப் புறப்படவே பரமேஸ்வரா மலாக்காவுக்குத் தப்பி ஓட வேண்டியிருந்தது. அதன் பிறகு மலாக்காத் துறைமுகத்திலும் அதன் ஆட்சியாளர்கள் வரலாற்றிலும் பல மாறுதல்கள் ஏற் படுத்தத்தொடங்கின.

அப்பொழுது இஸ்லாம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. அந்தக் காலத்திலே மலாக்கா ஓரளவு சுதந்திரம் இல்லாமல் இருந் தாலும், வடக்கு மலேயாவில் உள்ள கெடா மாநிலத்தோடு ராஜ விசுவாசத்தோடு இருக்கக் கடமைப்பட்டிருக்கவும் அது சுமத்திரா முஸ்லீம் மாநிலமாகிய பசை (Pasai)-க்குக் கடமைப்பட்டிருந்தது. பரமேஸ்வரா உலகஞானம் உடையவர் ஆதலாலே சுமத்திராவின் முஸ்லீம் இளவரசியைத் திருமணம் செய்துகொண்டு மொஹத்

இஸ்கந்தர் ஷா (Megat Iskantar Shah) என்னும் பட்டப்பெயரை யும் சூட்டிக்கொண்டார்.

பரமேஸ்வரா அரசு ஒரு குறுகிய காலமே நிலைத்து இருந்தது. பரமேஸ்வராவின் வாரிசு தம்மை மகாராசர் என்று அழைத்துக் கொண்டு, ஸ்ரீவிஜய பௌத்த அரசர்களின் பட்டப் பெயரைத் திரும்பச் சூட்டிக்கொண்டு, பழைய இந்து அமைப்புப்படி அரசாங் கத்தைத் அமைத்தார். அவருடைய ஆட்சி சுருங்கிய காலமே இருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைக்காலத்தே சுல்தான் முசாஃபர் ஷா (Sultan Mazaffar Shah) என்னும் பட்டப் பெயருடன்கூடிய அவருடைய தம்பியை (அவருடைய தாய் ஒரு தமிழ்ப்பெண்) பட்டத்துக்குக் கொண்டு வர முயற்சி செய்த மலாக்கா முஸ்லிம்களால் (தமிழர்கள் என்று சொல்லப்படுகின் றது) கொலை செய்யப்பட்டார்.

பிறகு மலாக்கா வெற்றி நடை போடத் தொடங்கியது. அது மொத்தத்தில் வடக்கிலுள்ள பட்டணி (Pattani)யும் கெடாவும் சேர்த்து மலேயா முழுவதும் தன்னாட்சிக்குக் கொண்டு வந்தது. ஜலசந்திகளைக் கடந்து சென்று வெற்றியும் கண்டது. ஒரு நூற்றாண்டு அளவில் அதனுடைய ஆட்சி ஈடும் எதிர்ப்புமற்ற தாக இருந்தது.

வெற்றி கொண்ட மாநிலங்களிலிருந்து மலாக்காப் பேரரசு தங்கத்தையும், தகரத்தையும், மற்றும் போரிடுவதற்கான படை வீரர்களையும் திறைப் பொருள்களையும் பெற்றது. அது மலாக்கா வின் எழுச்சிக்காலமாக இருந்தது. துறைமுகத்தில் ஒரு பகுதி சீனர்களுக்கும், மற்றொரு பகுதி இந்தியர்களுக்கும், இன்னும் ஒரு பகுதி ஜாவானியர்களுக்குமாக இருந்தது. மலாக்கா, அரிசி மற்றும் உணவுப் பொருட்களை எப்படியிருந்தபோதிலும் இறக்குமதி செய்ய வேண்டி இருந்தது.

சீனக் கடல் வணிகர்களின் மும்முரமும், இந்திய, அரேபியர் களின் வியாபார வேகமும், தீரமிக்க போர்த்துக்கீசிய வியாபாரி யான தூரசே பார்போஸாவை (Durate Barbosa) மலாக்காவை உலகிலே ஏராளமான கப்பல்களுடனும் மிகப் பெரிய அளவில் வியாபாரிகள் நிறைந்ததோடு செல்வங்கொழிக்கும் துறைமுகம்

என அழைக்கச் செய்திருக்கவேண்டும். மலாக்கா அரசும் நாகரீகத்தின் பழைமைக்கும் புதுமைக்கும் மையமாக விளங்கியது.

1498ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா இந்தியாவில் வந்து இறங்கினார். பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு போர்த்துக்கீசியர்களின் கப்பற் படையொன்று மலாக்காவினுள் நுழைந்தது. ஆனால் மலாக்காவின் ஆளுநராலும் அவர்களின் துணைவர்களாலும் துரத்தி அடிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அஃபோன்ஸோ டி அல்புகெர்க்கின் (Affonso de Albuguerque) தலைமையின்கீழ்ப் போர்த்துக்கீசியர்கள் திரும்பி வந்து அதைக் கைப்பற்றினார்கள். அல்புகெர்க் பெரிய கோட்டையைக் கட்டினார். புதியதொரு பணப்புழக்கத்தை ஏற்படுத்தினார்; பதுக்கல்காரர்களிடமிருந்து அரிசி, மற்றும் விளைபொருட்களைக் கைப்பற்றினார்; ஆளுநர் ஒருவரின் பொறுப்பில் மாலாக்காவை ஒப்படைத்துவிட்டு வெளியேறினார்.

மலாக்காவில் உள்ள போர்த்துக்கீசியர்களின் கொடுங்கோலாட்சி அவர்கள் வசமிருந்த துறைமுகத்துக்கும் அவர்களால் கட்டப்பட்ட கோட்டைக்கும் ஒரு முடிவு காலத்தைக் கொண்டு வந்தது. பக்கத்து இடங்களில் உள்ள மலாய்ச் சுல்தான்களாலும் அவர்களைப்போல ஜாவானியர்களாலும் சுமத்திராவினர்களாலும் கோட்டை தாக்கப்பட்டது. அந்நாளைய சரித்திர ஆசிரியர்களால் போர்த்துக்கீசிய அதிகாரிகள் கர்விகள், ஒழுங்கீனர்கள், இரக்கமற்றவர்கள் என இகழ்ந்து பேசப்பட்டார்கள். அக்கோட்டையின் தலைவன் ஆண்டு ஒன்றுக்கு தலையாய பொருள்களிலிருந்தும், நியாயமற்ற நேரடி வியாபாரத்திலிருந்தும் 50,000 டாலர்கள் அடைந்தான் என்றும் வரலாற்றில் குறிக்கப்பட்டிருக்கிறது.

பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தற்பொழுது ஜாகர்தா எனப்படும் படேவியாவில் (Batavia) உள்ள தலைமையகங்களுடன் டச்சுக்காரர்களின் கிழக்கு இந்தியக் கம்பெனி செயல்படத் தொடங்கியது. டச்சு போர்த்துக்கீசியக் கப்பல்களைக் கைப்பற்றியது; அல்லது எல்லாக் கப்பல்களையும் தடை பண்ணியது; மலாக்கா வியாபாரத்தை அழித்தது. கடையியாக 162 நாள் முற்றுகையின் முடிவில் டச்சு நகரத்தை பலவந்தமாகக்

கைப்பற்றிக்கொண்டு அதைக் கால் நூற்றாண்டுக்கு மேலாகவே ஆக்கிரமித்துக்கொண்டு இருந்தது.

டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசியர்களைவிட எந்த வகையிலும் ஆட்சியில் ஒன்றும் சிறந்தவர்களல்லர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் மலாக்காவின் மக்கள்தொகை நான்கில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது. டச்சுக்காரர்கள் வாணிபத்தைத் தன்னுரிமையாக்க முயற்சி செய்தார்கள். அவர்கள் துணியை விற்கவும், தகரம், ஆடம்பரப் பொருட்கள் முதலானவற்றை அவர்கள் கேட்கும் விலையிலே வாங்கவும் விரும்பினார்கள். இந்த முயற்சிக்கு எதிராக ஜாவானிய, சுமத்திரா, இந்திய வர்த்தகர்களால் சவால் விடப்பட்டது. கடைசியாக பிரிட்டிஷ் பினாங்கில் சுதந்திரத் துறைமுகம் கட்டியபொழுது, மலாக்காவிலுள்ள டச்சு ஏகேச் சதிகாரத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது.

மலேயாவிலும், மலேசியாவிலும் நுழைந்த மேற்கத்திய குடியேற்ற அரசுகளுள் பிரிட்டன் கடைசியாக இருந்தது. டச்சு மலாக்காவுக்கு எதிரியாகவும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இணைப்புத் துறைமுகமாகவும், வர்த்தகக் கப்பல்களுக்கான பணிமனையாகவும், ஃபிரான்சிஸ் லைட் (Francis Light) என்னும் ஓர் இளம் வர்த்தகத் தலைவனின் வேண்டுகோளின்படி கெடா சுல்தானிடமிருந்து 1786ஆம் ஆண்டு ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் கம்பெனி பினாங்குத் தீவை வாடகைக்கு எடுத்துக்கொண்டது.

சுல்தான் வாடகைப் பத்திரத்தில் தாய்லாந்து, செலாங்கோர் முதலிய உள்நாட்டு மாநிலங்களிலிருந்து வரும் படையெடுப்புக்கு எதிராகக் கம்பெனி உதவி செய்ய வேண்டும் என்று கண்டிப்பாய் உறுதியளிக்க வேண்டும் என்ற நிபந்தனை இட்டார். ஸர் ஃபிரான்சிஸ் லைட்டும் இந்த இராணுவ உதவிக்கு ஒத்துக்கொண்டார். பிரிட்டிஷாரால் பினாங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இருப்பினும் பிரிட்டிஷ் அரசாங்கம் சுல்தானுக்கு ஐந்து ஆண்டுக்கு லைட் அளித்த உறுதிமொழியை ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆனால் கடைசியாக, கி.பி. 1800-ல் கெடாவினால் ஒத்துக்கொண்ட வெல்லெஸ்லி மாநிலப்பகுதிக்கும் தீவுக்குமாக ஆண்டுக்கு வாடகையாக, கெடாவுக்கு உறுதியளிக்கின்ற வகையில்,

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இது மலேயாவின் சுதந்திரப் பிரகடனம் வரைக்கும் கெடாவின் சுல்தானுக்கு அளிக்கப் பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பக்காலத்தே, சிங்கப்பூர் ஏறக்குறைய மக்கள் குடியேருத புதர்கள் மண்டிக் கிடக்கும் சதுப்புநிலக் காடாகவே இருந்தது. 1824ஆம் ஆண்டு ஜோகோர் சுல்தானிடமிருந்து தற்காலிக உரிமையிலிருந்து சிங்கப் பூரை எடுத்துக் கொள்வதற்கான முதல் நடவடிக்கையை, ஸ்டாம்ஃபோர்டு ரேஃப்பிள்ஸ் மேற்கொண்டார். அதன் பின்னுல் தீவுக்கெதிராக டச்சு முற்றுகை பற்றியதொரு எந்தவிதமான பயமும் ஒழிக்கப்பட்டுவிட்டது. அந்நாளைய சிங்கப்பூரும், இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பக் கட்டத்திலே அதுவும், அதன் குடியேற்ற ஆளுநர்களின் வெற்றி தோல்விகளும் சாமர்செட் மாகமின் தென்கிழக்கு ஆசியக் கதைகளில் விரிவாகச் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

1824ஆம் ஆண்டில் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டு வெளிநாட்டுக் கலகங்களுக்குப் பிறகு பிரிட்டனுக்கு மலாக்காவை அளிக்க டச்சு ஒத்துக்கொண்டது. அப்பொழுது அங்கே சிங்கப் பூர், மலாக்கா, பினுங்கு என்ற மூன்று குடியேற்ற அரசுகளே இருந்தன. மற்றைய பகுதிகளைச் சுல்தான்கள், அவர்களுக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண் டிருக்கும் சண்டைகளுக்கு இடையே ஆண்டு வந்தார்கள். பிரிட்டிஷ் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னுல், சுல்தான் களுக்கும் பக்கத்து நாடுகளிலுள்ள பல்வேறு முற்றுகைப் படை யினர்களுக்கும் இடையே ஒரு தொடர்ந்த யுத்தம் நடைபெற்றது.

இந்தியாவிலுள்ள நவாபுகளிடமும் மகாராஜாக்களிடமும் கையாண்டு வெற்றியடைந்த அதே பழைய பிரித்தாளும் கொள் கையை பிரிட்டிஷார் மலேயாவிலும் பின்பற்றினர். முதலில் மலேயா மாநிலங்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. பின்னுல் ஒருவகையான ஒற்றுமையை மாநிலங்களில் ஏற்படுத்த பிரிட்டிஷ் முயற்சி செய்தது. முதல் உலக மகா யுத்தத்துக்கு முன்னுல் அதன் முற்பகுதியும் இரண்டாம் உலக

மகா யுத்தத்துக்குப் பிறகு அதன் பிற்பகுதியும் செயல்படுத்தப் பட்டன.

1955ஆம் ஆண்டு மாநிலத் தேர்தல்கள் நடைபெற்றபொழுது மலேயாவுக்குள் நிலவிய இயக்கம் ஒரு விடுதலை இயக்கமாக மாறியது. மலேயாவில் குடியேறியுள்ள மலேயர், சீனர், இந்தியர் என்னும் மூன்று முக்கிய இனங்களும் இணைந்தகட்சி, கூட்டாட்சிக் கட்சி ஒரே ஒரு இடத்தைத் தவிர எல்லா இடங்களையும் கைப் பற்றியது.

மலேயாவுக்கும் மலேசியாவுக்கும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நிறைந்ததொரு மதிப்புவாய்ந்த வரலாற்றுப் பழைமை உண்டு. அது உங்களுக்கு இந்தியாவின் வரலாற்றை நினைவுபடுத்துமானால், அதுவே ஒருவிதத்தில் வரலாறு தன்னைத்தானே திறமையாகத் திரும்பக் காட்டிவிடும் என்பதாகும். ஏனெனில் விடுதலைக்கு முன்னால் இந்தியாவிலும் அதேபோல மலேசியாவிலும் நிலவிய ஒரே விதமான குடியேற்ற ஆதிக்கமே கடைசிச் செயலாக இருப்பதே அதற்குக் காரணமாகும்.

5. வெப்பமண்டலச் சொர்க்கம்

1957ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முப்பத்தோராம் நாள் சுதந்திரப் பிரகடனம் செய்த மலேயாக் கூட்டாட்சி நாடு, பல்வகைகளில் சிறப்பு வாய்ந்ததொரு சிறப்பு நாடாகும். உண்மையிலே, ஒரு பக்கம் துறைமுக நகரமான சிங்கப்பூரைக் கொண்டதொரு தீபகற்பகமாகும். போர்னியோ தீவில் உள்ள இரண்டு முன்னாள் பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளான சராவக்கும் (Sarawak), சபாவும் (Sabah), மாநில நகரான (City State) சிங்கப்பூரும் சேர்த்துப் பின்னால் மலேயாக் கூட்டாட்சியாக உருவாகியது. சிங்கப்பூருடன் இருந்த சொந்தம் சிறிது நாளே நீடித்தது. மலேயாவின் தலைவர்களுக்கும் சிங்கப்பூரின் பிரதம மந்திரிக்கும் இடையே நல்லெண்ணங்கள் ஏற்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் பிரிவினை ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆகவே, மலேசியா என்பது மலாய் தீபகற்பத்தில் உள்ள மலேயக் கூட்டாட்சியையும், சபா, சராவக் என்னும் போர்னியோவில் உள்ள இரு மாநிலங்களையும் இணைக்கின்றதொரு இணைப்பே ஆகும். மலேயாவின் கிழக்கே தெற்குச் சீனக்கடலும், தெற்கே ஜோகோர் ஜலசந்தியும், மேற்கே மலாக்கா ஜலசந்தியும், அந்தமான் கடலும், வடக்கே தாய்லாந்தும் அதனுடைய எல்லைக் கோடுகளாகும்.

சராவக், சபா முதலான மாநிலங்கள் தெற்கே இந்தோனேசியாவின் கலிமாந்தன் (Indonesia's Kalimantan Province) பகுதியால் (போர்னியோ தீவு) பிரிக்கப்பட்டிருந்தன. மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய பக்கங்களில் முறையே தெற்குச் சீனக்கடலும், பசிபிக் பெருங்கடலும், செலிபஸ் கடலும் எல்லைகளாக இருக்கின்றன.

கோலாலம்பூரிலிருந்தாவது அல்லது சிங்கப்பூரிலிருந்தாவது போர்னியோ பகுதிகளுக்குப் பறந்து செல்லுவதற்கு இடையே நாம் கடலைக் கடக்கும்பொழுது, ஒரு பிறைவடிவான நிலப் பகுதியைத் தாண்டிச் செல்லலாம். வெள்ளை இராஜாக்கள்

ஆண்ட சராவக்கின் தலைநகரான குச்சிங்கைத் (Kuching) தொட்டுச் செல்லலாம். சராவக்கிலிருந்து சபாவின் (வடக்கு போர்னியோ) தலைநகரான ஜெஸ்ஸெல்டனுக்கும் (Jesselton) பறக்கும்போது அதற்கிடையே ஜனாதிபதி சுகர்னோவினால் சுல்தானின் அரசாங்கத்தையும் போர்னியோவின் பிற பகுதிகளையும் கைப்பற்ற வேண்டும் என்னும் நோக்கத்திற்காக அவரால் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி நடைபெற்றது. சிறிது எண்ணெய் வளம் மிக்க சுதந்திர புருனேய் (Brunei) சுல்தானமாகவும் அமைந்திருப்பதைக் காணலாம்.

மலேயா, மாநிலங்கள் இணைந்ததொரு வலுவற்ற கூட்டாட்சி அல்ல. அது ஒரு வலுவான கூட்டாட்சியாகும். கோலாலம்பூரில் உள்ள மத்திய அரசாங்கத்துக்குக் கூட்டாட்சி முழுவதையும் ஆட்சி செய்யும் பொறுப்பு இருந்தது. பழங்காலத்தில், சுல்தான்கள் பெயரளவில் மத சம்பந்தமானவைகளைப் பார்வையிடுகிற தலைவர்களாக இருந்தார்கள். இன்று சுல்தான்கள் அவர்களாகவே கூட்டாட்சி அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருக்கும் மாநிலங்களில் அலுவல்கள் பலவற்றில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஜோகோர் (Johore), நெகிரி செம்பிலான் (Negri Sembilan), பஹாங் (Pahang), தெரங்கண்ணு (Trengannu), பேரக் (Perak), ஸெலாங்கோர் (Selangor), கெலந்தன் (Kelantan), கெடா (Kedah) முதலியவைகள் மலேயாவில் உள்ள சுல்தானங்களாகும். பெனங்கும், மலாக்காவும் முன்னாளில் பிரிட்டிஷ் அரசுக் குடியேற்றங்களாகும். இவ்விரண்டும் கூட்டாட்சியில் இணைந்த இரண்டு பகுதிகள் ஆகும். இதற்கு மேலும் போர்னியோவிலுள்ள மாநிலங்களான சபாவும் சராவக்கும் மலேசியாவைச் சேர்ந்தவைகளாகும்.

இருப்பினும், இந்த இரண்டு போர்னியோவின் பகுதிகள் மலேயாவின் மையநிலையத்தைக் காட்டிலும் பெரியதொரு பரப்பளவை உடையதாகும். ஏறக்குறைய மலேயாவின் மக்கள் தொகை எண்பது லட்சமாக இருக்க, போர்னியோ மாநிலங்களின் மக்கள்தொகை இன்னும் இருபது லட்சமாக இருக்கிறது.

மலேயாத் தீபகற்பத்திலுள்ள மாநிலங்களுக்கு இடையே

ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. நாட்டின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை பரவியிருக்கின்ற மலைத்தொடர் மலேயாவைக் கிழக்கு மேற்கு என இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருக்கின்றது. கிழக்குப் பகுதியானது பல ஆண்டுகளாக வளர்ச்சியில்லாமல் இருக்க, அதே நேரத்தில் எல்லாவிதத்திலும் முன்னேற்ற முயற்சிகளாலும், மேற்குக் கரையோரத்தை நோக்கிக் குடிபெயர்ந்து வரும் சீனர்களாலும் இந்தியர்களாலும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

சமீபத்தில் அரசாங்கம் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரை வரைக்கும் தேசீய நெடுஞ்சாலைகளை அமைத்திருக்கின்றது. அரசாங்கத்தின் இன முன்னேற்றத் திட்டங்கள் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குப் புதிய வாழ்வைக் கொடுத்தன. மேற்குக் கரையோரத்தைப் போல, கிழக்குக் கரையோரம் வளம் பெற இன்னும் அதிக நாட்கள் இல்லை.

மலேயாவில் கிழக்குக் கடற்கரையோரம் தென்கிழக்கு ஆசியாவில் இரண்டாவது உலகப் போர் தொடங்கியது. ஜப்பானியர்கள் கோட்டா பஹருவில் (Kota Bahru) வந்திறங்கி, அதிலிருந்து தெற்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று, இரண்டு மாதங்களுக்குள், மலேயா, சிங்கப்பூர் முழுவதையும் கைப்பற்றினார்கள். இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பிறகு மலேயர்கள் கிழக்குக் கரையோரத்தின் முன்னேற்றத்தை மிக முக்கியமானதாகக் கருதினார்கள்.

வடக்கு மலேயாவில் பிரிட்டிஷார் தங்களுடைய படைகளைக் குவித்திருந்தாலும் அவர்கள் ஜப்பானியர்களுக்கு இணையானவர்கள் அல்லர். சிங்கப்பூரிலிருந்து கோட்டா பஹருவிற்குக் கடல் வழியாகச் சேனைகள் வருவதே ஒரு வழியில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும் மார்க்கங்களாக இருந்தன. பிரின்ஸ் ஆப் வேல்ஸ் (Prince of Wales), ரிபல்ஸ் (Repulse) என்னும் இரண்டு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ஜப்பானிய காமாகசே (Kamakase) விமானிகளால் மூழ்கடிக்கப்பட்டன. அதிலிருந்து மலேயாவில் ஜப்பானியர்களுக்கு எளிதான வெற்றியாக இருந்தது.

படாங் பேசரிலிருந்து (Padang Besar) மலேயாவுக்கும் தாய்

லாந்துக்கும் இடையேயுள்ள எல்லைப்புறத்திலே, சம்போர்ன் (Chumporn) அடைவது வரை, குறைந்தது இருநூறு மைல்களுக்குள் இரயில் போகும்பொழுது தீபகற்பகமே குறுகியிருப்பதாகக் காட்சியளிப்பதைக் காணலாம். இந்து மகா சமுத்திரத்துக்கும் பஸிபிக் பெருங்கடலுக்கும் இடையே இருபத்தைந்து மைல்களுக்கும் குறைவான பரப்பளவை உடையது அப் பகுதியாகும்.

கிரா பூசந்தி (Isthmus of Kra) வழியாகக் கால்வாய் ஒன்று கட்டவேண்டும் என்னும் தீர்மானம் பல வருடங்களாக இருக்கிறது. 1930ஆம் ஆண்டு அது பெரியதொரு எழுச்சியை உண்டாக்கியது. இந்துமகா சமுத்திரத்திற்கும் பஸிபிக் பெருங்கடலுக்கும் இடையேயுள்ள ஆயிரம் மைல்களுக்கும் அதிகமான தூரத்தைக் குறைக்கும் கிரா கால்வாயைத் தாய்லாந்து கட்டிவருகிறது என்பது பல அறிக்கைகள் மூலம் தெரியவந்தன. கப்பல்கள் சிங்கப்பூர் வழியாகப் போகாமல் நேரடியாகவே கிரா கால்வாய் வழியாகத் தாய்லாந்து குடாவை (Gulf of Thailand) அடையும். டெய்லி மெய்லின் (The Daily Mail) ஆசிரியரான வார்டு பிரைஸ் (Mr. Ward Price) என்பவர் ஜப்பானிய இயந்திரங்களும் கருவிகளும் கால்வாய் கட்டப்படவேண்டிய இடத்திற்கு வந்து விட்டன என்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

ஏகாதிபத்திய எண்ணமுடைய பிரிட்டிஷ் எச்சரிக்கையோடு அதைக் கைப்பற்றியது. அது, பஸிபிக் பெருங்கடலுக்கு நுழைவாயில் போன்றிருக்கும் சிங்கப்பூரின் முக்கியத்துவத்துக்குக் குழி பறித்துவிடும் என்றும், ஆங்கிலேய ஜப்பானியச் சண்டையில் ஜப்பானிய நடவடிக்கைகளுக்கு முக்கியமானதொரு இடமாகப் பயன்படும் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் பிரஞ்சுப் பிரதிநிதிகளின் ஆலோசனை சபையிலும் கிரா கால்வாயைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டன.

அப்பொழுது நான் தாய்லாந்தில் இருந்தேன். ஓர் ஆங்கிலச் செய்தித்தாளுடன் தொடர்புடைய என்னுடைய பத்திரிகைத் தொழிலோடு, அமெரிக்காவின் இணைப்புப் பத்திரிகைக் கூடத்தின் (Associated Press of America) நிருபராக இருந்தேன். கிரா கால்வாய்ப் பணி நடைபெறுமிடத்து நிகழும் செய்திகளைச்

சேகரித்து அனுப்புமாறு எனக்கு ஏபி தந்தி ஒன்று அனுப்பியிருந்தார்கள்.

சம்போர்னுக்கு இரயிலிலும், வங்காள விரிகுடாக் கடலின் மறு பக்கத்துக்குப் பேருந்துகளிலும், பிறகு பயணத்தின் பாதியைக் கால்நடையாலும் படகிலுமாக முடித்தேன், கால்வாயையோ அல்லது அதைத் தோண்டுவதற்கான ஆயத்தங்களையோ நான் பார்க்கவில்லை.

ஏபிக்குக் கொடுத்த என்னுடைய கதையானது கிரா கால்வாயைப் பற்றிய வதந்திகளுக்குச் சிறிது காலத்திற்கு முடிவுகட்டியது. உண்மையிலேயே அந்தக் கதை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்காலமாவது வழங்கி வந்தது. கிரா கால்வாய் திட்டத்துக்கு பிரிட்டிஷாரே முன்னோடிகளாய் இருந்தனர். பல வருடங்களாக இத்திட்டத்தை பிரிட்டிஷ் பொறியியல் வல்லுனர்களின் குழுக்கள் ஆராய்ந்து வந்தன. ஆங்கிலேய பிரஞ்சு நாடுகளுக்கிடையே சிக்கல்கள் இருப்பதன் காரணமாகவே இது கைவிடப்பட்டது.

1936ஆம் ஆண்டிலிருந்து 1937ஆம் ஆண்டு வரை, தென் கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ், பிரஞ்சு, டச்சுக்காரர்களால் சிறந்த முறையில் ஆட்சி செய்து வரும்போது, கிராவின் பூசந்தி வழியாக ஒரு கால்வாய் பற்றிய எண்ணம், தாய்லாந்து பக்கத்தில் மிகப்பெரியதொரு அவமானமாகக் கருதப்பட்டது. இன்று, இந்த எண்ணத்துக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு வருகின்றது.

இப்போது தாய்லாந்தின் குடிமகனாக இருக்கும் ஷாங்காய் (Shanghai) தொழிலதிபரான சௌ கியூயன் யான் (Mr. Chow-Kuan-Yan) கிரா கால்வாய்த் திட்டத்துக்குத் தூண்டும் சக்தியாக இருந்தார். திரு சௌ இந்தத் திட்டத்தில் மிக உன்னிப்பாக இருந்தார். இது செயல்படுத்தப்படுமானால் மலேயா, சிங்கப்பூர் பூகோள வரைபடத்தைக் குறிப்பாகச் சிங்கப்பூரின் பூகோள வரைபடத்தை மாற்றியமைக்கும்.

இந்தியாவின் நவாபுக்களைப் போன்றும், மகா ராசாக்களைப் போன்றும் மலேயா சுல்தான்களும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் கைப் பொம்மைகளாக இருந்தனர். மலேயா சுல்தான்களிடையே மாற்றம் ஏற்பட்டது. அவர்களுக்கு அரசாங்கச் சட்டத்தில் அதிக

மதிப்பளிக்கப்பட்டது. அவர்களில் பலர் மக்களின் எதிர்ப்புகளுக்கு மேலாகவே இன்று வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் இப்பொழுது மாநிலங்களை அலங்கரிக்கும் தலைகள் அல்லர்.

அவர்கள் மக்களோடு குடியரசுத் தலைவர்களைப் போன்று இணைந்துகொள்கிறார்கள். ஒரு சில நாட்களுக்குள் மலேயாவின் யாங் டி பெர்துவான் அகோங்காக (Yang di Pertuan Agong) (தலையாய ஆளுநராக) அவர்களுக்குள் தேர்ந்தெடுத்து வருவதற்குரியதொரு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை அறிந்திருந்தார்கள்.

அண்மையில் செலாங்கோர் சுல்தான், தன் நாட்டுப் பகுதிகளில் குறிப்பாகக் கிளாங் (Klang) என்னும் பழந்துறைமுகப்பட்டணத்தில் தொல்லை கொடுக்கின்ற காக்கைகளை விரட்டியடிக்கவேண்டும் என்பதற்காக ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தினார். காக்கைகளைச் சுடுவதா அல்லது வேண்டாமா என்பதே வாக்குவாதமாக இருந்தது. முடிவாகக் காக்கைகள் தொல்லையாக இருப்பதால், அவைகள் சுடப்படவேண்டும் என்று சுல்தானால் உத்திரவு இடப்பட்டது. இரண்டு நாளில், மொத்தப் பகுதியும் காக்கைகளின் தொல்லையிலிருந்து விடுவிக்கப்பட்டது.

வடக்கு மலேயாவில் உள்ள பெர்லிஸ் என்னும் சிறிய மாநிலம், மலேயாவுக்கும் மலேசியாவுக்கும் யாங்டி பெர்துவான் அகோங்குக்குத் திறமையான ஒருவரை அளித்தது. அரசாங்க விழாக்களில் மட்டுமல்லாது, நாட்டு மக்களுக்காக நிதியுதவி தேவைப்படும் பொழுதும், எங்கும் அவருடைய மக்கள் மத்தியிலேயே அவர் இருந்தார்.

வழக்கறிஞரும், முன்னாள் மலேய அரசாங்க அலுவலக உறுப்பினருமான நெகரி செம்பிலானின் சுல்தானே (Sultan of Negri Sembilan) முதல் யாங்டி பெர்துவான் அகோங்காவார். பஹாங் சுல்தான் விளையாட்டுக்களில் ஆர்வம் மிக்கவர். ஒவ்வொரு ஆண்டும் மிகப்பெரிய அளவில் சிறப்பு விருந்தினர்களால் கண்டு களிப்பதற்கெனப் பஹாங் ஆற்றில் படகுப்போட்டி விழாவை அவர் நடத்திவந்தார்.

ஜலசந்திகளுக்கு அடுத்துள்ள ஜோகோர் சுல்தான் ஒரு ஆடம்பர மோகமுடையவர். பிரிட்டிஷாரின் காலத்திலேயே, சுல்தான்

சிங்கப்பூரில் இரவைக் கழிக்க ஒளிந்து சென்ருர், என்று சொல்லப் பட்டது. பிரிட்டீஷ் அதிகாரிகள் ஓர் அளவுக்கு அவரைப் பய முறுத்தி வந்தார்கள். வெள்ளைக்காரப் பெண்கள்மீது அவருக்குக் குறிப்பிட்டதொரு கவர்ச்சியுண்டு.

அப்பொழுது பாங்காங் செய்தித்தாள் ஒன்றில் சிறு நேர நிருபராக இருந்தேன். சுல்தானைப் பார்க்கவும் விவாக ரத்து பற்றிய வதந்திகளைக் கண்டுபிடிப்பதற்கும் எனக்கு வேலையிடப்பட்டிருந்தது.

சுல்தான் ஒரு முரட்டுக் குணம் கொண்டவர் என்றும், பிறர் காரியங்களில் தலையிட்டுத் துருவிப் பார்க்கின்ற பத்திரிகை நிருபர்களோடு பழகுவதில் அவருடைய மரியாதைக் குறைவான நடத்தைகளின்மூலம் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவர்.

நேராக அவருடைய அறைக்குப் போய் கதவைத் தட்டினேன். மகாராசா வெளியே வந்தபொழுது, நான் ஒரு நிருபர் என்றவுடனே " இங்கிருந்து வெளியே போ " என்று சொல்லிக் கதவை அடைத்தார்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பவும் கதவைத் தட்டினேன். இந்த நேரத்தில் கதவைத் திறந்தது அரசியாகும். அவரிடம், அவரும் சுல்தானும் பிரிந்து போகின்ற நிலையில் இருப்பதாக ஒரு வதந்தி இருப்பதாகச் சொன்னேன். அதைப்பற்றி செய்தி எதுவும் சொல்ல முடியுமா ? என்று கேட்டேன்.

உடனே சுல்தானைக் கூப்பிட்டு, " அன்பே, இங்கேயிருக்கும் இளைஞர் நாம் சீக்கிரத்தில் விவாகரத்து செய்து கொள்ளப் போகிருேம் என்று சொன்ஞர். அவர் உங்களைப் பார்க்க விரும்புகிருர் " என்று சொன்ஞர்.

சுல்தான் வெகுவேகமாக நடந்து வந்தார். அந்த இடத்தை விட்டு குண்டுக்கட்டாகத் தூக்கி எறியப்படுவேன் என்று நினைத்தேன். " உன்னை இதற்கு முன் நான் பார்க்கவில்லை ? என்ன தெரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிருய் ? இப்பொழுது இந்த இடத்தை விட்டு நான் உன்னைத் தூக்கி வெளியே போடுவதற்கு முன் வெளியே போ " என்று கத்திஞர்.

அரசி சிரித்துக்கொண்டிருந்தார். நான் விரும்பிய கதையைக்

1. கோலாலம்பூரிலிருந்து 7 மைல்கள் தள்ளியிருக்கும் பாடூவ் குகைகளின் பெரிய பள்ளதாக்கில் முருகக் கடவுளைச் சிறப்பிக்கும் பொருட்டு ஓர் இந்து கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.






11. *13,455 அடி உயரமுள்ள சபாவில் கினபாலு* (Kinabalu) *மலையே தென் கிழக்காசியாவிலுள்ள உயர்ந்த மலையாகும்.*



III. மலேசியன் பியூடர்—உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கெனச் சிறிதளவு செம்பும், அண்டிமோனி (antimony) எனப்படும் உலோகமும் 95 விழுக்காடுகள் மலேசியாவில் தகரமும் கொண்டு செய்யப்படுவது பியூடர் பாத்திரங்களாகும்.



IV. தெரங்கன்னு மாநிலத்தின் அரசவை நடனமான "ஜோகெட் கேம்லான்" (Joget-gamelan) கேம்லான் இசைக் கருவியின் இசைக்கேற்ப ஆடப்படுகின்றது.

கேட்டேன் என்று எனக்குத் தெரியும். அந்த நேரத்துக்கு விவாகரத்து இல்லை.

பாங்காக்கில் அன்று மாலையில் டெய்லி மெயிலில் விவாகரத்து வதந்திகளுக்குச் சுல்தான் மறுப்பு என்று தலையங்கம் வந்தது.

அந்நாளில் மலேயாவின் சுல்தான்கள் நீண்ட காலமாகப் பதவியில் இருந்து வந்தார்கள். தற்போதைய தலையாய ஆளுநர் துங்கு அப்துல் ரகுமானின் ஒரு மருமகனும், கெடாவின் சுல்தான் ஆவார். அவருடைய மருமகன் தலையாய ஆளுநராக வருவதற்கு முன்னால், துங்கு அப்துல் ரகுமான் மலேசியாவின் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாக, இந்தியாவிலிருந்து வேலை ஒப்பந்தத்தின் மூலம் வருகின்றவர்களுக்கு, முக்கியமான துறைமுக நுழைவாயிலான ஸ்வெட்டன்ஹாம் (Swettenham) லிருந்து இருபது மைல் தொலைவில், மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூர் இருக்கிறது. கோம்பக் ஆறும் கிளாங் நதியும் (Klang) சந்திக்கும் இடத்தில் உள்ள அந்த நகரமானது, மலேயாவில் ஆரம்பகாலத்தே வந்து குடியேறியவர்களுள் ஒருவரான சீனச் சுரங்க முதலாளியால் உண்டாக்கப்பட்டது. ஏறக்குறைய அது மலேயாவின் இரு முனைகளுக்கு இடைப்பட்டதாயும், நாட்டில் பிரிட்டிஷ் தலைமை ஆணையரின் (British High Commissioner) இருப்பிடமாகவும் இருந்து வந்தது.

மலேசியாவின் விடுதலையிலிருந்து, நகரத்தில் பல மாடிக் கட்டடங்களோடும், நகர்ப்புறங்களில் பெரியதொரு அளவில் தொடர்ச்சியாகக் குடியிருப்பு நகரங்கள் தோன்றவும், கோலாலம்பூர் பெரிதாக வளர ஆரம்பித்தது. இன்று, அது மலேசியாவின் மையமாகவும் கூட்டாட்சி அரசாங்கத்தின் இருப்பிடமாகவும், மலேசியாவின் பாராளுமன்றத்தின் இருப்பிடமாகவும், கூட்டாட்சியில் நடைபெறும் பல்வேறு வியாபாரங்களின் நிலையமாகவும் இருக்கிறது.

கோலாலம்பூர் இன்னும் பல்வேறு திசைகளிலும் வளர்ந்து வருகிறது. அது மாசற்ற தூய்மையுடையது. விடியற்காலையிலிருந்து நடு இரவு வரை தெருக்களில் மோட்டார் வண்டிகள் நிரம்பி வழியும். உணவு விடுதிகளிலும், தங்கும் விடுதிகளிலும்

எப்பொழுதும் பல்வேறு இனத்தவர்களுடைய கூட்டம் இருக்கும். பெருமகிழ்ச்சியும் பண்பாடுமே இந்த இடங்களின் சூழலாக இருப்பதை ஒருவர் உணர்வார். கோலாலம்பூரின் மக்கள்தொகை ஐந்து லட்சத்துக்குச் சிறிதளவு அதிகமிருக்கும்.

ஸ்வெட்டன்ஹாம் துறைமுகத்துக்குப் போகும் வழியில் கோலாலம்பூரின் மேற்கே தற்காலத்தில் உள்ள எல்லா வசதிகளோடு கூடிய புதிய விமானதளம் இருக்கிறது. ஸ்வெட்டன்ஹாம் துறைமுகத்தில் உள்ள புதிய துறைமுகம் சிங்கப்பூருக்குப் போட்டியிடுவது போன்றிருக்கிறது. ஆனால் அது இயற்கைத் துறைமுகமன்று. வங்காள விரிகுடாக் கடலில் வந்து கலக்கும் ஆறுகளிலிருந்து வந்து சேரும் மணலால் ஆழ்கடல் கப்பல்களுக்கு வந்து போவதற்குத் துறைமுகம் வசதியில்லாமல் போகவே ஆண்டு முழுவதும் மண் வாரும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

பினாங்கு அல்லது ஜார்ஜ்டவுன் என்பது மலேசியாவின் அடுத்த நகரமாகும். அதன் மக்கள் மொத்தத்தில் இரண்டேகால் லட்சத்துக்கும் கொஞ்சம் அதிகமே. பிரிட்டிஷாரோடு ஒப்பந்தம் செய்துகொண்ட கெடாவின் சுல்தானுக்கு இது உண்மையிலேயே சொந்தமாயிருந்தது. பினாங்கிலேதான் முதலாவதாக சர் பிரான்ஸிஸ் லைட் வந்திறங்கினார். அதற்குச் சிறிது பிறகு சிங்கப்பூர் வந்தது.

பினாங்கு பெரும்பான்மையளவில் சீனர்களுடைய நகரமாக இருந்தாலும் அதிகமாக மலேயர்களும் இந்தியர்களும் வசிக்கிறார்கள். மலேயாவின் சுதந்திரப் பிரகடனத்தோடு துங்கு அப்துல் ரகுமான் பினாங்கின் வரலாற்றை நினைவுபடுத்தினார். அவருடைய முன்னோரால் பிரிட்டிஷாருக்கு ஒரு காலத்தே அளிக்கப்பட்ட பகுதியைத் திரும்ப அடைந்ததற்கு அவர் மகிழ்ச்சி அடைந்தார் என்று சொன்னார்.

கோலாலம்பூருக்குத் தெற்கே ஒரு சில நூற்றாண்டுகளாக அகில உலக வியாபார நிலையமாக இருந்துவரும் மலாக்கா இப்பொழுது அகில உலக வியாபார நிலையமாக இல்லை. அதனுடைய துறைமுக வசதிகள் போய்விட்டன. இன்றைய மலாக்கா மலேயாவின் பழம் பெருமையின் சின்னமாக இருக்கிறது.

கோலாலம்பூருக்கும் பினாங்குக்கும் இடையேயுள்ள ஈப்போ (Ipoh) மலேயாவின் பெரிய சுரங்கத்தொழில்களின் மையமாதலால் பெரிய வியாபார நிலையமாகவும் இருக்கிறது. ஈப்போவின் மக்கள்தொகை ஏறக்குறைய ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரம். வடக்கிலிருந்து தெற்கு வரையிலுள்ள இரயில்வே இருப்புப் பாதையை ஒட்டி சின்னஞ்சிறிய நகரங்களும் சில பெரிய நகரங்களும் இருக்கின்றன. இவற்றுள் சில பெரிய நகரங்கள் மலேசியா நகரங்களின் அமைப்பையும் ஒத்திருக்கின்றன.

நீண்ட காலமாக ஒதுக்கிவைக்கப்பட்ட பகுதிக்குப் பெரியதொரு அளவில் செல்வச் செழிப்பு ஏற்பட்டபோதிலும் முன்னேறி வரும் தீபகற்பத்தின் கிழக்குக்கரையோரத்தே சில நகரங்களே உள்ளன. கெலந்தன் தலைநகரமான கெடா, கிராஹாம் தலைநகரமான கியூயந்தன், தெரங்கண்ணு மாநிலத்தின் தலைநகரமான கியூலா, தெரங்கண்ணு முதலான நகரங்களே குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவைகளாகும்.

கோட்டா பஹ்ருவின் பெரிய கடல் ஆமைகள் மலேயாவின் கிழக்குக் கரையோரத்தே ஒருவகையில் சிறப்புப் பெற்றவைகளாகும். அவைகள் கரையையொட்டிய கடலில் வசிக்கின்றன. ஆனால் முட்டை இடுவதற்குக் கடலை விட்டு வெளியே வருகின்றன. அவைகள் மிகப் பெரியவைகள் ஆதலால் ஒரு ஆமையின் முதுகிலே நீங்கள் உட்காரலாம். அது உங்களை ஆமைக்கு உரிய இயல்பான வேகத்தில் உங்களைத் தூக்கிச் செல்லும்.

கேமிரோன் மலைப் பகுதிகளையும் (Cameron Highlands), ஃபிரேசர்ஸ் மலையையும் (Fraser's Hill) பார்க்காமல் ஒருவர் மலாயாவை விட்டு வெளியே போக முடியாது. இரண்டும் விடுமுறை காலப் பொழுதுபோக்கு இடங்களாகும். மலேயாவின் பெரும் பகுதிக்கு மின்சாரம் அளிக்கும் நீர் மின்விசை திட்டத்தைப் போன்று மிக முக்கியத்துவம் வாய்ந்தது இது. பல நாட்டிலிருந்தும் அரசியல்வாதிகள் வந்து சந்தித்து அகில உலகப் பிரச்சினைகளை கோல்ப் விளையாட்டின்போது தீர்த்துக்கொள்ளும் இடமாகவும் ஃபிரேசர்ஸ் ஹால் இருக்கிறது.

6. ஒதுக்கப்பட்ட குடியானவர்கள்

தலைமுறையாகவே நாட்டிலிருந்து செய்யப்படும் மொத்த ஏற்று மதியில் இணைந்த அளவில் குறிப்பிடத்தக்கதொரு பங்கு வகிக்கும் ரப்பரையும் தகரத்தையும் சார்ந்தே மலேசியாவின் பொருளா தாரம் அமைந்திருக்கின்றது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து தொழிற்சாலைகள் அமைப்பதிலும் விவசாயத்தைத் திருத்தி அமைப்பதிலும் புதியதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று ஜப்பானைத் தவிர, ஆசியாவின் பிற நாடுகளுள் அதிக மான வருடாந்திர வருமானம் உடைய நாடு மலேசியாவாகும். நாட்டில் இனச் சண்டையில்லாமல் இருந்திருந்தாலும், மலேசியா தான் கலந்து கொள்ளமுடியாத சண்டையில்லாமலிருந்திருந்தா லும் தன்னுடைய முன்னேற்றப் பயணத்தில் ஜப்பானின் வரு டாந்திர வருமானத்தை விட அதிக வருமானத்தையுடைய நாடாக இருந்திருக்கும்.

மலேசியாவின் பொருளாதாரத்தைக் குறிப்பாக இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்திலிருந்து பொருளாதார அமைப்பின் உச்சநிலையில் இருந்துகொண்டு பிரிட்டிஷார் கட்டுப்படுத்தி வந் தார்கள். அவர்கள் தேவைப்பொருள்களை இறக்குமதி செய்பவர் களாகவும் தோட்டத்தொழில்களிலும் மற்றும் பிற தொழில் களிலும் முதலீடு செய்பவர்களாகவும் இருந்தார்கள். இதற்கு மேலும் நாட்டின் அரசியல் அதிகாரத்திலும் இருந்தார்கள். இவ் வழியாக மலேசியா மக்களின் தலையெழுத்துக்குத் தீர்ப்பாளி களாக இருந்தார்கள்.

நாட்டின் பொருளாதார அணியில், பிரிட்டிஷாருக்கு அடுத்த படியாகச் சீனுவிலிருந்து வந்தவர்களைச் சொல்லலாம். பிரிட்டி ஷார் மக்களிடமிருந்த தங்களுடைய தொடர்புகளினுல் ஓரளவு விலகியிருந்தபொழுது சீனர்கள் அதற்கு இடைப்பட்டவர்களாக வும், முக்கியமாக எல்லாவிதமான பொருட்களையும் விற்கும் தரகர்களாகவும் இருந்தார்கள். நாட்டுப்புறங்களில் வசிக்கும்

மலேசிய கிராம மக்களுக்குச் சீனர்கள் கடன் கொடுத்து வாங்கு பவர்களாக இருந்தார்கள். ஒரு சில இந்தியர்கள் நகர்களில் வியாபாரிகளாக இருந்தபோதிலும் அதிகமான அளவில் கிராமங் களில் பொருள் வாங்குபவர் என்ற வகையில் இருக்கின்ருர்கள்.

அநேகமாக எஞ்சிய கூட்டத்தார்களுக்கு வசதியாக இருந்த இந்த மலேயப் பொருளாதார அமைப்பு மலேயர்களை மிகவும் மோசமாகப் பாதித்தது. இந்த அமைப்பு மலேயர்களைத் தரித் திரர்களாகவும் கடனுளியாகவும் ஆக்கியது. அவர்களுடைய நாட்டிலேயே அவர்கள் பிச்சைக்காரர்களாக இருப்பதை எண்ணி மலேயர்கள் வருந்துவது என்று ஆகிவிட்டது.

எல்லா இடத்திலும் உள்ள குடியானவர்களைப் போன்று சோம் பேறிகளாக இருப்பதினல் மலேயாக் குடியானவர்கள் தூற்றப் படுகிருர்கள். குடியானவர்கள் கொஞ்ச விளைநிலங்களை வைத் துக்கொண்டு, பழங்காலத்தில் உள்ள குஞ்சா முறைப்படி பண உதவி பெற்றுப் பயிரிட்டு வந்தார்கள். விதைப்பதற்காகக் கொஞ்சம் முன் பணமாக இடையில் இருப்பவரிடம் வாங்கினன் என்ருல், அறுவடைக் காலத்தில் அவரால் என்ன விலை என்று தீர்மானிக்கப்படுகிறதோ அந்த விலைக்கே அவருக்கு விற்கவேண் டும். அந்தப் பகுதியில் "இடைப்பட்டவர்" ஓர் கடையை நடத்தி வந்தாரானல், குடியானவன் அவனுக்குத் தேவையான பொருள் களைப் பிற இடங்களில் இருப்பதைப் போலில்லாமல் அதிக விலை யில் வாங்க வேண்டும். அதன் முடிவு குடியானவன் "இடைப் பட்டவருக்கு"க் கடன்பட்டவர்களாக ஆவதோடு, கடன் பட்ட குடியானவர்கள் அவர்களுடைய கருணையில் பின்வரும் ஆண்டு களில் தங்களுடைய விளை நிலத்தில் பயிரிடலாம்.

மலேயாக் குடியானவர்கள் இந்த நச்சுச் சுழலில் அகப்பட்டுக் கொண்டார்கள். கருணையுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தக் குடியானவர்களின் அவலத்தைத் தீர்க்க ஒன்றும் செய்யவில்லை. மலேயாக் குடியானவர்கள் உழைப்பின் வேர்வையிலும் சீன "இடைப்பட்டவர்களும்" கிராமங்களில் வாழ்ந்தபோது நகரங் களில் சுரங்கத்தாரும், தோட்டம் பயிரிடுவோரும், வியாபாரிகளும் வளர்ந்து வந்தனர்.

மலேசியாவின் பொருளாதார அமைப்புக்குள் சராசரி இந்தி

யன் ஒருபோதும் வருவதில்லை. கொஞ்சம் பணம் சேர்த்த பிறகு திரும்பவும் தங்கள் தாய் நாடான இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று விரும்பினாலும், இந்த ஆசை அபூர்வமாகவே உணரப் பட்டது. எந்த வகையிலும் இந்தியக் குடியேற்றக் குடிகள் குறுகிய எண்ணம் உடையவர்களே. அவன் நாட்டின்மேல் ஒரு போதும் பொருளாதாரப் பிடிப்புக் கொண்டதில்லை. ஒரு போதும் அதன் முக்கியத்துவத்தை அவன் உணர்ந்தானில்லை. நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்குக் கடும் வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுத்து வரும் நாட்டுகோட்டைச் செட்டியாருக்குக்கூட இது பொருந்தும்.

இதற்குப் பதிலாகச் சீனக் குடியேற்றக் குடிகள் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமானதொரு இடத்தினைக் கைப்பற்று வதற்கான அளவுக்குப் புத்திசாலிகளாக இருந்தார்கள். ஒரு வேளை அவர்களது தாய்நாட்டில் ஏற்பட்ட பொதுவுடைமை ஆட்சியின் தோற்றமே அவர்களை மலேசியாவின் பொருளாதார முனையில் புத்திசாலிகளாக்கியிருக்கலாம். ஆனால் சீனர்கள் மக்கள் மத்தியில் சுதந்திரத்திற்குப் பின்னால் ஏற்படும் விளைவைக் கணித்தார்கள் இல்லை.

சுதந்திரத்தின் எழுச்சியுடன், மலேயர்கள், சீன "இடைப்பட்டவர்கள்"தான் அவர்களுடைய நகர்ப்புற பொருளாதாரத்துக்கு மூல காரணம் என்றும், அவர்கள் உழைப்பின் பலன் பெரும்பாலும் வெளியார்களுக்கே சென்று விடுவதையும் வெகு சீக்கிரத்திலேயே கண்டுபிடித்தார்கள். ஆகவே தேசீய அரசாங்கம் "இடைப்பட்டவர்களை" வெளியேற்றவும், குடியானவர்களுக்கு உதவிசெய்யவும் முன்வந்தது.

அரசாங்கம், நகர்ப்புற முன்னேற்றத் திட்டத்தைச் செயல் படுத்த மாரா (MARA) என்றும் அரசாங்க அலுவலகம் போன்ற தொரு பாதி அரசாங்க நிலையத்தை ஏற்படுத்தியது. விவசாயம், போக்குவரத்து, மீன்பிடித்தல். சிறு மூலதனத் தொழிற்சாலை முதலியவைகளின்மூலம் முடியானவர்களுக்கு உதவி செய்தது. அதனுடைய அமைப்பின்மூலம், மலேயர்களுக்கு மேற்கூறிய தொழில்களைத் தொடங்கவும், கூடுமானவரையில் அதிக விலைக்கு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவும் உதவியது.

மலேயர்களுக்காகவே ஒரு தொழிற்கலைக் கூடத்தை (Institute of Technology) மாரா நடத்தியது. அரசாங்கத்திலுள்ள உயர் பதவிகளுக்கான நியமனங்களுக்கு அது கொடுக்கின்ற பட்டங்கள் போதுமானவை என்று அரசாங்கத்தினரால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

மலேயாவில் உள்ள ரப்பர்த் தோட்டங்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களுக்கு உடைமையாகி இருந்தது. சில ஆண்டு களுக்கு முன்னால் வரை ஒரு சில சிறு தோட்டங்களை (Plantation) சீனர்களும், அளவிலும் எண்ணிக்கையிலும் குறைந்த ஒரு சில பண்ணைகளை (Estates) இந்தியர்களும் சொந்தமாக வைத்திருந் தனர். வேலையாட்கள் கிடைக்காமையின் காரணமாக பிரிட்டீஷ் அரசங்கத்தாரால் ஒப்பந்த வேலையாட்களைத் தொடர்ந்து தருவித்துக்கொள்ளும் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்தது. மலேயாவிலுள்ள பண்ணைகளிலிருந்து கண் காணிகள் இந்தியாவிற்கு அதிகமாகத் தென்னகத்துக்கு அனுப் பப்பட்டார்கள். அவர்கள் அதிக அளவில் ஏழைத் தொழிலாளர் களை வேலைக்கு எடுத்தார்கள். அவர்கள் நாட்டிலிருந்து மலே யாவுக்குக் கப்பல்மூலம் வரும்பொழுது ஆட்டு மந்தைகளாகவே நடத்தப்பட்டார்கள். தொலைதூர இடங்களுக்காக அவர்கள் இரயில்களில் மந்தைகளாக அடைக்கப்பட்டார்கள். அங்கே அவர் கள் எல்லா வேலைகளையும் கஷ்டப்பட்டுச் செய்ததோடு தோட்ட வேலைகளில் பாடுபட்டு உழைக்கவும் செய்தார்கள். வந்தவர்களில் பாதிப்பேராவது மலேயாக் காடுகளில் பிழைத்திருப்பார்கள். மலேயாவின் ஐரோப்பியத் தோட்டங்களுக்காகச் சென்றவர்களில் மீதிப்பேர் அக் கடுஞ்சோதனையின்போது இறந்திருப்பார்கள்.

சீக்கிரத்தில் மலேயாவில் ரப்பர்த்தொழிலானது ஒரு முறையான தொழிற்சாலைத் தொழிலானது. கடந்த 15 ஆண்டுகளில் பிரிட்ட ஷுக்குச் சொந்தமாக இருக்கின்ற ரப்பர்த் தோட்டங்களுக்குள் பாதிக்கு மேல் ஆசியாவைச் சேர்ந்தவர்களுக்கு விற்கப்பட்டது.

இந்த ஆசியாவினர்களுக்குப் பெரும்பாலான ரப்பர்த் தோட்டங் களைப் பகுதிகளாகப் பிரித்து அவைகளைச் சிறு சிறு துண்டுகளாக மற்ற ஆசியாவினர்களுக்கு விற்றார்கள். பெரும்பாலான ரப்பர்த் தோட்டங்களின் உரிமையாளர்கள் சிறிய அளவில் தொழிலாளர்

களைக் கொண்டு சமாளித்துக்கொண்டு வருவதைப் போன்று இருந்தாலும், ஒன்றுபட்ட தோட்ட வேலையமைப்பானது தோட்டங்களைத் துண்டாடுதலை எதிர்த்துப் புரட்சி செய்தது. ஒரு பக்கத்தே வியாபாரிகள் ரப்பர்த் தோட்டங்களின் வியாபாரத்தில் லாபத்தைச் சம்பாதித்தார்கள்.

தோட்டத் தொழிலைத் தேசீயமயமாக்கிக் கொள்வதற்கான பேச்சே இல்லை. இன்றும் ஐரோப்பியத் தோட்ட முதலாளிகள் இதைவிட்டுப் போகவேண்டுமென்று விரும்புவதாலும், இந்த வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசாங்கமும் முதலீடு செய்யப்பட்ட பணத்திற்கு அல்லது இலாபத்தைக் கொண்டு போவதற்கு எதிராகச் சட்டம் ஒன்றும் இயற்றவில்லை. சமீபகாலத்தில் மலேசியர்களாகிக்கொண்டு இருக்கும் இந்தத் தொழிலில் உள்ளவர்களோடு சம்பந்தப்பட்ட சட்டம் ஒன்று மட்டும் இயற்றியது.

பழங்காலத்தில்கூட, மலேயர்களுள் ரப்பர் விளையும் நிலங்களைச் சொந்தமாக உடையவர்கள் ஒரு சிலரே. அவர்கள் உற்பத்தி செய்வதற்குப் பண உதவி செய்த சீனத் தரகர்களின் மூலமாகவே அவர்களால் குறிக்கப்பட்ட விலைக்கே அவர்கள் உற்பத்தி செய்ததையும் விற்க நேர்ந்தது. வழக்கம்போலவே அவர்கள் பண்ணைகளைச் சுற்றியிருக்கும் ஒரு சில ஏக்கர்களில் மட்டும் பயிரிட்டு வந்தார்கள். இப்பொழுது அரசாங்கம் சிறிய அளவில் ரப்பர் பயிரிடுபவர்களுக்கு உதவி செய்தது. அது சீனத் தரகர்களை வெளியேற்றி, குடியானவர்களுக்குப் பண உதவியோடு பல உதவிகள் செய்ததினால் கிராமங்களிலே நவீன முறையிலே நல்ல வளர்ச்சியைத் தருகின்ற செடிகளைப் பயிரிட்டார்கள். இதன் பலனாக நகர்ப்புறங்களில் இருக்கும் ரப்பர் உற்பத்தியாளர்கள் பலன் அடைந்திருக்கிறார்கள். விவசாயிகள் மோட்டார்களையும் ஸ்கூட்டர்களையும் வைத்துக்கொள்வது என்பது இப்பொழுது மலேசியாவின் நகர்ப்புறங்களில் காணக்கூடிய ஒன்றாகும்.

ஏராளமான அளவிலே இன்னும் மலேயாவில் பல தகர மூலச் சுரங்கங்கள் பல வருடங்களுக்கு மேலாகவும் இடைவிடாது தகர மூலப் பொருள்களை கொடுக்கக்கூடியதாக இருந்தபோதிலும், உண்மையிலே தகரம் செலவைக் கொடுக்கும் சொத்தாகவே

இருக்கிறது. நாட்டிலே பலவிதமான நவீன முறைகளிலே சுரங்கங்களைத் தோண்டிப் பார்க்க முயற்சிகள் மேற்கொள்ளப் படவும், மலேயா நகரத்தைப்பற்றிய செய்திகளாகவே இருந்தன. ஏராளமான சுரங்கப் பகுதிகளில் சுரங்கங்களிலிருந்து தகர மூலகங்களைத் தோண்டி எடுக்க மண்வாரிகளைப் பயன்படுத்தினார்கள். மலேயாவில் உள்ள செலங்கோர் மாநிலத்தில் உள்ள சுரங்கமே உலகிலேயே ஏராளமான பொருட்செலவில் ஏற்படுத்தப்பட்ட சுரங்கமாகும். மலேசியாவில் அதிக அளவில் தகரச் சுரங்கத் தொழில் செய்வது சீனர்களேயாகும்.

தகரச் சுரங்கத் தொழில் செலவுள்ளதாகவும், ரப்பரின் விலைகள் ஒரு நாளில் இறங்கலாம் என்னும் நிலையில் மலேசியா தன்னுடைய விவசாயத்துக்குத் திரும்பியது. இன்று தன் தேவைகளுக்கான அரிசி முழுவதையும் இறக்குமதி செய்து கொண்டிருந்த மலேசியா, ஏறக்குறைய அரிசியில் தன்னிறைவு கண்டதற்கு, நீர்ப்பாசன வசதிகளுக்கும், நல்ல விதைகளைப் பயன்படுத்தியதற்கும் நன்றி சொல்ல வேண்டும். கடல் மட்டத்திற்குமேல் உயரமான இடங்களில் தேயிலையும் காப்பியும் பயிரிடப்படுகின்றன. நாட்டில் உள்ள அன்னாசிப்பழம் பக்குவப் படுத்தப்படும் தொழிற்சாலை பெரிய அளவில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. கமுகுத் தோட்டங்கள் ஏராளமாக உண்டாக்கப் பட்டன. தென்னைப்பயிரிடல் உற்சாகப்படுத்தப்பட்டன.

மலேசியாவும் அதிக அளவில் இரும்புத்தாதுக்களை முக்கியமாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த இரும்புத்தாதுவின் தரம் உயர்ந்தது அல்லவெனினும் இது செய்முறையில் சுத்தப் படுத்தப்பட்டுக் கப்பல் கட்டுவதற்கும் பிற தொழிற்சாலைகளுக் கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

சமீபத்தில் மலேசியாவின் தகரமும் ரப்பரும் போன்று மரமும் சோவியத் யூனியனுக்கும் சுதந்திர மக்கள் சீனாவுக்கும் (Soviet Union and People's Republic of China) ஏற்றுமதி செய்யப் படுகிறது. மலேசியாவில் பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்பட்டபோதிலும், அதிக அளவில் பொதுவுடைமை நாடு களோடு மலேசியா ஏற்படுத்திக்கொண்ட பொருளாதாரத் தொடர்பைத் தவிர, வேறு எதன்பாலும் சார்ந்திருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி நிக்ஸனின் "பிங்பாங்" கொள்கை வெற்றி யடைந்தால் காலம் நிச்சயமாக மாறும்.

மலேசியாவில் சுவையான பருவகால நாட்டுப் பழங்கள் உண்டு. காடுகளிலும் தோட்டங்களிலும் விளையும் துரியன் எனப்படும் ஒரு வகையான பழமே அவைகளுள் அதிகச் சிறந்ததாகும். அது பார்ப்பதற்குச் சிறிய பலாப்பழம் போன்று, தடித்த முளை களுடைய தோலுடன் நான்கு அல்லது ஐந்து விதைகளைக் கொண் டதாய், இனிப்பான, சுவையான, சாறு நிறைந்த சதைப்பாகம் நிறைந்ததாய் இருக்கும். இன உணர்ச்சியைத் தூண்டும் பொருட்களைப் போன்று இது இன உணர்ச்சியைத் தூண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். துரியனில் நிச்சயமாக வைட்ட மின் இ (Vitamin E) சத்து இருக்கும். அதன் குறை அதன் மணத்திலேதான் இருக்கிறது. நன்றாகச் சுத்தம் செய்யப்படாத திறந்த மலஜல அறைபோன்றதொரு வாசனையை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். இருந்தும், துரியனைச் சாப்பிடுவதற்காகக் கப்பல்களையும் விற்று விடுவார்கள் என்பதை அறிவோம்.

கடலுக்கப்பால் உள்ள போர்னியோவும், முன்னால் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளான சராவக்கும், சபாவும் மலேசியக் கூட் டாட்சியுடன் 1963ஆம் ஆண்டு சேர்ந்தன.

இந்தப் பகுதிகள் செல்வச் செழிப்பு வாய்ந்தவைகளும் மொத் தத்தில் சுரண்டப்படாதவைகளும் ஆகும். அவைகளின் மொத்த மக்கள்தொகை ஏறக்குறைய இருபது லட்சம். அவர்களுள் அநேகர் இபன்ஸ் (Ibans) இனத்தவர்களே. அந்தப் பகுதியில் பிற இனத்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் பலர் கிறித்தவர் களாக மாற்றப்பட்டபோது, மீதிப்பேர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். நகரங்களுக்கு வெளியே இன்னும் அவர்கள் நீண்ட வீடுகளில் ஒரு வகையான நாட்டுப்புற மக்களைப் போன்று வசிக்கிறார்கள்.

கரைப்பகுதி வளமானதும் வண்டல்படிந்ததுமாக இருக்கிறது. ஆனால் அந்தப்பகுதிகள் குன்றுகளாகவும் மலைகளாகவும் கரைக்கு அப்பாலும் உயர்ந்திருக்கிறது. சராவக்கில் வாணிபமும் தொழிற் சாலையும் சீனர்களின் ஆதிக்கத்தில் இருந்தன. முன்னாள் வெள்ளை ராசாவின் ஆட்சியின்போதுள்ள பகுதி இரண்டாம் உலக மகா

யுத்தத்தின்போது பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகியது. சபா மாநிலத்தில்கூட, எண்ணிக்கையில் அதிகம் இல்லாமலிருந்தாலும் மக்கள்தொகையில் செல்வாக்கு மிகுந்த பகுதியினர்களாகச் சீனர்கள் இருந்தார்கள்.

இந்தப் பகுதிகள் மரம், செம்பு, தாதுப்பொருட்கள், மற்றும் பிற பொருள்களாலும் மிகுந்த வளம் உடையனவாக இருக்கின்றன. இத்தகைய செல்வங்களைப் பயன்படுத்தும்போது மலேயாவின் பொருளாதாரம் பெரும் அளவிற்கு முன்னேற்றம் அடையும். எல்லாவிடங்களிலும் மரங்களுச்குத் தேவையிருக்கிறது. மேலும் சபா, சராவக் மாநிலக் காடுகளினால் உலகச் சந்தைகளுக்குக் குறையாத அளவில் மரங்களை ஏற்றுமதி செய்யலாம்.

சபா மாநிலத்தில் ரப்பர் பயிரிடலாம். ரப்பர் விளைவதற்கான மிகச் சிறந்த சீதோஷ்ண நிலையுடையது. ஆனால் அங்கே வேலை செய்வதற்கான தொழிலாளர்கள் குறைவு. இந்தத் தேவையை பிலிபினோஸ் மக்கள் (Filipinos) குடியேற்றத்தின்மூலம் நிரப்பப்பட்டது. ஆனால் மலேசியாவுக்கும் பிலிப்பைன்சுக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் முரண்பாட்டின் காரணமாக இந்தக் குடியேற்றத்துக்குத் தடை போடப்பட்டது.

இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையின் காரணமாகச் சபா, சராவக் முதலிய மாநிலங்களின் வளர்ச்சித் திட்டத்தை மலேசியா மெதுவாகச் செயல்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாடு ஏற்பட்டது.

7. பாண்பாட்டுச் செல்வம்

இரண்டாம் உலக யுத்தம் முடியும்போதும், 1945ஆம் ஆண்டு முடிவு வரையிலும் மலேயாவிலும் சிங்கப்பூரிலும் பல்கலைக் கழகங்கள் இல்லை. சிங்கப்பூரை அமைத்தவரின் பெயரைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ரேபிள்ஸ் கல்லூரியே அங்குள்ள உயர்நிலைக் கல்வி நிலையமாகும். ரேபிள்ஸ் படிப்பிற்கு ஒரு சான்றிதழ் அளிக்கும். சிங்கப்பூரில் எல்.எம்.பி. சான்றிதழ் வழங்கும் ஒரு மருத்துவக் கல்லூரியும் இருந்தது.

ரேபிள்ஸ் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் வேலை பார்க்கும் பெரும்பாலான இளநிலை விரிவுரையாளர்கள் எல்லோரும் இந்தியர்களே. பேராசிரியர்கள் எல்லாரும் ஐரோப்பியர்களே. அவர்கள் மாணவர்களுக்குத் தொழிலில் நுழையவும் அல்லது ரேபிள்ஸ் கல்லூரியில் சேரவும் உதவும் கல்வியைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னால் ரேபிள்ஸ் கல்லூரி, சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத்தின் மையமாக விளங்கியது. மலேயா, சிங்கப்பூர், போர்னியோ பகுதிகளைச் சேர்ந்துள்ள மொத்தப் பகுதிக்கும் ஒரே பல்கலைக்கழகமாக இருந்தது.

1957ஆம் ஆண்டு, மலேயா சுதந்திரப் பிரகடனத்துக்குப் பிறகு தனியொரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்னும் ஓர் இயக்கம் இயங்க, 1958ஆம் ஆண்டு மலேயாப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. இன்னும் சிங்கப்பூர் மருத்துவப் படிப்பிற்கான ஒரே இடமாக இருக்கிறது.

மலேயாப் பல்கலைக்கழகம் இப்பொழுது தன்னிறைவு பெற்றதொரு பல்கலைக்கழகமாக விளங்குகிறது. அதிலிருந்து செல்லும் பட்டதாரிகளுக்கு அரசாங்க அலுவல்களில் சலுகைகள் தரப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகத்தில் இன்னும் சட்டவியல் துறை அமைக்கப்படவில்லை. அரசாங்கமும் அதை விரிவுபடுத்துவதற்காகத் தீவிரமாக எண்ணி வருகிறார்கள்.

பினாங்கில் மற்றுமொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு பல்கலைக்கழகங்களும் மரபுவழிச் செல்லவும், ஒவ்வொரு ஆண்டுக்கும் குறிப்பிட்டதொரு அளவில் பட்டதாரிகளை உண்டுபண்ணவும் எனச் செயல்படுகின்றன.

1969ஆம் ஆண்டிலிருந்து, மலேயர்கள் ஒரு தேசீயப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். இங்கே பயிற்று மொழியாகத் தேசீய மொழியான மலாய் இருக்கிறது. கெபாங்சன் பல்கலைக்கழகம் (University of Kebangsan) என்றழைக்கப்படும் இது கோலாலம்பூரில் அமைக்கப் பட்டிருக்கிறது.

இது கோலாலம்பூரில் அமைக்கப்பட்டதைப் போலவே மலேயர் பல்கலைக்கழகமும் இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அது மலேயாவின் பரந்த பொது நோக்குடைய மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றது. அது இந்த நேரத்தில் மலேயர்களில், எவர் மலாய் மொழியைத் தங்கள் பாடமொழியாகக் கொள்கிறார்களோ, அவர்களின் தேவையைக் கெபாங்சன் பல்கலைக்கழகம் பூர்த்தி செய்கிறது.

மலேசியாவின் கல்விவளர்ச்சிக்கு இந்தியா சிறியதொரு அளவில், நாட்டில் குடியேறியுள்ள மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள் முதலான இனத்தைச் சேர்ந்த மாணவர்களுச்கு இந்தியப் பண்பாட்டைப் பற்றிய படிப்பிற்கான உதவித் தொகையை அளித்திருக்கிறது.

இந்தியாவுக்கு வந்து படிக்கின்றவர்கள் கண்டிப்பாய் அவர்களின் படிப்புக்குப் பின்னே மலேயாவுக்குத் திரும்பிப் போய், அவர்கள் நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்னும் நிபந்தனையும் இவ்விதத் தொகையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய மருத்துவக் கல்லூரிகளில் தேறிய பல மருத்துவர்கள் இப்பொழுது மலேசியாவில் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள்.

1957ஆம் ஆண்டில் மலேயாவின் அரசியல் சட்டத்தைத் தயாரித்தபோது, 1963ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மலேசியாவின் சட்டம் அதற்கு அடிப்படையாய் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்குள் மலாய் அரசாங்க மொழி

யாய்விடும் என்று சட்டம் அறிவித்தது. ஆனால் 1967ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் சீனர்களுடையவும் இந்தியர்களுடையவும் விருப்பங்களுக்கு மாறுபட்டதினால் நிறைவேற்றப்படாத போது, மலேயா மக்களுக்கு இந்த அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் விருப்பம் கொண்டிருக்கவில்லை யென்னும் தப்பெண்ணம் மலேயர்களின் மனங்களில் எழுந்தது. பின்னால் இது திருத்தப்பட்டது. இன்று அலுவலக வேலைக்கும் கல்வியின் நோக்கங்களுக்கும் நாட்டுமொழியாக மலாய் இருக்கிறது.

வெகுவேகமாகத் தேசிய உணர்வு மலேசியாவுக்கு வந்தது. கல்வி வளர்ச்சிக்காக மேற்கைப் பார்க்கத் தொடங்கினார்கள். இன்று அவர்கள் இந்தோனேஷியாவைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் இதில் நாட்டில் அதிகாரத்தில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு சில மலேயத் தலைவர்களின் செல்வாக்கினாலும் அவர்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள்,

இன்னும் பல மலாய் அமைச்சர்கள் இளவயதில் தங்கள் குழந்தைகளை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய வெளிநாடுகளுக்கு அவர்களின் கல்விக்காக அனுப்புகிறார்கள். இது இந்தியாவிலும் அதே போன்று நிலவிய பழக்கத்தை நினைவுபடுத்துகிறது. எல்லாவிதமான கவர்ச்சிகளும் எச்சரிக்கைகளும் இருப்பினும், எல்லாவிடத்தும் மனிதப் பண்பு ஒரே மாதிரியானது என்பதைச் சரியாகக் காண்பிக்கிறது எனலாம்.

ஆங்கிலத்திலிருந்து பகஸா கெபாங்சனுக்கு (தேசிய மொழி) மாறியது ஏதோ ஒரு வகையில் சீனர்கள் விருப்பத்துக்காகவும் சிறியதோர் அளவுக்கு மலேசியாவில் உள்ள இந்தியர்களின் விருப்பத்துக்காகவும் அல்ல. ஆனால் அதை அவர்கள் உணரவும் புதிய திட்டத்துக்கு ஏற்ப அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்தனர்.

பெரிய இடங்களில் பணம் பொருந்திய சீன இந்திய வீடுகளில் தங்கள் குழந்தைகளை, மலாய் அமைச்சர்களும் உயர்தர அதிகாரிகளும் செய்தது போன்று உயர்நிலைப் பள்ளித் தேர்வுகளில் தேறிய பிறகு வெளிநாடுகளுக்குப் படிப்பிற்காக அனுப்புகிறார்கள். ஆனால் பெரும்பான்மையான சீன இந்திய இளைஞர்கள் மலாய் மொழி வழிக் கல்வித் திட்டத்தின் வழியாகக் கற்கவேண்டியிருந்தது.

மேலும் இன்னும் ஒரு சில வருடங்களில் அவர்கள் மலேயர்களுக்குள்ளாகவே மேம்பட்டிருப்பார்கள்.

தேசிய மொழியில் உள்ள புத்தகங்களின் தட்டுப்பாடு ஒரு பிரச்சினையாக இருக்கவே அரசாங்கம் அதைத் தவிர்ப்பதற்கு மொழித்துறை வழியாக முயற்சி செய்துகொண்டிருந்தது. மலேயாவின் சுதந்திரம் கிடைத்தவுடனேயே ஆரம்பிக்கப்பட்ட இத்துறை முக்கியமாக ஆங்கிலத்திலிருந்து ஏராளமான புத்தகங்களை மொழி பெயர்த்தது. இந்த வேலை வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் குறிப்பாக விஞ்ஞானத் தொழில்துறைகளில் இன்றைய தேவைகளுக்கு ஈடு செய்ய முடியவில்லை.

இயற்கையாகவே, மக்களில் ஒரு சாரார் கல்வித்தரம் வீழ்ந்து விட்டதென்று குறை சொன்னார்கள். பாடப்புத்தகங்களில் குறையும் மற்றும் பிற படிப்பதற்கான நூல்கள் இல்லாமை முதலான பிரச்சினையைக் கண்டிப்பாக வெற்றி கொள்ள வேண்டிய மலேசியா, ஏறக்குறைய, யுத்தத்துக்குப் பிறகு இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்ட இந்தோனேசியாவிடமிருந்து கிடைக்கின்ற உதவியுடன் தொழில்துறைமூலம் திறமையாக உழைத்துப் பாடப்புத்தகங்களின் தேவையை நிறைவேற்றியிருந்தால், இது, ஓர் இட்டுக்கட்டிய கதை என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்திருக்கும்.

இதைப் போலவே மலேசியாவின் பண்பாடும் தற்காலத்தில் கடந்த 15 நூற்றாண்டுகளுக்குள்தான் உருவானது. மேலும் நாட்டில் குடியேறிய மக்களிடம் அதிகமான அளவில் இன்றும் பாதிப்பு எதையும் இது ஏற்படுத்தவில்லை.

நாம் சீனர்களையும் இந்தியர்களையும் தள்ளி வைத்துவிட்டால், தென்கிழக்காசியாவிலே உள்ள பண்பாடுகளுள்ளே ஒரு பழைமை வாய்ந்த பண்பாடாக மலேயப் பண்பாடு இருப்பினும், அவர்களது பழைமைவாய்ந்த பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலானவற்றை எவரும் என்றும் விரும்புவார்கள்.

மலேயா இனம் உண்மையிலேயே சீனாவிலிருந்து வந்து, மலேயாவிலும், இந்தோனேசியாவிலும், பிலிப்பைன்ஸிலும், மற்றும் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த பல தீவுகளிலும், எல்லாப் பகுதிகளிலும் குடியேறி இருந்தது. அவர்களுக்கு எனச் சொந்தமான

தொரு பண்பாட்டை இன்னும் அவர்கள் பாதுகாத்து வருகிறார்கள். எப்படியிருப்பினும் அது சீன, இந்தியப் பண்பாடுகளுடன் கலப்பதற்கும், இணைப்பதற்கும் முடியாத நிலையில் இருக்கிறது எனலாம். அரேபியர்களின் வருகைக்குப் பின்னால் மலேயாவின் மக்கள் தங்களது மதம் என இஸ்லாமை ஏற்றுக்கொண்டதனால் குறிப்பாக இந்த நிலைமையை அடைந்தது.

இந்த வழியாகப் பழங்காலந் தொட்டே மலேசியாவிற்குச் சீனர்களும், இந்தியர்களும் குடிவந்ததிலிருந்து மலேயர்களிடமிருந்து தனித்தே வாழ்கின்றனர். ஒருவேளை மலேசியாவில் குடியேறிய இனங்களுக்குள்ளே ஓரளவுக்குப் பொருளாதார ஒற்றுமையும் நாட்டின் நலனுக்காக இணைந்து உழைக்கவேண்டுமென்ற எண்ணமும் இருக்கலாம்; ஆனால் ஒருபொழுதும் அங்கே உணர்ச்சிபூர்வமான ஒற்றுமை இருந்தது கிடையாது.

தற்காலத்தில் சீனர்களும் இந்தியர்களும் மலேசியாவின் தேசியப் பண்பாட்டின் தோற்றத்துக்குத் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே மலேசியப் பண்பாடு, இந்தோனேசியாவின் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த முக்கியமானதொரு மலேயப் பண்பாடேயாகும்.

இது மலேசியாவின் முன்னாள் பிரிட்டிஷ் ஆளுநர்களுக்குப் பல்வேறு இனங்களைப் பிரித்து வைப்பதற்கும் பொருத்தமாக இருந்தது. பிரிட்டிஷார்கள் சீனர்களிடத்தில் தங்களுக்கு எனச் சொந்தமாகக் கோயில்களையும், கல்வி நிலையங்களையும், அவர்களுக்கெனச் சங்கங்களையும், கழகங்களையும், ஏன் அவர்களின் ரகசியச் சங்கங்களையும் வைத்துக்கொள்ளும் அளவுக்குக்கூட உற்சாகப்படுத்தினார்கள். இதைப்போலவே பிரிட்டிஷார்கள் இந்தியர்களுக்கெனச் சொந்தமாகக் கோயில்களும், கழகங்களும், ஏன் அவர்களுக்கெனச் சொந்தமாகக் கள்ளுக்கடைகளையும் வைத்து, கொள்ளத் தூண்டினர்.

பிரிட்டிஷாரின் காலத்தே மலேசியா எங்கும் பிரித்தாளும் கொள்கை இருந்தது. நாட்டில் ஒவ்வொரு இனமும் எப்பொழுதும் பணம் சேர்ப்பதிலே குறிக்கோளாக இருந்தது.

இப்பொழுது மலேசியா, சுதந்திர நாடானபோது முக்கியமான பதவிகளில் உள்ள மலேயர்களுடன் அங்குள்ள சீனர்களும்

இந்தியர்களும் இணைந்து போகவேண்டியிருப்பதால் மெதுவாக மலேசியப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டார்கள்.

மலேசியாவில் உள்ள இந்தியர்களுக்கு இதைப்போலச் செய்வதில் பிரச்சினை ஒன்றும் இல்லை. நாட்டில் உள்ள இரண்டாம் அல்லது மூன்ரும் சீனத் தலைமுறையினருக்குக்கூட மலேசியப் பண்பாட்டை ஏற்றுக்கொள்வதில் பிரச்சினையில்லை. இந்தோனேசியர்களைப் போன்று மலேயர்கள் இஸ்லாம் மதத்தைத் தங்கள் மதமாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் மற்ற மதத்தைப் பின்பற்றுபவரிடையே அதிகமாகப் பெருந்தன்மையுடனும் பொறுமையுடனும் நடந்து கொள்வார்கள். அங்கே சீன மலேயர்களுக்கிடையே கலகங்கள் இருக்கும். ஆனல் அவைகள் அரசியலால் தூண்டப்பட்ட அல்லது அரசியலால் திறமையாக உண்டாக்கப்பட்ட கலகங்களாக இருக்கும். பண்பாட்டு வேறுபாடுகளின் அடிப்படையின் காரணமாக எப்படியாவது அவைகள் நடைபெறும்.

ஒரு காலத்தில் தாய்லாந்தால் ஆளப்பட்ட கெலந்தான், கெடா மாநிலங்களில் ராமாயணத்திலிருந்து நடித்துக் காண்பிக்கப்பட்ட காட்சிகளைக் காண்பதற்குப் பெரிய கூட்டம் கூடியிருக்கும். நாட்டில் இன்றைக்குக்கூட மலேசியா எங்கும் இந்திப் படங்களை திரையிடுவதைப் பார்ப்பதற்கு மலேயர்களில் ஏராளமான ரசிகர்கள் இருக்கின்ருர்கள். இதற்கு அடுத்துதான் தமிழ்ப்படங்களின் மீது அவர்களுக்குக் கவர்ச்சியிருக்கின்றது.

ஏறக்குறைய இந்தோனேசியர்களின் நடனங்களைப் போன்று மலேயா நடனங்கள் மக்களின் உள் மனங்களைப் படம்பிடித்துக் காட்டுவனவாக இருக்கின்றன. நடனங்கள் அழகு பொருந்தியவைகள். ஆனல் நடனங்களை ஆடுகின்ற அல்லது நடனங்களைத் தங்களுக்குள்ளாக ஆடிக்கொள்ளுகின்ற ஆண்களுக்கு இடையேயும் பெண்களுக்கு இடையேயும் அரேபியப் பண்பாட்டின் செல்வாக்குக் கொஞ்சம்கூட இல்லை.

மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் பெண்களின் நிலை அரேபிய உலகிலுள்ள பெண்களின் நிலையைப் போன்றில்லாமல் தனித்திருக்கிறது, இந்தோனேசியாவில் இருப்பதைப்போன்று எந்தவிதக் கூச்சமும் இன்றி மலேசியாவில் உள்ள பெண்கள்

சுதந்திரமாகத் திரிகிறார்கள். அவர்களும் நாட்டின் வியாபாரங்களில் பங்கு பெறுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, மலேசியாவின் அமைச்சரவையில் ஒரு பெண் அமைச்சர் இருக்கிறார். அரேபிய நாடுகளில் இதைப்போன்று இருப்பது அரிது.

ரோங்கிங் (Ronging) என்னும் மலேசியா நடனம், ஆண் பெண் என இருபாலரும் பங்கேற்கும் ஒரு வகையான நடனமாகும். மேற்கத்திய நடனக்காரர்களைப் போன்று ஒருவர்க்கொருவரைத் தொட்டுக்கொள்வதில்லை. கொஞ்சம்கூடத் தாள பாவம் தவறாமல் நடனமாடுபவர்கள் கலை அழகோடும் ஒத்திசையோடும் இயங்குவார்கள். துங்குவும் அவரைப்போலவே அவரோடு சேர்ந்த பலரும் ரோங்கிங் போன்ற நடனத்தின்மீது பெரும் விருப்பம் உடையவர்கள்.

மலேயர்களின், ஆண்களும் பெண்களும் பங்குபெறும் கலைநயம் பொருந்திய பல்வேறு வகையான நாடோடி நடனங்கள் இருக்கின்றன. அவைகள் இயற்கையாகவே இசை அறிவோடு கலைநயம் கொண்டவைகளாகும். இந்தச் சிறப்புத் தன்மையில், அவைகள் இந்தோனேசிய நடனங்களோடு நெருங்கிய அளவில் ஒத்திருக்கின்றன.

சமீபகாலமாக மலேயா இளைஞர்கள் பாப் சங்கீதத்தை விரும்புகின்றார்கள். அதில் அவர்கள் ஐரோப்பியர்களையும் மிஞ்சிவிட்டார்கள். இங்கே ஓரளவுக்கு மலேசியப் பண்பாட்டுக் கலப்பினால் சீன இந்திய இளைஞர்களுக்குள்ளேயும் பாப் சங்கீதத்தை விரும்புபவர்கள் இருக்கிறார்கள்.

மலேயர்கள் "மகிழ்ச்சிவழிச் செல்லும்" அதிர்ஷ்டசாலிகள். நிலங்களில் இருந்து கிடைக்கும் அரிசியையும், குளங்களிலிருந்து கிடைக்கும் மீனையும் அனுபவிக்கும்பொழுது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இன்றைக்குக்கூட சுதந்திரத்தின் வருகையோடு அடிப்படையான இவ் வசதிகளோடு மலேயர்கள் மகிழ்கிறார்கள். இதைப்பற்றி ஒரு மலேயத் தலைவர் அவருடைய இனத்தைப் பற்றி என்னிடம் சொன்னதாவது (இந்தோனேசியர்களையும் சேர்த்து):

" இயல்பாகவே நாங்கள் அமைதியான, சாந்தமான மக்கள். கடுமையானதோர் உணர்ச்சியால் தூண்டப்படும்பொழுது மதம் பிடித்து ஓடவும் மிகவும் கொடூரமான முறையில் மக்களை வெட்டிச் சாய்க்கவும் வல்லவர்களான மலேயர்களாகிய நாங்கள் இந்த உலகில் உண்மையிலேயே மிக அமைதியான மக்களாவோம்."

8. மலேசியாவை நோக்கி

மெர்டேகாவுக்குப் பின்னால் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளில் குழப்பம் மிகுந்த தென்கிழக்காசியாவில் பெரிய அளவில் பாராட்டுதலைப் பெறும் அளவிற்கு மலேசியா வெற்றி நடை போட்டது. 1957ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முப்பத்தோராம் தேதியிலிருந்து மலேசியா செழிக்கத் தொடங்கியது. அந்த நாட்களில் யாராவது மலேசியாவுக்கு வந்திருந்தால் எல்லாத் துறைகளிலும் ஆக்கவேலைகளிலும் வேகத்தைக் காணலாம். சமூகநலத் திட்டங்கள் நாட்டை வளம்பெறச் செய்தன. பல்வேறு வகையான பொதுநலச் சுகாதாரக் கல்வித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. புதிய பாதைகள், புதிய நகரங்கள் எங்கும் தோன்ற ஆரம்பித்தன. கோலாலம்பூரிலும், புத்த நகரங்களிலும் பல புதிய கட்டடங்கள் எழுத் தலைப்பட்டன.

இந்தத் திட்டங்களுக்கெல்லாம் பணம் இருந்தது. மேலும் ஒவ்வொரு துறைக்கும் துங்கு அவர்கள் இருக்கின்றவர்களுள் தகுதியானவர்களையே தேர்ந்தெடுத்தார். பல இடங்களுக்குச் சென்று மலேசியாவின் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் பரப்பினார். லண்டனில் நடைபெற்ற பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்குச் சென்றார். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஜெர்மானியக் குடியரசு, பெல்ஜியம் அரசு முதலான நாடுகளுக்குச் சென்றார். மலேயாவில் பல வேலைகள் நடைபெறத் தொடங்கின.

1957ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்து இரண்டாண்டுகள் முடிவடைவதற்கு முன்னால் கூட்டாட்சி அளவிலும், எல்லா மாநிலங்களிலும், கூட்டாட்சிச் சட்டவமைப்பின்கீழ்ப் பொதுத் தேர்தல்கள் நடத்த வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. இதற்கான ஆயத்தங்களைத் துங்கு செய்ததோடு கூடவே கூட்டாட்சித் தேர்தல்களில் இணைப்புக்கட்சி (Alliance Party) வெற்றி அடைவதற்காகச் சில காலமாகப் பதவியிலிருந்து

விடுமுறை பெற்றுக்கொண்டு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். 11 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் காட்டிய வேகம் 9 மாநிலங்களில் இணைப்புக் கட்சியை வெற்றியடையச் செய்தது. மலேயாவில் தெற்குக் கடற்கரையிலுள்ள தெரங்கண்ணு, கெலந்தன் என்னும் இரு மாநிலங்கள் இணைப்புக் கட்சிக்கு ஓட்டளிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதிலும், கூட்டாட்சித் தேர்தல்களில் துங்குவின் இணைப்புக் கட்சியினர் 104 இடங்களுக்கு 74 இடங்களைக் கைப்பற்றினார்கள்.

இந்த வேளையில், மலேயப் பிரதம மந்திரி, முதல் முயற்சியாக மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே பொருளாதார வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஏ.எஸ்.ஏ. (தென்கிழக்கு ஆசியச் சங்கம்) நிறுவ வழி அமைத்தார்.

மலேசியாவுடன் தனக்குள்ள தொடர்பை பிலிப்பைன்ஸ் துண்டித்துக்கொண்டபோது, சிலகாலம் செயல்படாமல் இருப்பினும், 1961ஆம் ஆண்டு ஜூலைத் திங்களின் ஆரம்பத்திலிருந்து இன்றும் செயல்பட்டு வருகிறது.

அந்த ஆண்டு மே மாதம், துங்கு அப்துல் ரகுமானின் அரசியல் வாழ்வில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளுள் ஒன்று நடைபெற்றது. இம்மாதம் சிங்கப்பூர் வெளிநாட்டு நிருபர்கள் சங்கத்தில் பேசும்பொழுது மலேயா உடனடியாகவே அல்லது பின்னலோ பிரிட்டனோடும், சிங்கப்பூர், போர்னியோ, சராவக் முதலிய பகுதிகளிலுள்ள மக்களோடும் நல்லெண்ணத் தொடர்பு கொள்ளவேண்டும் என்று அறிவித்தார். மலேசியாவுக்காகத் துங்கு வெளியிட்ட முதல் அறிக்கை இதுவேயாகும். எதிர்பாராத விதமாக இதற்கு பிரிட்டனில் நல்ல வரவேற்பு இருந்தது. அது பின்னல் மலேசியாவை உருவாக்கும் வகையில் வடக்குப் போர்னியோ, சராவக் முதலிய இடங்களில் உள்ள பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்ளுவதற்குத் தனியொரு விசாரணைக் குழு ஒன்றை ஏற்படுத்தியது.

மலேசியாவின் வரலாற்றிலேயே சிக்கலான மூன்றாண்டுக் காலப் பகுதியின் சிறந்த காலகட்டத்தே, கோலாலம்பூரில் மலேசியாத்

தேசிய தினசரிப் பத்திரிகையான மலேயன் டைம்ஸ் (Malayan Times) பிரதம ஆசிரியராக நான் இருக்கவேண்டியிருந்தது. கோலாலம்பூரை ஆளுகிறவர்களைக் காட்டிலும் துன்பமும் நம்பிக்கையின்மையும் அடையுமாறு சில மனிதர்களால் செய்யப்பட்ட பிரமிக்கத்தக்க நிகழ்ச்சிகளை என்னால் காண முடிந்தது. மலேசியாவின் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தாக்குவதற்குத் தயாராகவும் ஆனால் உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கத் தயங்குகின்ற பிலிப்பைன்ஸின் சம்மதத்துடன், இந்தோனேஷியா தொடர்ந்து முரட்டுத்தன்மையான தாக்குதல் நடத்தியது.

இப்போதுள்ள அரசியல்வாதி சொல்வதைப்போலில்லாமல், அந்த நாட்களில் மலேசியா என்னும் வார்த்தையை உச்சரிப்பதே அரிதாயிருந்தது. ஆனால் மலேசியா என்னும் வார்த்தையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மலேயாத் தீவுக் கூட்டங்களைக் குறிக்கின்றதொரு பல பொருள் ஒரு சொல் போன்றே உபயோகிக்கப்பட்டு வந்தது. மேலும் இது மலேயாத் தீவுக்கூட்டங்களைப் பற்றிய பல பொருள் ஒரு சொல் என்பதில் ஐயம் ஒன்றுமில்லை.

தென்கிழக்கு ஆசியாவின் தென்பாதியில் எல்லாத் தீவுகளையும் சேர்த்துச் சுமத்திரா ஜலசந்தியின் வடகிழக்கு முனையிலிருந்து அந்தக் காலத்து நெதர்லாந்துவின் கிழக்கு இந்தியாவின் பகுதியான தென்கோடியிலுள்ள ஸ்பைஸ் தீவு (Spice Island) வரைக்கும் அது பரவியிருந்தது. மலேயாத் தீபகற்பம் தாய்லாந்தின் தென் பகுதி முதலான பகுதிகள் பொதுவாக மலேசியாவோடு இணைந்ததொரு பகுதியாகக் கருதப்பட்டபோது, மலேசியாவோடு பிலிப்பைன்ஸ் தீவுகள் சேர்த்துக்கொள்ளப்படாமல் இருந்தன.

பரந்துபட்ட இந்தக் கடல் நிலப் பகுதிகளில் பல தன்மைகள் பொதுவாக இருந்தன. மலாய்மொழியும், எல்லாப் பிற மொழிகளும், அந்தந்தப் பகுதிகளுக்குரிய மலாய் மொழியோடு தொடர்பு கொண்ட மற்றும் பிறமொழிகளும் தொழில், தொடர்புப் பேச்சு மொழியாக இருந்தன. பெரும்பான்மையானதொரு மக்கள் ஒரே மாதிரியான வாழ்க்கையையும், ஒரே மாதிரியான சமூகப் பொருளாதார அமைப்பையும், ஒரே மாதிரியான பழக்கங்களையும் மேற்கொண்டிருந்தனர். மக்களும் உடலியியல்புப்படி ஒரே

இனத்தவர்களே. குறைந்தது இருநூறு அல்லது மூந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், மக்களுள் பெரும்பான்மையினர்களின் பொதுவானதொரு மதமாக இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் "மலேசியா" என்னும் வார்த்தை அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டது. ஒரு பக்கத்தே நெதர்லாந்தின் கிழக்கு இந்தியா காரணமாகவும், குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் வடக்குப் போர்னியோவின் பகுதிகளில் புரூக் அரசரும் (Raja Brooke) அவருடைய குடும்பத்தாரின் ஆட்சியின் காரணமாகவும், மறுபக்கத்தே பிரிட்டிஷ் வடக்குப் போர்னியோ கம்பெனியினர் காரணமாகவும் இந்த நூற்றாண்டில் மலேசியா தோன்றாமல் இருந்தது என்று பொதுவாக நம்பப் பட்டது.

மலேயாவில், குறைந்தது ஒரு சில அரசாங்கத் துறைகளிலும் குறிப்பாக, மக்கள்தொகை கணக்கெடுப்பாளர்களால் மலேயாவின் தீவுக் கூட்டங்களிலிருந்து குடிவந்திருப்பவர்களைக் குறிப்பதற்காகத் தொடர்ந்து உபயோகித்து வரும் தொடரான "மலேசியா" பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கு இன்று கூட நிலைத்து இருக்கிறது. மற்றொரு கட்சியினர் பிரஞ்சுக்காரர்களால் அழைக்கப்பட்ட "மலேயா" என்ற சொல்லை மலேசியா என்று மாற்றவேண்டியது தேவையில்லை என்று எண்ணினார்கள். ஏனெனில் பிரஞ்சுக்காரர்கள் மலேயா சுதந்திரம் அடைந்தபோது மலேசியா என்றே சொன்னார்கள். 1962ஆம் ஆண்டின் பிற்பாதியிலே மலேசியா என்னும் பெயர் அளவில் புதுப்பிக்கப் படுகிற வரைக்கும் முக்கால் மலேசியா ஒரு நிலப்பகுதி எனப் பேச்சு வழக்கில்கூடக் கொள்ளத் தயாராயில்லை.

1962ஆம் ஆண்டு மலேசியாத் தலைவர்கள் இன்னும் மலேசியா, இந்தோனேசியா முழுவதையும் மேலும் முடியுமானால் பிலிப்பைன்ஸ் தீவுகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கூறி வந்தார்கள். சிறப்பாகத் தென்கிழக்கு ஆசியாவின் தீவுகளைப் போன்று கொஞ்ச காலத்துக்கோ அல்லது ஒரு சிலவற்றைப் போல கடந்த இரண்டாயிரம் ஆண்டுக்காலத்துள்ளது போன்று பொதுவானதொரு வரலாற்றைக் கொண்டிருப்பதைப் போன்று

இந்த மலேசியா என்னும் பரந்த கொள்கையானது வரலாற்று அடிப்படையைக் கொண்டது என வாதாடப்பட்டது.

கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் ஃப்யுனன் பேரரசின் (Funan Empire) அஸ்திவாரத்தில் தென்கிழக்கு ஆசியாவின் தீவுகளுக்கும் உள்நாட்டுக்கும் இடையே நெருங்கிய கடல் வாணிபத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. பல்வேறு காலங்களின்போது, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு மட்டுமே மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஃப்யுனன் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னுல் இந்தக் கடல் வாணிபப் பேரரசின் வியாபார நிலையமானது, அந்தப் பகுதியிலே அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாகவே ஆதிக்கம் செலுத்திவரும் ஸ்ரீவிஜயப் பேரரசின் (Empire of Sri Vijaya) சுமத்திராவுக்கு மாறியது. இது ஜாவாவை மையமாகக் கொண்ட மஹாபஜித் பேரரசுக்குப் (Mahapajit Empire) பிறகு மாறியது. அதன் பிறகு பதினைந்தாம் நூற்றுண்டுவரைக்கும் தீவுக் கூட்டங்களின் மேல் பாதியில் ஆதிக்கம் செலுத்திவரும் மலாக்கா பேரரசுக்கும், பிறகு, தீவுக்கூட்டங்களின் பல பகுதிகளிலே கடல் வாணிப அமைப்புக்களை ஏற்படுத்திக்கொண்டு ஆதிக்கம் செலுத்தி வரும் போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலான ஐரோப்பியக் கூட்டங்களின் கைக்கும் மாறியது.

இவ்விதமாக, மலேசியா கொள்கைக்குப் பின்னுல் ஒரு அரசியல் தொடர்பும் இல்லை. மலாய் மக்களுக்கு மலேசியா என்னும் வார்த்தையைப் போல, ''மெலாயு ராய'' (Melayu Raya) என்னும் குறிக்கோளே அதிலிருந்து பெறப்படுகிறது. மேலும் தற்போதுள்ள சூழலில், இம் மக்களின் உள்ளங்களிலே உணர்ச்சியை எழுப்பவல்ல புதியதொரு பெயராக இருக்கிறது. அந்த நேரத்தில் நிலையான அரசியலை அடைவதே தலையாய பணி என்று துங்கு எண்ணினுர். இது எல்லாக் காலத்தும் நிலைத்திருக்குமா என்பது இங்குக் கேள்வியல்ல. ஆனுல் இந்தக் கூட்டணியில் உள்ள உறுப்பினர்கள் அனைவரையும் பலப் படுத்தவும் அணிபெறச் செய்யவும் வல்லதொரு சக்தியாக இது இருந்தது.

உண்மையிலே, பல்வேறு வகையான பொதுப்பண்புகளின் காரணமாகத் தொடர்பு கொண்ட பகுதிகளில் உள்ள மக்களால்

பொதுவான காரணங்களால் நீண்ட காலமாக எண்ணப்பட்டு வந்த தேவையின் அடையாளமாகவே மலேசியாவின் தோற்றம் இருந்தது. மலேசியாவோடு சேர்ந்த எல்லா மாநிலங்களும் பிரிட்டிஷ் ஆட்சியமைப்பின்கீழ் இருந்தன. போர்னியோ தீவில் நாலில் ஒரு பங்குதான் பிரிட்டிஷ் கைப்பற்றியிருந்தாலும் இந்தோனேசியாவுடன் பொதுவானதொரு எல்லைக் கோட்டினைக் கொண்டிருந்தது. அப்பொழுது, மலேயாவுக்கும் போர்னியோ பகுதிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பானது பல தலைமுறைகளாக நிலைநாட்டப்பட்டிருந்தது. 1957ஆம் ஆண்டு மலேயா சுதந்திரமடைந்ததற்குப் பின்னால்கூட அரசியல், பொருளாதாரச் சமூகத் தொடர்புகளால் பின்னப்பட்டிருந்த இந்தத் தொடர்பைத் துண்டித்துக்கொள்ள மிகச் சிரமப்பட வேண்டியதாயிருந்தது.

இந்தத் தொடர்பு மேலும் தீபகற்பத்து மக்களுக்கும் போர்னியோ தீவுப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் இடையே உள்ள இன ஒற்றுமையின் மூலம் இன்னும் அதிகமாகியது. இபன் (Iban), கயான் (Kayan), கென்யா (Kenyah), கடாஜன் (Kadazan), மீருட் (Mirut), பஜாயுஸ் (Bajaus), ஜாகுன்ஸ் (Jakuns), அல்லது மலாயர்கள் என்றும் இந்தப் பகுதிகள் எல்லாம் பொதுவானதொரு பண்பாட்டுப் பாரம்பரியத்துடன் ஒரே வகையான வரலாற்று மூலங்களின் பகுதிகளாக இருக்கின்றன. இந்தப் பகுதிகள் மலேசியாவுடன் இணையக் கூடுமானவரையில், குறிப்பிடத்தக்க வகையில் தருக்கவியலான பண்பாட்டின் விளைவு எனக் கருதப்படுகிறது. இதற்கு மேலும் சுதந்திர மலேயா என்பது அதன் ஆக்கச் சோதனையின் வழியே கூட்டாட்சியோடு இணைந்த மாநிலங்களில் ஒன்றுகூடத் தனித்து உலக அரங்கில் நேர்முகப் போட்டியில் கால் ஊன்றி நிற்க முடியாது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. கூட்டாட்சியோடு ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட மாநிலங்களை இணைக்க வேண்டுமென்றும் இந்தத் தன்மையானது தனக்குத் தானே பயனளிக்கும் கூட்டுறவு நோக்கத்தை விரிவுபடுத்தும்.

இவ்விதமாக, ஒவ்வொரு வகையிலும், மலேசியாவின் எழுச்சியானது மலேயா சுதந்திரத்திலிருந்து எழுந்த

இயற்கையான வளர்ச்சியின் எழுச்சியாகும். இந்தச் சுதந்திரத்திலிருந்து அது எப்படிப் பலன் அடைந்தது என்பதும் இவ்வெழுச்சியின் வளர்ச்சியாகும். மலேசியா ஒருமைப்பாட்டுக்கு உறுப்பினர்கள் இணைப்புக்கு ஒத்துக்கொள்ளும்பொழுது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்த விரும்பினார்கள். நவம்பர்த் திங்களில் நடைபெற்ற முதல் மகாநாட்டின்போது, வடக்கு போர்னியோ மக்களுக்கும் சராவக் மக்களுக்கும் இடையே உள்ள உணர்வுகளை மதிப்பீடு செய்வதற்காகக் காப்போல்டு பிரபுவின் (Lord Cobbold) தலைமையின்கீழ் விசாரணைக்குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று விரும்பியது.

காப்போல்டு விசாரணைக்குழு (Cobbold Commission) எனப் பொதுவாக அழைக்கப்படும் இக்குழுவானது தங்களுக்குள் ஒரு சில வகையில் பாதுகாப்புத் தேடிக்கொள்ளவும், தங்களுக்கு வேண்டியவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மலேசியாவுக்கு ஆதரவாக இருக்கும்பொழுது, அவற்றுள் மீதி மூன்றில் ஒரு பகுதியினர்களுள், முதலாவதாக மலேசியாவுக்குச் சுதந்திரத்தைத் தேடிக் கொள்ளுவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் ஒரு பக்கமும், இரண்டு குடியேற்றப் பகுதிகளிலும் இன்னும் சில ஆண்டுகள் பிரிட்டிஷார் தொடர்ந்து ஆளுவதை விரும்புகின்றவர்கள் ஒரு பக்கமும் இருப்பதைப்பற்றியும் தீர்மானிக்கப்பட வேண்டும் என முடிவு செய்தது.

1962 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களிலே ஒவ்வொரு தொகுதிக்கும் தொகுதிவாரியான அரசாங்கம் அமைக்கத் தேர்தல் நடத்தியதில் பல்வேறு போட்டிக் கட்சிகளின் முக்கிய இலக்காக மலேசியா இருந்தது. அதன் விளைவாக மலேசியாவுக்கு ஆதரவாக எதிர்ப்பின்றி முடிவு எடுக்கப்பட்டது. மலேசியாவுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகளிடையே 119 இடங்களுக்கு 113 இடங்களில் வெற்றி கிடைத்தது. 1963 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் சராவக்கில் வயது வந்தோர் அனைவருக்கும் ஓட்டுரிமை அளிக்கவேண்டும் என்றும், உலக நடப்பின் அடிப்படையில் பொதுத்தேர்தல் நடைபெற்றபோது, மலேசியா திரும்பவும் அரசியல் கட்சிகளின் முக்கிய

மேடையாகியது. அதன் வெற்றிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும். மொத்தத்தில் 429 இடங்களுக்குக் குறைந்த அளவில் மலேசிய எதிர்ப்புக் கட்சி 100 இடங்களுக்குக் கூடுதலான இடங்களில் வெற்றி கொண்டது.

ஆனால் மலேசியாவை நிர்மாணிக்க வேண்டுமென்பதற்காக எல்லா வகையான ஆயத்தங்களைச் செய்கின்றபோது, அந்த நேரத்தில் செல்வாக்கு அடைந்து வரும் மலேசியா எதிர்ப்புப் போராட்டத்தைக் கவனிக்கத் தவறிவிட்டதுபோன்று தோன்றுகிறது. ஜனாதிபதி மகாபகலின் (Macapagal) எதிர்ப்புப் போராட்டம் திரும்பத் தோன்றுவதும் மறைவதும் ஆக இருக்கின்றபோது, இந்தோனேசியாவின் ஜனாதிபதி இப் போராட்டத்தினை நேரடியாகவே அறிவித்தார்.

சுகர்னோவுடைய அல்லது மகாபகலுடைய வாதங்களை ஆராய்வதில் பலன் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையிலேயே, மொத்தத்தில் சுகர்னோவுக்கு பிரிட்டிஷ் வெளியேறத் தீர்மானித்தபொழுது பிரிட்டிஷ் போர்னியோ முழுவதும் இந்தோனேசியாவுக்குச் சேர வேண்டும் என்ற உள்மன ஆசையைத்தவிர, வாதிடுவதற்கு ஒன்றுமில்லை. பர்மாவில் இறந்த மொகலாயர் பேரரசுவின் வழியில் வந்த பகதூர்ஷாவைப் போன்று பர்மீய அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பிலிப்பினோ (Filipino) குடிமகனை ஜுலு சுல்தானின் வம்சத்தில் வந்தவர்களின் உரிமைகளின் அடிப்படையில் மகாபகலின் வாதம் இருந்தது.

மேற்கு இரியனில் (Irian) வெற்றிவாகை சூடி வந்த புதிதில் இன்னும் அதிகமான இடங்களைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத்திய அதே நேரத்தில் தாய்நாட்டின் முன்னணியில் படையெனத் திரண்டுவரும் பிரச்சினைகளை ஒதுக்கிவைத்து விட்டுச் சுகர்னோ மலேசியாவுக்கு எதிராக ஒரு பேரணியைத் தூண்டிவிட முயற்சி செய்வதால் இதை ஒட்டியே ஆகஸ்டு 31ஆம் தேதி என மலேசியாவுக்கான தேதியும் தள்ளி வைக்கப்படும் எனப் பல மக்கள் எண்ணினார்கள்.

1963ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஐந்தாம் தேதி சுகர்னோ மணிலா மகா நாட்டிற்குச் சென்றபோது இது உறுதிப்பட்டது.

மலேசியாவின் பிறப்பை பிலிப்பைன்சும் இந்தோனேசியாவும் வரவேற்கும் வகையில் முழுமையான குறிப்பிட்டதொரு பயனுள்ள திட்டத்துடன் முடிவானதொரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இரண்டு போர்னியோ பகுதிகளில் உள்ள மக்களின் கருத்துக்களை மதிப்பிடும் வகையில் அதை வரவேற்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூறினார். இந்த முரண்பாட்டிற்கு இடையே சிங்கப்பூர்ப்பற்றிய கேள்வி ஒன்றும் எழவில்லை. ஏனெனில் மலேசியக் கூட்டாட்சியுடன் இணைந்து கொள்வதற்கு மக்களுக்கு எந்தவிதமானதொரு கட்டுத் திட்டமும் கிடையாதென்பது ஏற்கெனவே நடைபெற்ற பொது மக்கள் வாக்கெடுப்பின் மூலம் உணர்த்தப்பட்டது.

மலேசியாவோடு இணைந்துகொள்ள விரும்பும் முகத்தான் இரண்டு போர்னியோ பகுதிகளில் உள்ள மக்களின் கருத்தை உறுதிபடுத்திகொள்வதற்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலகம் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு இந்த உடன்படிக்கை வரவேற்புத் தெரிவிக்கவே தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் ஒரு கோபாவேசமான கேள்விக்குறியுடன் பின்னப்பட்டிருந்ததுடன் மலேசியா மக்களை ஓர் இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. மலேசியாவின் தொடக்க விழாவிற்காகத் தேதி குறிப்பிடுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னால், தென்கிழக்கு ஆசியாவில் நிலையாய் இருப்பதற்கான புதியதொரு பாதுகாப்பு அளிப்பதுபற்றி எந்தவிதமான முடிவிற்கு வராமல் இருப்பதுவும், சதியாலோசனை செய்வதும், குறிக்கோளில்லாமல் இருப்பதும் அப்பொழுதிருந்த நிலையாகும். குழப்பம் மிகுந்ததொரு பிரமை நிலையிலே நாடு இருந்தது. சுகர்னோவின் போராட்டச் சூழ்ச்சிக்கிடையே மலேசியா நிலைபெறுமா என்பதே எல்லாப் பகுதிகளிலும் ஆவலைத் தூண்டும் கேள்விகளாக இருந்தன.

ஐக்கிய நாட்டுச் சபையின் பொதுச் செயலாளரான ஊதாண்டைச் சிறப்புப் பிரதிநிதியாகவும், அவரின் கீழ் 9 பேரடங்கிய குழு ஒன்று சராவக், வடக்கு போர்னியோ பகுதிகளிலிருந்து பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளில் உள்ள மக்கள் எல்லாரும் மலேசியாவோடு சேருவதற்கு விருப்பம் உடையவர்

களாக இருக்கிறார்களா என்பதை அறிவதற்கான கணக்கெடுப்பு ஒன்று நிகழ்த்துவதற்காக வந்தார்கள். இந்தோனேசியாவும், பிலிப்பைன்ஸும் இந்த மக்களின் எண்ணத்தை அறிய வாக்கெடுப்பு நிகழ்த்துவதற்கு ஆராய்வதற்காக ஒரு பரிசீலனைக் குழு ஒன்றினை அனுப்பியது. முதலில் சராவக், வடக்கு போர்னியோ பகுதிகளில் குழப்பம் மிகுந்து இருக்கிறது என்று முதலில் இக்குழுவிடம் சொன்ன இந்தோனேசியா, பிறகு இதையே மக்களின் எண்ணத்தைப்பற்றிய வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடைமுறைகளையும், முடிவுகளையும் கணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இக் குழுவின் உதவியை நாடியது என ஊதாண்ட் குழுவின் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

ஐக்கிய நாட்டுச் சபையின் குழு சிறப்பாக இந்த வேலையைச் செய்து வருகின்றபோது இதையெல்லாம் மணிலாவில் ஒத்துக் கொண்ட சுகர்ணோ தமது திட்டத்தை மாற்றிக்கொண்டார். இந்தோனேசியா ஐக்கிய நாடுகளின் முடிவுக்குக் கட்டுப்படாது என்றும், ஆனால் இந்தோனேசியாவின் பரிசீலனைக் குழுவின் முடிவுகளுக்குத்தான் ஒத்துக்கொள்வார்கள் என்றும் இந்தோனேசியா வெளி விவகார மந்திரியும் அவரது அமைச்சரவையினர்களும் தெரிவித்தனர். போர்னியோ பகுதிகளுக்கு விடுதலை அளிக்க ஆயுதம் தாங்கிய படைகளைத் திரட்டுவதற்கு முயற்சி செய்து வருவதாக இன்னும் மக்களிடையே பேச்சாக இருந்தது. வழக்கம் போலவே தொழிலாளர் சங்கத் தலைவர்களும், முன்னணி அமைப்பில் இருப்போர்களும், மற்றும் பிறரும் மலேசிய எதிர்ப்புப் பேரணியினைப் புதுப்பித்துக்கொண்டார்கள்.

சிங்கப்பூர், சராவக், வடக்கு போர்னியோ முதலிய பகுதிகளின் தலைவர்கள் துங்குவின் தீர்மானத்தைத் தயக்கத்துடனே ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் மலேசியாவில் சுகர்ணோவின் பயமுறுத்தல்களுக்கு இனிமேல் அதிகமாகச் செவிசாய்க்கக் கூடாதென்னும் எண்ணம் வேரூன்ற ஆரம்பித்தது. மக்களில் பலரும், துங்குவின் நண்பர்களிலும், ஆதரவாளர்களிலும்கூடப் பலரும், சுகர்ணோவின்மேல் துங்கு கொண்டிருக்கும் நம்பிக்கை வீண் போய்விடும் என்று எண்ணினார்கள்.

இன்னும் பல வழிகளில் மலேசியர்கள் மணிலா மாநாட்டின்

தீர்மானங்களைப்பற்றி ஐயங்கொள்ள ஆரம்பித்தார்கள். எந்த ஒரு திட்டமும் இல்லாது மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா முதலியவைகள் இணைந்து தென்கிழக்கு ஆசியாவின் சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் உழைக்க மாப்பிலிந்தோ (Maphilindo) என்னும் அமைப்பை உருவாக்க வேண்டும் என்பது அதிலுள்ள தீர்மானங்களுள் ஒன்றாகும். ஆனால் மாப்பிலிந்தோ பற்றிய நீண்ட பேச்சுக்களெல்லாம் பெரும்பான்மையான மலேசியர்களைத் தூண்டிவிட முடியவில்லை. ஆனால் அவர்கள் இதை ஜாகர்தாவின் சர்வாதிகார யதேச்சதிகாரம் என்று நம்பினார்கள். மாப்பிலிந்தோவை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமே தென்கிழக்கு ஆசியாவில் பின்னால் உருவாகும் புதியதொரு அரசியல் சந்திப்பு அடிப்படையாக இருக்கவேண்டுமென்பதே ஆகும். ஆனால் சுகர்னோ அப்படியொரு இயக்கம் உருவாகுமானால் அதற்கு அவரே பிரதம அதிகாரியாகவும் அந்த இயக்கம் அவரின்கீழ் இயங்க வேண்டும் என்றும் தெளிவான முறையில் தம் கருத்தினை வெளியிட்டார்.

மணிலா மாநாட்டை வெற்றியடையாமல் செய்ததே சுகர்னோவாகும். அங்கே போய் மலேசியாவினை அழித்துவிடுவேன் என்று பயமுறுத்தினார். அவர் ஜப்பானிலும் பிற இடங்களிலும் செய்தது போலவே, அங்கும் அவரே அதிகாரம் செலுத்த ஆரம்பித்தார். அவர் அதி தீவிரவாதியாகவும், மறுக்கமுடியாத தேசீயவாதியாகவும், எப்பொழுதும் சீருடையில் தம்முடைய தங்கப் பூணிட்ட ஃபீல்ட் மார்ஷல் கைத்தடியைச் சுழற்றிக்கொண்டே காட்சியளித்தார். ஒவ்வொரு பொதுக்கூட்டங்களிலும் கோடிக்கணக்கான மக்களின் பிரதிநிதியாகவும், பிற நாடுகளிடையே அச்சத்தை விளைவிக்கவும், மதிப்பை பெறவும் வல்லதொரு வலிமை வாய்ந்த தென்கிழக்கு ஆசியாவின் ஆயுதப் படையின் பெருமை வாய்ந்த அதிகாரியாகவும் தன்னைத்தானே விளம்பரப் படுத்திக்கொண்டார். தன்னம்பிக்கையைப்பற்றியும், வெளிநாட்டு ராணுவ தளங்களைப் பற்றியும், குடியேற்ற ஆதிக்க எதிர்ப்பைப்பற்றியும், புதியதோர் உலகைப் படைப்பதற்கான கட்டுப்பாட்டினைப்பற்றியும், இன்னும் பல பெரிய விஷயங்களைப் பற்றியும் பேசினார்.

இதற்கு நேர்முரணாக துங்கு அப்துல் ரகுமான் பார்ப்பதற்கு

அடக்கமாயும் கூடியவரையில் ஆடம்பரத்தைக் குறைத்தவராயும் காட்சியளித்தார். அவருடைய பேச்சுக்கள் பல்வேறு வகைப் பட்டவையாக இருந்தபோதிலும் அமைதியையும் நல்லெண்ணத் தையும் வளர்க்கவேண்டும் என்னும் வேண்டுகோளைக் கொண்ட தாகவும் இருந்தன. அவர் மலேயாவை ஒரு சின்னஞ்சிறு நாடென்றும் அதனுடைய பக்கத்து நாடுகளோடு அது நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளவும் அந்த நட்புறவை வளர்த்து வருவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது என்றும் பேசினார். இவ்விதமாக நல்லெண்ணத்துக்கும் உண்மைக்கும் மேலாக, பொய்யும் புரட்டும் உயர்ந்தன என்பதை நிலைநாட்ட முயற்சி செய்ததைத் தவிர சிறிதளவு பயனும் இந்த மணிலா மாநாட்டின்மூலம் கிடைத்தது.

இந்தோனேசியாவின் மதிப்புக்கு ஏற்ற இடத்தை அளிப்பது பற்றியோ அல்லது சுகர்னோ ஏன் தன்னுடைய பெரும் திட்டங்களுக்குப் பெரும் தடையாக மலேசியா மாறும் என்பதைப் பற்றியோ ஆராய்வதற்குரிய நேரம் அல்ல இது. சுருங்கச் சொன்னால் அந்நேரத்தில் சுகர்னோவிற்கு இதைவிட வேறு ஒரு மாற்று வழியும் இல்லை. தான் ஒரு வலிமைவாய்ந்த இயக்கத்தினால் அவராகவே வெளியேறும் வரை தன்னாலே வளர்த்துவந்த இயக்கமானது ஒருவிதமான செயலும் செய்யாமல் நீண்ட காலமாகவும் மிகக் கொடூரமாகவும் இயங்கிவந்ததற்குத் தான் மூல காரணமாக இருந்து வந்ததைக் கொஞ்சமாவது அறிந் திருப்பார். 1967ஆம் ஆண்டு இந்தோனேசியாவில், அதன் பாராளு மன்றத்து மக்கள் ஆலோசனைக் குழுவினால் பதவியிலிருந்து வெளியே தள்ளப்படும் வரைக்கும் அவருடைய இயக்கம் இயங்கிக் கொண்டிருந்தது. பின்னால் ஜாகர்தாவில் உள்ள அவருடைய அரண்மனையில் உண்மையான கைதிபோன்றே இறந்தார்.

ஆனால் அவருடைய இயக்கம் கடைசிக் காலம் வரைக்கும் அதிகமாக வேலை செய்து வந்தது. அவர் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்படும் வரைக்கும் மிகக் கொடூரமான முறையில் அவ்வியக்கம் இயங்கி வந்தது. 1962ஆம் ஆண்டில் புருனெயில் (Brunei) ஏற்பட்ட மக்கள் எழுச்சியிலிருந்து மலேசியாவோடு இணைவதற்குச் சுல்தானுக்குத் திடமானதொரு மனம் இல்லாமல் போவதற்குப் போதுமானதொரு காரணமாய் இருந்தது.

எந்தவிதமான பலனும் இன்றி மலேசியாவின் தலைவர்களோடு இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கவும், மிக வேகமாக இதற்கு எதிர்ப்புப் பரவிக் கொண்டிருக்கவும் செய்தது. மேற்குக் கடற்கரையோரங்களி லுள்ள ஒரு சில மலேயர்கள் சுகர்ணோவோடு சேரவும் அவர்களை யெல்லாம் அதிகாரிகள் தவருது கைது செய்தனர். அதற்கு மாருகச் சீனர்கள் மலேசியாவிலுள்ள தங்கள் வீடுகளில் காணப்படும் சிறு பிரச்சினைகளை மறந்து மலேயர்கள் பக்கத்திலிருந்துகொண்டு போரிட்டனர்.

மலேசியாவின் தொடக்க விழா தேதி உண்மையிலேயே 1963ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாளெனக் குறிக்கப் பட்டு ஒரு சில வாரங்களுக்கு ஐக்கிய நாடுகளின் சபையின் முடிவை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்தை முன்னிட்டுத் தள்ளி வைக்கப் பட்டது. கடைசியாக ஐக்கிய குழு மலேசியாவை உருவாக்கும் கொள்கைக்கான ஒப்புதலை அறிவித்தது. அந்த ஆண்டிலே செப்டம்பர் மாதம் மலேசியாவோடு சிங்கப்பூர், சராவக், வடக்கு போர்னியோ முதலான பகுதிகள் வழக்கம் போல இணைவதற்கான நிலை ஏற்பட்டது.

ஆனல், 1963ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் நடைபெற்ற மலேசியாவின் கொண்டாட்டங்கள், 1957ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள் நடைபெறும் மலேயாவின் மெர்டேகா விழாக்களைப்போலக் கோலாகலமும் குதூகலமும் நிறைந்தன அல்ல. மேலும் இரண்டு ஆண்டுகளாக உள்ளிலும் வெளியிலும் இருக்கும் அதனுடைய எதிரிகளால் எப்பொழுது வெடிவைத்துத் தகர்க்கப்படப் போகிறதோ என்று மலேசியா பீதியோடு இருந்தது.

இந்தோனேசியாவின் போராட்டத்துக்கிடையே மலேசியா பிறந்தது. அது மலேசியாவுக்கு எதிராக இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கும் மனிதனுல்தான் தப்பிப் பிழைத்தது. அந்தப் போராட்டத்தில் மலேசியாவாக எதுவும் செய்யவில்லை.

9. "கான்ஃபிரண்டாசி"

1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நான்காம் நாள் மலேசியாவுக் கெதிராக இந்தோனேசியா முன்னறிவிப்பின்றி யுத்தத்தைத் தொடங்கியது. புருனெயின் புரட்சித் தலைவன் அஸஹரிக்கும் (Azahari) அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினருக்கும் "காட்டு யுத்தம்" தொடங்கி 1962ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் முடிவுற்றது. இந்தோனேசியா மலேசியாவுக்கு எதிரான தன்னுடைய "கான்ஃபிரண்டாசி"யை, அது யுத்தத்தை அறிவிப்பதற்கு முன்னுலேயே தொடங்கிவிட்டது.

பெரிய வெள்ளிக்கிழமை அன்று இரவு ஜாகர்தாவிலிருந்து ஆயுதங்கள் தாங்கிய "தொண்டர்கள்" (Volunteers) போர்னியோ தீவுகளின் எல்லைப்புறத்தைத் தாண்டி யாருமறியாது கடந்து சென்று ஒரு எல்லைப்புறக் காவல் நிலையத்தின்மீது திடீர்த் தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினர். எல்லைப் புறக் காவல் நிலையத்தின் வழியாகச் சென்று எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக இல்லாதவர்களைச் சுட்டு வீழ்த்தினுர்கள். அதன் பிறகு மலேசியாவுக்கு எதிராக ஆகாயம், கடல், தரை ஆகியவைகளிலெல்லாம் "கான்ஃபிரண்டாசி"யைத் தொடங்கியது.

எல்லாவிடங்களிலும், மலேசியாவை 1963ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களுக்குள் மலேசியாவை நசுக்க வேண்டும் என்றும் தன்னுல் திரும்பத் திரும்ப சொல்லும் வெஞ்சின மொழியின் செயலை அதிகமான செலவு தரக்கூடியதொன்ருகச் சுகர்னே கருதினுர். பிரிட்டிஷ் கூர்க்கா (Gurkha) படையினர்கள் சண்டையில் கலந்துகொண்டவர்களில் தங்கள் பகுதிகளில் உள்ள ஒருவர்க்கு மற்ரெரு பகுதியில் உள்ள ஒருவர் வீதம் நான்கு இந்தோனேசியர்களைக் கொன்றனர்.

"கான்ஃபிரண்டாசி" பல்வேறு வடிவங்களையும் எடுத்தன. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் பிரதிநிதி தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்த பிறகு, கோலாலம்பூரில் மலேசியா

வின் பிறப்பை ஒட்டி நிகழ்ந்த விழாக்களின்போது, சுகர்ணே பிடிவாதமாக இருந்தார். ஜாகர்தாவிலுள்ள மலேசியாவின் தூதரகத்தை வெளியேற்றவும், சராவக்கிலும், சபாவிலும் பல எல்லைப்புற முற்றுகைகளைத் தொடர்ந்து நடத்தவும், இதற்கும் ஒரு படி மேலாகவே சென்று, மலேசியாவோடு இணைப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்தார். கடைசியாக, சுகர்ணேவின் தூதரான மேஜர் ஜெனரல் திசாதி குசுமோவையும் (Major-General Djatikusumo) அவருடைய ஒற்றர் கூட்டத்தையும் கண்டு பிடித்ததும் இந்தோனேசியாவோடு மலேசியா கொண்டிருந்த அரசியல் தொடர்புகளை முறித்துக் கொள்ள மலேசியா உத்தரவிட்டது.

இந்த இடைக்காலத்தே மலேசியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே யுத்தம் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருப்பது போன்றும், ஜனாதிபதி சுகர்ணே அமைதியை உருவாக்குபவர் போன்றும் உலகம் எங்கும் சென்று மலேசியாவோடு சமாதானத்தை நாடுவதாகச் சொன்னர். பாங்காக் (Bangkok), மணிலா, டோக்கியோ, பெனும்பென் (Pnom–penh) முதலான இடங்களில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனல், அந்த எல்லா அமைதி காக்கும் முயற்சிகள் எல்லாம் சுகர்ணேவை அமைதியையும் நல்லெண்ணத்தையும் கொண்டவர் என்ற ஒரே ஒரு பயனுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டது. மேலும் இந்த அமைதிகாக்கும் நல்லெண்ண மனிதர் செய்தது எல்லாம் மலேசியாவுக்கு எதிரான சண்டையில் ஜோகோர் மாநிலத்தில் உள்ள போன்டியன் (Pontian), லுபிஸ் (Lubis) போன்ற தொடர்பு இல்லாத இடங்களிலும், சிங்கப்பூருக்கு இன்னும் தெற்கிலும், மலேயத் தீபகற்பத்தின் வடக்குப் பகுதியான கோடா திங்கி (Kota Tingi)யிலும் தாக்குதலை நடத்தினர்.

சுகர்ணே சிங்கப்பூரில் இனக் கலவரம் என்னுமொரு கலவரத்தை உண்டுபண்ணினர். பிரிட்டிஷ் சோஷலிஸ்டு கட்சியின் ஆதரவுடனும் தீவிலுள்ள பொதுவுடைமைக் கட்சியினர்களுடனும் மலேசியாவுக்கான நேரத்திலும், இது உண்மையிலே இந்தோனேசியாவின் சூழ்ச்சியின் ஒரு பகுதியாகும். இந்தோனேசியாவின் பிரதிநிதிகள் பெரியதொர் அளவிலே புரட்சியை

ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்தார்கள். அவர்கள் துண்டுப் பிரசுரங்களை வீடுகளில் வழங்கவும், வீடுவீடாக ஆட்களை அனுப்பி அரசாங்க எதிர்ப்பு அணிக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். பதினுன்கு பேர் மரணம் அடைந்தவுடன் ஏறக் குறைய ஐம்பது பேர்கள் காயமடையவும் ஏற்பட்ட இனக் கலகத்துக்குப் பிறகு, பாதுகாப்புப் படையின் அதிகாரிகள் ஒரு முறை இந்தத் திட்டத்தை நொருக்கவும், சிங்கப்பூரில் உள்ள இன்னல் விளைவிப்போர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைக்கவும் செய்தார்கள். ஆனாலும் சிங்கப்பூரில் உள்ள இந்த இனக்கலகத்தின் பின்னணியில் காணப்பட்ட கடும்பகை குறையச் சிறிது காலதாமதமாகியது.

இருந்தபோதிலும், கடல்வழியாகவும் தரைவழியாகவும் ஆகாயத்திலிருந்து வரும் இந்தோனேசியாவின் தாக்குதல்களுக்கு எதிராக மலேசியா தன்னைத்தானே பெரியதொரு கடுமையான ஆயுதம் தாங்கிய இயக்கமாக ஆக்கிக்கொண்டது. சீக்கிரத்தில் மலேசியாவின் பிரகடனத்துக்குப் பிறகு மோதல், இந்தோனேசியாவின் முன்னறிவிப்பு இல்லாத யுத்தத்தில் தீ பரவுதற்கான உண்மையான நடவடிக்கைகளுக்கிடையே சீக்கிரத்தில் மலேசியா பிரகடனப்படுத்தப்படவே, பிரிட்டனும், காமன்வெல்த் நாட்டைச் சேர்ந்த சிறுநாட்டை எல்லாவிதத்திலும் பாதுகாக்கத் தயாராய் இருப்பது தெளிவாகத் தெரிந்தவுடன் போர்முனை கடுமையாகியது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் மலேசியா இந்தோனேசியாவிற்கு இடையே ஏற்பட்ட தகராறை எடுத்துச் சொல்ல, இந்தோனேசியாவின் எதற்கும் அடங்காத நடத்தையானது புது வருடப் பிறப்பன்று காகங்கள் கரைவதற்கு முன்னும் மலேசியாவை நசுக்கி விடுவோம் என்றும் சுகர்னோவின் பேச்சிலே காணப்பட்ட குறிப்பின் மூலம் விளங்க, ஆபத்தான நிலை ஏற்பட்டது. புதியதாகச் சேர்க்கப்பட்ட படையின் முதல் தொகுதியும், போன் படையின் (Bhone Army) முதன்மையான விமான எதிர்ப்பு அணியும், மலேயக் கடற்கரையோரங்களில் இன்னும் அதிகமாகக் கொரில்லாப் படையினர்களும் வந்திறங்க, இந்தோனேசி

யாவின் பராசூட் படையினர்களும் அதிக அளவில் ஆகாய வழியாக ஆபத்தான நிலைமைக்கு இடையே வந்திறங்கினார்கள்.

ஜோகோர் மாநிலத்தின் பெரும் பகுதிகளிலும் வடக்குச் சிங்கப்பூரிலும், இந்தோனேசியாவின் கொரில்லாப் படையினர் களையும் நாசகாரக் கும்பல்களையும் விரட்டுவதற்கான இராணுவ நடவடிக்கைகளினால் அவசர நிலை ஏற்பட்டது. இந்தோனேசியாவின் ஒற்றர்கள் வடக்கில் உள்ள தாய்லாந்தின் எல்லைப்புறப் பகுதிக்குப் பக்கத்திலுள்ள தங்கள் மறைவிடங் களில் வாழும் பொதுவுடைமைவாதிகளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். சிங்கப்பூர்த் தீவைச் சுற்றி பலமிக்க கடற்படையின் பல படைப் பிரிவுகள் இருந்த போதிலும், மலேசியாவுக்கு எதிரானதொரு இந்த அழிவுப் போரிலே அப் பிரிவுகள் அனைத்தையும் சுகர்னோ கொண்டு வருவார் என்பதாகப் பொதுவானதொரு எண்ணமிருந்தது. இந்தோனேசியாவின் உடனடி இலக்கு இரண்டுவிதமாக இருந்தது. மலேசியாவில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவும், மலேசியா வில் பொம்மை அரசாட்சியை ஏற்படுத்துவதற்காக மலேசியா வின் பகுதிகளில் காலூன்றுவதற்கான வழிகளில் வெற்றி யடையவும் முயற்சி செய்வதே அதனுடைய இலக்காக இருந்தது.

பிரிட்டனின் தரைப்படையினரின் வருகையும் மலேசியாவின் பாராளுமன்றத்தில் "பிரிட்டனின் நியாய வாக்குறுதிகள்" பற்றியும், இது பற்றிய கேலியும் ஒத்திருக்கவே, பிரிட்டனுடன் ஏற்படுத்திய பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு நம்பிக்கை வைக்கக் கூடாதெனவும் மலேசியப் பாராளுமன்ற எதிர்கட்சி உறுப்பினர் களினால் எச்சரிக்கை செய்யப்பட்டது. சுகர்னோ தான் கொடுத்த ஜனவரி மாத முதல் தேதி கெடுவிற்குள் மலேசியாவை நொறுக்கி விடவேண்டும் என்று பெரிய அளவில் நேரடி யுத்தத்தை நடத்தத் தீர்மானித்திருந்ததால், பிரிட்டனிலும் மலேசியாவிலும் உள்ள அரசியல் பார்வையாளர்கள், பிரிட்டன் மேலும் புதிதாகச் சேர்க்கப்பட்ட படையை எப்படியாவது அனுப்பும் என்று அமைதி கொண்டார்கள்.

அதே நேரத்தில் பதினாறாயிரம் அதிகாரிகளும், படைவீரர்களும்

இருபத்திமூவாயிரம் காவல் துறையினரும், துணைப்படையினர்களுமாக இதில் இருந்தார்கள் என மலேசியாவின் படை எண்ணிக்கை மதிப்பிடப் பெற்றது. இந்தோனேசியாவின் " கான்ஃபிரண்டாசி "க்குக் கொஞ்சம் பின்னல் பயிற்சி பெருத மக்களைக் கொண்ட காவற்படை அமைக்கப்பட்டது. கையிலே குறுந்தடியினை மட்டும் ஆயுதமாகக் கொண்டு, சந்தேகப்படத் தக்கவர்கள் எனத் தெரிந்தால் அவர்களைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும் என்பதே அவர்களுடைய முக்கிய வேலையாக இருந்தது. இந்தக் காவற் படையினர்களுக்கு வெடி ஆயுதங்களைக் கொடுக்கவேண்டுமெனும் திட்டம் ஒன்று இருந்தது. ஆனல், ஆயுதங்களை வழங்குவதற்கும் அவற்றில் பயிற்சி பெறுவதற்கும் காலம் அதிகமாவதுடன் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாகவே பணம் செலவழியும் என்று கருதவே இத்திட்டம் கைவிடப்பட்டது.

மலேசியாவிலுள்ள படைகளில் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த படைகளில் அவ்வளவு கணிசமான அளவிற்குப் படை வீரர்கள் இல்லாதபடியால் ஏறக்குறைய 8,000 பேர்கள்தான் இருந்தார்கள். அதில் கூர்க்காவினர்களும் நியூசிலாந்து வீரர்களும் துணிந்து நின்று இந்தோனேசியக் கொரில்லாக்களை எதிர்த்துப் போரிட்டனர். மேலும் புருநெய் பாதுகாக்கப்படத்தக்கதோர் இடமொன்றும், அதிலிருந்து கிளர்ச்சியானது பக்கத்துப் பகுதிகளுக்கும் பரவிவிடும் என்றும் பிரிட்டன் அதன்மீது ஒரு கண் வைத்திருந்தது.

மேலும் சில ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் படைகள், இந்தோனேசிய நிலப்பகுதியுடன் சேர்ந்துள்ள இரண்டிற்கும் பொதுவான நிலப் பகுதிகளைக் கொண்ட சராவக்கிலும், சபாவிலும் இயங்கிக்கொண்டிருந்தன.

இதற்கு மாருக ஐந்து லட்சத்திற்குக் குறையாக வீரர்களை எப்பொழுதும் தயாராக வைத்திருக்கும் படையையும், குறைந்தது 1,30,000 ஆட்களைக் கொண்ட உதவிப் படையையும், அதிகாரிகளையும், கடற்படையினர்களையும் சேர்ந்த 28,000 ஆட்களையும், பல்வேறு வகையான 183 கப்பல்களையும் உடைய கடற்படையையும், 110 ரஷ்யன் மிக் விமானங்களையும், 26 TU--16

குண்டு வீச்சு விமானங்களையும், 30,000 வீரர்களைக் கொண்டிருக்கும் விமானப் படையையும் இந்தோனேசியா வைத்திருந்தது. இதற்குமேலும் இதை ஒரு பெரிய யுத்தம் என இந்தோனேசியா அறிவித்தது. இந்தோனேசியா சிறு அளவில் கொரில்லாப் படைகளையும் உதவிப் படையினர்களையும் அனுப்பி, சிதறியிருக்கும் பிரிட்டிஷ், மலேயாவின் படையினர்களைக் கைது செய்ய முடிந்தது. நன்கு பயிற்சியளிக்கப்பெற்ற ஐந்தாம் படையினர்களின் உதவிகொண்டு மலேசியர்களைத் திகைப்பிலாழ்த்துவதற்கான ஒரு வசதியும் இந்தோனேசியாவுக்கு இருந்தது.

உண்மையிலேயே, இந்தோனேசியாவில் நன்கு பயிற்சியும் அனுபவமும் பெற்ற இந்த வலிமை வாய்ந்த ஐந்தாம் படையினர்களைப்பற்றியே பெரும் அளவில் மலேசியர்களின் கவலையாக இருந்தது. இந்தப் படையில், அதிக அளவில் மூவாயிரத்துக்கும் நாலாயிரத்துக்கும் இடைப்பட்டதொரு அளவில் வீரர்கள் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டது. நேரடி யுத்தமாக இருந்தால் மலேசியா அதனை எப்படி நடத்துவது என்று அறிந்திருக்கும். ஆனால் இந்தோனேசியா, மலேசியாவை அழிப்பதற்கான ஒரு நாளைக் குறித்துக் "கான்பிரண்டாசி" மூலமாக ஒரு யுத்தத்துக்கு வருவதால், இயன்ற வழிகளில் அதை முறியடிப்பதற்கான தற்காப்பு நடவடிக்கைகள் எடுப்பதைத் தவிர, மலேசியாவின் தலைவர்களுக்கு அதற்கு மேல் அதைப்பற்றி நினைக்க முடியவில்லை.

இவ்வாறு மலேசியா செய்ததே சிறப்பாக இருந்தது. சுகர்னோவின் பெரும் திட்டங்கள் அந்த நேரத்தில் மலேசியாவைப் பொறுத்த வரையில் தாம் எவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள முடியுமோ அவ்வளவு கடுமையாக நடந்துகொண்டதனாலும் அதனுடன் அவருடைய சொந்த நாட்டிலே அவருடைய வீழ்ச்சியைத் தொடர்ந்து வந்த பொதுவுடைமைவாதிகளால் உரிய காலத்தில் நடத்தாத உரிமை மிக்க போராட்டத்தாலும், அதன் பின் விளைவாக, 1967ஆம் ஆண்டின் கடைசியில் அவருடைய பதவியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டதாலும் போதுமான அளவுக்கு வெற்றியடைய முடியவில்லை.

அஸஹரிப் புரட்சியை ஆரம்பத்திலிருந்து 1962ஆம் ஆண்டின்

முடிவில் ஏற்பட்ட போராட்டத்தின் முடிவுவரைக்கும் மலேசியா வுக்குச் சுகர்ணே அதிக அளவில் நாசத்தை உண்டு பண்ணினர். யுத்தத்தின் பெயரால் நாடுமுழுவதிலும் உள்ள மக்களும், மலேயா, சிங்கப்பூர், போர்னியோ முதலிய பகுதிகளிலுள்ளவர்கள் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்தனர். உண்மையிலேயே ஓர் ஆக்கிரமிப்பாளரை எதிர்ப்பதில் மலேசியாவிலுள்ள சீனர்களும் இந்தியர்களும், மலேயர்களோடு தோளோடு தோளாக நின்று சண்டை செய்ய நாட்டிலுள்ள ஒரு சில மலேயர்கள் வெளிப்படை யாக இந்தோனேசியர்களின் பக்கம் சேர்ந்தனர்.

மலேசியாவுக்கு எதிராக ஏன் இந்தப் பெருஞ்செலவைக் கொடுக்கும் சண்டையைச் சுகர்ணே துவக்கினர்? இரண்டாம் உலக யுத்தம் முடிவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னேயே 1945 ஆம் ஆண்டு ஜூலையில் சுகர்ணே ஆரம்பித்த நாடு விரிவுபடுத்தும் கொள்கைகளில் காணப்பட்ட குறிப்பே இதற்குப் பதிலாகும். அதே நேரத்தில் இந்தோனேசியாவின் சுதந்திரத்திற்கான ஆயத் தங்களைப்பற்றி ஆராய்வதற்கான குழு ஒன்றின் கூட்டத்தில் சுகர்ணே இதைச் சொன்னர்.


"நான் ஒருபொழுதும் டச்சுக்காரர்களால் ஆளப்பட்ட பகுதி களைக் கொண்டதுதான் இந்தோனேசியா என்று சொல்லவில்லை. மலேயாவையும், பாபுயாவையும் (Papua) மட்டுமல்லாமல், பிலிப்பைன்ஸையும் இணைத்த ஒரு முழு இந்தோனேசியாவை (Pan-Indonesia) உருவாக்க வேண்டும் என்று என் வாழ்க்கையின் லட்சியக்கனவாக உண்மையிலேயே ஒரு காலத்தில் கொண்டிருந் தேன். இப்பொழுது நான் நினைக்க வேண்டியதெல்லாம் இந்தோ னேசியரின் எதிர்காலத்தைப்பற்றியும் அதன் நிலப்பரப்பை விரிவுபடுத்திக் கொள்வதைப்பற்றியும்தான். ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயும், பசிபிக் பெருங்கடலுக்கும் இந்துமகா சமுத்திரத்தின் இடையேயும் அமைந்திருக்கின்ற இந்தத் தீவுகளைப் பார்த்தபோது இவைகள் இணைந்து ஒரே நாடாக ஆவதற்கு இருக்கின்றன என்று உணர்ந்தேன்.

" அந்தக் காரணத்திற்காக, இந்தக் கூட்டத்திலே, யாரெல்லாம் சுதந்திர இந்தோனேசியா, மலேயா, பாபியா முதலிய பகுதிகள் வரை விரிந்து இருக்க வேண்டும் என்று விரும்புகிறுர்களோ

அவர்களுக்கெல்லாம் நான் ஆதரவு தருகிறேன். நாம் டச்சுக்காரர் களின் வழி வந்தவர்களல்லர். மலேசியா ஏற்கெனவே ஜப்பானிய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. அதைப்போலவே பாபுயா, வடக்கு போர்னியோ, திமோர் (Timor) போன்ற பகுதிகளும் அந்நியரின் கையில் இருக்கின்றன. நாம் இதற்காக பிரிட்டிஷா ரோடும் அல்லது டச்சுக்காரரோடும் ஏகாதிபத்திய ஜப்பான் அரசோடும் பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டியது இல்லை. நாம் இந்தோனேசியாவின் எதிர்காலம் எப்படி உருவாகும் என் பதைத் தீர்மானிக்கலாம்."

இந்தோனேசியாவைத் திரும்பவும் கைப்பற்ற வேண்டும் என்று விரும்பிய டச்சுப் படையினர்கள் தங்கள் முயற்சியைக் கைவிடும் வரைக்கும் இந்தோனேசியர்கள் நீண்ட காலமாகக் கடுமையான தொரு யுத்தத்தினில் ஈடுபட்டு இருந்தார்கள். டச்சுக்காரர்கள் ஆட்சியின்போது என்ன அனுபவித்தார்களோ அதைப்போன்றே, ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது ஏற்பட்ட சோதனைகளாலும் நாசத்தாலும் அமைந்த இன்னலைக் காட்டிலும் கடைசியாக வந்த ஜனாதிபதி சுகர்னோவின் ஆட்சியின்கீழ் அடைந்த துன்பம் அதிக மாகவே இருந்தது. ஆனால் அவருடைய எல்லாவிதமான பொய்ப் பிரயோகங்களுக்கு இடையேயும் பரந்த இந்தோனேசியாவை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஒருபொழுதும் கைவிட வில்லை.


1945ஆம் ஆண்டு, ஜனாதிபதி சுகர்னோ தன்னுடைய விரிவுபடுத் தும் ஆசையைப் பற்றி வாதாடும்போது, சீனாவின் மாசேதுங்கு பதவிக்கு வரவில்லை. 1955ஆம் ஆண்டில் அந்தச் சமயத்தில் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டின் (Bandung Conference) போது, ஆசியாவின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுகின்ற முன்னணி நாடுகளில் தானும் ஒன்று எனத் தன்னை நிலைநாட்டிக் கொண்டது இந்தோனேசியா. பாண்டுங் மாநாட்டுக்குப் பிறகு சீனாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே ஏற்பட்டதொரு நம்பிக்கை, இந்தோனேசியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு விவகா ரங்களில் ஒரு திருப்புமையத்துக்கு அடையாளமாக இருந்தது. இந்தோனேசியாவில் உள்ள சிறுபான்மையினர்களான சீனர்களின் செல்வாக்கைத் தற்காலிகமாக மதிக்காமல் இருந்தாலும், வெளிப்




V. 12 ஆண்டு கால அவசர நிலையின் போது போரிட்டு உயிர்நீத்த வீரர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட நிழலுருவத் தேசிய நினைவுச் சின்னம்.



VI. பெனுங்கிலுள்ள "கேக் லோக் சி" ("Hek Lok Si") என்னும் புத்த கோயில் அல்லது தெய்வீக வாழ்த்துக் கோயிலானது, சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த இடமாகும்.



VII. கோலாலம்பூரின் மாநிலக் கூட்டாட்சி அரசாங்க அலுவலகங்களுக் கிடையே நடுநாயகமாகச் செலாங்கோர் மாநிலத் தலைமைச் செயலகம்.



VIII. பாராளுமன்றம்—பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகமும், மேல் சபை உறுப்பினர்களின் அலுவலகமும், 17 மாடிக் கோபுரப் பகுதியில் அமைந்திருக்க, அதே நேரத்தில் பக்கத்துக் கட்டிடத்தில் திவான் ரக்யாத்தும் (House of Representatives—மக்கள் சபை) திவான் நெகரா (Senate—மேல் சபை) வும் இருக்கின்றன.

பார்வைக்குச் செஞ்சீனுவோடு நெருங்கியிருப்பதாகத் தோன்றும். உள்நாட்டு அரங்கிலே "வழிகாட்டும் ஜனநாயகம்" என்று அழைக்கப்படும் அவரது சொந்த அரசியலமைப்பு இந்தோனேசியாவுக்குப் பொருத்தமில்லாதது என அவர் எண்ணியது விடுதலை ஜனநாயகத்திற்கு எதிர்ப்புப் போலிருந்தது.

சோவியத் யூனியன், சீனு, மற்றும் தன்னோடு இணைந்த மேற்கு இரியன் முதலான நாடுகளிடமிருந்து தன்னுடைய சாமர்த்திய மான பொய்யினுலும் புரட்டினுலும், ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு தனக்கென ஆயுதப்படைகளைத் தயாரித்துக்கொண்ட பிறகு சுகர்னேவின் பார்வை மலேசியாவின் பக்கம் திரும்பியது. பொதுவுடைமை ஒற்றர்கள் மூலமாகவும், இந்தோனேசியாவின் பொதுவுடைமைக் கட்சியின் அறிக்கை மூலமாகவும் ஆதரவு பெற்றிருந்த புருநெய் புரட்சிகூட அவரால் நசுக்கப்பட்டது. தேசீயவாதியின் நோக்கங்கள் எனப்படும் கொள்கைகளுக்கும் பொதுவுடைமைத் தத்துவங்களுக்கும், வளர்ந்து வரும் உருவ ஒற்றுமை இது என உறுதிப்பட்டது. ஆனுல் நடந்தது என்னவெனில் சுகர்னே மலேசியாவின் புதிய குடியேற்றத் திட்டத்திற்கு எதிராக (Neo-colonialist Project) இந்தோனேசியாவின் பொதுவுடைமைக் கட்சி செய்து வருகின்ற பிரசாரத்தை கடன் வாங்கிக்கொண்டு தானே மலேசியாவின் எல்லைப்புறப் பாதுகாப்பு நிலையங்களைத் தாக்கத் தொடங்கினுர்.

சுகர்னே தமது உருட்டுப் புரட்டினுல் பதவிக்கு வந்தார் என்பதும் அவருடைய ஆயுதப்படைகள் நிகழ்த்திய யுத்தத்தின் மூலம் பெரும் தீங்கு விளையும் என நட்புறவு நாடுகளிடையே முன்னெச்சரிக்கையூட்டியது என்பதையும் பார்ப்பதற்கு வியப்பாக இருக்கலாம். அவருடைய வெற்றி மேற்கு இரியனிலிருந்து வெளியேற வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு முன்பாகவே டச்சுக்காரர்கள் வெளியேறியதினுல் அவர் அடைந்த அரசியல் வெற்றிகளுக்கு இணையாக அவருடைய பதவியின் வெற்றியிருந்தது.

சுகர்னேவின் வெற்றி எளிமையானது; ஆனுல் மிகவும் குறிப்பிடத்தக்கது. அவருடைய விரிவுபடுத்தும் திட்டங்களை விளக்கத் தொடங்கியதும், நட்புறவு அரசாங்கங்களும், பொது

வுடைமை அல்லாத செய்தி நிறுவனங்களும்கூட விவாதத்துக்கு உரியது என்னும் பெயரால் மகாநாட்டு மேடையிலேயே தீர்மானத்திற்கு விடப்பட்டது. ஜனதிபதி சுகர்னே அங்கே இருந்து எல்லோரையும், மொத்தத்தில் தான் விரும்புவது "ஓர் அரசியல் தீர்மானமே" என்னும் உறுதிமொழியின்மூலம் எல்லோரையும் திருப்திபடுத்தவேண்டியிருந்தது. திறமையாக, ஜாகர்தா பிரசாரத்தின் வழியாக இதை நன்குணர்ந்த பல மக்கள் மலேசியாவுக்கு எதிரான இந்தோனேசியாவின் ஆக்கிரமிப்பை "மலேசியாவின் விவாதம்" என விளக்கத் தொடங்கினர்கள்.

ஆனல் உண்மையிலே, எல்லோரும் பொதுவாக அறிந்த வார்த்தையிலே சொல்லப்போனல், இந்தோனேசியாவுக்கும் மலேயாவுக்கும் இடையே எந்தவிதமானதொரு விவாதமும் ஒருபொழுதும் இருந்ததில்லை. இந்தோனேசியாவுக்கும் மலேசியாவிற்கும் இடையே நிகழ்ந்த விவாதமெல்லாம் வேகமாக வளர்ந்து வருகின்ற மலேசியாவின் வளர்ச்சியைப் பற்றிய விவாதம்தான். இதன் காரணமாகவேதான், சுகர்னே, இந்தோனேசியா, சுதந்திர மலேயா, சிங்கப்பூர், சபா, சராவக் போன்றவைகள் உருவாவதற்கு முழு ஆதரவையும் கொடுக்கும் என அறிவித்தார். ஆனல் இருபதாம் நூற்றுண்டின் தன்னலமும், குடியேற்ற ஏகாதிபத்தியமும் கூறும் கதையைப் பிரித்தாளும் கொள்கைக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். சுகர்னேவின் அறிக்கைக்குப் பின்னல் உள்ள கருத்தே மலேசியாவை அழிக்க வேண்டுமென்பதாகும். அது பல பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்; பிறகு ஜனதிபதி சுகர்னேவின்கீழ் இருக்கும் ஆயிரத்துநூறு லட்சம் மக்கள் கொண்ட பக்கத்து நாட்டுடன் இணைய வேண்டும் என்பதாகும்.

மலேசியாவின்மீது இந்தோனேசியாவின் தாக்குதலானது உண்மையிலேயே அரசியல், ராணுவம், பொருளாதாரம், அரசியல், உளவியல் என்னும் பல்வேறு துறைகளில் நிகழ்த்தப்பட்டதொரு யுத்தமாகும். இப்படித் தாக்கும்போது மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளுடன் மறைத்துக்கொள்ள யுத்தத்தின் வெளிப்படையான தன்மையைச் சீக்கிரத்தில் மாற்றி

யமைக்கப்பட்டது. இவ்விதமாக மலேசியாவைத் தாக்க வேண்டுமெனப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நூற்றுக் கணக்கான சீனர்களைக் கொண்டு இந்தோனேசியாவின் விளையாட்டை விளையாடுவதற்கு நிறுத்திவைத்ததும், அவருடைய உடனடித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மலேசியாவின் சீனர்களைப் பயன்படுத்திக்கொள்வதில் அவருக்கு எவ்விதமான கருத்துக்களும் இல்லையென்பதையும் சேர்த்துச் சீனாவின் எல்லா விதமான உதவிகளையும் பெற்றுக்கொண்டார்.

ஜாகர்தாவின் அரசியல் வீரர்கள், மலேசியாவின் பன்முகச் சமுதாயத்தைச் சுரண்டுவோர்களுக்குரியதொரு "உள் முரண்பாடு" எனக் கருதினர். இவ்விதமாகச் சிங்கப்பூரில் நடைபெற்ற குழப்பங்களும் அதைப்போலவே பெனாங் பக்கத்திலுள்ள புகித் மேர்தாஜம் (Bukit Mertajam) பகுதியிலும் நடைபெற்ற குழப்பங்கள் இந்தோனேசியாவில் தங்களுடைய பிரசாரங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்தப்பட்டன. சிங்கப்பூர் நிகழ்ச்சிகளுக்காகச் சீனர்கள் தூற்றப்பட்டபோது அதே வானொலி ஒலிபரப்புச் செய்தியில் மலேயாவின் தலைவர்கள் சிங்கப்பூரில் இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டதற்காகத் தூற்றப்பட்டார்கள்.

ஜனாதிபதி சுகர்னோ சிங்கப்பூரில் வசிக்கும் சீனர்களை அழைத்துச் சிங்கப்பூரை எதிர்க்க வேண்டும் என்று அவர் சொல்வதன் காரணம் சீனர்கள் அடிமையாக்கப்படுவார்கள் என்பதைத் தடுக்கவேண்டும் என்னும் நோக்கத்திற்காகவேதான் என்று ஒரு விசேஷ ஒலிபரப்பின்போது சொன்னதே, இந்தப் போராட்ட நேரங்களில், இந்தப் பிரசாரங்களின்மூலம் அடைந்ததொரு முக்கியப் பயனுமாகும். பீகிங்குடன் சுகர்னோ கொண்ட நல்லெண்ணத் தொடர்பின்போதும், மலேசியாவில் உள்ள சீனப் பொதுவுடைமை இயக்கத்தோடு அவர் இணைந்திருந்தபோதும், இது குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாகக் காட்சியளித்தது. ஆனால் சுகர்னோவால் பரப்பப்பட்ட இந்த எதிர்ப்புப் பிரசாரங்கள்மூலம் எந்தவொரு மாற்றத்தை உண்டாக்கியிருக்குமா அல்லது இல்லையா என்பதைவிட மலேசியா கூட்டாட்சியெனத் தன்னைத்தானே அறிவித்த இரண்டாண்டு

களுக்குப் பிறகு, சீனர்கள் அதிகமாக இருக்கும் சிங்கப்பூர், மலேயாக் கூட்டாட்சியிலிருந்து வெளியேறுகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

மலேசியாவில் குழப்பம் விளைந்ததைப் போலவே இந்தோனேசியாவிலும் குழப்பம் மிகுந்திருந்தது. மலேசியாவின் பிரச்சினை சிங்கப்பூரோடு ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் இந்தோனேசியாவில் பிரச்சினைகள் அதிக அளவில் பரந்த பயனையுடையதும், இயற்கையாகவும், அது வெடிப்பதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும் என்றும் சொல்லப்பட்டது. சுகர்னோவினால் இரண்டாண்டுக் காலமாக நடத்தப்பட்ட கடுமையான சண்டையினாலும், கடும் பிரசாரத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், 1965ஆம் ஆண்டின் புது வருடப் பிறப்பிற்குப் பிறகு மலேசியாவிற்கு எதிரான போராட்டம் இல்லாமல் இருந்தாலும் அதன் பின்னரும் மலேசியா உருவாகி வந்தது.

10. இரு பிரதம மந்திரிகள்

1963ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்களில் வெளியிட்ட மலேசியப் பிரகடனத்தைத் தொடர்ந்து வந்த இரண்டாண்டுகள் நாட்டிற்குக் கடினமான ஆண்டுகளே. ஒரு பக்கத்தே, மூர்க்காவேசம் நிறைந்த எதிரிகளின் வெளித்தாக்குதலான இந்தோனேசியர்களின் வெறியோடும் "கான்ஃபிரண்டாசி"யும், மறுபக்கத்தே மலேசியாவின் பகுதியாகிவிட்ட மலேயத் தீபகற்பத்தின் முனையிலுள்ள பெரிய துறைமுக நகரமான சிங்கப்பூரிலிருந்து அதிக அளவிற்கும், மலேயாவின் உள்ளிருந்தும் கவனிக்கத்தக்க அளவுக்கு கருத்துவேற்றுமையும் நிறைந்திருந்தன. மூன்றாண்டுக் காலப் போராட்டத்தின்போது, சுகர்னோ இதற்கு என்ன தீமை செய்திருக்கமுடியுமோ அதற்குமேலும் ஒரு நாடு என்ற அளவில் இது அதிகமான அளவில் மலேசியாவிற்கு அவமானமாகப் பட்டது.

போர்னியோவிலுள்ள இரு மாநிலங்களுக்குத் தங்களுக்குரித்தான பிரச்சினைகள் இருந்தன. அவைகள் பொருளாதார அளவில் பிற்பட்டதாக இருந்தபடியால் அந்த மாநிலங்களின் மக்களுக்காக மலேசியா அரசாங்கம் விரைவில் ஒரு திட்டத்தின் மூலம் சிறந்ததொரு வசதி செய்துகொடுக்கத் திட்டம் தீட்டியது. போர்னியோ மாநிலங்களான சராவக்கிலும், சபாவிலும் அவர்களுடைய சீனப் பிரச்சினைகூட இருந்தது. அதோடு இணைந்த அரசியல் கட்சிகள் புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்துடன், கோலாலம்பூரில் உள்ள அதனுடைய தலைமைச் செயலகங்களுடனும் சவால்விட்டுக்கொண்டிருந்தன. இதுகூட மத்திய அரசாங்கத்தாரால் திறமையுடன் சமாளிக்கப்பட்டது. இந்த மாநிலங்களின் புதிய தலைவர்களுக்குள்ளே தனிப்பட்ட விரோதங்கள் இருக்கவும், அவைகள் அவர்களுக்குள் நடந்த பேச்சுவார்த்தைகளினாலும், சமாதானத்தின் மூலமாகவும் தீர்த்து வைக்கப்பட்டன. இவ்வெல்லாக் குழப்பங்களும் நடைபெற்றுக்

கொண்டிருக்கும்போது நாடு இந்தோனேசியாவுடன் அறிவிக்காத யுத்தத்திற்கான ஆயத்த நிலையிலே இன்னும் இருந்தது.

இயற்கையாகவே சிங்கப்பூரில் அதனுடைய சீன மக்கள் தொகையின் செல்வாக்கினாலும், அங்கே ஜனாதிபதி சுகர்னோ அம் மக்களின் சிந்தனைக்கு இனச் சாயம் ஏற்றியிருந்தபடியாலும், சீன மலேயா நிகழ்ச்சிகளினால் கிளர்ச்சி அடைந்திருப்பதாலும், முயற்சி சிறிது அதிகமாகவே மேற்கொள்ளப்பட்டது. இதற்கு இரு முக்கியக் காரணங்களைச் சொல்லலாம். தான் தோன்றிய இனத்தைப்பற்றிய கருத்து இல்லாமலும், எல்லோரும் ஒரே வாய்ப்பையும், வசதியையும், பொறுப்புணர்ச்சியையும் எங்கே அனுபவிக்க முடிகிறதோ அங்கே மலேசியனின் மலேயா உருவாகும் என்று கொள்கையளவில் ஐயமும், சிங்கப்பூரின் பிரதம மந்திரியான லீ கியுவான் யூ (Lee Kuan Yew) வின் வியப் பூட்டும் தனிமனித ஆளுகையும் அதற்குரிய காரணங்களாகும்.

மலேசியக் கூட்டாட்சியைச் சேர்ந்த மாநிலங்கள் ஒன்றின் தலைவராக இரண்டாண்டுகள் இருந்த பிறகுகூட லீ கியுவான் யூ சிங்கப்பூரின் பிரதம மந்திரியாகத் தொடர்ந்து இருந்தார். மலேசியா உருவாகியபோது உண்மையிலே அவர் சிங்கப்பூரின் முதன் மந்திரியாகி இருக்கவேண்டும். ஆனால் மலேசியாவில் இரண்டு மந்திரிகள் இருந்தார்கள். கோலாலம்பூரில் இருந்து கொண்டு பதவி வகித்தவரான துங்கு அப்துல் ரகுமான் ஒருவரும், சிங்கப்பூரில் இருந்துகொண்டு பதவி வகித்த லீ கியுவான் யூ மற்றொருவரும் ஆவர். நாட்டின் ஒவ்வொரு குடிகளும் தங்கள் முன்னேற்றத்திற்கான ஒரே விதமான வாய்ப்பு வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக, மலேசியா வின் அரசியல் சட்டத்தில் பல மாற்றங்கள் வேண்டுமென லீ கியுவான் யூ கேட்டார். இதன் நோக்கமே மலேசியாவிலுள்ள அரசாங்க அலுவலகங்களிலும், வேற்றுத்துறைகளிலும், பாது காப்புப் படை அலுவலகங்களிலும், மற்றும் பல துறைகளிலும், மலேயர்களுக்குக் கிடைத்துவந்த சிறப்புச் சலுகைகளை உடனடி யாக நிறுத்தவேண்டும் என்பதே ஆகும்.

அரசியல் அடிப்படையில், கூட்டாட்சியின் மற்றையப் பகுதிகளை விட சிங்கப்பூர் அதிக விழிப்புணர்ச்சியுடையது. பொதுவுடை

மைப் பேரரசின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த (Barisan Socialist Party) பல தன்னலக் கட்சிகளுக்கு இடையே, சிங்கப்பூரின் பதவிக்கு லீ வந்தது ஒரு விந்தையே. ஆனால் உயர்ந்த நிலைக்கு வந்தவுடனேயே தன்னுடைய பதவியை நிலைநாட்டிக்கொள்ள ஆரம்பித்தார். சிங்கப்பூரின் பிரதம மந்திரி என்பதால் அவர் எல்லோரையும்விட மேம்பட்டவர் என்றாலும், மலேசியாவிலுள்ள 45 லட்சத்துக்கும் மேற்பட்ட சீனர்களால் தாம் தலைவராக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தார்.

லி கியுவான் யூ சிங்கப்பூரில் பிறந்தவர். அந்நகரத்தோடு அவருடைய குடும்பத்துக்கு நூற்றாண்டுகளுக்கு மேலான தொடர்பு இருந்தது. அவருடைய கொள்ளுத் தாத்தா ஒரு ஏழை ஹக்கா விவசாயி (Hakka peasant). சிங்கப்பூருக்கு வந்து, சாதாரணமான தொழிலாளியாக வேலை பார்த்தவர். மலாய் மொழி, மூன்று சீன வட்டார மொழிகள், ஆங்கிலம் முதலியவற்றை லீ எளிதாக, நன்றாகப் பேசுவார். அண்மையில் சிங்கப்பூரின் மாநிலத்தின் ஆட்சி மொழிகளுள் ஒன்றென ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்மொழியைப் பேசுவதற்கு முயற்சி செய்து வருகிறார்.

லீ தம்முடைய கல்வியைச் சிறு சீனப்பள்ளியில் தொடங்கினார். பிறகு ஆங்கில மொழிப் பள்ளிக்குச் சென்றார். அவர் தலைசிறந்த ஆராய்ச்சியாளர். ஆகவே கேம்பிரிட்ஜ் சட்டவியல் படிப்பதற்கான உதவித் தொகையைப் பெறுவதில் வெற்றி பெற்றார். கேம்பிரிட்ஜில் நன்றாகப் படித்துச் சிறந்த முறையில் தேறிய மாணவர்கள் வரிசையில் முதலாவதாக வந்து, விருது ஒன்றினைப் பெற்றார். ஜப்பானிய ஆக்கிரமிப்பால் தூர தேசத் தென்கிழக்கு முழுவதும் பெரிய மாற்றத்திற்கு உட்பட்டு இருக்கும்போது ஒரு விடுமுறையின்போது சிங்கப்பூருக்குத் திரும்பி வந்தார். ஜப்பானிய முத்திரை பதிக்கப்பட்ட குடியேற்ற ஆதிக்க நாட்டிற்கு லீ கியுவான் யூ வந்தது அதுதான் முதல் தடவையாகும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, பிரிட்டிஷ் செய்திகளை இடைமறித்து அறிவதற்கான பணியில் ஜப்பானிய அரசாங்கச் செய்தி நிலையத்தில் வேலை செய்ய லீ கியுவான் யூவிற்கு உத்திரவிடப்பட்டது. உலக யுத்தத்திற்குப் பின்னாலும் திரும்பவும் தன்னுடைய படிப்பை முடிப்பதற்காக இங்கிலாந்து சென்றார்.

சிங்கப்பூரிலுள்ள தொழிற்சங்க இயக்கத்தில் நுழைந்து அதன் மூலம் அரசியலில் இறங்கினார். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்ச் சிங்கப்பூர் இருந்த நாட்களில் ஒரு காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சங்கங்களுக்குச் சட்ட ஆலோசகராக இருந்தார். பின் சிங்கப்பூரில் அவர் மக்கள் இயக்கச் சங்கம் (People's Action Party) ஒன்றை அமைத்தார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு மலேயா தன்னை வெளிப்படையாகச் சுதந்திர மாநிலம் என அறிவித்த போது, 1959ஆம் ஆண்டில் சிங்கப்பூர்த் தீவின் முதல் பிரதம மந்திரியானார். சிங்கப்பூர் இன்னும் பாதியளவில்தான் சுதந்திரம் அடைந்திருக்கிறது. லீ கியுவான் யூ சிங்கப்பூர் மலேசியாவினது என்று அறிவித்தபோது 1963ஆம் ஆண்டில் அதற்கு முழுச் சுதந்திரம் வந்தது. அந்த வருடத்தில் நடந்த பொதுத் தேர்தலில், லீயின் பி.ஏ.பி. (PAP) எல்லா எதிர்ப்புக் கட்சிகளையும் மொத்தமாக தோற்கடித்துவிட்டது. வளர்ந்து வரும் துறைமுக நகரத்தின் உயர் தலைவராக ஆனார்.

பென்னர் பிராக்வே (Fenner Brockway) ஒரு முறை லீ கியுவான் யூவைப்பற்றி, “இன்றைய உலகத்தின் அரசியல் வாதிகளுள், தன்னிகரற்ற மனத்திடத்தை உடையவர்களுள் ஒருவர் அவர்” எனப் பாராட்டினார். மலேசியாவின் பாராளுமன்றத்தில் இரண்டாண்டுக் காலம் இருந்தபொழுது, தீவிர ஜனநாயகவாதி, திடமான குடியேற்ற எதிர்ப்பாளர், அரசியலில் ஒரு தெளிந்த எதார்த்தவாதி என்றெல்லாம் பாராட்டப்பட்டார். அவர் தொடங்கிய எந்த ஒரு திட்டத்திலும் இருபது லட்சத்துக்கும் குறையாமல் இருக்கும் சிங்கப்பூர்க்காரர்களுக்கு முழு ஆதரவு அளித்தார். மேலும் மலேசியாவின் அடுத்த பிரதம மந்திரியாவார் என்று மக்களில் பலர் எண்ணினார்கள்.

அது ஒருவேளை சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் இடையே ஏற்பட்ட பெரிய தடையின் காரணமாக இருந்திருக்கலாம். பிரதம மந்திரியான துங்கு அப்துல் ரகுமான் மொத்தத்தில் புதியதொரு சூழலில் உருவானவர். அரசியலில் ஏறக்குறைய 10 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டவர். அந்த நேரத்தில்தான் மலேசியா உருவாகியது. அப்படி உருவாகிய புதிய நாடான மலேசியா ஏறக்குறைய இரண்டாண்டுகளாக வீசிய இந்தோனேசியப் புயலை

எதிர்த்து நின்றது. துங்கு கடின மனம் கொண்டவரல்லர்; அதே நேரத்தில் பதவியிலிருக்கின்ற லீ கியுவான் யூவை விரட்டுகின்ற அளவுக்கு இரக்கமற்றவராக இருந்தார். அவரைச் சுற்றியிருக்கின்ற உண்மையான ஊழியர்களின் கூட்டத்தாலும், அவர்களுடைய ஒத்துழைப்பைத் தான் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளவும், அரசியலில் தானே முன்னால் இருக்கவேண்டும் என்னும் அவரது அவாவினாலும், அதற்குமேலும் அவருடைய நண்பர்களிடமும் சுற்றத்தார்களிடமும் அவர் கொண்டிருந்த நல்லெண்ணத்தாலும் நம்பிக்கையாலும் இந்தத் தவறு ஏற்பட்டது.

துங்கு எப்பொழுதும் மகிழ்ச்சியான பிரதம மந்திரி என்று தன்னைத்தானே அழைத்துக்கொள்வார். சிங்கப்பூரிலும், போர்னியோ மாநிலங்களிலும், மலேயத் தீபகற்பத்திலும், இந்தோனேசியாவின் மோதுதலினாலும் சண்டைகளாலும் கொந்தளிப்பு ஏற்பட்டுக்கொண்டிருந்தபோதிலும் மலேசியா பெரியதொரு முன்னேற்றம் அடைந்து வருகிறது. இந்தோனேசியாவின் "கான்ஃபிரண்டாசி" செய்தித்தாள்களில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்டது. ஆனால் இக் கொடூர நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் மலேசியாவில் அமைதியான புரட்சி நடந்துகொண்டே இருந்தது. மலேசியாவின் முதலிரண்டு ஆண்டுகளில் சராவக், சபா மாநிலங்கள் வரைக்கும் வளர்ச்சித் திட்டங்கள் விரிவுபடுத்தப் பட்டன. பிரதம மந்திரி பக்கத்து நல்லுறவு நாடுகளுக்குப் பல முறையும், இங்கிலாந்துக்கு ஓரிரு முறையும் சென்று வந்தார்.

1963ஆம் ஆண்டு மலேசியா உருவானதுடன், சிங்கப்பூர் அதிக வளர்ச்சியடைந்தது. வர்த்தகர்களும் தொழிலதிபர்களும் தீபகற்பத்தில் தொழிலகங்களை அமைக்கவும், உள்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு மக்கள் சுதந்திரமாகச் சென்று வரும் சூழ்நிலை உருவாகியது. தொழில் வளர்ச்சியும் சிங்கப்பூர்த் துறைமுகத்தில் கிடைத்த வேலை வாய்ப்புக்களையும், ஜனநாயகச் சமுதாயத்திற்குச் சாய்மானமாக இருப்பினும், அதே நேரத்தில் கொழுத்த முதலாளிகள் அதைப் பொறுத்துக்கொண்டார்கள். இந்த வகையான பொருளாதார முன்னேற்றமும் பார்ப்பதற்கு ஓர் எதார்த்தப் பண்பினைக் கொண்டிருந்தது. உலகத்திலுள்ள

வர்த்தகத் துறைமுகங்களுள் பெரியதான சிங்கப்பூரின் வாழ்க்கைத் தரம் ஆசியா முழுவதிலும் மிகச் சிறந்த வாழ்க்கை வசதிகொண்ட துறைமுகங்களுள் இரண்டாவது எனப் பெருமையடைந்தது. எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மாநிலங்கள் தொழில் திட்டங்களுக்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன. அரசாங்கம் தொழில் வளர்ச்சி நிறுவனத்துக்கு 100,000,000 டாலர்கள் கொடுத்தது. லீ கியுவான் யூவினல் சிங்கப்பூரின் நடைமுறைக்கு ஒவ்வாதது எனப்படும் கொள்கை வழி ஜன நாயகத்தின் வழியின்றி, நியாயமான முறையுடன் சிங்கப்பூர் தொழில் வளர்ச்சி கண்டது.

எப்பொழுது மக்கள் வாழ்க்கைத் தரம் முன்னுளைய குடியேற்ற ஆதிக்க முதலாளிகளைப் போல் உயருகின்றதோ, அப்பொழுதுதான் மலேசியா ஜனநாயகச் சமூகத்தை உருவாக்க முடியும் என்பதே, லீ கியுவான் யூ வின் கொள்கையாகும். அதற்கு, முதலில் ஒன்று பட்ட மலேசிய மக்களை உருவாக்க வேண்டுமென அவர் வழக்க மாகச் சொல்வதுண்டு. இது நிறைவேறினல் இனப்பிரச்சினைகள் இருக்கின்ற இடங்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி எண்ணலாம். மேலும் ஒன்றுபட்டதொரு மலேசியாவை உருவாக்க வேண்டும் என்றும் லீ கியுவான் யூவின் லட்சியமானது மலேசியத் தலைவர்களுள் ஜோகோர் சதுப்பு நிலத்தைக் கடந்து வந்திருக்கும் மலேயா சீனச் சங்கத்தின் உறுப்பினர்களும் கொண்டுள்ள இலட்சிய நோக்கங்களுக்கு ஒத்து வரவில்லை.

சீன நகர மாநிலத்தின் அரசாங்கத் தலைவர் என்ற முறையில் 1963ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மலேசியாவின் பதவியைத் தனிப்பட்டதொரு சூழலில் கைப்பற்றினர். மற்ற எல்லா மாநிலங் களிலும் முதன் மந்திரிகள் இருக்க அவர் இன்னும் சிங்கப்பூரின் பிரதம மந்திரியாகவே இருக்கிறார். அவர் சிங்கப்பூரின் அன்றாட அலுவல்களில் அளவுக்கு மீறிய உரிமையை அனுபவித்தார். அவர் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் மலேயர்களுக்கு அளிக்கப் பட்ட சிறப்புச் சலுகைகளைக் கடந்த காலமாகப்பின் தங்கியிருக்கும் மலேயர்கள் பெற்றுத் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக மட்டுமல்லாமல், இது மலேசியர்கள் என்ற அடிப் படையில் உதவிகள் பெற்றுவரும் சீனர்களுக்கும், மற்றும் பல

குடியேற்ற மக்களுக்கும் எதிராக வேற்றுமையை விளைவிக்கும் என்பதற்காகத்தான் இதை எதிர்த்து வந்தார்.

மலேசியாவில் அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்தும் பின்னும் அதே பதவிக்கு வந்த தாதோ (டாக்டர்) இஸ்மாயில் பின் தாதோ அப்துல் ரகுமான் [Dato (Dr.) Ismail bin Dato Abdul Rahman], மலேசிய அரசாங்கத்தில் நிதி மந்திரியாக இருந்த தன் சியூ சின் (Tan Siew Sin) என்ற இரண்டு தலைவர்களும் நாட்டில் உருவாகி வரும் குழப்ப நிலையைச் சமாளித்து வந்தார்கள். அவர்கள் நாட்டை எதிர்த்துக்கொண்டிருக்கின்ற கிளர்ச்சிகளைக் குறிப்பாக மலேயர்களுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சலுகைகள் அரசியல் சட்டத்தின்படி பெருகிக்கொண்டிருப் பதனால் விளையும் குழப்பத்தை விளக்கிச் சொல்வதில் மிகுந்த தன்னடக்கத்தைக் காண்பித்தார்கள்.

1965ஆம் ஆண்டு, சிங்கப்பூர்ப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தில் தன் சியூ சின் பேசினார். அவர், பிரிட்டிஷ் காலத்தில் இருந்த சீனர்கள், மலேயர்கள் முதலானவர்களின் நிலைமையையும் நாடு முழுவதும் கொஞ்ச காலத்திற்கு ஜப்பானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிலைமையையும், 1957ஆம் ஆண்டு மலேயா சுதந்திரம் அடைந்தபோது பிரிட்டிஷ் அதிகாரிகளின் கணக்குப்படி தங்களை மலேசியக் குடிமக்கள் என்று சொல்லிக்கொண்ட, ஏறக்குறைய 2,00,000 குறையாமல் இருக்கும் சீனர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட சீனச் சங்கம் ஒன்று ஆரம்பிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளையும் பற்றி கதைபோல விவரித்தார். மலேயர்களுக்குரிய சிறப்பிடத்தையும், மற்ற இனத்தார்களுக்குள்ள நியாயமான நலன்களைப் பற்றிக் கவனிப்பதற்கென, 1948ஆம் ஆண்டு மலேயா கூட்டாட்சி ஒப்பந்தம் நிறைவேறிய நேரத்துக்குச் சில காலத்துக்கு முன்பாகவே, உயர் ஆணையாளரின் (High Commissioner) தனிப் பொறுப்புகளாக ஏற்படுத்தி வைத்திருப்பதைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்.

சியூ சின்னின் குடும்பம், லீ கியூவான் யூவின் குடும்பத்தைப் போலவே மலேசியாவில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே வாழ்ந்துவரும் ஒரு குடும்பமாகும். மலேயாவின் அரசியல் தலைவர்களை அறிந்து அவர்களுடன் நெருங்கி வந்து பழகுவதில்

லீயை விடச் சிறந்தவரும் இனக் கலப்பு ஒற்றுமையில் அசைக்க முடியாத நம்பிக்கையை உடையவரும் ஆவார். 1957ஆம் ஆண்டிலிருந்து, இரண்டு இனக் குழுக்களான சீனர்களுக்கும், மலேயர்களுக்கும் இடையே சீரான முறையில் குறுகிக்கொண்டு வரும் இடைவெளியைப் போக்க வேண்டும் என்பதே அவருடைய கொள்கையாகும். அவர் கூற்றுப்படி "இது ஒன்றும் கடினமான காரியமல்ல. ஏனெனில் மனித இயக்கத்தின் முக்கிய நிலைகளில் இனம் என்ற ஒன்று பொருத்தமில்லாத நினைப்பாகும். சிங்கப்பூரிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர் கூறியதாவது: "ஆரோக்கிய விதிகள் பொருளாதார இயக்கத்தின் நியதிகள், சொல்லப்போனால் முக்கியமான இந்த இரண்டும் இனத் தடைகள் என்று எதையும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. அறிவைத் தேடலும், புதுத் திறமையைப் பெருக்கிக் கொள்ளலும், ஒருவருடைய இனத் தோற்றத்துடன் தொடர்பு கொண்டவை யல்ல."

தன் மேலும் கூறியதாவது: "அரசியல் பிரிவுகள் இன வழி வரக்கூடாது என்பது மலேசியாவுக்கு முன்னால் வழக்கமாகக் கடைப்பிடித்து வருவது மலேசிய மாநிலத்தின் அரசியல் இயக்கங்களின் எழுதாத விதிகளுள் ஒன்றாகும். அதனுடைய விளைவை இலட்சிய வழிகள் என நாம் ஒத்துக்கொள்ளாமல் இருந்தபோதிலும் "இஸங்களின்" அடிப்படையில் அமைந்தது. நீங்கள் வலது, இடது அல்லது நடுநிலை அரசியலைச் சேர்ந்தவராக இருந்தபோதும், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளின்மூலம் நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தபோதிலும் ஒரு இனத்துக்கு எதிராக ஒரு இனத்துக்கு இடையே போட்டி ஏற்படாத வண்ணம் நாம் எப்பொழுதும் கவனத்துடன் இருந்து பாது காக்கவேண்டும்."

தற்போதைய சூழ்நிலையிலுள்ள அபாயமே இப்பொழுதுள்ள கோட்பாட்டின்படி மலேயர்களின் செல்வாக்கைப் பெற்றும் பிற சமூகங்களின் விருப்புக்களையும் உரிமைகளையும் கவனத்தில் கொள்ளாத கூட்டாட்சிக் கட்சிக்கு முக்கிய எதிர்ப்பாகவும் விளங்குவனவாகும். ஆகவே திரண்ட ஆதரவு பெறவேண்டுமானால் இந்த எதிர்ப்பு மலேயரல்லாதவர்களின், குறிப்பாகச் சீனர்களின் உரிமைகளுக்கும் விருப்புகளுக்கும் ஆதரவளிக்க

வேண்டும். இது முடிவில் மலேயர்களுக்கும் சீனர்களுக்கும் எதிரான போட்டியாக மாறியது. இந்த முறையற்ற போக்கும் இந்த நிலைமையில் தோன்றும் அபாயங்களும் தவிர்க்க முடியாதவைகளாகும்.

"பன்முகச் சமுதாயத்தின் வாழ்க்கை அதற்குரிய இன்னல்களை உடையது. ஆனால் அதன் சவால்களே அதனுடைய வாய்ப்புக்களாகும். ஓரளவுக்கு அதிகமாகிய சீனர்களும், மலேயர்களும் இருக்கும் பகுதிகளை நான் பார்த்திருக்கிறேன். இவ்விதமாக அவர்களுக்கிடையே ஏற்படும் தொடர்புகள் அடிக்கடி நிகழ்வனவாகவும் பரந்துபட்டனவாகவும் இருப்பதைக் காண்கிறேன். அவர்கள் இடையே பெரிய அளவில் இனப் பொறுமையும், உணர்ந்து கொள்ளும் திறனும் இருக்கின்றன. ஏனெனில் அவர்கள் இரண்டு பக்கத்திலும் உச்சத்தில் இருப்பதால் அழிவு தான் என்பதை உணர்ந்திருந்தார்கள். அதைப் போன்ற இடங்களில் எடுத்துக்காட்டாக மலேயத் தலைவர்கள் சீனக் கோயில்களுக்குப் பொருளுதவி அளிக்க வேண்டுவதையும், சீனத் தலைவர்கள் அரசாங்கத்திடம் மலேய மகுதிகளுக்குப் பொருளுதவி கேட்பதையும் சாதாரணமாகக் காணலாம்' உண்மையிலே, கிறித்துவக் கோவில்கள் கட்டுவதற்கான உதவி கோரி, மலேயத் தலைவர்களிடமிருந்து வேண்டுகோள்கள் வருவது அரசாங்கத்துக்கு ஒன்றும் புதிதல்ல.

"மாநிலங்களின் பகுதிகளில் ஓர் இனம் செல்வாக்குடன் இருக்குமானால் அங்கே இனப் பொறுமை அதனுடைய கீழ் மட்டத்திலே இருக்கும். கிழக்குக் கரை ஓரமுள்ள கெலந்தன் முழு மலேயாவின் இஸ்லாமியக் கட்சியின் (Pan-Malayan Islamic Party) கோட்டையாகவும், மலேயா இன வெறியோடு கூடிய மத வெறிக்குத் தீவிரமானதொரு வடிவமாக நிலைத்து இருந்தது. சிங்கப்பூரில் அதற்கு மறுதலையாக, மலேயா மக்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் சீனத் தலைவர்கள் இகழ்ச்சியாகப் பார்க்கப் பட்டதுடன், வழக்கமாக மலேயாவின் கோமாளிகள் என்றும் சிலவேளைகளில் சீனக் காரணத்துக்காகப் புரட்சியாளர்களாகக் கூட எண்ணப்பட்டார்கள். இவ்விரண்டு மாநிலங்களிலும், இவ்

வெண்ணங்களை வெளிப்படையாகச் சொல்லுவதில்லை, என்றாலும் இந்தப் போக்குக்கு மறைமுகமானதொரு அமைப்பின் அடிப்படையை எடுத்துக் கூறும் அளவுக்கு இருக்கும் எனவும், இது அதிகமான நாசத்தை விளைவிக்கமுடியும் எனவும் எனக்குத் தெரியும்.

"ஒரு வேளை இந்தக் காரணத்தினால்தான் கெலந்தனில் யு. எம். என். ஓ. (ஐக்கிய மலேசியா தேசீய நிறுவனம்—United Malay Nationalist Organisation) எந்தவொரு வழியிலாவது வளர்வதற்கு இயலாது இருந்தது. அதைப்போலவே சிங்கப்பூரில் எம். சி. ஏ. (மலேசிய சீனச் சங்கம்—Malaysian Chinese Association) வளர்வதற்கும் இயலாத நிலையில் இருந்தது. இவ்விரண்டு மாநிலங்களில் ஏதாவது ஒன்றிலாவது இச்சங்கம் வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு, ஒன்று மலேயர்களது அல்லது சீனர்களது குருட்டு வெற்றியை, வழக்கின் ஒரு பகுதியைப் போலவே ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும்.

ஜோகோரைச் சேர்ந்தவரும் மலேசியாவின் அமைச்சரவையில் பலசாலி எனக் குறிப்பிடப்பட்டவருமான டாக்டர் இஸ்மாயில் மலேயாவில் உள்ள இன ஏற்றத்தாழ்வுகளைப்பற்றிப் பேசினார். அவர் சொல்வதை ஏற்றுக்கொண்டால், மலேயர்களும் அவர்களது வாழ்க்கைவிதமும் கிராமச் சூழலோடு தொடர்புடையவைகளாக வும் இருக்கின்ற அதேநேரத்தில், மலேயாவில் சீனர்களும் மற்றும் உள்ள பிற குடியேறிய இனங்களும் நகர்ப்புறச் சமுதாயத்தில் வாழ்வதாலும் போட்டி மிகுந்த சமுதாயத்திலும் தொழிற் சமுதாயத்திலும் வாழ்வதற்கு வேண்டிய குணங்களைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுவே அதன் காரணமாக இருக்கும். மக்களுக்கு உணவு ஏராளமாகவும் வாழ்க்கை எளிதாகவும் இருந்த பழங்காலத்திலே உள்ள மக்களின் வாழ்க்கைக் குறிக் கோளான தியடா அபாவை (Tiada Apa) மலேயா மேற் கொண்டதுவே அதனுடைய பயனாகும். தற்செயலாக மலேயா வின் மக்களின் தத்துவமான "தியடா அபா" மலேயாவுக்கு இணையான பகுதிகளில் காணலாம். இந்தோனேசியாவின் இந்தத் தொடர் "தியடா அபா" எனவும், தாய்லாந்தில் இது "மை பென் அரை" (Mai Pen Arai) எனவும், அரபு நாடுகளிலும்

கூட இது "மாலேஸ்" (Malesh) எனவும் அழைக்கப்படுகிறது. டாக்டர் இஸ்மாயில் கருதுவதாவது:

"பிரிட்டிஷ் குடியேற்ற ஆதிக்கம் வந்தபிறகு, நாட்டுப்புறங்களில் உள்ள மக்களின் போக்குக்கும், நாட்டை விரைவில் சுரண்டவேண்டும் என்னும் பிரிட்டிஷாரின் எண்ணங்களுக்கும் பொருந்தி வர முடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே பிரிட்டிஷ் அறிவுக்குரிய குணத்தோடு, அவர்கள் நிபந்தனைகளுடன் மலேயர்களிடத்து வந்தார்கள். அப்பொழுது சுல்தான்கள் எல்லா அதிகாரமும் பிரிட்டிஷ் பிரதிநிதியுடன் இருக்கத் தங்களுக்குரியதான மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றிக்கொண்டார்கள். மலேயர்களுக்குக் கல்வி வசதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் பிரிட்டிஷார்கள் தங்களுக்கென உயர்பதவிகளை வைத்துக் கொண்டபோது, மலேயர்களுக்குக் கிடைத்த அரசாங்கப் பதவிகள் எல்லாம் கீழ்நிலைப் பதவிகளாக இருந்தன. இந் நேரத்தில் சீனக் குடியேற்றவாதிகளும் இந்தியர்களும் நாட்டைச் சுரண்டத் தலைபட்டனர். மலேயத் தீபகற்பம் எப்படிப் பணக்கார நாடானது என்பதையும் பிரிட்டிஷ் காலத்தில் பல குடியேற்றவாதிகளைக் கொணர்ந்தது என்பதையும் அறியலாம்.

"பிரிட்டிஷ் கொள்கையின் விளைவாக நகரங்களும், மற்றும் எந்த இடத்தில் எல்லாம் பிரிட்டிஷாருக்கு அக்கறைகள் இருக்கின்றனவோ அந்த இடங்கள் எல்லாம் முன்னேறின. பண்ணைகளில் சாலைகள் அமைக்கப்பட்டன. நகரங்களிலும், ரப்பர்த் தோட்டங்களிலும் சுகாதார முறைகளில் கவனம் செலுத்தப் பட்டன. முக்கிய நகரங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டன. பிரிட்டிஷ் கொள்கையின் விளைவாகத் தங்களைப் பணக்காரர்களாக ஆக்கிக்கொண்டதுபோக, மலேயாவிலும் சிங்கப்பூரிலும் உள்ள மலேயர்கள் அல்லாதவர்களையும் பணக்காரர்களாக ஆக்கினார்கள்.

"பிரிட்டிஷ் ஆட்சியின்போது அரசியலில், அரசியல்வாதிகளுக்கு இனப் பிரச்சினைகளை எழுப்புவதற்குப் பொதுவான சூழல் இல்லாமல் இருந்தது. உண்மையிலே அந்நாளில் நடைமுறையில் இருந்த சிறு சட்டம் எல்லாம் குடியேறிய இனங்களுக்குக் கூலி கேட்கவும், நிறைந்த வேலைவாய்ப்பு நிலையைத் தருவதற்குச்

சார்பாகக் குரல் எழுப்புகின்ற வரைக்குந்தான் உரிமையளிக்கப் பட்டிருந்தது. குடியேறிய பல்வேறு இனங்களுக்குள்ள தொடர்பை ஒற்றுமைப்படுத்துவதற்குத் துரதிருஷ்டவசமாக எந்தவொரு முயற்சியும் ஒருபோதும் பிரிட்டிஷார் செய்யவில்லை. ஆகவே மலேயாவை விட்டு வெளியேற வேண்டும் என்னும் நேரம் வந்தபோது சரிசமமாக இணைந்து நிறைவோடு வாழுகின்ற பல இன மக்கள்தொகை நிரம்பியதொரு நாடாகவே விட்டுச் சென்றார்கள். அவர்களும்கூட நாட்டைச் சுரண்டுவதில் தீவிர மாய் இருந்தனர். அவர்களுடைய விருப்புக்கள் எல்லாம் அங்கே சட்டமும் ஒழுங்கும் நிலைத்து இருக்கவேண்டும், ஏனெனில் சட்டமும் ஒழுங்கும் இல்லாவிடில் நாட்டின் வருவாய்களை அமைதியான முறையில் பொதுவாகச் சுரண்டுவதற்கு முடியாது என்பதே இதன் காரணமாகும்.

"1957ஆம் ஆண்டு மலேயா சுதந்திரம் அடைந்தபோது சுதந்திர இயக்கத்தில் பங்குபெற்ற தலைவர்கள், ஐக்கிய மலேயா தேசிய நிறுவனம் (United Malay National Organisation), மலேயா சீனச்சங்கம் (Malayan Chinese Association), மலேயா இந்தியக் காங்கிரஸ் (Malayan Indian Congress) என்னும் இந்த மூன்று முக்கிய இனக் குழுவினர்களைக் கொண்டு, உருவாக்கியது கூட்டாட்சிக் கட்சியாகும் (Alliance Party). கூட்டாட்சிக் கட்சியின் மேடையில், இப்பொழுது இருக்கின்றதைப்போலவே கருத்துடைய முக்கிய வரிகளை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் மலேயாவின் சிறப்பிடத்தைக் காக்கவேண்டும் என்பது மட்டுமன்றி, இந்த மலேயாவின் சிறப்பிடமே மலேயர் களுடைய சமுதாயம் பொருளாதாரத்தை உயர்த்தவல்லதொரு முக்கியக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொள்ளுவதற்கும் ஒத்துக்கொண்டார்கள். ஆகவே மலேயர்களல்லாதவர்களுடன் சரிசமமாகக் காலூன்றி நிற்ப தற்குத் தக்கவாறு அவர்கள் முடிவாகத் தங்களை ஆக்கிக்கொண் டார்கள். மூன்று கட்சிகளும் மலேயாவை ஆண்டுவந்த அரசர் களின் பதவியை அப்படியே வைத்திருக்க வேண்டும் எனவும், அவர்களுள் ஒருவர் தலைமையாளராகக் குறிப்பிட்டதொரு காலம் வரை ஆளவேண்டும் என்பதையும் ஒத்துக்கொண்டார்கள். புதிய

தொரு நாட்டிற்கான பொதுமொழி ஒன்றிருக்க வேண்டும் என்னும் கருத்தினை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இந்த மொழியை வளம் பெறச் செய்து தேசீய மொழியாக்க வேண்டும் என்றும், அதற்காக அவர்கள் மலாய் மொழியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஆனால் மலேசியா உருவானவுடன் எல்லா நோக்கமும் மாறியது. போர்னியோ மாநிலங்கள் இந்தோனேசியாவின் மோதல் காரணமாக, அவைகளுடைய சொந்தப் பிரச்சினைகளே அதிகமாக இருந்தன. மலேயர்களுக்கும், குடியேறிய இனங்களுக்குமிடையேயுள்ள ஏற்றத் தாழ்வினை நீக்கவேண்டும் என்னும் கூட்டாட்சியின் முறைக்கு, லீ குவான் யூவைத் தலைவராகக் கொண்ட சிங்கப்பூர் மக்கள் இயக்கக் கட்சியால் ஒத்துப்போக இயலவில்லை. இதில் சிங்கப்பூர், அதன் சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட அதன் கொள்கைப்படி எல்லாவிதமான எண்ணங்களுக்கும் பயங்களுக்கும் ஏற்ப ஆண்டுவரும் தீவு நகரத்தில் இனப் பிரச்சினை இல்லை. சிங்கப்பூரின் மொத்தத் தொகையில் சீனர்கள் கூட்டமாகவும், மலேயர்களைச் சேர்த்து மற்றவர்கள் எண்ணிக்கை நிறைந்த இனங்களாகவும் இருக்கின்றார்கள்.

ஏறக்குறைய மலேசியா உருவாகியதிலிருந்து, ஆனால், குறிப்பாகப் பொதுத் தேர்தலுக்குப் பெயர் பெற்ற அணி ஒன்று இருந்தது. இந்த அணியில், லீ குவான் யூவும், அவருடைய வெளிநாட்டு மந்திரி இராசரத்தினமும், மக்கள் இயக்கக் கட்சியின் முக்கியமானவர்களும் திறமையாகச் செயலாற்றினார்கள். மலேசியாவின் அரசியல் சட்டத்தில் மாற்றம் தேவையென அவர்கள் விரும்பினார்கள். யாங் டி பெர்டுவான் அகோங்கும் (Yang di Pertuan Agong) எல்லா மலேயா அரசர்களையும் மொத்தத்தில் ஒழிக்கவேண்டுமென அவர்கள் விரும்பினார்கள், அவர்கள் எண்ணியதைப் போலவே இந்த நிறுவனங்கள் இவ்வரசர்களை ஏறக்குறைய ஆப்பிரிக்காவின் இனக்குழுத் தலைவர்களைப்போலவும் அல்லது முன்னாள் இந்தியாவின் மகாராசாக்களைப் போலவும் எண்ணினார்கள். மலேயர்கள் முதல்தரக் குடிமக்களாகக் கருதப்படும்பொழுது, மலேயர்களரல்லாதவர்கள்,

குறிப்பாகச் சீனர்கள் இரண்டாந்தர மலேசியர்களாகக் கருதப் படவேண்டும் என அவர்கள் வாதிட்டார்கள்.

இந்தப் போராட்டம், மலேசியாவின் ஒற்றுமைக் குழு அலுவலகக் கூட்டங்களிலும், மேலும் பிற இடங்களிலும், எல்லாப் பக்கங்களிலும் வளர்ந்துகொண்டே இருந்தது. இரண்டு கட்சிகளும் அவர்களுக்கென ஒரு கொள்கை வைத்திருந்தாலும் அவர்களிருவரும் அவர்களுடைய கொள்கையை, உறுதியாகவும் மேலும் அதிகமாகவும் நாட்டின் நலன்களுக்குத் தீங்கு செய்யக் கூடிய வகையில் அடிக்கடி வலியுறுத்தி வந்தனர்.

மலேசியாவில் உள்ள ஒவ்வொருவரும், வழிகள் பிரிவது தவிர்க்க முடியாதது என அறிவார்கள். ஆனால் அந்த வழியில் தான் அது வரும் என்று ஒரு சிலரே அறிவார்கள். அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்னரே பிரிவினை பற்றிய விவரங்கள் அனைத்தும் ஆராயப்பட்டன. 1965ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9ஆம் நாளில், மலேசியாவின் பாராளுமன்றத்தில் அது நிறைவேறியது.

துங்கு அப்துல் ரகுமானின் கனவு கலைந்தது.

11. கலைந்த கனவு

1965ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒன்பதாம் தேதியன்று, மலேசியா தனது இரண்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு இன்னும் ஒரு சில நாட்கள் இருக்கின்றபொழுது, இந்தோனேசியாவின் மோதல் இன்னும் கொடூரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும், மலேசியர்கள், மலேயா நாட்டிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து செல்வதை அறிவிக்கும் தீர்மானம் பற்றிய வருத்தமான செய்தியைப் போதிய அக்கறையின்றியே கேட்டார்கள். அமைதியில் அன்று மூழ்கியிருந்த மலேசியாவின் பாராளுமன்றத்தில் இந்தச் செய்தியை அறிவித்தவர் துங்கு அப்துல் ரகுமான். அவருடைய கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. அதை அடக்க மிகவும் துன்பப்பட்டார்.

துங்கு அப்துல் ரகுமான் தம்முடைய உரையைப் படிக்கும்பொழுது, அவரிடம் முன்பிருந்த பழைய மகிழ்ச்சி எதுவும் இல்லை. சிங்கப்பூர்ப் பிரதம மந்திரியும் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வுரையின்போது வரவில்லை. துங்கு தம்முடைய உரையை நிகழ்த்துவதற்காக எழுந்தபோது மற்றவர்கள் கவலையோடு பார்த்தார்கள். "இந்த அவையின் தலைவராக இருந்த காலமுழுவதிலும், இந்த மேடையில் இதைப்போன்றதொரு வருத்தம் நிறைந்த செயலை ஒருபொழுதும் நான் செய்ததில்லை. இப்பொழுது நான் சொல்வது மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து செல்வதுபற்றிய அறிவிப்பாகும்" என்பது அவர் உரையின் ஒரு பகுதியாகும்.

இந்த முடிவிற்கு வரப் பல காரணங்கள் இருப்பதாகத் துங்கு சொன்னார். மலேசியா உருவாகியதிலிருந்து, குறிப்பாக 1965ஆம் ஆண்டின்போது சிங்கப்பூர் அரசாங்கத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட பல வேற்றுமைகள், அவர்களை இந்த முடிவின் எல்லைக்குக் கொண்டுவந்துவிட்டன. மருத்துவச் சிகிச்சைக்காக அவர் லண்டனில் இருந்தபோது அவர் வேண்டு

கோளின்படி துன் அப்துல் ரசாக் இவ் வேற்றுமைகளில் ஒருசில வேற்றுமைகளையாவது பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்க, இயன்ற அளவுக்கு முயற்சி செய்தார். ஒரு பிரச்சினையை எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக தீர்க்கின்றோமோ, அதே வேகத்தில் மற்றொரு பிரச்சினை திடீரென்று எழுந்துவிடுவதும். இங்கே ஒரு பக்கத்தில் தையல் போட்டால் பிறிதொரு பக்கத்தில் கிழிசல் விடுவதும், ஒரு துவாரத்தை அடைத்தால் மறுபக்கத்தில் ஒழுகுவதும் போலவே இது பார்ப்பதற்கு இருந்தது.

"இந்த நேரத்தில் இப்பொழுது எடுத்திருக்கின்ற தீர்மானத்தைத் தவிர இந்த இக்கட்டான நிலையிலிருந்து வெளியேறுவதற்கான எந்தவொரு வழியும் இல்லை" என்று பாராளுமன்றத்தில் துங்கு கூறினர். "மலேசியாவின் பகுதியிலிருந்து சிங்கப்பூர் பிரிந்துபோவதைத் தடுப்பதற்கு இயன்ற வழிகளில் எல்லாம் முயற்சி செய்தோம். கடைசியாக எங்களுக்கு முன்னால் இரண்டு வழிகள்தான் இருப்பதை உணர்ந்தோம். அவற்றுள் ஒன்று, சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு எதிராக அதன் ஒருசில தலைவர்களின் நடத்தைக்காக அடக்கு முறைகளைக் கையாளுவது என்பதாகும். மத்திய அரசாங்கத்துக்கு உண்மையாக நடக்கத் தவறியதற்காக மாநில அரசாங்கத்துடன் கொண்டிருந்த தொடர்புகளையெல்லாம் துண்டித்துக்கொள்ளவேண்டும் என்பது இரண்டாவது வழியாகும்.

"மத்திய அரசாங்கத்தின் நிலைமை உள்நாட்டில் இருப்பது போன்றே இன்னும் வெளி உலகத்திலும் மோசமாக இருப்பதினால் பல சந்தர்ப்பங்களில் இகழ்ச்சி செய்யப்பட்டது. சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு எதிராக அடக்கு முறையைக் கையாளுவதற்கு எனக்கு அவமானமாக இருக்கிறது. ஏனெனில் அச்செயலே பாராளுமன்ற ஜனநாயகக் கொள்கைக்கு அவமானச் சின்னமாக இருக்கும். இதற்கு மேலும் அது நமக்கு முன்னாலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக இராது."

"இனப் பிரச்சினை என்பது என்னைப் பொறுத்தவரையில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களுள் ஒருவர்க்கொருவரிடம் கொண்டிருக்கின்ற நல்லெண்ணத்தினாலும் நட்புறவினாலும் தான், இந்த நாட்டிலுள்ள மக்களின் மகிழ்ச்சியும் அமைதியும்

சார்ந்திருக்கின்றன என்று சொல்லலாம். இந்நிலையில்லாமல் இந்நாடு பிரிந்தது. ஒரு சிலருக்கு எதிராக நாம் தண்டனை வழங்கியிருக்கலாம் என்பதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம் என்று நாம் நினைக்கலாம். இதன் காரணமாகச் சிங்கப்பூரில் தூவப்பட்ட இகழ்ச்சி, பயம், வெறுப்பு முதலிய விதைகள் வளருவதை நாம் நினைத்தால்கூட அவை வளர்வதைத் தடை செய்யலாம். அப்படிச் செய்தால் ஒரு காலத்திற்கு பிறகு அவை கடும் வேகத்துடன் வெளிக்கிளம்பும் என நான் நினைக்கிறேன். வெளிநாட்டில் இருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எதிரான எல்லாவிதமான பிரசாரங்களுக்கும் பழக்கப்பட்டவர்களாய்விடுவார்கள்."

ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிடையே மேற்கொண்டிருந்த சுற்றுப் பயணத்தின்பொழுது லீ கியுவான் யூவினால் மிக வேகமாகப் பரப்பிவந்த "மலேசியா மலேசியர்களுக்கே" என்னும் பொருள் பற்றி துங்கு அதிகமாகப் பேசினார். எளிமையாகக் கூறுவதானால் மலேசியா மலேசியர்களுக்கே என்ற கொள்கையின் பொருளே, மலேசியாவிலுள்ள ஒவ்வொருவரும் மலேசியர்களாக நடத்தப்பட வேண்டும் என்றால் அரசாங்க அலுவல்களிலும் இதர தொழில்களிலும் நுழைவதற்கான ஒரேவிதமான உரிமையைச் சீன மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதாகும். இது கொள்கை யளவில் நிறைவேறக் கூடியதாக இருக்கலாம். ஆனால் பின் தங்கிய மலேயர்கள் இன்னும் பின்னுக்குத் தள்ளப்படுவார்கள் என்பதே அதன் நடைமுறை விளைவாகும்.

"மலேசியா மலேசியர்களுக்கு" என வழங்கும் கொள்கையை மலேசியா எதிர்த்தபோது, அரசியல் சட்டத்தின்படி சில தனி உரிமைகள் வழங்கப்பட்ட மலேயர்களில் பலர், சமுதாயத்தில் தங்களுக்குரிய பெரிய இடத்தைச் சீனர்களுக்கும் பிற இனத்தவர்களுக்கும் ஒப்பத் தங்களை வளர்த்துக்கொண்டவர்களைத் தவிர மலேசியாவிலுள்ள சீனர்களுக்கும் மற்றவர்களுக்கும் எதிராக ஏற்றத்தாழ்வை விளைவிப்பது என்னும் லீ கியுவான் யூவின் கோட்பாட்டினைக் கொண்டிருந்தனர்.

சிங்கப்பூர் அரசாங்கம், தான் தெளிவான ஜனநாயகக் கொள்கையைக் கடைபிடிப்பதன் காரணத்தினால், தன்னை

முற்போக்கு அரசாங்கம் எனப் பாராட்டிக் கொண்டது. மலேசியாவின் தேர்தல்களில் ஈடுபட்ட ஜனநாயக அடிப்படையில் அமைந்த மக்கள் இயக்கக் கட்சி என்ன செய்தது எனத் துங்கு விடம் கேட்டால், அதற்கு அவர் பொதுவுடைமைக் கட்சியைத் தவிர எந்தவொரு கட்சியையும் நாம் தடை செய்யவில்லை என்றார்.

சிங்கப்பூர் அரசாங்கமானது மலேசியாவிலுள்ள சீன மக்கள் தொகைக்கு எல்லாம் பிரதிநிதியாக விளங்கியவர் லீ கியுவான் யூ என்று உரிமை பாராட்டியது. சிங்கப்பூர் அரசாங்கம் எழுப்பிய மற்றுமொரு வாதமுமேயாகும். சிங்கப்பூரில் செல்வாக்கு அடைந்திருந்த சீனர்களையும் மலேசியா மற்றுமுள்ள இடங்களில் உள்ள சீனர்களையும் லீ தன் செல்வாக்கின்கீழ் வைத்திருந்தார் என்பது உண்மையாகும். சிங்கப்பூர் பிரதம மந்திரி தொண்டாற்றிய பணிகளெல்லாம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் லீ கியுவான் யூவின் பெருமையை வெளிக் கொணரும் வகையில், சிறிதளவு மிகைப்படுத்திக் கூறும் வகையில் முயற்சி செய்தார் என்பது உண்மையேயாகும். இது ஒரு வகையில் துங்குவையும் அவரது ஆதரவாளர்களையும் நிலை தடுமாறச் செய்துவிட்டது எனலாம். அவர் பாராளுமன்றத்தில் கூறியதாவது:

சில நாடுகள் தங்களுக்கென ஏதோ ஒரு வகையான உந்துதல்களினுல் சிங்கப்பூரின் பிரதம மந்திரியை மலேசியா அரசாங்கத்தின் சரிநிகர் தலைவர் என்ற முறையில் கருதுவதும் அவருடைய பதவியில் அவர் நிலைக்க வேண்டும் என்ற முறையில் அவரை மறைமுகமாக ஆதரிப்பதும் நமக்கு ஒருவிதமான விரும்பத்தகாத சூழ்நிலையை உண்டு பண்ணுகிறது. இந்தச் சூழ்நிலையை நாம் தவிர்க்கவேண்டும். ஒரு நாட்டிற்கு ஒரு பிரதம மந்திரிதான் இருக்க முடியும். எனவே மிகச் சிறந்த முறையில் நம்மால் முடிந்த அளவுக்குச் சிங்கப்பூரின் பிரதம மந்திரி என்னும் வார்த்தையின் முழுப் பொருளுக்கு ஏற்ப லீ கியுவான் யூவைப் பிரதம மந்திரியாக்க அனுமதிப்போம். அப்படி இல்லாவிடில் அவரால் ஆகியிருக்க முடியாது.

இந்த மாறுபட்ட கருத்தின் மூலக்காரணத்தோடுகூட மலேசிய அரசாங்கத்தோடு சிங்கப்பூர் மாறுபடுவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு. பாராளுமன்றத்தின் சிங்கப்பூர்

உறுப்பினர்கள் முன்னால் விவாதித்த நிதி அறிக்கையைக் கடுமையாக எதிர்த்தார்கள். மத்திய அரசாங்கத்துக்குச் சிங்கப்பூர் அரசாங்கத்தின் நிதி உதவி பற்றியும் குறிப்பாக இந்தோனேசியாவின் மோதுதல் காரணமாக அதிகரித்திருக்கும் பாதுகாப்புச் செலவுக்கு என்ன நிதி அளித்திருக்கிறது என்பது பற்றியும் கடுமையான விவாதம் நடைபெற்றது. சிங்கப்பூர் அரசாங்கம், சிங்கப்பூரைப் பாதுகாப்பதற்கு ஏற்படும் செலவை, செலவின் பகுதியைத் தரத் தயாராய் இருந்தது. இதோடு போர்னியோவிலுள்ள சரவாக், சபா முதலிய மாநிலங்கள் வளர்ச்சிக்காகச் சிங்கப்பூர் அரசாங்கம் தருவதாக ஒப்புக் கொண்ட 1,500 லட்சம் மலேசிய டாலர் கடனுக்குண்டான வட்டி விகிதத்தின் காரணமாக மத்திய அரசாங்கத்துக்கும், சிங்கப்பூர் அரசாங்கத்துக்கும் ஏறக்குறைய இரண்டாண்டுகளாகக் கருத்து வேற்றுமை இருந்து வந்தது. மத்திய அரசாங்கம் வட்டி விகிதத்தைக் குறிக்க நெகரா வங்கியைக் குறிப்பிட்டது. ஆனால் சிங்கப்பூர் அரசாங்கமோ இந்தப் பிரச்சினையை உலக வங்கிதான் தீர்மானிக்க வேண்டுமென விரும்பியது.

மலேசியாவின் மற்றப் பகுதிகளைவிட, இந்தோனேசியாவுடன் ஏற்பட்ட சண்டையினால் அதிக அளவுக்கு ஏற்பட்ட நாசத்தால் துன்பப்படுகின்ற போர்னியோவிலுள்ள இந்த இரண்டு மாநிலங்களிலும் மத்திய அரசாங்கத்துக்குத் தங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எப்பொழுதும் தவறாமல் அளிக்கவேண்டும் என்று பிரதம மந்திரி பேசினார். குடியேற்ற ஆதிக்கத்தின்கீழ் கவனிக்கப்படாமல், முன்பு இருந்ததுபோலவே இருக்கின்ற இவ்விரண்டு மாநிலங்களின் முன்னேற்றம் மிகவும் உடனடியானதாகும். இந்தோனேசியாவுக்கு எதிராக நாடு தற்காத்துக் கொள்ளுவதற்காக ஏற்பட்ட அதிகச் செலவின் முக்கியக் காரணமாகச் சிங்கப்பூரிடமிருந்து கடனுக்காகப் பேச்சுவார்த்தை நடத்தியது.

பிறகு, துங்கு சிங்கப்பூரிடமிருந்து பிரிந்துபோவதற்கான ஒப்பந்தத்திற்கான வாக்குறுதிகளுக்கு இறங்கி வந்தார். இரண்டு நாடுகளும், பாதுகாப்பு, தொழில், வாணிபம் என்னும் துறைகளில் இணைந்து ஒத்துழைக்கலாம் என அவர் சொன்னார். வெளிநாட்டுப்

பாதுகாப்பிற்காக ஒருவருக்கொருவர் உதவிடவும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுவதற்குத் தொடர்ந்து எல்லாவிதமான உதவியையும் மலேசியா அரசாங்கம் அளிக்கவேண்டும் எனவும், அதேநேரத்தில் சிங்கப்பூர்த்தீவில் ராணுவ தளங்களையும், பிற கருவிகளைப் பொருத்துவதற்கும், அவைகளை வெளி ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுவதற்கான தற்காப்பு நடவடிக்கைகளுக்காகவும், அவைகளை உபயோகிப்பதற்கெனவும், உரிமையைச் சிங்கப்பூர், மலேசியாவுக்கு அளிக்கவேண்டும் எனவும் உறுதிமொழி கூறப்பட்டது. இதற்கு மேலும் எந்த ஒரு கட்சியும் அடுத்த கட்சியின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கின்ற எந்த ஒரு வல்லரசுடனும் எப்படிப்பட்ட வகையிலும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளமுடியும்.

ஒப்பந்தத்தின் பிற பகுதிகளையும், குறிப்பாக இரண்டு மாநிலங்களில் உள்ள மக்கள் இலவசமாகப் பிரயாணம் செய்யலாம் என்பதையும், நிறைவேற்றுமல் இருக்கும் தீர்மானங்கள் நிறை வேற்றப்படவேண்டும் என்பதையும் சொன்னார்.

மலேயாவின் அரசியல் சட்டம், மலேசியா சட்டம் என்ற இவ்விரண்டு சட்டத்தையும் அவர்கள் சிங்கப்பூருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளாதபடி திருத்தவேண்டும் எனப் பிரிவினைக்கான முயற்சிகளுக்குச் சட்டபூர்வமானதொரு நியாயம் கொடுக்கப்பட்டது.

இவ்விதமாகச் சிங்கப்பூருடன் பேச்சுவார்த்தை முடிவடைந்தது. ஐக்கிய நாடுகள் சபையிலும், காமன்வெல்த்திலும், சிங்கப்பூர் தனியொரு நாடு என இடங்கொடுக்கப்பட்டது. தங்களுடைய வியாபாரங்களைக் குறைந்த அளவுக்குத் துண்டித்துக்கொண்டு, தங்களுக்கென அழியாத இன்பங்களுக்கெனச் சிங்கப்பூரிலிருந்து மலேசியாவுக்கு ஓடிவருவதில் ஒருவகையான வேகம் இருக்கிறது. அதற்கு ஏற்றபடி சரி அளவில், மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்லுவதில்லை. இந்தக் குடிமாற்றத்தின் காரணமாக மலேசிய டாலர் பாதிக்கப்படும் என அறிக்கைகள் வெளியாயின. ஆனால் ஒருசில நாட்களில் இவ்வியக்கங்கள் எல்லாம் நின்று




5. நம்பிக்கையுடனும் திடமான கையோடும் சித்திர வேலைப் பாடமைந்த அணிகலன் ஒன்றை உருவாக்கி வரும் கெலந்தன் வெள்ளி வேலை செய்பவர்.



6. தகரச் சுரங்க மூலப் பொருட்களை சேறு வாரும் இயந்திரமானது தண்ணீரை வெளியே பாய்ச்சியும் தகரங் கலந்த மண்ணை வெளியே தள்ளியும் தகரத்தையும் மண்ணையும் பிரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது.



7. ஜப்பானுக்காக ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பான்மையான பொருட்களுள் ஒன்றான சபாவிலுள்ள தவாவு (Tawau) விலிருந்து உருட்டுக் கட்டைகளும் கப்பலுக்கு ஏற்றப்படுகின்றன.



8. தென்னையின் முக்கிய பொருளான தென்னை நார் கொண்டு செய்யப்படும் கயிறு திரித்தலும், தரை விரிப்புகள் செய்வதும் மலேசியாவின் இரண்டு முக்கிய குடிசைத் தொழில்களாகும்.

விட்டன. சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் இடையே வழக்கம் போல உயிர்வரத் தொடங்கியது. பெரிய அலுவலகங்களுள் ஒன்றான மலேசியா போக்குவரத்து, மலேசியா சிங்கப்பூர் விமானப் போக்குவரத்து என மாறிய நேரத்தில் நாட்டில் பிற தொழில்கள் வழக்கம்போலவே நடைபெற்றுக்கொண்டிருந்தன.

மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையே கோபாவேசமான மோதுதல் இருந்தபோதிலும், பிரிவைப்பற்றி அறிவித்தபோது பொதுமக்களினால் அதனுடைய பாதிப்பைப்பற்றி உணர்ந்து கொள்ளுவதற்கு இயலவில்லை. எதிர்காலத்துக்கான தேவைகளை முன்னிட்டு அதன் தலைவர்கள், பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதுவே அதன் முக்கியக் காரணமாகும். லீ கியூவான் யூ, மலேசியக் கூட்டாட்சியிலிருந்து சிங்கப்பூரை வெளிக்கொண்டு வரவும் அதன் காரணமாகத் தீவு நகரத்தை எடுத்துக்கொண்டு, வேறு பல எண்ணங்களுடன், இயன்றவரையில் நாட்டை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதற்காகவே லீ கியூவான் யூ முயற்சி செய்து வந்தார். மலேசியாவின் தலைவர்கள் அவருடைய நோக்கங்களுக்கு எதிராகப் போராடும்பொழுது, அவர் செய்ததைப்போலவே சிங்கப்பூருடன் பிரிந்து போவதற்கு ஒத்துக் கொண்டதைப்போலவே துங்கு நடப்பார் என்பதை ஒருவேளை எதிர்பார்த்து இருக்கமாட்டார்.

இது குறிப்பாகத் தலைகீழாகியது. ஏனெனில் மலேசியா உருவாகி வருகின்ற நேரத்தில் துங்குவும் அவரது ஆதரவாளர் களும் ஏறக்குறைய 20 லட்சத்துக்கும் அதிகமான சீனமக்களைக் கொண்ட சிங்கப்பூரையும், போர்னியோவின் இரண்டு மாநிலங் களையும் ஒருவேளை மூன்றாவதாக வரவிருக்கும் எண்ணெய் வளமிக்க புருநெய் மாநிலமும் அடங்கிய கூட்டாட்சியில் பிரிட்டனுடைய ஒப்புதலுக்குப் பிறகுதான் சேர்த்துக்கொள்ள முடியும் என ஒத்துக்கொண்டார்கள் என்பது கோலாலம்பூரில் பொதுவான பேச்சாக இருந்தது. அதற்கிணையாக அவருடைய கொள்கையைச் சிங்கப்பூர் பின்பற்ற வேண்டுமெனத் துங்கு விரும்பினார். ஆகவே லீ ஏன் முதலில் மலேசியாவில் அரை மனத்தோடு நுழைந்தார் என்பதும் ஒரு வருடத்துக்குப் பிறகு மலேசியாவுக்கு எதிராகத் தன்னுடைய சொந்த அணியை

உருவாக்கத் தொடங்கினர் என்பதும் விளங்கும். ஆகவே துங்குவால் அறிவித்த பிரிவினை ஒப்பந்தம் தவிர்க்க முடியாதது.

கூட்டாட்சியிலிருந்து சிங்கப்பூர் விலகிக் கொண்டது. மலேசியாவில் உள்ள சீனர்கள் பக்கத்திலும் குடியேறிய பிற இனத்தவர்களிடையேயும் பெரியதொரு அளவுக்கு எண்ணத்தைத் தோற்றுவித்தது. மக்கள்தொகையில் அதிகமான சீனர்களையும், சிறுபான்மை இனத்தார்களைப் போன்ற வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட மலேயர்களையும் கொண்ட சிங்கப்பூர் பிரிந்து போனதற்குக் காரணம், அதற்கு இனப்பிரச்சினை கிடையாது என்பதை எல்லோரும் உணர்ந்திருந்தார்கள். போர்னியோ மாநிலமான சராவக்கில் அதிக அளவில் சீனர்கள் குடியேறியிருந்த போதிலும், அதிக ஆக்கிரமிப்பு உணர்ச்சி கொண்ட சிறுபான்மை இனத்தவர்களைப் போன்ற தரத்தையுடையவர்களாக இன்றும் அந்த மாநிலத்தில் உள்ள பின்தங்கிய இனக்குழுவினர்களிடையே இருக்கின்றார்கள். அதே அளவுக்குச் சீனர்கள் சபா மாநிலத்திலும் வசிக்கிறார்கள். அங்கே அவர்கள் ஆதாரமாக வியாபாரம் செய்துவருகிறார்கள். இருப்பினும் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்த இனத்தவர்களாக இருப்பதால் அவர்களால் அரசாங்க அலுவல்களைத் தலைகீழாக்க முடியவில்லை.

ஏறக்குறைய 35 லட்சம் சீனர்களும், 10 லட்சத்துக்கும் குறையாத இந்தியர்களுடன் சேர்ந்து மலேசியாவின் மக்கள் தொகையில் மிகப் பெரியதொரு பகுதியாகவும், அதோடு 45 லட்சம் மலேயர்களும் சேர்ந்து மலேசியாவின் மக்கள்தொகையாக இருந்தது. சீனர்களும், சில இந்தியர்களும் பணத்தை ஈட்டவும் பொருளாதார வசதியோடும் இருந்ததால், மலேயர்கள் அதிகமான நாட்டுப்புற நிலங்களைச் சொந்தமாக்கிக்கொண்டும், அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளை வகித்தும் வந்தனர். மலேசியாவில் மெர்டேகாவுக்கு இக்கட்சிகள் யாவும் இணைந்து போரிட்டன. அம் மண்ணின் குழந்தைகளான மலேயர்கள் மிகவும் முக்கியமானவர்கள் என்பதோடு சுதந்திரப் போராட்டத்தில் முன்னணிப் படையில் நின்றவர்களும் அவர்களே. மலேயாவிலுள்ள சீன லட்சாதிபதிகளுள் ஒரு சிலர் மெர்டேகாவிற்கு ஆதரவாக இல்லை எனச் சொல்லப்பட்டது. பிரிட்டிஷார் இருந்திருந்

தால் சுதந்திரப் போராட்டங்களின் மூலமும் பிற பேரணி இயக்கங்களின் மூலமும் தங்கு தடையின்றி அடுக்கடுக்காகத் தங்கள் செல்வத்தை அள்ளிக் குவிக்க இவர்களை விட்டிருப்பார்களா என்று ஐயப்பட்டார்கள்.

சிங்கப்பூரின் "கிரவுன்" குடியேற்றப் பகுதியின் நிலை முற்றிலும் மாறுபட்டிருந்தது. உண்மையிலே மலேசியாவுடன் சிங்கப்பூருக்கு முழுச்சுதந்திரம் வந்தது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு கொண்டிருந்த நல்லெண்ண உறவாலும், தங்களுடைய சொந்த முயற்சிகளின் மூலமாகவும் பிரிட்டிஷ் ஆளுகையிலிருந்து சிங்கப்பூர்க்காரர்கள் ஓரளவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றார்கள். எந்த விதத்திலும் சிங்கப்பூர்க்காரர்கள் மலேசியாவோடு இணைந்திருப்பதற்கும், அவர்களுடைய சுதந்திரத்தை அடகு வைப்பதற்கும் விரும்பவில்லை. வரலாற்றில் காணப்பட்ட வேற்றுமையின் காரணமாகவும் சீனர்கள் எப்பொழுதும் சிங்கப்பூரில் செல்வாக்குடன் இருந்ததின் காரணமாகவும் இந்நிலை ஏற்பட்டது. சிங்கப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் உச்சகட்டமாக லீ குவான் யூவைப் போன்ற வலிமை வாய்ந்தவரால் இக்கொள்கை பலப்படுத்தப்பட்டது.

மலேசியாவில் உள்ள சீனர்களுக்கும் பிற குடியேற்ற இனங்களுக்கும் (சிங்கப்பூர் நீங்கலாக) இதுவே உரத்த சிந்தனைக்கும் உரிய காரணமாக இருந்தது. வரலாறு இருந்தபோதிலும், புதிய தொரு வகையில் மலேசியாவின் வளர்ச்சியில் தங்கள் பங்கைச் செலுத்துவதற்கும் மலேசியாவின் வாழ்வோடு தங்களை இணைத்துக் கொள்வதற்கும் ஐக்கிய மலேயா தேசிய நிறுவனம் எந்தவகையிலாவது உதவும் என்றும் அவர்கள் எண்ணினார்கள். அரசாங்க அலுவல்களில் உரிய இடத்தைப் பெறுவதற்கு மலேயச் சீனச் சங்கமும் இந்திய தேசிய காங்கிரசும் போராடும் என்று அவர்களுள் பலரும் விரும்பினார்கள். மலேசியாவின், இந்திய சீன இளந்தலைமுறையினர்களுக்கும் முதியோர்களுக்கும் இடையே ஏற்பட்ட இந்தப் பகைமை இந்தோனேசியாவின் மோதல் ஏற்பட்டபோதுகூட இருந்துகொண்டே இருந்தது. மலேயாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்ததற்குப் பின்னால் இது தாற்காலிகமாக வெற்றியடைந்தது.

மலேசியாவின் ஒற்றுமைக்குத் தேவையானவற்றைப் பற்றி ஆராயவும் அவற்றிற்காக ஏதாவது செய்யவேண்டும் என்பதற்கும் துங்கு நிறைய விருப்பம் உடையவராக இருந்தார். நாட்டில் உள்ள இனங்களுக்குத் தாங்களே உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொள்வதற்காகச் சில மாநில மக்கள் வெறி பிடித்தவர்களாக இருந்தார்கள். பல காலமாகச் சுல்தான்களின் ஆட்சியிலிருந்து மாநிலங்களில் ஓரளவுக்கும், கெடா, ஜோகோர், தெரங்கண்ணு முதலிய மாநிலங்கள் வரைக்கும் இந்நிலையிருந்தது. மலேயர்கள் அதிகமாகக் குடியேறிய பகுதியும் தங்களுக்காகச் சீனர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் மலேயர்கள் இருக்கின்ற பகுதியுமான மேற்குக் கடற்கரையோரங்களில் இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலை ஏற்பட்டிருந்தது.

மெர்டேகாவின் தோற்றத்திற்கு முன்னால் பொதுவாக மேற்குக் கடற்கரையிலுள்ள சீனர்களும், நாட்டுப்புறங்களில் மலேயர்களும், பண்ணைகளில் இந்தியர்களும் செல்வாக்குடன் விளங்கினார்கள். கிழக்குக் கடற்கரையோரங்களில் உள்ள நகரங்களிலும், நகரத்திற்கு வெளியேயும் உள்ள சீனத் தொழிலதிபர்கள் பணக்காரர்களாகிக்கொண்டு இருந்தார்கள். பண்ணைகளில் தங்கியுள்ள இந்தியர்கள் தங்களுக்குரிய வேலைகளைத் தவிர வேறெதிலும் அதிக விருப்பம் இல்லாதவர்களாக விளங்கினார்கள். நாட்டின் ஒற்றுமையைக் குலைக்காமல், இந்த மாநிலங்களில் உள்ள தலைவர்களின் கசப்புக்கு ஆளாகாமல் இருப்பதே பிரதம மந்திரியின் குறியாக இருந்தது. ஆனால் சிங்கப்பூர் அரசாங்கமோ இந்த வகையான சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் கவலைப்படாமல், உடனடியாக "மலேசியா மலேயர்களுக்கு" என்றும் வேலையில் இறங்கியது.

இந்தோனேசியாவின் மோதல் முடிந்தபிறகு, அந்த நேரத்தில் சிங்கப்பூரில் நடந்ததைப்போல வேறெங்கிலும் மலேசியாவின் இனத் தொடர்புகள் காரணமாக எந்தவொரு பிரச்சினையும் இல்லை எனலாம். மலேசியாவிடமிருந்து சிங்கப்பூர் பிறந்த சில நாட்களுக்குப் பிறகு, ஆகஸ்டு மாதம் 17ஆம் நாளில் வெளியிட்ட தன்னுடைய சுதந்திர தின வாழ்த்து வழங்கும்போது பேசிய பேச்சிலிருந்து சுகர்னோ மலேசியாவோடு கொண்ட இந்தோனேசி

யாவின் மோதுதல்பற்றிய விஷயத்தில் சிறிதளவு இறங்கி வந்திருப்பதாகக் காணப்பட்டார்.

துங்கு இனத்தைப்பற்றித் தாம் ஆச்சரியப்படவில்லை என்றும் சொன்னார். மேலும் அவர் கூறியதாவது: "சிறுபிள்ளைத்தனமான அரசியல் விளையாட்டை விட்டு என் நாட்டிலுள்ள பல லட்சக் கணக்கான மக்களின் துன்பத்தைப் போக்குவதற்காக ஏதாவதொரு வகையில் உதவிசெய்ய வேண்டுமென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவர்களின் இந்த வருந்தத்தக்க செயலுக்காக என்னைத்தவிர வேறு யாரையும் குற்றம்சாட்டிப் பயனில்லை.

இன்னும் சில வாரங்களில் சுகர்னோ தன் வழியிலிருந்து வெளியே வந்துவிடுவார் எனவும், அதனால் விரைவில் இந்தோனேசியாவில் மோதல் பழங்கதையாய்ப் போய்விடும் எனவும் சில மலேயர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

1966ஆம் ஆண்டில் நான் கோலாலம்பூரில் இருக்கவேண்டியிருந்தது. அப்பொழுது நான் நாட்டில் நிலவிய பொருளாதார முன்னேற்றத்தின் விரிவையும் நிலையான அமைதியையும் ஒற்றுமையையும் கண்டு வியப்படைந்தேன். நான் இது எப்படி முடிந்தது என ஒரு நண்பரிடம் கேட்டேன்; மலேசியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான செல்வம் இருக்கிறது என்பதே அவருடைய விளக்கமாக இருந்தது. இதனால்தான் மலேசியா மற்ற நாடுகளைவிட மாறுபட்டிருந்தது என்று அவர் சொன்னார். எந்தவொரு செயலையும் திறமையோடு செய்வதற்கும் எப்பொழுதும் அமைதி நிலவிய நாடு என மலேசியா விளங்குவதற்கும் அதனுடைய செல்வச் செழிப்பே என்பதில் நம்பிக்கை கொண்டவராகக் காணப்பட்டார்.

"மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை" என என்னுள்ளே எண்ணிக்கொண்டேன்.

12. பெருநிகழ்ச்சிக்குரிய தேர்தல்

மலேசியா எங்கும் ஒருபோதும் உணவுப் பற்றாக்குறை இருந்ததேயில்லை. கூட்டாட்சியிலிருந்து சிங்கப்பூர் வெளியேறிச் சென்றபோதிலும், 1957ஆம் ஆண்டில் மலேயாவின் மெர்டேகாவிலிருந்து தொடர்ந்து இன்றுவரைக்கும் நாட்டில் அதிகவளமும் செல்வமும் குவிந்தவண்ணம் இருக்கின்றன. மத்திய அரசாங்கத்தைப் போன்று கூட்டாட்சி எல்லா மாநிலங்களிலும் செல்வாக்கோடு இருந்தது. யு. எம். என். ஓ-வும், எம். சி. ஏயும் ஆகிய இரண்டு கட்சிகள் முதன்மையாகவும் எம். ஐ. சி. கட்சியானது துணையாகவும் கொண்டு சிறந்த முறையில் நிறுவப்பட்ட கட்சியமைப்பாக அது இயங்கி வருகிறது. மலேயர்கள் நல்ல வேலைகளை அடையவும், சீனர்கள் பணம் திரட்டவும், அரசாங்கத்தின் சிறு வேலைகளில் இந்தியர்கள் நிறைவெய்தவும் வல்ல வகையில் கூட்டாட்சி அரசாங்கத்துக்கு எழுதாத சட்டம் இருப்பதாகக் காணப்பட்டது.

அரசாங்கம் அதிகாரபூர்வமாக மலேயர்களுக்குத் தொழில் நடத்த உதவியபொழுதும், மலேசியாவின் வர்த்தக இனங்களுக்குள் செல்வாக்கோடு இருந்தனர். மலேசியாவில் எல்லாத் தொழில்களும் "அலிபாபா" அடிப்படையில் நடைபெற்றுக்கொண்டு வருவதாக மலேசியாவின் வர்த்தக மந்திரியாக இருந்தபொழுது ஏஞ்சே கிர் ஜோகரி (Enche Khir Johari) அடிக்கடி சொல்லுவார். அலி தன்னுடைய பெயரில் (மலேயர்கள்) வியாபாரத்திற்கான அனுமதிகளையும் ஒப்பந்தங்களையும் பெற்றுக்கொண்டிருக்க, பாபா என அழைக்கப்படும் உள்ளூர்ச் சீனர்களான பாபாக்களுள் ஒரு பாபா (பாபா என்பதற்குச் சீன உதவியாட்கள் என்பது பொருள்) உண்மையிலே தொழிலைக் கவனித்துக்கொண்டு பணம் சேர்த்து வருவார். விரைவில் லாபம் பெறும் நோக்கங்களுக்காக, வெகுகாலமாகவே தொழில்களில் ஈடுபட்டவர்கள் தங்கள் தொழில் சம்பந்தமானவைகளுக்கு ஏன் பிரிட்டிஷார் கூட

தன்னுடைய தொழில் சம்பந்தமானவைகளுக்கு அத்தொழில் தொடர்புடைய ஒருசில முக்கிய மலேயர்களைச் சேர்த்துக்கொண்டு தங்கள் வியாபாரங்களில் ஈடுபடுவது அவர்களுக்கு எளிதாக இருந்தது.

அரசாங்கம் திறமையோடு ஒரு சீனத் தலைவரை நிதி மந்திரியாகப் பதவியில் அமர்த்தியது. கூட்டாட்சிக் கட்சிப் பதவிக்கு வந்ததிலிருந்து நிதி மந்திரியாக இருந்துவரும் தன் சியூ சின் (Tan Siew Sin) ஒருமித்த ஒற்றுமையை விரும்புபவரும், நாட்டையும் நாட்டு மக்களையும் மிகவும் நேசிப்பவருமாவார். தன்னின் தந்தையார் தொழிலதிபரும் நாட்டின் நலன்களில் அதிக அக்கறை கொண்டவருமாவார். தன் சியூ சின் நாட்டின் மலேசியா சீனச் சங்கம் முழுமைக்கும் தலைவரும், சீன மலேயாவின் ஒத்துழைப்பிற்கான வழிவகுத்தவருமாவார். நாட்டின் நிதி விவகாரங்களைத் திறம்பட நடத்துவதில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்.

அவரைப்போலவே, கிர் ஜோகிரி விவசாய அமைச்சராக மாறிய பிறகு, வர்த்தக—தொழில்துறை அமைச்சரான டாக்டர் லிம் சுவீ ஆனின் (Dr. Lim Swee Aun) கீழ் வந்தது. டாக்டர் லிம் முன்னாளில் மருத்துவத்தொழில் புரிந்தவர். அந்தப் பதவிக்கு அவரைத் தேர்ந்தெடுத்தது சிறப்பான ஒரு செயலாகும். அவருக்கெதிராகச் சீனர்களிடமிருந்தும் அதைப்போன்று மலேயர்களிடமிருந்தும் எந்தவிதமானதொரு குற்றச்சாட்டுகளும் இல்லை. அதைப் போன்றே, குடியிருப்பு வசதி அமைச்சராக இருக்கும் கோ கை போ (Koh Kai Boh) வைச் சொல்லலாம். மற்றும் பல சீனர்கள் அரசாங்கங்களில் வேலை செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தொழிலமைச்சராக இருந்த மாணிக்கவாசகமும், தொழில்கள், தந்தி-தபால்துறை அமைச்சராக இருக்கும் வி. டி. சம்பந்தனும் அமைச்சரவையில் இந்தியர்களின் பிரதிநிதிகளாகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள். இதற்கு மேலும் அரசாங்க வேலைகளில் அதிகமான அளவுக்கு இந்தியர்கள் பணிபுரியவும், அப்படிப் பணி புரிபவர்களில் பெரும்பான்மையோர்கள் இரண்டாந்தர வேலை களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தம் முடைய திறமையாலும் முயற்சியாலும், வியாபாரங்களிலும்

தொழிற்சாலைகளிலும் புகுந்திருக்கிறார்கள். சீனர்கள் வியாபாரத்தை ஒரு தொழிலாகக் கொள்ளவும், கல்விகற்ற இந்தியர்கள் தொழிலாளர்களாகவும் அல்லது அரசாங்க அலுவல்களில் நுழைபவர்களாகவும் இருக்க, மலேசியாவிலும், மெர்டேகாவுக்குப் பிறகு புதிய மலேசியாவிலும், புதியதாகத் தோன்றியுள்ள அரசாங்கச் செல்வாக்குப் பெற்ற இனமாக மலேயர்கள் இருந்தார்கள்.

உயர்நிலையில் இருக்கும் மலேயர்களுள், லண்டனில் தான் முதன் முதலாகச் சந்தித்தவரும், பஹாங்குவிலிருந்து வந்தவரும், தன்னுடைய பழைய தொழில் நண்பருமான துன் அப்துல் ரசாக்கைத், துணைப் பிரதம மந்திரியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் துங்கு தேர்ந்தெடுத்தார். துன் அப்துல் ரசாக் தேசீய முன்னேற்றத்துக்கான அமைச்சராகவும் இருந்தார். நாட்டு முன்னேற்றத்துக்கான அமைச்சராகவும் இருந்தார். நாட்டு முன்னேற்றத்துக்காகச் செய்யப்படும் பணிகளுள் பெரும்பாலானவைகளுக்கு அவர் பொறுப்பாளராக இருந்தார். பெரிய திட்டங்களைத் துங்கு தீட்டும்பொழுது, அத்திட்டங்களை ரசாக் புரிந்துகொண்டு அத்திட்டங்களின் அடிப்படையில் அவர் செயல்பட வேண்டும் என்பதே துங்குவின் எண்ணமாகும். நாட்டுப் பணிக்கெனத் தன்னை வழங்கியவர் ஆதலால் தன்னைத் தொடர்ந்து பிரதம மந்திரியின் பதவிக்கு வரவேண்டியவர் என அறிவித்தார். ரசாக்கும் பல நேரங்களில் பிரதம மந்திரியாகவும் பணியாற்றினார்.

ஆனாலும் பல மக்களால் ரசாக் முக்கியமான தலைவராகக் கருதப்படவில்லை. முன்னாள் அரசாங்கத் தொழில்புரிந்தவரும், ஒழுக்கத்துக்கும் அதிகாரத்திற்கும் மதிப்பளிக்கிறவரும், அந்த வேலைகளுக்கானதொரு அதிகத் திறமையுடையவருமான ரசாக்கிடம் பல்வேறு இனச் சமூகத்தின் தலைவராக முடியாததற்கு ஏதோ ஒரு குறை இருக்கிறது. உண்மையிலே அளவிட முடியா அருங்குணம் கொண்டவரும், தொழிலில் நிறைந்த நாணயமுடையவராதலால் துங்குவினால் மறைமுகமாக ரசாக்கை மலேயாவின் தலைவரெனத் தோற்றுவித்தது.

தேசீய விடுதலை இயக்கத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு

வகித்தவரும், அதற்காக ஆரம்பத்தில் போராடியவருமான டாக்டர் இஸ்மாயில் பின் டாக்டர் அப்துல் ரகுமான் (Dr Ismail bin Dr Abdul Rahman), ஐக்கிய மலேயா தேசீய நிறுவனத்தின் தலைவர்களுள் சிறிது மாறுபட்ட கருத்துடையவருமாவார். தம்முடைய வருவாய் நிறைந்த மருத்துவத் தொழிலை விட்டு, விடுதலை இயக்கத்தில் சேர்ந்து, நாட்டில் பல ஆண்டுகளாகப் பொதுவுடைமை எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராக இருந்த தகுதியினால், முதல் உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப் பட்டார். பிறகு, ஐக்கிய நாடுகளின் சபையில் மலேசியாவின் பிரதிநிதியாகவும் பணி புரிந்துவிட்டு, திரும்பவும் மலேசியாவின் உள்நாட்டு மந்திரியாகப் பணிபுரிந்தார்.

மலேயர்களுள் இன்னும் திறமையான தகுதியும் அரசியல் ஞானமும் உடைய தலைவர்கள் உண்டு. பல அமைச்சரவைகளில் இருந்தவரும் கூட்டாட்சிக் கட்சியில் உருவாகிவரும் சிறந்த தலைவர்களுள் ஒருவர் எனக் கருதப்படுபவருமான எஞ்சி கிர் ஜோகரி அவர்களுள் ஒருவர். பல ஆண்டுகளாகக் கூட்டாட்சி யில் கலகம் விளைவிப்பவராகவும் சிக்கலான பிரச்சினைகளில் கூடச் சரியான முடிவை எடுப்பதில் திறமையுடையவருமாக இருந்த தினால் ஜோகரியைப்பற்றி எல்லோருக்கும் நன்கு தெரியும். கூட்டாட்சித் தலைவர்களுள் பல மலேயர்கள், பல்வேறு இனச் சமூகங்களைக் கொண்டதொரு நாடாக மலேசியாவை உருவாக்க வேண்டும் என்பதில் தீவிர நம்பிக்கையோடு அக் குறிக்கோளுக் காக அயராது பாடுபட்டு வருகிறார்கள்.

உண்மையில் புதியதொரு மலேசியாவை உருவாக்க வேண்டும் என்னும் துங்குவின் முயற்சியானது பலவிதத் தடைகளைக் கடக்க வேண்டியிருந்தது. மலேயாவின் ஒரு பகுதியான சிங்கப்பூர் கூட்டாட்சியிலிருந்து வெளியேறிப் போகும்பொழுது, மலேயர்களுக்கு அதிக அளவில் வாய்ப்புக்கள் கொடுக்கப்படு கின்றன என்னும் காரணத்திற்காகத்தான் மலேசியாவை விட்டுப் பிரிந்து செல்லுகிறது என்னும் குற்றம் சாட்டியது. 1964ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டாட்சிக் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான இடங்களைக் கைப் பற்றியது. கிழக்கு மாநிலமான கெலந்தனில் வழக்கம் போலவே

பல்வேறு இனப் பொது நோக்குடன் செயல்பட்டு வரும் கூட்டாட்சிக் கட்சிக்கு ஆதரவு இல்லாமல் இருந்தது. பல்வேறு இனக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்கு 1965ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கூட்டாட்சியிலிருந்து சிங்கப்பூரின் வெளியேற்றம் அதிர்ச்சியை அளித்தது. இதற்காக ஒருவரும் எந்த விதமானதொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மலேசியாவின் குறைகள் ஒருபோதும் வெளிப்படையாகத் தெரியாது என்று நம்பியதினாலும், எல்லோருக்கும் நல்வாழ்விற்கான பணியில் ஈடுபட்டதினாலும், நாட்டில் கூட்டாட்சிக் கட்சியானது நிலைத்த உறுதியான அரசியல் அமைப்பாக இருந்தது.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து சென்றதற்குப் பிறகு அதைத் தொடர்ந்து உடனே ஏற்பட்ட இந்தோனேசியாவின் ஜனாதிபதி சுகர்னோவின் வீழ்ச்சி மலேசியாவில் மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருந்தது. மலேசியாவுக்கு எதிராக நீண்ட காலமாக நடைபெற்று வரும் மோதல் ஒரே நாளில் முடிந்தது. இந்தோனேசியாவில் தோன்றிய புதிய அரசானது, நாட்டில் அமைதி நிலவச் செய்யும் பணிகளில் வேகமாக ஈடுபட்டது. மலேசியாவோடு நட்புறவு கொள்ள முன் வந்தது. அதை மலேசியா உடனே ஏற்றுக்கொண்டது. போர்னியோ மாநிலங்களிலும், மலேசியாவின் மற்றப் பகுதிகளிலும் அமைதி திரும்பவும் நிலவியது. வெளி ஆக்கிரமிப்பு நீங்கியது. மலேசியா அமைதியும் வளமும் நிறைந்ததொரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது.

இந்தோனேசியாவின் மோதல் முடிந்த பிறகு வந்த ஆண்டுகளில் மலேசியாவில் ஏற்பட்ட மாறுதல்கள் பாராட்டத்தக்கவைகளல்ல. அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும் தேசீயப் பாராளுமன்றத்தில் கடுமையான விவாதங்களுக்கு உள்ளாகியது. பெரும்பான்மையோரின் கட்சியாக இருந்தபடியால் ஒவ்வொரு எதிர்ப்பையும் தாண்டி வர முடிந்தது. இதே நேரத்தில் எதிர்க்கட்சியினர்களும், மெதுவாக மக்களின் செல்வாக்கைப் பெறத் தொடங்கினார்கள். இது வர வரத் தெளிவாகத் தெரிந்தது. சீனர்கள், இந்தியர்கள் என்னும் இரண்டு இனங்களும் அரசாங்கத்தில் நல்ல முறையில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்ததினாலும் இவ்விடங்களிலிருந்து பெரும்பான்மையான அளவுக்கு எதிர்ப்புகள் வந்தன.

பேரக்கிலுள்ள மக்கள் முன்னேற்றக் கட்சியும், ஜெராகன் ரயாத் மலேசியாவும் குறிப்பிடத்தக்க கட்சிகள் அல்ல வென்றாலும், அவைகள் மக்களின் செல்வாக்கைப் பெற்று வருகின்றன எனலாம். கெலந்தனிலும் அதற்குப் பக்கத்து மாநிலங்களிலும் உள்ள பெரும்பான்மையான முஸ்லிம்களின் செல்வாக்கைக் கெலந்தனிலுள்ள மலேயர்கள் முஸ்லிம் கட்சியும் பெற்று வருகின்றது. துங்குவும் அவருடைய ஆதரவாளர்களும் இக்கட்சிகளையும் இவைகளின் செயல்களையும் வளர்ந்து வரும் எதிர்க் கட்சியின் சிறந்த அடையாளமாக அவைகளை வரவேற்றார்கள். அவைகளோடு எதிர்த்துக் குடியரசு முறையில் செயலாற்றுவதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் இக்கட்சிகள் ஒருகாலத்தே, மலேசியாவை எப்படி உருவாக்க வேண்டும் என்னும் அவர்களின் கருத்துகளுக்கு மாறாக வலிமை வாய்ந்ததொரு எதிர்ப்பாக மாறும் என்பதை அவர்கள் உணரவேயில்லை.

அதே நேரத்தில் மலேசியாவுக்கு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய பல பிரச்சினைகள் இருந்தன. சாலைகளும், பாலங்களும், பள்ளிகளும், கல்வி நிலையங்களும், நவீன விதமான நிலையங்களும், மக்கள் மனமகிழ் மன்றங்களும் நாடெங்கிலும் உருவாகிக்கொண்டிருந்தன. போர்னியோ மாநிலங்களின் முன்னேற்றத்திற்குக் குறிப்பாக இந்தோனேசியாவோடு ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு, வெகுவேகமாகப் பல இலட்சக்கணக்கான டாலர்களைக் கொண்டு வேலை நடைபெற்று வருகிறது. ஆசியா வின் வளம் பொருந்திய மாநிலங்களுக்குள் ஒன்றெனப் புகழ் பெற்ற மலேசியா உருவானதற்குப் பின்னால், இந்தோனேசியா வோடு ஏற்பட்ட மோதுதலின்போது ஏற்பட்ட பாதுகாப்புச் செலவைத் தானே ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. நிதி குறைவில்லாமல் இருந்தாலும், துங்குவின் மேலும் மக்களுக்கு இன்னும் அதிக நம்பிக்கை இருந்தது. ஒரு பக்கத்தே முன்னாள் குடியேற்ற அரசோடு கொண்ட தொடர்புகள் மிகவும் நல்ல நிலையிலும் உற்சாகம் ஊட்டுவனவாகவும் இருந்தன. அதன் விளைவாகக் கோலாலம்பூரிலும், மாநிலத்தின் மற்றப் பகுதி

களிலும் புதிய கட்டடங்கள் தோன்ற ஆரம்பித்தன. மலேசியா முழுவதிலும் அதிக அளவில் பணம் புழக்கத்தில் இருந்தது.

இவ்விதமாக எங்கும் அமைதியோடும் வளத்தோடும் மலேசியா உருவாகியது. போர்னியோ மாநிலங்களுடன் சேர்ந்து மலேயா மலேசியாவாக மாறியது தவிர்க்க முடியாததாக இருந்தது. நாட்டில் அதிக அளவில் சீனர்களின் தொகை இருந்தாலும், இந்தியர்களின் மக்கள்தொகை குறைவாக இருந்தாலும் பேச்சுக்களின் மூலம் ஏற்பட்ட ஒத்துப்போதலினால் பிறந்தது இம் மாநிலமேயாகும். மலேசியா மலேயா மாநிலமான அரசியலமைப்புப்படி இருந்தபோதிலும் சீனர்களோ, இந்தியர்களோ ஒருவரைக்கூட வெளியேற்றவோ, துன்பப்படுத்தவோ அல்லது சேர்த்துக் கொள்ளவோ இல்லை. நாட்டில் குடியேறிய சிறுபான்மை இனத்தவர்கள் அந் நாட்டுக் குடிமக்களானதோடு அவர்களது பண்பாடுகளும் போற்றப்பட்டன, இந்தச் சலுகைகளுக்குப் பதிலாக மலேயர்கள் அரசியல் சலுகைகளைப் பெற்றுக் கொண்டதுடன், செல்வாக்குள்ள அரசியலதிகாரத்தில் இருந்தார்கள். இவ்வையங்களுடன் பல சமரசங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இன்னும் பெரும்பான்மையான மலேயர்கள் சீனர்களைப் பற்றியும் மலேசியாவுடன் அவர்கள் கொண்ட பக்தியைப்பற்றியும் தங்கள் சந்தேகங்களை அப்படியே வைத்திருக்கிறார்கள். பல மலேயர்கள் ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை வேண்டுமென்பதற்காக மலேயர்களால் விரும்பப்படும் துங்குவும் அவரது ஆதரவாளர்களும் தாங்களாகவே ஓர் இயக்கத்தை ஆரம்பித்தபொழுது பொதுவாகச் சீனர்கள் அந்த இயக்கத்தில் விருப்பம் இல்லாதவர்களாக இருந்ததை நினைவுபடுத்திக் கொள்ளுகிறார்கள். உண்மையிலே பல சீனர்கள் மெர்டேகா என்பது ஒருபோதும் உண்மையாகிவிடாது என்று நம்பிக்கையில்லாமல் இருந்தார்கள். சிலர் சுதந்திர இயக்கத்துக்கு எதிர்ப்பாகவும்கூட இருந்தார்கள். உண்மையிலே இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் குறிப்பாக இது சீனத் தந்திரம் என்று எண்ணவேண்டாம். பல இனக் குழுக்களின் சிறப்பாக வியாபாரக் கூட்டங்களின் இயக்கி

எண்ணம் இலாபமேயாகும். தங்கள் தாய்நாட்டைவிட்டு ஒரு தடவை குடியேற்ற ஆதிக்கமானது வெளியேறிவிட்டால் தங்களுடைய தொழிலினுலும் பொருளாதார உயர்வின் மேலுள்ள விருப்புகளினுலும் அதிகமாக பயப்பட்டதன் காரணமாக உள்ளூர் மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் விருப்பம் இல்லாதவர்களாக இருந்தார்கள்.

மலேசியாவோடு முரண்பட்ட பிரச்சினைகளுக்காகக் குடியேற்றரசினை எதிர்ப்பதில் எந்தவொரு கொள்கையும் இல்லை. மலேசியாவின் இனப்பிரச்சினைகளுக்குக் குடியேற்ற ஆதிக்கவாதிகளால் வேற்று நாட்டு மக்களின் கட்டுப்பாடற்ற வருகையும், அவற்றை மக்கள்தொகையிலிருந்து காலப்போக்கில் கூடிய வரைக்கும் இனங் கண்டுபிடிப்பதும், குடியேற்றங்களில் உள்ள பிரச்னைகளுக்குக் குடியேற்ற வழிகளில் தீர்வு என்பதும் இல்லை. குடியேற்ற எதிர்ப்பு இயக்கமாகவும், பொதுவுடைமைக் கட்சிக் கூட்டாட்சி எதிர்ப்பு இயக்கமாகவும் ஒன்று சேர்ந்து இயங்கி வருகின்ற நாட்டில் உள்ள மூன்று இனக்கட்சிகளுக்குள் ஏற்பட்ட சமரசங்களின் அடிப்படையில் இந்த உண்மையை முழுவதும் உணர்ந்து கொண்டதுமாகும். 1960ஆம் ஆண்டின் பிற்பகுதியில் என்ன வரும் என்பதை, அந்த நேரத்தில் கண்டு சொல்லுகின்றவர்கள் எவருமில்லை என்பதே அப்பொழுதுள்ள பிரச்சினையாகும். அல்லது அப்படி ஒருவர் கண்டுபிடித்து அதிலிருந்து துளிர்த்து வரும் இனவேற்றுமையைத் தடை செய்வதற்கு ஏற்றதொரு நடவடிக்கையை எடுப்பதற்கு ஒருவரும் இல்லை எனலாம்.

சிங்கப்பூர் இதற்கு முற்றிலும் மாறுபட்டதொரு சூழலில் இருந்தது. அங்கு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே சீனர்கள் குடிபெயர்ந்து வருவது அதிகமாகவே இருக்கிறது. அதனுடைய விளைவாக எல்லா இனங்களும், சிறப்பாக மலேயர்களும் இந்தியர்களும் வரத் தொடங்கினுர்கள். அவர்கள் குறைந்த எண்ணிக்கையுடைய இனத்தவர்களாகவே இருந்தார்கள். சிங்கப்பூரில் உள்ள மலேயர்கள் கோலாலம்பூரில் உள்ள கூட்டாட்சி அரசாங்கத்தின் கொள்கைகளை இயன்ற வரையில் சிறப்பாகப் பின்பற்ற முயற்சி செய்ததோடு, லீ கியூவான் யூ வின் அரசாங்கத்தின் எதிர்க்கட்சியினரை உற்சாகப்படுத்தி வந்தார்கள்.

சிங்கப்பூரில் இன வேற்றுமைகள் உச்ச நிலையை அடைந்த பொழுது மலேயர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே கலகங்கள் ஏற்பட்டன. காவல் துறையினர்களாலும் அரசாங்கத்தாலும் திறமையாக ஏற்றதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும், இக்கலகங்கள் நீண்ட நாட்களாக நடைபெற்றன. துறைமுக நகரத்தில் உள்ள பொதுவுடைமை ஒற்றர்களின் செயல்களாலும், சீன ரகசியச் சங்கங்களின் "தக்கர்களால்" நிகழ்த்தப்படும் கொலைச் செயல்களாலும் இக்கலகங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவையே இதற்குக் காரணங்களாகும். உள்ளூர் நிகழ்ச்சியே குறிப்பிடத்தக்கதொரு தேசப் பிரச்சினையாக முக்கியத்துவம் பெற்றது. மலேசியாவில் உள்ள இந்த இனச் சூழல் எவ்வளவு நுண்ணியது எனத் தெரிந்தபோதிலும், வடக்கு ஜோகோரின் சதுப்பு நிலங்களில் இதைப்போன்றதொரு சூழ் நிலையே அங்கும் உருவாகும் என ஒருவரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

சீனர்களுக்கு அவர்களின் பொதுவான நோக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டதைக் காண முடிந்தது. மலேசியாவிலாவது அல்லது சிங்கப்பூரிலாவது, பெரும்பான்மையான சீனர்கள் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தங்கள் நாட்டில் பொது வுடைமை அரசாங்கம் அமைத்ததிலிருந்து ஒருபோதும் சீனவுக்குச் சென்றதில்லை. இருந்தபோதிலும் சீனவிலிருந்து கொண்டுவரப் பட்ட வாழ்க்கை விதத்தையும், சமூக அமைப்பையும், தங்கள் தாய்நாட்டில் இவைகள் வெகு வேகமாக மாறியபொழுதும் மலேசியாவில் விடாது காப்பாற்றி வந்தார்கள். பல மலேசியச் சீனர்கள் சீனவில் நடப்பதை மிகுந்த விருப்பத்துடனும் அத னுடைய முன்னேற்றங்களை மிகுந்த ஆவலுடனும் கவனித்து வந்தார்கள். அரசியல், இராணுவம், உளவியல், பொருளாதாரம் முதலான எல்லா வகைகளின் மூலமாகவும் ஏற்படுத்துகின்ற நெருக்கடி நிலைமையின் காரணமாக அகில உலக மோதலை ஏற் படுத்திக்கொள்ளுகின்ற சீனவின் கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், சீனவின் சாதனைகளைக் கண்டு எப்படியோ அவர்கள் பெருமை கொண்டார்கள். முடிவாக மலேசியாவில் அல்லது சிங்கப்பூரில் உள்ள சீனர்கள் மாசேதுங்குவின் ஆதர வாளர்கள் என்பது இதன் பொருள் அன்று. அவர்கள் சீனவின்

தலைவரையும் அவருடைய கொள்கைகளையும் மறைமுகமாகப் போற்றுகிறார்கள் என்பது இயற்கையான ஒன்றாகத்தான் இருக்கிறது.

மலேசியாவில் உள்ள சீனர்கள் தாய்நாட்டின்மீது கொண்ட பற்று சில நேரங்களில் சில விந்தையான முடிவுகளைத் தந்திருக்கின்றது. 1962ஆம் ஆண்டில் இந்தியாவின்மீது சீனா படையெடுத்து வந்ததைத் துங்கு கடுமையாக எதிர்த்தார். அந்த நேரத்தில், அப்பொழுது இந்தியாவில் இருந்த மலேசியாவின் பிரதம மந்திரி, இந்தத் தாக்குதலைப்பற்றிச் சொல்லும்பொழுது "அபாயத்தின் சிவப்பு அடையாளம்" என விவரித்தார். பிறகு, தாய் நாட்டிற்குத் திரும்பியபொழுது தானே தலைவராக இருந்துடன் "ஜனநாயகக் காப்புநிதி" என்ற பெயரில் இந்தியாவுக்கு உதவி செய்யவேண்டும் என்றும் நோக்கத்துடன் நிதி சேர்க்கத் தொடங்கினார். ஜனநாயகக் காப்பு நிதிக்கு அன்பளிப்புக்கள் வந்து குவிந்துகொண்டேயிருந்தன. ஆனால் அதிகமான அளவுக்கு இந்தியர்களிடமும் மலேயர்களிடமும்தான் நிதியுதவி வந்தன. அதைப்போன்று கூட்டாட்சிக் கொள்கையில் கையெழுத்திட்ட சீனத் தொழிலதிபர்களிடமிருந்து இதற்கு நிதியுதவி வந்தது. மலேசியாவில் உள்ள சில சராசரி சீனர்களும் "ஜனநாயக நிதிக்கு" நிதியளித்தது விந்தையான உண்மையாக இருக்கின்றது. ஒரு பக்கத்தே இந்தியாவுக்கு எதிராகச் சீனப் படைகள் வெற்றிபெற வேண்டும் எனச் சீனர்கள் உள்ளுக்குள் பெருமிதம் கொண்டிருந்தார்கள்.

நாட்டில் தங்களுக்குக் கிடைத்திருக்கும் சலுகைகளின் காரணமாகச் சீனர்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்றபோது, சிங்கப்பூரிலும் மற்றும் சீனர்கள் செல்வாக்கோடு இருக்கின்ற மாநிலங்களிலும் உள்ள சீனர்கள் நிம்மதியில்லாத மனத்துடன் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்குப் பலர் தங்கள் தாய் நாட்டிலுள்ள சீனர்களைப் போற்றுகிறார்கள். இருந்தபோதிலும் ஒரு சிலரே திரும்பிப் போய் அங்கே குடியேறுவதற்கு விருப்பம் கொள்ளுகிறார்கள். அதே நேரத்தில் மலேசியாவில் மலேசியர்களின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய அந்த உணர்ச்சியை

நீக்க வேண்டுமென்பதற்காக மலேயர்களால் சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.


மலேயாவில் உள்ள சீனர்களிடையே இந்த மாதிரியானதொரு தாழ்வுணர்ச்சியானது பீடித்திருந்தது. இதற்கும் குறைந்த அளவுக்கு, மலேசியாவில் உள்ள தங்களுடைய நிலைமையின் காரணமாக அதேபோன்றே இந்தியர்களும் எண்ணுகின்றனர்கள். இது, குறிப்பாகத் தற்காலத் தலைமுறையினரிடையே இருக் கின்றது. இம் மலேசியா இந்தியர்களுள் சிலர், தங்களுக்குத் திறமையிருந்தபோதிலும், ஆளுநர்களிடமிருந்து போதுமான பாராட்டுதல் கிடைக்காதபொழுது நிலைகுலைந்து போய்விடுகின் றனர். மற்றும் சிலர், தங்களுடைய மலேய நண்பர்கள் எந்த வழியில் ஆளுநரின் ஆதரவைப் பெற்றனர்களோ, அதைப்பற்றி பொறாமைப்பட வைத்தது. இந்த நேரத்தில்தான், அவர்கள் மலேசியாவில் இருக்க விரும்பவில்லையானால் சீனாவுக்கோ அல்லது இந்தியாவுக்கோ திரும்பிப் போகவேண்டியதுதானே என மலேயர் கள் இருக்குமிடங்களில் பேசப்பட்டது. ஆனாலும் அவர்களும் மலேசியாவில் முளையடித்தாற்போன்று இருப்பதால், மலேயாவை விட்டு மாறிப்போவதற்கு விரும்பவில்லை.

தங்கள் இனத்துக்காக நாணயமான, உண்மையான மக்களைக் கொண்டு சீரியமுறையில் உழைத்துவரும் மலேசியா சீனச்சங்கத் தின் தலைமைப் பதவிமீது சீனர்களுக்குள்ளாகவே நிலவிவந்த அதிருப்தியானது உச்சநிலையை அடைந்தது. எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் குறைவாக இருந்தபோதிலும், இந்திய இனமும் மலேசியா இந்தியக் காங்கிரசுக்கும் அதனுடைய தலைமைக்கும் எதிராக இதைப்போன்றதொரு குற்றச்சாட்டினைக் கொண் டிருந்தது. ஆகவே இம் மக்கள் தங்களுக்குள்ளாகவே ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு மலேயர்களுக்கு இருக்கின்ற உரிமைகளைப்போன்று தாங்கள் நினைக்கின்றவைகளையே தங்க ளுக்கு உரிமையாய் இருக்கவேண்டும் என வாதாடினர்கள். அவர்கள் அதற்கேற்ற சரியான அரசியல் வழிகளைத் தேர்ந் தெடுத்தார்கள்.

1969ஆம் ஆண்டு மே மாதம் மலேசியாவில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. 1957ஆம் ஆண்டின் மெர்டேகாவிலிருந்து நடை




9. சுத்தப்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகளுக்கு ரப்பர்ப்பால் வண்டிகள் மூலம் (Tankers) ரப்பர்ப்பால் கொண்டு செல்லப் படுகிறது.



10. உலகத்தின் தேவைக்கான தகரத்தில் 40 விழுக்காடுகளுக்குக் குறைவில்லாமல் மலேசியாவிலிருந்து வழங்கப்படுகிறது. படத்தில் பல லட்சக்கணக்கான விலையுள்ள தகர வாரி இயந்திரம் இயங்குவதைக் காணலாம்.



11. ஜோகோதிலுள்ள ஒரு தோட்டத்திலிருந்து ஒரு நாளில் சேகரித்த அன்னாசிப் பழங்கள்.



12. ரப்பர் வெட்டுதல்—ரப்பர்ப்பால் வடிவதற்கு ஏற்ற வகையில் 1/16 அங்குல அளவிற்கு மரப்பட்டையை வெட்டுவதில் திறமை தேவைப்படுகிறது.

பெற்ற தேர்தல்களுள் இது மூன்றாவது தேர்தல். மலேசியா உருவாகிய சில மாதங்களுக்குப் பிறகு, இந்தோனேசியாவின் "கான்பிரண்டாசி"ப் பேரணி எதிர்ப்புக்கிடையே, 1964ஆம் ஆண்டு முடிவில் இரண்டாம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. ஆனால் மூன்றாவது தேர்தல் அமைதியான சூழலில் நடைபெற்றது. வாக்குப் பதிவுகளில் எந்தவோர் எதிர்பாராத நிகழ்ச்சிக்கும் இடமில்லாது போய்விட்டது. அவ்வமைதியே தேசத்தின் வாக்குகள் எண்ணப்பட்டபொழுது நிலவியது.

நாட்டில் எல்லாவிதமான முரண்பட்ட கருத்துக்களினாலும் அரசியல் தலைவர்களின் சாரமற்ற பேச்சுக்களினாலும், இரண்டாவது, மூன்றாவது தேர்தல்களின் இடைக்காலத்தே புதிய அரசியல் கட்சிகள் தோன்றியபடியாலும், ஒரு சிலர் மக்கள் மலேசியாவில் நடந்ததைப்போன்று நடக்கின்ற நிகழ்ச்சிகள் புதிய வழியை மாற்றியமைக்கும் என எதிர்பார்த்தனர். வாக்குப்பதிவு நாளுக்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே தீவிரமான தேர்தல் பிரசாரப் பேரணிகள் உருவாக்கப்பட்டன. ஆனாலும் நாடெங்கிலும் எந்தவிதமானதொரு குழப்பமும் இல்லை. அதனால்தான் தேர்தல் முடிவுகள் எதிர்பாராததொரு செய்தியாக வந்தது.

மத்தியப் பாராளுமன்றத்தில் கூட்டாட்சிக் கட்சியானது பெரும்பான்மையான இடங்களில் வெற்றியடைந்தது. சபா மாநிலத்தில் (வடக்கு போர்னியோ) பத்துத் தொகுதிகளில் கூட்டாட்சிக் கட்சி உறுப்பினர்கள் போட்டியின்றி வெற்றி கண்டனர். கிழக்கு மலேசியாவில் நடைபெற்ற தேர்தல்களில் என்ன நடைபெற்றது என்பதில்லாமல், ஆளுங்கட்சிக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆதரவு இருந்தது. மேற்கு மலேயாவில் கிடைத்த வாக்குகளில் ஏறக்குறைய ஐம்பது விழுக்காடுகளுக்கு மேலான வாக்குகளை இழந்தது. அதாவது இருபத்திரண்டு இடங்களில் தோல்வி அடைந்தது. கூட்டாட்சிக் கட்சித் தேர்தல் பேரணியினர்களுக்குப் பெரியதோர் அதிர்ச்சியாய் இருந்தது.

மாநிலத் தேர்தல் நடைபெற்றதிலிருந்து கிடைத்த அனுபவம் உற்சாகமூட்டுவனவாக இல்லை. இதற்கிணையாகக் கெலந்தன் மாநிலத்திலும் முழு மலேயன் இஸ்லாமியக் கட்சியானது (Pan-Malayan Islamic Party) அதிக அளவிற்கு அதிகாரத்தைக்

கைப்பற்றியது. பெர்லிஸ் மாநிலமும் பி. எம். ஐ. பி. (PMIP)யின் கைக்குச் சென்றது. இதைப்போலவே தெரங்கண்ணு மாநிலத்திலும் இக் கட்சியானது குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றியடைந்தது. பெனங் மாநிலத்தில் இருபத்திநான்கு இடங்களுக்கு நான்கு இடங்களுக்குத்தான் கூட்டாட்சிக்கட்சி பிடிக்கமுடிந்தது. பேரக் மாநிலத்தில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்க இன்னும் இரண்டு இடங்கள் தேவையாக இருப்பினும் கூட்டாட்சிக் கட்சி என்னும் முக்கிய அரசியல் கட்சியாக விளங்குகிறது. கோலாலம்பூர் அமைந்திருக்கின்ற செலாங்கோர் மாநிலத்தில் சிக்கலானதொரு நிலையும் அரசியல் பிரச்சினையும் இருக்கின்றன. தீபகற்பத்திலுள்ள பதினொரு மாநிலங்களைக் கொண்ட பழைய மலேயாவில் இப்பொழுது ஏழு மாநிலங்கள்தான் கூட்டாட்சிக் கட்சியின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது.

கூட்டாட்சிக் கட்சியினுள் இணைந்த கட்சியான மலேசிய சீனச்சங்கம், மலேயாவின் பொதுத் தேர்தல்களில் அதிக இடங்களை இழந்ததால், 1959ஆம் ஆண்டில் அக் கட்சி இருந்த நிலைமைக்கும் தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிட்டது. வர்த்தகத் தொழில் மந்திரியான டாக்டர் லின் சுவீ அவுன்னின் (Dr Lin Swee Aun) தோல்வி, எதிர்பாராத முடிவுகளுள் ஒன்றாக இருந்தது. 1964ஆம் ஆண்டின் தேர்தலில் 13,000 வாக்குகளுக்கு அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்த அவர், 1969-ல் ஜெராகன் கட்சியின் பெயர் தெரியாத உறுப்பினரால் ஏறக்குறைய 5,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டார். ஜெராகன் கட்சித் தலைவர் டாக்டர் தன் சி கூன் (Dr Tan Chee Khoon) கோலாலம்பூரில் கூட்டாட்சிக் கட்சியின் உறுப்பினரை 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். பேரக் மாநிலத்தில் உள்ள மக்கள் முன்னேற்றக் கட்சியின் உறுப்பினரான எஸ். பி. சீனி வாசகத்தின் வெற்றி நிச்சயமாக எதிர்பார்த்த முடிவாக இருந்தாலும், 2,200 வாக்குகள் அதிகத்தில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தது ஒவ்வொருவரையும் வியப்பிலாழ்த்தியது.

கூட்டாட்சிக் கட்சி இன்னும் பல தோல்விகளைக் கண்டது. ஆனால், தேர்தலில் அதிகமான இடங்களை இழந்ததற்காக

மலேசிய சீனச்சங்கத்துக்கு ஆதரவாகப் பேச ஒருவரும் தயாராக இல்லை. ஐக்கிய மலேசிய தேசீய நிறுவனம் குறிப்பாக வடக்கு மாநிலமான கெடாவிலும் ஒரு சில இடங்களை இழந்தது. மலேசிய சீனச் சங்கத்துக்கும், மற்றும் பிற சீனச் சங்கத்துக்கும் கிடைத்த ஆதரவுக்கெதிராக இந்தப் போக்கு இருந்தது. ஏனெனில் இந்தக் கட்சிகள் மலேயரல்லாதவர்களுக்காக அதிக அளவில் உரிமைகள் வழங்குமாறு பேசிவருகின்றதே இதற்குக் காரணமாகும். பெனங்கு, பேரக், செலாங்கோர் முதலிய மாநிலங்களிலும், மற்றும் பிற மாநிலங்களிலும் தேர்தலில் வெற்றி அடைந்தவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்களேயாவார்கள்.

அரசியல் நிகழ்ச்சியில் பொறுமைகளுக்கும், பீதிகளுக்கும், சந்தேகங்களுக்கும் அதிக இடம் இருப்பதாகத் தெரிகிறது. பாராளுமன்றத்தில் மலேசிய சீனச் சங்கத்தின் 13 இடங்களுக்கு எதிராக, ஐக்கிய மலேசிய தேசீய நிறுவனத்துக்கு 51 இடங்கள் கிடைத்திருப்பதால் புதிய அரசாங்கத்துக்கான அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதற்கு அதிகமான உரிமைகள் இருக்க வேண்டும் என எண்ணியது. அமைச்சரவையில் உள்ளவர்களின் பெயர்களை வெளியிடுவதற்கு முன்னால் பிரதம மந்திரி கட்சியிடம் கலந்தாலோசிப்பார் என்று அவர்கள் எண்ணினார்கள். பத்திரிகைக்கு ஓர் அரசியல்வாதி, நிச்சயமாக யு. எம். என். ஓ. (UMNO) பதவியில் இருக்கும் இந்த உண்மையை எவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்'' என்றார்.

தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளினால் பலம் குறைந்ததின் காரணமாகக் கூட்டாட்சிக் கட்சியோடு பதினைந்து ஆண்டுகள் இணையாக இருந்த மலேசிய சீனச்சங்கம் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்தது. இருப்பினும் எம். சி. ஏ. உறுப்பினர்கள் தொடர்ந்து கூட்டாட்சிக் கட்சியின் உறுப்பினர்களாகவே இருப்பார்கள்.

எம். சி. ஏ.-யின் மத்தியச் செயற்குழுவானது அதனுடைய தேசீயத் தலைவரான தன் சியு சின்னின் தலைமையின்கீழ் கூடிய பொழுது இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

ஏறக்குறைய எம். சி. ஏ. யின் முக்கிய உறுப்பினர்களும் கட்சி அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.

அனைவரும் கட்சிக்கூட்டத்தில் பொதுத்தேர்தலில் பல உறுப்பினர்களின் தோல்விகளைத் தொடர்ந்து கட்சியின் நிலை எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி "துன்பந்தர வல்லதொரு மறுமதிப்பீடு" ஒன்று செய்வதற்காகக் கூடினார்கள். அடைத்த அறைகளுக்குள்ளே கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்ததிலிருந்து இரண்டரை மணிக்குப் பிறகு, தன் சியு சின் கீழ்க் கண்ட அறிக்கையைப் படித்தார்:

"பொதுத்தேர்தல்களில் ஏற்பட்ட முடிவுகள் அவர்களுடைய விருப்பங்களைப் பிரதிபலிப்பதால், நாட்டில் உள்ள சீனர்கள் எம். சி. ஏ.-வை அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு மறுத்துவிட்டார்கள் எனலாம். பாராளுமன்றத்தில் ஜனநாயகத்தை மேற்கொண்டிருக்கின்ற அரசியல்வாதிகள் போன்று எம். சி. ஏ. இந்த வகையில் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சூழலின்கீழ், எம். சி. ஏ.-க்கு மாற்றுவழியில்லை. ஆனால் அரசாங்கத்திலிருந்து கலந்து கொள்ளுவதில் விலகியிருந்தது அமைச்சரவையில் எந்தப் பதவியையும் ஏற்றுக்கொள்ளுவதற்கு எம். சி. ஏ. பிரதிநிதியும் ஆயத்தமாக இல்லை. கூட்டாட்சி அரசாங்கத்திலோ அல்லது ஒவ்வொரு மாநிலங்களுக்கும் உரியதான செயற்குழுக்களில் ஏதாவதொரு பதவியில் இருக்க எம். சி. ஏ.-க் குழுவினரில் ஒருவரும் முன்வரவில்லை. எப்படியிருப்பினும் எம். சி. ஏ. அரசாங்கத்தோடும் இருந்துகொண்டு அதன் உறுப்பினர்கள், கூட்டாட்சி மாநிலஅளவுகளில் கூட்டாட்சித் தேவைப்படுகின்ற அளவுக்குப் பெரும்பான்மையான ஆதரவை அளித்து வந்ததால், கூட்டாட்சிக் கட்சியானது பதவியில் தொடர்ந்து இருந்துவர முடிந்தது.

எம். ஐ. சி.-யின் தேசியத் தலைவர் வி. டி. சம்பந்தன் "கூட்டாட்சியிலிருந்து எம், ஐ. சி. விலகுமா என்னும் கேள்விக்கு இங்கு இடமில்லை. இந்த நாட்டில் உள்ள இந்திய இனத்தார்கள் மொத்தமாகத் தங்கள் வாக்குகளைக் கூட்டாட்சிக்கு அளித்ததினால் நாங்கள் திருப்தி அடைகிறோம்" என்றார்.

எம். ஐ. சி.-யால் தேர்தலில் இடம் அளிக்கப்பெற்றவர்களைக் காட்டிலும், உண்மையிலே, 1969ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் கணிசமான அளவுக்கு அதிகமாகவே இந்தியர்கள்

பல்வேறு தொகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்தார்கள் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

மலேய சீனச்சங்கத்தின் தீர்மானமும், ஐக்கிய மலேய தேசிய நிறுவனத்தின் தூண்டுதலினால் ஏற்பட்ட நெருக்கடியினாலும் புதிய மந்திய அரசாங்கத்தை உருவாக்க வேண்டியிருந்தது. தேர்தல் முடிவுகளினாலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றங்களாலும் கோலாலம்பூர் நகரம் முழுவதும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது. பிரதம மந்திரி வடக்கு மலேயாவிலுள்ள தனது சொந்த ஊரான அலோர் ஸ்டாரிலிருந்து (Alor Star) திரும்பிவந்து உடனடியாக அமைச்சரவையை அமைப்பதற்காக ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறேன் என அறிவித்தார். வரப்போகிற அவருடைய பதவிக்கால ஓய்வைப்பற்றிய வதந்திகளில் எந்தவிதமானதோர் உண்மையும் இல்லையென அவர் சொன்னார். "நான் இந்த நாட்டை ஒருபோதும் இம் மக்களுக்காக (எதிர்க்கட்சியினர்களுக்காக) விட்டுக்கொடுக்கப் போவதில்லை" என்றார் அவர்.

13. இனக் கலகங்கள்

இவ்வாண்டுகளில், மலேயாவில் உள்ள பல்வேறு இனச் சமூகம் என்பது மலேயாவின் அரசியல் அதிகாரம் பற்றியதொரு கேள்வியை மறைக்கும் சாதனமாக இருக்கிறது என்றும் தென் கிழக்கு ஆசியாவில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு வெற்றியடைந்த செய்தியை மறுக்கும்படியாக நம்பிக்கையளிக்கக்கூடிய வகையில் மலேசியா அவற்றை எடுத்துச் சொல்ல வேண்டியதிருந்தது. அங்கே சில வேளைகளில் இனச் சண்டைகள் ஏற்பட்டிருக்கலாம். தகரம், ரப்பர் முதலான பொருள்களை ஏற்றுமதி செய்வதில் ஆச்சரியப்படத்தக்க வகையில் வளர்ச்சியடைந்திருப்பதையும் எளிதில் புரிந்துகொள்ளும்படியான பல புள்ளிவிவரங்களின்கீழ் இந் நிகழ்ச்சிகள் எல்லாம் மறைக்கப்பட்டுவிட்டன. இதுவே துங்கு அப்துல் ரகுமானின் தலையாய கொள்கையாய் இருந்தது. "மலேசியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவர்கள் விரும்புகின்ற வாழ்க்கையைத் தேர்ந்து எடுத்து வாழ்வதற்கான சுதந்திரம் உண்டு. அவர்களுடைய வழியிலே தடையில்லாது கட்டுப்பாடற்ற சூரிய மண்டலத்தில் உள்ள குழந்தைகளைப் போன்று இடையறாத வாழ்க்கை வாழலாம்" என்பதுவே அவருடைய கொள்கையாகும்.

இந்தக் குழந்தைகள் வளர்ந்ததும், துங்குவின் அரசியல் கொள்கையானது மலேசியாவில் உள்ள இனங்களை இணைத்து ஒற்றுமை காண்பதற்குப் பொருத்தமில்லாக் கொள்கையெனக் கண்டதே மலேசியாவில் நடைபெற்றதாகும். 1969ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது இவ்வுண்மையே இதற்குச் சான்றாகியது. முழுமையான குடியரசு முறைகளின்மூலம் ஒரு எதிர்க்கட்சி இயக்கம் வளர்ந்ததே இதன் மறுக்கமுடியாத உண்மையாகும். பல்வேறு இனச் சமூகத்தை அமைக்க வேண்டுமென்னும் மலேசியாவுக்குப் பெருமையளிக்கும் சோதனையானது 1969ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி

கோலாலம்பூர் வீதிகளில் சாதனையாக்கப்பட்டதற்கு முன்னால், இந்த வளர்ச்சியைப்பற்றி எல்லோருக்கும் ஆலோசனை செய்யவும், தேர்தல்களினாலும், அதன் பின் விளைவுகளிலும் தடுமாறுகின்ற இனச் சமநிலையை நிலைநிறுத்தவும் போதுமான நேரம் இருந்தது.

அந்த நிகழ்ச்சியைத் தூண்டுவதற்கு அதற்கு முன்னால் நடைபெற்ற ஏதோ ஒரு நிகழ்ச்சி காரணமாக இருக்க வேண்டும். தேர்தல்களில் அடைந்த வெற்றியை முன்னிட்டு, கோலாலம்பூர் வீதிகளில் சீனர்களின் செல்வாக்கைப் பெற்ற கட்சிகளின் ஆதரவாளர்கள் வெற்றி ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களுக்கிருந்த ஊக்கத்தில், அவ்வூர்வலத்தில் நின்றுகொண்டிருந்த மலேயர்கள் சீனர்களால் கேலி செய்யப்பட்டார்கள். மலேசிய அரசாங்கத்தைத் தாங்கள் எடுத்துக்கொள்ளப் போவதாகச் சீனத்தொண்டர்கள் திரும்பத் திரும்ப முழக்கமிட்டார்கள். அந்நாள் சீனத்தொண்டர்களின் வெற்றி நாளாக இருந்தது.

அதற்கு அடுத்த நாள், பெரும்பான்மையாகக் கிராமங்களிலிருந்தும் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மலேயர்கள் தலைநகரில் வந்து சேர்ந்து முன்நாள் நடந்த ஊர்வலத்திற்கு எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். தலையில் வெள்ளைக் குல்லாவை அணிந்துகொண்டு, கைகளில் வாள் வேல்களை ஏந்திக்கொண்டு சீனர்கள் இருக்கும் பகுதிக்கு இக் கூட்டத்தினர் படையெடுத்துச் சென்றார்கள். அதைத் தொடர்ந்து கொலை, கொள்ளை, தீ வைத்தல் போன்றவைகள் நடந்தன. சீன எதிர்ப்புணர்ச்சி போலவே வன்செயல்களும் தொடர்ந்து நடைபெற்றன. பல வீடுகள் தீக்கு இரையாக்கப்பட்டன. ஒரு சிலர் கொல்லப்பட்டனர். சீனர்கள் அதற்குப் பழிக்குப் பழி வாங்கினார்கள். துப்பாக்கிகளும், வெடி ஆயுதங்களும் கொண்டு கூட்டங்கூட்டமாக மலாய்க் காம்போங்களை (Kampongs) தாக்கினார்கள். வீடுகள், கடைகள், மோட்டார்க் கார்கள் முதலியன தீக்கிரையாக்கப்பட்டதால் விண்ணை மூடிடும் தீக்கொழுந்துகள் எழுந்தன. நெருப்பை அணைக்கும் முகமாகத் தீயணைப்புப் படையினர் வெடித்துப் பரவும் நெருப்பைப் பரவவிடாமல் தடுக்க முயற்சி செய்தனர். அந்தப் பகுதியை வெறிகொண்ட கூட்டத்தார்கள்

ஆக்கிரமித்துக்கொண்டிருந்தபொழுது, அங்குள்ள காவல்துறை யினர்கள் கூட்டத்தினர்களால் எளிதில் வெளியேற்றப்பட்ட தால், தெருவில் மூலைகளில் இருந்துகொண்டு உதவி செய்வது அறியாது திகைத்து நின்றுகொண்டிருந்தனர்.

அரசாங்கம் என்ன நடந்தது என்பதை அறியாமல் இருந்தது. இருப்பினும் செலாங்கோர் மாநிலம் முழுமைக்கும் உடனடியாக அவசரநிலையை அறிவித்தது. பினங்கிலும் பேரக்கிலும் குற்ற வாளிகள் பலர் கைது செய்யப்பட்டனர். எல்லாவிடங்களிலும் இன்னும் இனக் கலகங்கள் நடைபெற்றன. கோலாலம்பூரில் மக்கள் இயக்கம் என்பது இல்லை. பக்கத்து நகரமான பேடாலிங் ஜயாவில் (Petaling Jaya) பல மக்கள் கலகக்காரர் களால் கொல்லப்பட்டனர். சில இடங்களில் சீனக் கட்சியோடு தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்ட இந்தியர்கள் இக்கலகங்களில் சீனர்களோடு சேர்ந்துகொண்டார்கள். மலேசிய சீனச்சங்கத் தின் உறுப்பினர்கள் மட்டும்தான் தனியாக நின்றார்கள். சிறிது காலத்துக்குள் அவர்களும் அங்குள்ள சீனர்களும் மலேயர் களும் தங்கள் மனம் போன வழியில் செய்துவரும் கொலை, கொள்ளை, நாசம் செய்தல் ஆகியவைகளுக்கிடையே ஒன்றும் செய்ய முடியாதவர்களாகிவிட்டார்கள்.

அவசர நிலையை அறிவித்த பிறகு, நாட்டில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதற்காகப் பாதுகாப்புப் படையினர் களுக்கு மக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டுமெனப் பிரதமமந்திரி ஒரு வேண்டுகோளை வானொலி மூலம் வெளியிட்டார். அவர் கூறியதாவது : இந்த நாடு உங்களைத்தான் சார்ந்து இருக்கிறது. இந்த நாட்டை உயிரினும் மேலாக நேசிக்கும் நாம், இந்த நாட்டிற்கு உதவி செய்யும் வகையில் என்னோடு தோளோடு தோளாக நின்று, நல்ல குடிமக்களாகிய நீங்கள் உங்கள் பணியினைச் செய்யுங்கள். இந்நேரத்தில் தேவையை நிறைவேற்ற, இப்பணியில் ஈடுபட்ட உங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் அல்லா உங்களைக் காப் பாற்றுவார் என நான் வேண்டிக்கொள்ளுகிறேன். எந்த விதமான பயமுமின்றி, இந்நாட்டின் அமைதியை நிலைநாட்ட என்னால் முடிந்ததைச் செய்வேன்.''

துணைப் பிரதம மந்திரியான துன் அப்துல் ரசாக்கும், மலேசிய சீனச் சங்கத்தின் தலைவரான தன் சியூ சின்னும், மற்றும் பிற தலைவர்களும் வானொலி மூலம் மக்களை வேண்டிக்கொண்டனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அரசாங்கத்தின் பின் ஒற்றுமையோடு நின்று உதவி செய்ய வேண்டும் என்றும், அவசர நிலையை ஏற்படுத்தும் எந்தவிதச் செயலிலிருந்தும் விலகி இருக்க வேண்டும் என்றும் இரண்டு தலைவர்களும் மக்களை வேண்டிக் கொண்டனர்.

அந்தப் பயங்கர இரவில் அங்குள்ள நிலைமை கட்டுக்கடங்காமல் இன்னும் அதிகமாகப் போய்விட்டது, நகர முழுவதிலும் நெருப்புப் பற்றி எரிந்தது. கலகக்காரர்கள் முதலில் மலேயர்கள் இருக்கின்ற பகுதியான கம்போங் பகருவைத் தாக்கவும், இது பின்னால் நகரம் முழுவதும் பரவியது. கொந்தளிக்கும் கூட்டத்தார்கள் சில காவல் நிலையங்களைத் தாக்கினர். கார்களும் லாரிகளும் நிறுத்தப்பட்டுத் தீ வைக்கப்பட்டன. பெரும்பான்மையான கூட்டத்தார்கள் கையிலே பராங்குகள் (Parangs) எனப்படும் பெரிய வெட்டுக் கத்திகளையும், கம்புகளையும், இரும்புக் குழாய்களையும் தூக்கிக்கொண்டு தெருவிலே அலைந்தார்கள். இந்த நேரத்திலே, காவல்துறையினர்களுக்கு, அவர்களுடைய உயிர்களுக்குத் தீங்கு செய்கின்றவர்களையோ, அல்லது அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துக்கொள்ள முயற்சி செய்கின்றவர்களையோ சுட்டுக் கொல்லுமாறு உத்தரவு கிடைத்தது. இக் கொடும் செயல்கள் முழுவெறியோடு தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

மூன்று நாட்களுக்கு மேலாகவே, தீபகற்பத்தில் இதற்கு முன் ஒருபோதும் நடந்திராத அளவுக்கு இந்த ரத்த வெறிச் செயலும் பயங்கரமும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. அந்த நேரத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், பல லட்சக் கணக்கான டாலர்கள் பெறுமான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கோலாலம்பூரிலும் மலேசியாவில் உள்ள பிற நகரங்களிலும், நான்கு நாட்களுக்குப் பிறகுதான் பெயரளவில் ஒழுங்கை நிலைநாட்ட முடிந்தது. சில பகுதிகளில் அங்குமிங்குமாகச் சண்டை நடந்துகொண்டிருந்ததில் தங்களுக்குள்ளாகவே மலேசியர்களை

மலேசியர்கள் கொன்றுவிட்டார்கள். மேலும் இது என்ன என்பது ஒருவருக்கும் தெரியாது.

வார முடிவில், கோலாலம்பூரிலும், மலேயாவின் பிற பகுதிகளிலும் உள்ள கலகங்களின் வேகம் குறைந்துபோய்விட்டது. நூற்றுக்கணக்கான படை வீரர்கள் இந்தப்பகுதியில் சுற்றிவரும் பொழுது, இந்தக் குழப்பங்களுக்குப் பிறகு ஒரு முதல் வாரத்தில், நகரத்தில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு அமைதி நிலவியது. மருத்துவ விடுதியில் உள்ள சவக் கிடங்குகள் நிறைந்ததுபோன்று, மருத்துவ விடுதிகளின் பகுதிகளுக்கு இக் கலகங்களினால் காயமடைந்தோர்கள் சிகிச்சைக்காக உடனடியாகக் கொண்டுவரப்பட்டார்கள். சீன, இந்திய மருத்துவர்களும், அதைப் போன்று மருத்துவப் பெண்களும் தங்களுடைய சீரிய பணியினால் முழு மனத்தோடு ஒத்துழைப்புத் தந்தார்கள். இந்தக் குழப்பத்தில் சிக்கிக்கொண்ட எத்தனையோ சீன நண்பர்களுக்குத் தனிப்பட்ட மலேயர்கள் உதவி செய்ததும், பல சீனர்கள் தங்களுடைய மலேய நண்பர்களுக்கு உதவிசெய்ததுமான பல்வேறு நிகழ்ச்சிகள் அப்பொழுது நடந்தன.

இரண்டாம் உலகயுத்தம் முடிந்தவுடனே பொதுவுடைமைவாதிகளை நசுக்குவதற்காக பிரிட்டிஷ் ஜெனரல் டெம்பிளரால் (British General Templer) உருவாக்கப்பட்ட நிறுவனத்தைப் போன்று ஏறக்குறைய அதே மாதிரி அந்த வாரக் கடைசியிலே தேசீய ஒழுங்கு நடவடிக்கைக் குழு ஒன்று உருவாகியது. நாட்டில் உள்ள மொத்தக் குடியரசு முறையையும் முடக்கியது. இதன் தலைவர் துங்கு அப்துல் ரகுமான் நாட்டின் "வலிமை வாய்ந்த மனிதராக" ஆனார். தேசீய ஒழுங்கு நடவடிக்கைக் குழு குறியீடாகவே மலேசியாவின் பாராளுமன்றக் கட்டடங்களுள் புகுந்தது.

நாட்டில் அறிவிக்கப்பட்ட அவசர நிலையானது அரசாங்கத்துக்குத் தேவையான எல்லாவிதமான அதிகாரத்தையும் உரிமையையும் கொடுத்தது. பொதுமக்களின் நம்பிக்கையும், மலேசியாவின் பன்முக இனச் சமூகத்தாரின் எல்லா இனங்களின் ஆதரவையும் இழக்காமல் இருந்ததினால் அது வெற்றியடைந்தது. எந்தச் சூழ்நிலையிலும் எல்லா இனங்களின் சார்பாகத்

திடமாகவும், யாருக்கும் பணிந்து கொடுக்காத அளவுக்கு நடவடிக்கை எடுத்ததே அதன் பொருளாகும். தேசிய நடவடிக்கைக் குழுவானது இந்த முறையில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க முடிந்தது. இதற்குக் காரணம் அங்குள்ள அவசர நிலை அதிகாரமேயாகும். அரசாங்க உத்தரவுகளின் பேரில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்துக்கும் வேறுபட்ட பிரச்சினைகள் இருப்பினும், அவையெல்லாம் நிறைவேற்றும் மொத்த அதிகாரமும் மலேசியாவின் மத்திய அரசாங்கத்துக்கும் தேசிய ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கும் இருந்தபோதிலும் மாநில அரசாங்கங்களோடு கலந்து ஆலோசனை செய்தது.

எப்படியிருப்பினும் அரசாங்கமானது, குழப்பத்தைத் தூண்டி விடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் என்பதில் உறுதியாக இருந்தது. உள்நாட்டு அமைச்சர் டாக்டர் இஸ்மாயில் பின் தாடே அப்துல் ரகுமான் பத்திரிகை நிருபர்களின் கூட்டத்தில் பேசியதாவது: "இதில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்பதே சரியானது. நாம் இதைப் பொறுத்துக் கொள்ளமுடியாத காரணத்தினால் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் தங்கள் குறிக் கோளை அடையவேண்டும் என்று விரும்பியதன் காரணமாக நாட்டில் வாழ்கின்ற ஒன்றுமறியாதவர்களின் மரணம் சரியான தல்ல. இந்தக் கொடுமை வெளிக்கிளம்புவதற்கு யார் உடந்தை யாய் இருந்தார்களோ அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவார்கள்."

பத்திரிகை நிருபர்களோடு பேசியதில் உள்நாட்டு அமைச்சர் ஆணித்தரமான உண்மையோடு பேசினார். மலேசியாவில் உள்ள ஜனநாயகம் செத்துவிட்டது என்று அவர் திரும்பத் திரும்ப கூறினார். அப்பொழுதிருந்த ஒழுங்கற்ற நிலையில் நாடு ஜனநாயக முறையைக் கைக்கொள்ளாது என்று அவர் சொன்னார். மலேசியாவில் திரும்பவும் ஜனநாயகத்துக்கு உயிரூட்ட ஏதேனும் வழி இருக்கின்றதா என ஒரு பத்திரிகை நிருபர் கேட்டபொழுது "இப்படி ஒரு குழப்ப நிலையில் இன்னும் ஜனநாயகம் இருக்க முடியுமா?" என அமைச்சர் திருப்பிக் கேட்டார்.

நாடு எந்த அளவுக்குக் குழப்ப நிலையில் இருக்கின்றது என்றும் அதை எப்படி அவர் வரையறை செய்கிறார் என்றும் கேள்வி கேட்டபொழுது, டாக்டர் இஸ்மாயில் உடனடியாக "மொத்தத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலை குலைகிறதோ அதுவே குழப்ப நிலை என்பது என் வரையறை என்றும், இதைத் தீர்ப்பதற்கு நாங்கள் புதியதொரு முறையை நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறோம். என்னுடைய கணிப்பில் நாடு முழுவதுமே ஒரு குழப்ப நிலையில் இருக்கிறது" என்று சொன்னார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, அரசாங்கம் ஏராளமான பயங்கரவாதிகளைக் கைது செய்திருக்கிறது. மேலும் அவர்கள் விசாரணை செய்யப்படுகிறார்கள். திரும்பவும் இதுமாதிரியான குழப்பங்கள் நேராவண்ணம் அரசாங்கம் ஆவன செய்யும். நாங்கள் மொத்தத்தில் எந்தவிதமான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை" என்று சொன்னார்.

சில அரசியல் கட்சிகளின் ஒழுங்கற்ற நடத்தையே இக் கொந்தளிப்பின் முக்கியக் காரணங்களுள் ஒன்று என்று அவர் சொன்னார். இந்த எதிர்க்கட்சிகளில் மலேயப் பொதுவுடைமைக் கட்சியின் படைகள் ஊடுருவலுக்கு ஏதேனும் அடையாளங்கள் உண்டா என்று அவரிடம் கேட்டபோது அவருடைய பதிலாக: எதிர்க்கட்சியினிடையே பொதுவுடைமைக் கட்சியின் படைகள் ஊடுருவுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. சிலர் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்போடும், சிலர் ஒத்துழைப்பு இல்லாமலும் நுழைந்திருக்கலாம். எந்தவிதமான காரணமும் இல்லாமல் எதிர்க்கட்சிகளைக் கடுமையான குற்றம் சாட்டப்போவதில்லை. இப்படையினர்கள் ஊடுருவியிருக்கிறார்களா அல்லது இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதைப் பாதுகாப்புப் படையினர்களுக்கு விட்டுவிடுகிறேன்."

துங்கு அவர்கள், பிறகு தேசத்துக்காகத் தொலைப்படக் காட்சியில் உரையாற்றும்போது, துரோக எண்ணங் கொண்டோரையும், மலேசியாவில் நடந்த அளவுக்கதிகமான இன அமைதியின்மைக்குத் துரோகிகளே காரணமாயிருக்கின்றார்கள் என்றும் குற்றம் சாட்டினார். அரசாங்க முயற்சிகளைக் குறைப்பதோ அல்லது தளர்த்துவதோ இக்குழுக்கள் மேலும் தாக்குதல்

நடவடிக்கைகள் மேற்கொள்ள வழி வகுக்கும். இக் கலகங்களுக்கெல்லாம், பொதுவுடைமைக் கட்சியினர்களே பொறுப்பாளிகள் என்று முன்சொன்னதை நினைவுபடுத்தினார். இக் கலகங்களில் கைக் கூலிகளும், இரகசியச் சங்கத்தினர்களும் ஈடுபட்டுள்ளனர் என்று கருதுவதற்கு ஆதாரமாகத் துப்பறியும் இலாகா அறிக்கையை மேற்கோள் காட்டினார்.

ஜனநாயக முறையைக் காப்பாற்ற வேண்டும் என்னும் நோக்கத்தில் போர்னியோ மாநிலங்களான சராவாக்கிலும், சபாவிலும் நடைபெறவிருக்கும் தேர்தல்களை ஏன் ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதைப் பிரதம மந்திரி விளக்கினார். துப்பறியும் இலாகா அறிக்கையின்படி, இம் மாநிலங்களுக்கு நாசப் படைகளைச் சேர்ந்த பல தொண்டர்களும் சதித்திட்டம் தீட்டுபவர்களுமாகச் சேர்ந்து தங்கள் திட்டங்களின் மூலம் நாட்டின் முக்கியமான பகுதிகளுக்குச் சென்று பயமுறுத்தியும், கட்டாயப்படுத்தியும், கையூட்டுக் கொடுத்தும் ஜனநாயகத் தேர்தல் முறையைக் கவிழ்க்க முயற்சி செய்வதில் வெற்றி கண்டார்கள் என அவர் சொன்னார்.

"இப்பொழுது நாங்கள் திரும்பிப் போகப் போவதில்லை. அவர்களுடைய முதுகெலும்பையும், அவர்களுடைய ஊக்கத்தையும் நொறுக்குவதற்காக உண்மையிலேயே, நாங்கள் மூர்க்கமாக, வேகமாகத் தாக்குவோம்" எனத் துங்கு அறிவித்தார்.

ஜூன் மாதம் முதல் வாரத்தில் அங்குள்ள குழப்ப நிலை நீங்கிப் பழைய நிலைக்குத் திரும்பியபோதிலும் எந்த நேரத்திலும் அவசர நிலையை ஏற்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கையுடன் மலேசியா ஆயத்தமாக இருந்தது. தனது ஆயுதப்படைகளை மூன்று காலாட்படைப் பிரிவுகளாக விரிவுபடுத்தவும், ஏறக்குறைய 5,000 பேர்களைக் கொண்ட உதவிப்படையாக உயர்த்தவும் வேண்டும் என மலேசிய அரசாங்கத்தின் தீர்மானமே இத் திசையில் ஒரு முன்னேற்றமேயாகும். அதன்படி ஆபத்தை எதிர் நோக்கி, இந்தியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட வகை ஆயுதங்களுக்கு அணுகியது. மலேசிய அரசாங்கம் இதற்குப் பணமாகவே கொடுத்தது.

இந்த ஆபத்தைச் சமாளிக்க, மலேசியா, இந்தோனேசியாவுடன் ராணுவ அதிகாரிகளுக்காகவும் பயிற்சி வசதிகளுக்காகவும் ஆலோசனை பெறத் தொடங்கியது. மலேசியாவின் இந்தோனேசியத் தூதரான யாகூப் அப்துல் லத்தீப் (Yakub Abdul Latif) தம்முடைய பதவியிலிருந்து வேகமாகத் திரும்பி வந்து அவருடைய அரசாங்கத்தோடு ஆலோசனை செய்தார். "இங்கே (மலேசியாவில்) எது நடந்தாலும் அங்கேயும் (இந்தோனேசியாவிலும்) அது உடனடியாகப் பரவும்" என்றார் அவர்.

இனக் கிளர்ச்சி நடந்த பிறகு ஏறக்குறைய ஒரு மாதத்தில் ஜூன் 10ஆம் நாள் கலகங்கள் முழுமையாக அடக்கப்பட்டன. கோலாலம்பூரிலும் மலேசியாவின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்க்கையானது பழைய நிலைக்குத் திரும்பிவரத் தொடங்கியது. மலேசியா எங்கும் பரவிய தீயானது ஏராளமான கடைகளையும், கட்டிடங்களையும், கார்களையும் அழித்தது. பல்வேறு இனங் கொண்ட நாட்டில் ஒற்றுமை உணர்ச்சியின் வேர்களை அங்குக் கொழுந்து விட்டெரிந்த நெருப்பானது கரியாக்கியது.

மலேசியாவின் இன வேற்றுமைகளில் ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்னும் துங்கு அப்துல் ரகுமானின் எண்ணமானது தலையெடுக்கா அளவுக்குத் தோல்வியடையாவிட்டாலும் உண்மையிலே எண்ணிப்பார்க்க முடியா அளவுக்குத் தலைகீழாகிவிட்டது.

பல்வேறு இனச் சமூகத்திற்காக வாதாடியபோதும் முக்கியமான இனங்களை ஒற்றுமைப்படுத்துவதில் குறைந்த அளவு முயற்சியே எடுத்துக்கொண்டது என்பதுவே கூட்டாட்சிக் கட்சியின் முக்கியத் தவறுகளுள் ஒன்றாகும். அது அவர்களைத் தங்களுக்குள்ளாகவே தனித்துவத்தை வளர்த்துக்கொள்ள அனுமதியளித்திருந்தாலும் அதேநேரத்தில் அவர்களை ஒரே நாடெனப் பேசவும், நினைக்கவும் பணிபுரியவும் எதிர்பார்த்தது. இந்த வகையில் அவர்களிடையே சமூகத் தொடர்பு குறைந்தே இருந்தது. மலேயரல்லாத ஒருவரோ அல்லது ஒருத்தியோ ஒரு மலேயரையோ அல்லது மலேயப் பெண்ணையோ திருமணம் செய்து கொள்ள முயலுவதற்கு முன்னால் முஸ்லீமாக மாறியிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகப் பக்கத்து நாடான தாய்லாந்தில் சீனக் குடியேற்றத்தினர்களுக்கிடையே இந்தத் தடைகள் இல்லை.

அவர்கள் பணம் சம்பாதித்திருந்தபோதிலும், முதல் தலைமுறைச் சீனர்கள் சீனர்களாகவே இருந்தார்கள். ஆனால் அதைத் தொடர்ந்து வந்த தலைமுறைகளின் சீனர்கள் "தாய்த் (Thais) குடிகளானார்கள்." சீனர்களுக்கும் தாய்மக்களுக்கும் இடையே நடைபெறும் கலப்புத் திருமணங்கள் சர்வ சாதாரணமானது. உண்மையிலே சீனர்கள் தாய்லாந்தின் அரச குடும்பத்தோடுகூட நல்ல தொடர்புகளைக்கொண்டிருந்தனர்.

கூட்டாட்சிக் கட்சியானது சீனர்களுடனும் இந்தியர்களுடனும் கொண்ட ஏற்பாடுகளின்படி, மலேயர்கள் தங்கள் இன உரிமையையும் சலுகைகளையும், நிலையாக அனுபவிக்க அனுமதியளிக்கவும், அதே நேரத்தில் எவரெல்லாம் மலேயாக் கூட்டாட்சியில் தங்கியிருந்தார்களோ அவர்களுக்குக் குடியுரிமையை அளித்தது, நாட்டில் இன ஒற்றுமையைப் பாதுகாக்கப் போதுமானவைகளாக இருந்தன. ஆண்டு கழிந்தபோது, இந்தச் "சலுகைகள்" மறுக்கப்பட்டன, கூட்டாட்சி அரசாங்கமானது இளந்தலைமுறையினர்களுக்குக் கொடுக்கல் வாங்கல் முறைகளைப்பற்றி நினைவூட்டுவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. இதன் விளைவாக இரண்டு கூட்டங்களுக்குள்ளேயும் தப்பெண்ணம் இருந்துகொண்டேயிருந்தது.

மலேயர்களைத் தொழிலில் ஈடுபடத் தூண்டியது கூட்டாட்சிக் கட்சி செய்த மற்றுமொரு தவறாகும். சில நேரங்களில் நல்ல நிலையிலிருக்கின்ற ஒரு சில மலேயர்களின் உதவியுடனும், சுதந்திரத்துக்கு முன்னால் எப்படியிருந்தார்களோ அப்படியே இருக்கின்ற மலேயர்களை ஒதுக்கிவிட்டு, நாட்டின் பொருளாதாரத்தில் ஏறக்குறைய 80 விழுக்காடு இந்தியர்களுடையவும் சீனர்களுடையவும் அதிகாரத்துக்குள் இருப்பதுவே அதன் விளைவாகும். அரசாங்க அலுவல்களில் சேருவதைத் தவிர மலேயர்களுக்கு வேறு வழியில்லை. காவல்துறையிலும், ஆயுதப் படைகளிலும், அரசாங்க அலுவல்களிலும் அவர்களுக்குத் தனிச் சிறப்பளிக்கப்பட்டது.

அரசாங்க அலுவல்களில் நாலுக்கு ஒன்று எனப்படும் விதியின் மூலம் மற்ற இனங்களைவிட மலேயர்களுக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. ஒரு சீனர், ஒரு இந்தியர், அல்லது எவராவது ஒருவரை அரசாங்கம் வேலைக்கு எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னால்

அரசாங்க அலுவல்களில் நான்கு மலேயர்களைக் காணவேண்டி யிருக்கும் என்பதே இதன் பொருளாகும். அரசாங்க அலுவல் களில் இருக்கும் இம் மக்கள் மலேயர்களின் அதிகாரத்துக் குட்பட்டவர்களாகச் சீராக மாறிக்கொண்டு வந்தார்கள். இது இன்னும் சந்தேகத்தைத் தூண்டி விடவல்லதாய் இருந்தது.

உண்மையிலே மற்ற இனங்களின் நியாயமற்ற சுரண்டல் களிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்னும் ஒரு சில வழக்கங்கள் மலேயர்களுக்கு எதிராகவே வேலை செய்ய ஆரம்பித்தன. எடுத் துக்காட்டாகச் சிறப்பு அனுமதி இல்லாமல், மலேயர்களுக்குச் சொந்தமான நிலங்களை மலேயர்களைத் தவிர மற்றவர்களுக்கு விற்பதைப் புதிய நிலச்சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டது. மலேயர்களுக்கு மட்டும் என அவர்களுடைய வியாபாரம் கட்டுப் படுத்தப்பட்டதிலிருந்து மலேயர்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலங்களின் மதிப்புக்கள் அதிகமாகக் கீழிறங்கிவிட்டன என்பதுவே அதன் விளைவாக இருந்தன.

மலேயாவின் சுதந்திரத்துக்காக, மலேய சீன இந்தியக் கட்சி கள் இணைவதற்கு ஏற்பாடு நடைபெறுகின்ற நேரத்தில், இன்னும் பல காரணங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட்டன எனலாம். புதிய தலைமுறையினர்கள் உருவாக ஆரம்பித்தபோது, ஆரம்பத் திலிருந்தே பணம் சேர்ப்பதிலே குறியாய் இருந்த சீனர்கள், உண்மையிலே "வெள்ளைச் சட்டை" வேலைகளுக்குப் பொருத்த மில்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதே பொதுவான கருத் தாக இருக்கின்றபோது, இந்தியர்கள் இதைப்பற்றி அதிகம் கவலைப்படாமலே ஆரம்பத்திலிருந்ததைப் போன்றே முக்கிய மாகத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவும், சிறு வியாபாரி களாகவும் இருந்தார்கள். மேலும் மலேசியாவில், ரயில் போக்கு வரத்திலும், தபால் நிலையங்களிலும், மற்றும் பிற அரசு துறை களிலும், இந்தியர்கள் (இலங்கையினர்களும், பாகிஸ்தானியர்களும் மற்றும் எவரெல்லாம் இந்தியர்களைப்போன்று காட்சியளிக்கின்றார் களோ அவர்களையும் சேர்த்து) ஏதோ ஒரு வழியில் வேலை பார்த்து வந்தார்கள்.

அரசாங்க அலுவல்களைச் சீனர்கள் ஒருபொழுதும் விரும்பிய தில்லை என்னும் இந்த எண்ணமானது ஒரு வேளை உண்மையாய் இருக்ககூடாதா என்னும் உள்ளுணர்வைத் தோற்றுவிக்கும்

சிந்தனையேயாகும். இவ்வெண்ணம் இருப்பதால் எளிய மக்கள் தீவிரமான வேற்றுமை கொண்டிருந்தார்கள். வேற்றுமையின் காரணமாகத் தாங்கள் ஏதோ ஒன்றை இழந்துவிடுவோம் என்று தேவையில்லாமல் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்த தப்பெண்ணப் பணிக் கொள்கையானது குறிப்பிடத்தக்க அளவில் இன வழிகளில் உருவாகி வரும் படையமைப்போடும், காவல் துறையை விரிவுபடுத்தும் செயலோடும் உணர்ந்து வந்தது. எடுத்துக்காட்டாக, மலேசியாவின் காவற்படையை எடுத்துக் கொண்டால், அதில் நூற்றுக்கு 75 விழுக்காடுகள் மலேயர்களாகவே இருப்பதைக் காணலாம். சில முக்கியப் பணிகளில் சீனர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அப்பதவிகளில் இருப்பவர்களும் விரல் விட்டு எண்ணப்படக்கூடிய அளவிலே இருந்தார்கள். இவையெல்லாம் நேர்மையற்ற முறையில் ஒருதலையாக நடந்துகொண்டது எனக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது என்பதே அரசாங்க விளக்கமாக இருந்தது. இதனால் பலன் அடைந்தவர்களைத் தவிர மற்ற மக்கள் சமாதானம் அடைந்தார்கள் என்றும் சொல்ல முடியாது.

உண்மையிலே மலேசியா என்பது ஒரு மலாய் மாநிலமே என்ற பொதுவானதொரு எண்ணமே நாட்டில் இருந்தது அல்லது இருந்திருந்தது. மலாய் மொழியானது தேசீய மொழியாக ஆக்கப்பட்டது, இக்கருத்துக்கு உறுதிசெய்யவே என விளக்கமும் கூறப்பட்டது. இந்தியர்கள் இம் மாற்றங்களுக்கு உடனடியாகவே தங்களை மாற்றிக்கொண்டார்கள். பரபரப்பான வகையில் எதிர்ப்பினை உருவாக்குவதற்கு எண்ணிக்கையளவில் குறைந்தவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே மலேசியாவில் குடியேறிய இந்தியர்கள், அந்த நாடே தங்கள் நாடாகக் கொள்ளுமாறு இந்திய அரசாங்கம் கட்டளையிட்டது. ஆனால் மக்கள்தொகையில் 40 விழுக்காடுகள் இருக்கும் சீனர்கள் சிலகாலம் இதனை வன்மையாக எதிர்த்தனர். ஆனால் நீண்ட காலமாக வெறுப்புடன் பேசாமல் பின்வாங்கிக்கொண்டிருந்தார்கள். 1969ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேர்தல்களில் அவர்கள் அடைந்த வெற்றிகளைத் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டார்கள்.

இனப்புயலுக்குப் பின்னால், பல்வேறு போக்குகளைக் கொண்டிருக்கும் தன்மைகளுள் துங்கு அப்துல் ரகுமானின் இனமல்லா மனநிலையும் ஒன்றாகும். மலேசியாவில் இனக் குழப்பம் அதி உச்சநிலையில் இருந்தபோதுகூட அவரை ஓர் இனப்பற்றுள்ள மனிதர் என்று ஒருவரும் குற்றம் சாட்டவில்லை. ஜவஹர்லால் நேருவின் சாதியையும் அல்லது இனப்பகட்டையும் இகழுவது எவ்வளவு நினைத்துப் பார்க்க முடியாததோ அதைப் போன்றே ஓரளவுக்கு இச்செயலுமாகும்.

துங்குவுக்கே எல்லா இனங்களும் கலந்ததொரு இனத்தின் தத்துப் பிள்ளைகளடங்கியதொரு மொத்தக் குடும்பம் உண்டு. அவர் வெளிப்படையாகவே தம்முடைய மங்கோலாய்டு பரம்பரையைப் பற்றி ஒத்துக் கொள்ளுவார். அவருடைய தாய் வடக்குத் தாய்லாந்தின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரைப்பற்றி அவரே பெருமைபட்டுக்கொள்ளுவார். அவருடைய கட்சிக்குள்ளே இன்னும் எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்குச் சிறுபான்மையினர்கள் அதாவது மந்தபுத்தியுள்ள இனவெறியுள்ள சிறுபான்மையினர் இருப்பதால் அவராகவே விலகிக் கொள்ளும் அளவுக்கும், அவரால் தீர்மானிக்கப்படாத அளவுக்கும் கூட்டாட்சி அரசாங்கத்தை, கொள்கைகளை உருவாக்குவதற்காக, மேலும் மேலும் தூண்டிவிட நேர்ந்தது.

ஆச்சரியப்படத்தக்க அளவுக்கு அதிகமான சீன எதிர்ப்புத் தலைவர்கள் மலேயரைப் போன்று மலேசியாவிடத்து உண்மையாக இருந்து வந்தனர். ஆனால் ஜனநாயகத் தேர்தல்களில் நடைபெறுவதைப் போன்று, தீவிரவாதிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், அவர்களுடைய கொள்கை சீனாவைப் பற்றியதாகச் ‘‘சைனீஸம்’’ (Chinese-ism) இருந்தது. மலேய சீனச் சங்கத்தினர்களும், இந்திய தேசிய காங்கிரசின் உறுப்பினர்களும் தங்களுடைய லாபங்களை மலேயர்களுக்கு விடுவதால், மலேயர்களின் கோமாளிகள் போன்று கேலி செய்யப்பட்டார்கள்.

உளவியலான யுத்த முறையினால் வியத்தகு பலன்கள் உண்டாக்கப்பட்டன. முதன்முறையாக, சீன இந்தியர்களில் ஒரு பகுதியினர், கூட்டாட்சிக்கு எதிராகக் கைகோர்த்துக்கொண்டு நின்றனர். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் எதிர்க்

கட்சிகள் வியப்பிலாழ்ந்தன; கூட்டாட்சிக் கட்சி அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதற்கு முன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர்களுக்கு 19 இடங்கள் இருந்தன. அதே நேரத்தில் இப்பொழுது அதற்கு அவ்வெண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்து இருக்கிறது. இதற்கு முன்னல் உள்ள தனியொரு இந்தியனுக்கு மாருக, இப்பொழுது எதிர்க்கட்சியின்மூலம் எட்டு இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மலேயர்களின் குருட்டு வெறியாட்டமா அல்லது சீனர்களின் குருட்டு வெறியாட்டமா முதலில் வந்தது என்பதைக் கண்டு பிடிக்கும் முயற்சியானது வீண் செயலாகும். கோலாலம்பூரில் நடைபெற்ற கலகத்திற்குக் காரணம் மலேயர்களின் இன வெறியா அல்லது சீனர்களின் இன வெறியா என்பது தீர்மானிக்க முடியாததொரு அளவிற்கு இருந்தது. கூட்டாட்சிக் கட்சியில் மலேயர்களோடு இணைந்து உழைத்து வரும் சீன உறுப்பினர்களுக்கு எதிராக அவர்கள் அளித்த வாக்குகளுக்குப் பழிவாங்கும் எண்ணத்தின் விளைவாக இப்பொழுது மலேயர்களின் குருட்டு வெறியாட்டத்துக்குச் சீனர்களாலும், இந்தியர்களாலும் பழிவாங்கப்பட்டனர்.

இந்த நேரத்தில் இக்கேள்விகளும் இன்னும் பல கேள்விகளும் பொருத்தமில்லாதவைகளாக இருக்கின்றன எனலாம். சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதைத் தலையாய கடமைகளுள் ஒன்றெனக் கொண்ட பன்முக இன மதச் சார்பு நாட்டின் எந்தவொரு அரசாங்கத்துக்கும் குறிப்பாக ஜனநாயகத்துக்கும் உண்மையிலே பொருத்தமானதாகும். பெரும்பான்மையாய் இருப்பதினல் பெரும்பான்மை என்னும் எளிய காரணத்தினல் சிறுபான்மையோரின் பண்பாட்டு நாகரிகத்தை ஓரளவுக்குமேல் இழக்கத் தயாராகவோ அல்லது இழக்கவேயில்லை எனலாம்.

பன்முக இனச் சமூகத்தில் மக்கள் பொதுவான குறிக்கோள்களுக்காக உழைக்கவும், பொதுவான சட்டங்களுக்குப் பணியவும், ஆனல் அதே நேரத்தில் அவர்களுடைய சொந்தமொழி, மதம், புரிந்து கொள்ள முடியாத சிறப்புடைய தனி மனிதத்துவம் முதலானவற்றை விட்டுவிட வற்புறுத்த முடியாது என மக்கள் எதிர்பார்க்கலாம்.

14. துங்குவின் குழப்பம்

மலேயாவில் உள்ள வேறுபட்ட இனக் குழுக்களை ஒன்று படுத்துவதற்கென உண்மையிலே தம்முடைய திறமையனைத்தை யும் கொண்டு பாடுபட்டார். நாடு முழுவதிலும் வீசிய இனக் கலகங்களும், 1969ஆம் ஆண்டு மே மாதம் தலைநகரை உலுக்கிய அக்கலகத்தின் உச்ச நிலையும் துங்குவின் அசையாத நம்பிக்கையை அசைத்தன. தாங்கள் கொண்டதையே சரியென நம்பும் பல் வேறு இனக்குழுக்களின் பழைமைவாதிகளின் நிலையை மாற்று வது என்பது முடியாத செயல் எனக் கூட்டாட்சிக் கட்சியின் பல தலைவர்கள் உணர்ந்தார்கள். இது, குறிப்பாகச் சீனர்களுக்கும் மலேயர்களுக்கும் பொருந்தும். இந்தியர்கள் எண்ணிக்கை யளவில் குறைந்திருந்தபோதிலும் மற்றவர்களைவிட அதிகம் பேசுபவர்கள்.

தன் சியூ சின்னின் சீனக் கட்சியிலிருந்து அதிகமான மலேசியச் சீனர்கள் வெளியேறி, ஜெராகன் கட்சியை, ஜனநாயக இயக்கக் கட்சியை ஆதரித்ததால், யு.எம்.என். ஓவுக்கு வாக்களித்தவர்கள் எனவும், முழு மலேயா இஸ்லாமியக் கட்சிக்கு வாக்களித்தவர்கள் எனவும் மலேயர்களுக்குள்ளாகவே பெரும் பிளவு ஏற்பட்டது. இனக் கலகங்களைத் தொடர்ந்து வந்த அவசர நிலையின்போது ஏராளமான மலேயர்கள் இஸ்லாமியக் கட்சியின் கொள்கைக்குத் தாவினார்கள். இந்தக் கலகங்களுக்கும் அவசர நிலைக்கும் காரணமே துங்கு என அவர்கள் குற்றம் சாட்டினார்கள். சீனர்கள், இந்தியர்கள் போன்ற இனக்குழுக்களுக்கு அளவுக்கு அதிகமான சலுகைகளைக் கொடுக்கின்ற அரசியல் சட்டத்தின் போது உறுதியில்லாதவராக காணப்பட்டதுவே அதன் காரணம் என்பது அவர்களின் குற்றச் சாட்டாகும்.

மலேயா நாட்டின் பழங்குடிகள் மலேயர்கள் எனவும், தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ளவும், மலேசியா ஒரு முஸ்லீம் நாடென ஆக்கவும் வேண்டுமென்பதே மலாய் இனங்களின்

வாதமாக இருந்தது. கூட்டாட்சி அரசாங்கமானது மலேயர்களுக்கு எதிராக வேற்றுமை பாராட்டியது என்பதுவே அவர்களது குரலாக இருந்தது. பொருளாதார அரசியல் அடிப்படையில் வலிமை வாய்ந்தவர்களாக இருக்கும் சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் கிடைத்த வாய்ப்புகளைக் காட்டிலும், அவர்களுக்கு அதிகமான வாய்ப்புகள் கொடுக்கவில்லை என்று கூறினார்கள். இந்தியாவில் உள்ள அலிகார் பல்கலைக்கழகத்திலும், கெய்ரோவில் உள்ள அல் அஹார் பல்கலைக்கழகத்திலும் பயின்ற ஒரு சில பட்டதாரிகள் இருக்கின்ற இந்தக் கட்சியின் உறுப்பினர்கள், சீனர்களையும் இந்தியர்களையும் இன்னும் வெளி நாட்டவர்களாகவே எண்ணி வந்தார்கள். வெகுகாலமாகவே அங்கேயிருந்த போதிலும், இச் சீனர்களுள்ளும், இந்தியர்களுள்ளும் பலர் பிறப்பாலும் பிற தொடர்புகளாலும் மலேசியர்களாச மாறிவிட்டிருந்தனர்.

பெரும்பாலான மலேயர்களின் இந்த நடத்தையிலிருந்து எழுந்த பிரச்சினையானது, துங்குவிற்கானதொரு பெருங் குழப்பமாகவே இருந்தது. மலேயர்களுக்குள் ஏற்பட்ட இந்தப் பிளவோடு இஸ்லாமியக் கட்சியில் அதிகமான மலேயர்கள் சேர்ந்து வருவதன் மூலமாய் அதன் பலம் பெருகிக்கொண்டு வருவதைப்பற்றி கூட்டாட்சிக் கட்சி கவலை கொண்டது. இதோடு அவருக்குக் கூட்டாட்சிக் கட்சியில் பலத்தை நிலை நாட்ட வேண்டியதிருந்தது. மலேயர்களில் பெரும்பான்மையானவர்கள், குறிப்பாக நகர்ப்புறங்களிலே உள்ளவர்கள் ஏற்றுக்கொண்ட இஸ்லாமியக் கட்சி போக்குகளுக்கு எதிராகப் போட்டி இருந்துகொண்டிருந்தது. இந்த நேரத்திலே, நகர்ப்புறப் பகுதிகளில் பரப்பப்பட்ட மித வாதக் கருத்துக்கள், இப்பொழுது பல்வேறு பிளவுபட்ட கட்சிகளாகப் பிரிந்து நிற்கின்ற சீனமக்களிடையே ஏற்றுக்கொள்ளப் படவில்லை யென்றாலும், இன்றும் மலேசியா சீனச் சங்கத்தினுடைய பணிக்காக இயங்கி வருகின்றன.

மலேசிய இந்தியக் காங்கிரஸிலும் இது போன்ற போக்குகளே வளர்ந்தன. ஏறக்குறைய மலேசியாவில் பத்து லட்சம் இந்தியர்கள் இருந்தாலும் அதில் பாதிப் பேர்களுக்குத்தான் வாக்களிக்கும் உரிமை இருந்தது, மலேசிய சீனச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்

பினர்களைப் பல இந்தியர்கள் வெளியேற்றியதிலிருந்து காணப் படும் உண்மை கொண்டு அவர்களுக்கும் திடீர்ப் பிரிவினை ஏற்பட்டது எனலாம். 1969ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் நிகழ்ந்த மனிதப் படுகொலைக்குக் காரணமாகக் கோலாலம் பூரில் நடைபெற்ற தேர்தல் கொண்டாட்டங்களில் சீனர்களோடு சில இந்தியர்களும் சேர்ந்துகொண்டது அறிந்ததொன்ருகும். ஏதோ ஒரு வகையில் பழைமையை நினைப்பூட்டவும், புதுமைக் காகத் தயார்படுத்திக் கொள்ளவும், இதைப்போன்ற பிறவற்றில் தெளிவான இணக்கமற்ற தன்மை மலேயர்கள் பக்கம் இருந்தது.

ஸ்டாம்ஃபோர்டு ரேபிள்ஸ் சிங்கப்பூரில் வந்திறங்கியதிலிருந்து, பேரரசை உருவாக்கியது வரை மலேசியாவின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் நாட்டில் மூன்று இனக் குழுக்களை நாம் காணலாம். அம்மண்ணின் பழங்குடிகளே மலேயர்கள். நாட்டின் பொருள்களைச் சுரண்டுவதில் ஈடுபட்ட பேரரசை உருவாக்குபவர் களுக்கு உதவி செய்வதற்காக நாட்டிற்கு வந்தவர்களே சீனர்களும் இந்தியர்களுமாவார்கள். உடுத்தியிருந்த துணியைத் தவிர வேருென்றில்லாமல் அவர்களுள் பலர் மலேயத் துறை முகங்களில் வந்திறங்கினுர்கள். அவர்கள் கடினமாக உழைத் தார்கள். இச் சோதனையில் பலர் இறந்தார்கள். ஒரு சிலர் நல்ல நிலைக்கு வந்தார்கள்.

இதுவே எல்லாவிடங்களிலும் உள்ள முன்னேடிகளின் வரலாருக இருந்தது. இச் சீனர்களுள்ளும் இந்தியர்களுள்ளும் பலர் திரும்பவும் மலேசியாவில் குடியேறினுர்கள். யாரெல்லாம் மலேசியாவில் பிறந்திருந்தார்களோ அவர்களுக்கும் அவர் களுடைய குழந்தைகளுக்கும் நாட்டில் உள்ள அவர்களுடைய முன்னேர்களோடு சிறிதளவு தொடர்பு இருந்தது. மலேயா சுதந்திர நாடானபோது, அவர்களுள் பலர் மலேயாவின் குடி மக்களாக ஆகிக்கொண்டு, பின்னுல் புதியதொரு மலேசியா எனப் படும் புதிய மலேயாவை உருவாக்க வேண்டும் என்னும் பணியில் ஈடுபட்டுள்ள மலேயர்களோடு சேர்ந்து உழைத்தார்கள். தென் கிழக்கு ஆசியா முழுவதிலும் நடைபெற்ற ஏகாதிபத்திய வரலாற்றில் பல்வேறு இனச் சமூகமாக மலேசியா உருவானது;

ஆனாலும் அதே போன்று தனிப்பட்டதொரு சுதந்திர நாடு என்ற தன் யதார்த்த நிலையில் திருப்தியடையவேண்டி இருந்தது.

மெர்டேகா வரைக்கும் மூன்று இனக் குழுக்களும் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்திருந்தன என்பதுவே மலேசியாவின் யதார்த்த நிலையாய் இருந்தது. மலேயர்கள் அரசியல் செல்வாக்கை அனுபவிக்கின்ற அதேநேரத்தில், சீனர்கள் பொருளாதார முன்னேற்றம் காணவும், இந்தியர்கள் ரப்பர்த் தோட்டங்களிலும், அரசாங்கத்தின் சிறு நேர அரசாங்க அலுவல்களில் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்ளுவதில் நிறைவு கண்டும் வந்தனர். மெர்டேகா சுதந்திர விழாவிலிருந்தபோது எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து வந்ததே மலேசியாவின் முன்னேற்றத்தின் கோலமாகும். தேர்தல்களிலும் கலகங்களிலும் சீனர்கள் தங்கள் பொருளாதாரச் சக்தியை உபயோகித்தார்கள் என்றும், அவர்களைத் தொடர்ந்து இந்தியர்களும் இச்செயல்களைச் செய்வதில் சீனக் கூட்டத் தலைவர்களைப் பின்பற்றுபவர்களாக நடந்துகொண்டார்கள் என்றும் காணப்பட்டது. இந்தச் சீன இந்தியர்களின் செல்வாக்கைக் கீழிறக்குவதற்கானதொரு தீர்மானம் நிச்சயமாய் இருந்தது. மலேசியாவின் துரதிருஷ்டவசமாகத் துங்கு எவ்வளவு காலம் பதவியில் இருக்கிறாரோ அவ்வளவு காலத்துக்கு இது வெற்றியடையாது என மலேயர்களில் பலர் எண்ணினார்கள்.

இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட மக்களில், குறிப்பாக மலேயர்களுக்குள் பலர், கருத்து வேற்றுமை கொண்டிருந்தனர். அவசர நிலை அறிவிக்கப்பட்டபிறகும் கூட இக்கருத்து வேற்றுமை கொழுந்துவிட்டுக்கொண்டிருந்தது. மலேசியாவின் பரந்துபட்ட அதிகாரங்களை அடக்கியாளுகின்ற தேசிய ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் இயக்குநரைப் போன்று பணியாற்றுகிற துணைப் பிரதம மந்திரியான துன் அப்துல் ரசாக்கால் அதிகாரம் செலுத்தப்பட்டு வந்த புதிய அமைப்பின்கீழ் துங்கு சாதாரணமானதொரு மனிதராகப் பெயரளவில் இருக்கின்றார் என்பது இதன் வாதமாகும்.

மலேசியாவில் ஒரு பேரணியில் உள்ளவர்கள் துங்கு அப்துல் ரகுமானைப் பதவியை விட்டுக் கீழிறக்கி விடுவதே மலேசியாவின்

அதிகமான அளவில் குறிப்பிடத்தக்கதொரு காரியமாக இருந்தது. மலேயாப் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்கள், கலகங்கள் மறைந்ததற்கு மூன்று மாதங்களுக்குக் கொஞ்சம் குறைந்த அளவிலே செப்டம்பர்த் திங்களின் தொடக்கத்திலே ஐந்து நாட்களாக ஊர்வலம் நடத்தினார்கள். இந்தத் துங்கு எதிர்ப்பு ஊர்வலங்கள் புதிதான இனக் கலகத்தைத் தூண்டிவிடும் எனக் கடுமையான எச்சரிக்கைகளாக இருந்தன.

தேசீய ஒழுங்கு நடவடிக்கைக் குழு செயல்பட்டபொழுது அக்குழுவானது துங்குவைப் பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்னும் வகையில் எந்த மாணவர்கள் தீவிரமாக ஈடுபடுகிறார்களோ, அந்த மாணவர்கள்மீது தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், மேலும் அவர்களுடைய இனங்களை எல்லாம் தாண்டி, அவர்கள்மேல் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தெளிவாக அறிவித்தது. அது துங்குவிற்கு எதிரான மாணவர் போராட்டத்தினை அடக்கியது. அவர் உடனடியாக விலகவேண்டும் என்னும் அவர்களின் கோரிக்கை நிச்சயமாகக் கெட்ட எண்ணமேயாகும். மலேசியாப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியதே துங்குவாகும்.

இந்த நேரத்தில் மலேசியர்களின் துன்பத்தின் மூல காரணமாக மாறி வருகின்ற சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிராகக் கடுமையானதொரு நடவடிக்கை எடுப்பார்கள் என மலேசியாவில் உள்ள அதிகாரத்தில் உள்ளவர்களிடையே சிறிதளவு ஐயம் இருந்தது. எந்தவிதக் குறிப்பும் இல்லாமல் கலகங்களுக்குப் பொறுப்பானவர்களைத் துன் அப்துல் ரசாக்கூடக் குற்றம் சாட்டினார். அவர், அவர்களைத் தேசீய விரோதிகள் என்று அழைத்ததோடு இதைப் போன்று தேசீய விரோதச் சக்திகளோடு தொடர்புடைய எவரையும் தண்டிக்காமல் விடுவதில்லை என்றும் சொன்னார். மே மாதம் 19ஆம் தேதி ஒரு இந்தியப் பத்திரிகை நிருபரிடம் சொன்னதாவது: "அவர்கள் எல்லோருக்கும் எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்கப் போகிறோம்; இந்தியர்களாயினும் சரி, அவர்கள் குற்றவாளிகள் எனப்பட்டால் அவர்களுக்கெதிராகவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்."

ஒரு வாரத்திற்குப் பிறகு தேசீய விரோதச் செயல்களில் ஈடு பட்டிருப்பதாக இந்தியச் சீனக் கூட்டத்தார்கள் கண்டுபிடிக்கப் பட்டால் அவர்கள் மலேசியாவை விட்டு வெளியே அனுப்பப் படுவார்கள் என்று மனிதச் சக்தித் துறை அமைச்சரான வி. டி. சம்பந்தன் சொன்னார். அவர் சொன்னதாவது: "ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் இயக்குனரால் அவர்கள்மேல் இரக்கம் காட்ட வேண்டாம் என்பதில் பிரச்சினை இல்லை. அவர்கள்மேல் எந்தவிதமாகவாவது இரக்கம் காட்டுவதற்கு நாடு விரும்புகிறது என நான் நினைக்கவில்லை. நாட்டின் பிற்போக்குச் சக்திகளை வெளியேற்றுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் நாங்கள் எடுப் போம்."

ஒரு சில இந்தியர்கள் மலேசியாவிலிருந்து நாடு கடத்தப் பட்டாலும் நாட்டுக்கு வெளியே இன்னும் பல பத்தாயிரக் கணக்கான இந்தியர்கள் கசக்கி வெளியே எறியப்படலாம் என் பதில் ஐயமில்லை. தேசீய ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையின்மூலம் (மலேசியாவின் முதல் கொந்தளிப்பிற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு) மலேசியாவில் வேலை செய்வதற்கும்,தாங்களே வேலை செய்வதற்கு மலேயா குடிமக்களல்லாதவர்கள் நிரந்தரமாக அல்லது பிற வழிகளில் தேர்ந்து எடுப்பதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும், வேலை ஒப்பந்தங்களுக்காகப் பதிவு செய்ய வேண்டும் எனவும் நடவடிக்கைக் குழுவின் இயக்குனரான துன் அப்துல் ரசாக் உத்தரவிட்டார். நாட்டில் வசிக்கின்ற குடிமக்கள் அல்லாதவர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள இது அரசாங்கத்துக்கு உதவியாக இருக்கும் என உத்தரவு வெளியிடப் பட்டது.

ஏறக்குறைய மலேசியாவின் எல்லா மூலைகளிலும் உள்ள மலேசியக் குடிமக்களல்லாதவர்களை நீல நிறமான சிறு அட்டைத் துண்டுகளைக் கொண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் கண்டுபிடிக்க ஆரம்பித்தபொழுது, 100,000 மேற்பட்ட மலேயக் குடிமக்களல்லாதவர்களுக்குப் பீதியை உண்டு பண்ணியது. மலேயக் குடிமக்களல்லாதவர்களும் அவர்களைச் சார்ந்திருப்பவர் களும் ஏறக்குறைய ஏழுரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள்

இருண்டதொரு எதிர்காலத்தை எதிர்நோக்கி இருக்கவேண்டியதாயிருந்தது. அவர்களில் பாதிப் பேர் இந்தியர்களும், மீதிப் பாதிப் பேர்களுக்குமேல சீனர்களும் ஆவார்கள். பெயரளவில் இச் சிறு அட்டைத் துண்டுகள் வேலை அனுமதித்த சீட்டுகள் என்றாலும் உண்மையிலே இவைகள் வேலை நிறுத்தச் சீட்டுகளாகும்.

மலேசியாவில் இவ்வளவுக்கு அதிகமான மலேசியக் குடிமக்கள் அல்லாதவர்கள் இன்னும் வாழ்ந்து வருவது பார்ப்பதற்கு விந்தையாகப் பட்டாலும் இந்தச் சூழ்நிலையில் பல காரணங்கள் அடங்கி இருந்தன. அவைகளுள் மலாய் மொழித் தேர்வு என்பது அக் காலத்தில் தகுதி நிர்ணயத் தேர்வு போன்றது. அண்மையில், ஒரு கல்வி அறிவில்லாதவர் ஒரு மலேசியக் குடிமகனுவதற்கு விண்ணப்பம் செய்திருந்தால் அவரிடம் அப்பல்லோ-11 என்னும் நிலாக் கப்பல் சந்திரனில் இறங்கியதை விரிவாகச் சொல்லச் சொல்லிக் கேள்விகள் கேட்கப்படும்.

இந்தியச் சீனர்களின் பிறப்புச் சான்றிதழ்களை ரோமன் எழுத்தில் எழுதுவதில் ஏற்படுகின்ற எழுத்துத் தவறுகளும் 1942ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரைக்கும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் ஜப்பானிய ஆக்கிரமிப்பின்கீழ் இருக்கும்பொழுது கிடைக்காத இவ்வசதிகளும் மலேயா மாநிலங்களுக்கும், மலாக்கா ஜலசந்திக் குடியேற்றங்களுக்கும், பெனுங்கு முதலிய பகுதிகளுக்கும் இடையே தெளிவான வேற்றுமையும், மெர்டேகாவின் (1957) பொழுது ஏற்பட்ட மாற்றங்களும், மலேசியா (1963) உருவானபொழுதும், மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் வெளியேறிய நேரத்திலும் (1965), இன்னோரன்ன பலவிதக் காரணங்களாலும் அதிக அளவுக்குப் பல விண்ணப்பங்கள் தீர்மானிக்கப்படாமலே இருந்தன. வேலை அனுமதித் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்குப் பிறகுகூட, 1969ஆம் ஆண்டு வரை, சரிபார்க்க வந்திருந்த 6,000 விண்ணப்பங்களுள் 1,500 விண்ணப்பங்கள்தான் தகுதியானவைகள் என்று அரசாங்கம் தீர்மானிக்க முடிந்தது.

ஏறக்குறைய இரண்டாண்டுகளாக உத்தரவின்படி மலேசியா ஆளப்பட்டது. நாட்டிலுள்ள ஆட்சியின் தலைமைப் பீடமாகத்

தேசீய ஒழுங்கு நடவடிக்கைக் குழு இருந்தது. அமைச்சரவை அதனுடைய கட்டளைப்படி செயல்பட்டது. 1969ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி, துக்க வெள்ளிக்கிழமையிலிருந்து ஒரு சில மாதங்களில் மலேசியாவின் வாழ்க்கை அமைதி நிலைக்கு வந்தது. பல்வேறு இனக் குழுக்களிடையே நம்பிக்கை பொதுவாகத் திரும்பி வந்தது. பொருளாதார முன்னேற்றங்கள் முன்னால் உள்ளதைப் போன்று இயங்க ஆரம்பித்தன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, செலாங்கோர் சுல்தானின் ஆலோசகராக முதல் பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதி நியமிக்கப்பட்ட பொழுது, கோலாலம்பூரிலிருந்து சுரங்கப் பகுதிகளுக்கு இடையே சில மைல்களுக்குக் கடினமான வண்டிப் பாதை இருக்கும். 1957ஆம் ஆண்டு யூனியன் ஜாக் (Union Jack) கீழே இறக்கப்பட்டபொழுது 6,000 மைல்களுக்கு மேற்பட்ட நல்ல சாலைகள் இருந்தன. இது 1969ஆம் ஆண்டில் 10,000 மைல்கள் என விரிவுபடுத்தப்பட்டது. இதைப் போன்று பல்வேறு துறைகளில் ஏற்பட்டு வருகின்ற முன்னேற்றமானது குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. பொதுவாக அத்திட்டங்களின் குறிக்கோள்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டன. 1959ஆம் ஆண்டு மெர்டேகாவிற்கு முன்னால் முதல் மலேயாவின் முன்னேற்றத்திட்டம் (Malayan Development Plan) நிறைவேற்றப்பட்டது. 1951ஆம் ஆண்டிலிருந்து 1955ஆம் ஆண்டு வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்திற்குரிய இத் திட்டங்களின்மூலம் இக்காலத்தில் மக்கள்தொகையானது நூற்றுக்கு 3 விழுக்காடுகள் வீதம் பெருகிக்கொண்டு வரும்பொழுது, ஏறக்குறைய பொதுத் துறைகளில் போட்ட மூலதனம் முன்னுள்ளதைப் போன்று இரண்டு மடங்கானதோடு பொருளாதார உற்பத்தியில் 3¾ விழுக்காடுகள் வீதம் பெருகியது. 1961ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது திட்டமானது ஒருவகையில் பிரம்மாண்டமானதாக இருந்தது. அரசாங்கமானது திட்டங்கள் தயாரிக்கவும் சிறப்புத் திட்டக் குழுக்கள் அமைக்கவும், நாடெங்கிலும், மாநிலத்திலிருந்து சிறு மாவட்டம் வரை, பல இடங்களில் தேசீய

வருவாயிலிருந்து செயலகங்கள் (Operations Rooms) நிறுவவும் செய்தது. நாட்டின் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுப்பதற்கென, இராணுவ முறைகளில், வரைபடங்களோடும் செய்முறை திட்டங்களோடும் செயல்படுகின்ற தலைமை நிலையங்கள் செயல்பட்டன.

மலேசியா உருவானபொழுது, ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டத்தின்மூலம் முன்னேற்ற வேலைகள் தொடங்கப்பட்டன. 1966ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பெற்ற முதல் மலேசியாவின் திட்டத்தின் காலம் 1971ஆம் ஆண்டு வரை இருந்தது. நாடு முழுவதிலும் வருட வருமானத்தை மேலும் 1·7 விழுக்காடுகளுக்குக் குறையாமல் உயர்த்த வேண்டுமென்பதே இதன் நோக்கமாக இருந்தது. மக்கள் தொகைகளின் பெருக்கம் இன்னும் 3 விழுக்காடுகள் அதிகமாகும் பொழுது இது குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமேயாகும். இதற்கு மேலாக இத் திட்டத்திற்கு ஆரம்ப நிலையில் அதிக அளவில் மூலதனம் தேவைப்பட்டது. ஆனல் இதெல்லாம் திட்டத்தின் ஆரம்ப நிலைகளிலே காணப்படக் கூடியவைகளாகும். இதற்கு மேலும், அரசாங்கத்திற்கு நடத்தையும், அரசியல் பொதுநோக்கும் இருந்ததால், தனியார் துறையினர்கள் மலேசியாவைச் சார்ந்திருப்பதற்கு விருப்பம் கொண்டவர்களாய் இருந்தார்கள். நாட்டில் அரசாங்கத்தின் கொள்கையானது தனியார் மூலதனங்களை நோக்கியிருந்ததற்கு இதுவரை எந்த விதமான தப்பெண்ணத்திற்கும் இடமில்லாமல் இருந்தது. அவசர நிலையின் காரணமாக, நாட்டிலுள்ள அரசியல் நிலைமையில் ஏற்பட்ட நிலைமையானது, சிறிது காலத்திற்குத் தனியார் மூலதனங்களைத் தடை செய்யும் நிலைமையை உண்டு பண்ணியது.

எப்படியிருப்பினும், இரண்டு இக்கட்டான காலகட்டங்கள் மலேசியாவை பலப்படுத்தத் துணை புரிந்திருக்கின்றன. முதலாவதாக, 1948ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு மெர்டேகா அறிவிப்புக்குப் பிறகு நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்னும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் பொதுவுடைமைக் கட்சியானது, தேசிய விடுதலையியக்கக் கட்சியாக மக்களிடையே எந்தவித உரிமையும் பெறமுடியவில்லை. 1958, 1959 இவ்

வாண்டுகளின்பொழுது எண்ணற்ற பொதுவுடைமைவாதிகள் சரணாகதி அடைந்தார்கள். கட்சியில் மிச்சம் இருந்தவர்களும், பொதுவுடைமைவாதிகளின் முக்கியத் தலைவர்களும் தாய்லாந்தின் எல்லைப் புறங்களை ஒட்டி இருக்கின்ற வடக்கு மலேயாவிலுள்ள மலைகளில் பதுங்கிக்கொண்டனர்.

இந்தோனேசியாவின் மோதலின்போது இரண்டாவது இக்கட்டான நிலை வந்தது. உண்மையிலே இந்த இக்கட்டான நிலையானது பல்வேறு இனங்களை மலேசியர்கள் என ஒன்றுபடுத்தவும் இந்தோனேசியர்களால் தூண்டப்பட்ட தீவிர மலேசியா தேசீய வாதிகளை அடக்கவும் துணைபுரிந்தது. கிழக்கு மலேசியாவிலும் சராவக், சபா முதலிய மாநிலங்களிலும் (முன்னாள் பிரிட்டிஷின் வடக்கு போர்னியோ) இந்தோனேசியாவின் மோதலுக்கும் எல்லைப்புறச் சண்டைக்கும் சிறிது காலத்துக்குப் பின்னால் முழு அமைதி நிலவியது. சபாவிலுள்ள பாதுகாப்பு நிலையானது எந்த வகையிலும் கவலை தருவதாக இல்லை. ஆனால் சராவக்கிலுள்ள இராணுவ முறைகளில் திறமையாக இயங்கி வருகின்ற பொதுவுடைமை அமைப்பானது கடுமையானதொரு சோதனையாக இருந்தது. மலேயாவிலிருந்து கடலால் 400 மைல்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும் சராவக்கிலும் சபாவிலும் உள்ள இனப் பிரச்சினைகளோடும் மலேயர்களும், சீனர்களும், பல்வேறு போர்னியோக்காரர்களும் கலந்திருப்பதால் விளைகின்ற உள்ளூர்க் கலகங்களோடும், இதற்கு மேலும் சபாவிலுள்ள கடாசன் (Kadazans) இனத்தவர்களாலும், சராவக்கிலுள்ள இபன் (Ibans), தியாக் (Dykas) பிரச்சினைகளோடும் மிகவும் சிக்கல் நிறைந்தவைகளாக இருக்கின்றன.

மலேசியா தீவிர மாறுதல் அடைந்த நேரத்தில், நாட்டுக்கு மூன்றாவது ஆபத்தான நிலை ஏற்பட்டது. 1969ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதியிலிருந்து நான்கு நாட்களுக்கு மேலாக நடைபெற்ற இரத்தப் போராட்டத்துக்குப் பிறகு, நாட்டில் உள்ள பெரும்பான்மையான இனக் குழுக்களுக்கிடையே உணர்ச்சி வெறி ஏற்பட்டபொழுது கலகங்களின் தீக்கொழுந்துகளை அணைக்க அரசாங்கத்தில் முதல் முயற்சி எடுக்கப்பட்டது எனலாம். பதவியைக் கைப்பற்றுவதற்காகத் தீட்டப்பட்ட சதித்

திட்டங்கள் இவை என முதலில் துங்கு பேசினார். பிறகு உள்துறை அமைச்சரான தாதே இஸ்மாயில் சீன ரகசியச் சங்கங்களின் கைக்கூலிகளுக்கு எதிராக எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். இந்த அவசர நிலையில் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளுவதற்காக ஏறக்குறைய 300-க்கு மேற்பட்ட சீன ரகசியச் சங்கங்கள் ஒன்று திரண்டிருக்கின்றன என்றும் அவர் சொன்னார். இந்தியப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் பொதுவுடைமைச் சீனா என்பது ஆசியாவுக்கு மிகப் பெரியதொரு அபாய எச்சரிக்கையாகும் எனத் துங்கு அறிவித்தார்.

ஐயத்திற்கிடமில்லாதபடி மலேசியாவில் உள்ள பெரும்பான்மைச் சீனர்கள் இங்கேயிருக்க விரும்பினார்கள். உண்மையிலே அவர்களுக்கு எங்கேயும் போவதற்கு இடம் இல்லை. மலேசியாவிலிருந்து செல்லுகின்ற நாற்பது லட்சம் சீனமக்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் தாய்வானுக்கு இடவசதி ஒன்றும் இல்லை. மாவோயிஸத்தின் (Mao-ism) பலிகளாக ஆகி விடுவார்கள். அதற்கு மாறாக அவர்களை வைத்துக்கொள்ளுவதற்கு எந்தவிதமான கருத்து வேற்றுமையும் மலேசியாவுக்குக் கிடையாது. ஆனால் நிச்சயமாக எசமானர்களாக அல்ல.

இரண்டு பக்கங்களிலும் பயங்கர வழிகளில் செல்லக்கூடிய தீவிரவாதிகள் உண்டு. மலேயர்களுக்குள் இருக்கின்ற "புதுசுகள்" (ultras) மலேசியாவில் இன்னும் அதிகமான உரிமைகளைக் கோராமல் இருந்தால், அவர்களோடு சீனர்களும், இந்தியர்களும் திரும்பவும் வாழ்வதற்கு அனுமதிக்கலாம் என்றார்கள். சீனர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே உள்ள "புதுசுகள்", அதற்கு மாறாக, தலைமுறை தலைமுறையாக மலேசியாவில் வசித்து வருவதால், அவர்களை மலேசியர்கள் இரண்டாந்தரக் குடிகளாக எண்ணவேண்டாம் என வாதிட்டார்கள்.

இவைகளுக்கு மேலாகவும், வேறு சில அடிப்படையான வேற்றுமைகள் மலேசியாவிலுள்ள இனங்களிடையே நிலவி வந்தன. குறிப்பாகச் சீனர்களுக்கிடையே மலேயர்கள் இக்கட்டான காலத்திலேயிருந்து வெளியேறி, நாட்டில் உள்ள அதிகாரத்தில் நிலையாய் அமர்ந்துவிட்டார்கள் என்ற பொதுவானதோர்

உணர்வு தோன்றியது. எப்படியோ இந்தத் தெளிவு ஏற்பட்ட தன் காரணமாகத் திரும்பவும் முன்பிருந்த நிலைக்கு வந்தார்கள். இந்த அதிகாரப் போராட்டத்தில் அதிக அளவுக்கு இந்தியர்கள் கலந்து கொள்ளவில்லை. சில ஆயிரக்கணக்கான இந்தியர்கள் தங்கள் தாயகத்திற்குக் குறிப்பாகத் தென்னிந்தியாவிற்குத் திரும்பி வந்தார்கள். அவர்களுள் பலர் நடுத்தர வருவாய்க் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். பாதுகாப்பு என்பதே அவர்களின் குறிப்புச் சொல்லாக இருந்தது. மீதியுள்ளோர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். நல்ல நிலையிலே இருப்பதால் மலேசியா விலே திரும்பவும் தங்க நினைப்பவர்களும், இந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்பு மறைய, இனி என்ன நடந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், திரும்பவும் மலேயாவிலே தங்க நினைப்பவர்களும் என இரண்டு வகைப்படுவார்கள்.

1969ஆம் ஆண்டு துங்கு அப்துல் ரகுமான் சொன்னது மலேசியாவின் சூழலுக்கு மேலும் கசப்பானதாக இருந்தது. அவர் அறிவித்ததாவது: ''மலேசியாவில் ஒவ்வொரு இனங்களும் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான மாற்று வழி என்ன? நாட்டிற்கான மாற்று வழி நாடு பெரிய சுடுகாடாவதேயாகும்.''

இந்த அறிக்கையானது மலேசியாவிலுள்ள இனத் தொடர்புகளிடையே முன்பிருந்த அமைதி நிலைக்குத் திரும்பக் கொண்டு வந்தது. மேலும் அவசரநிலை ஒழிந்து பாராளுமன்ற ஜனநாயகம் திரும்பி வந்தது.

15. மலேசியா எங்கே?

1969ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி மலேசியாவில் நடந்த இனக் கலகங்களிலிருந்து இதுவரை இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. கலகங்கள் விட்டுச்சென்ற காயத்தை ஆற்றுவதற்குக் காலம் பிடிக்கும். தேசீயப் பாதுகாப்பை நிலைநாட்ட அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மலேயா, மலேசியாவின் "பாபக்கான" (Bapak) துங்கு அப்துல் ரகுமான் பதவியை விட்டு வெளியே வந்தார். அவருக்குக் கீழ் பல ஆண்டுகளாகத் துணைப் பிரதம மந்திரியாக இருந்தவரும், துங்குவால் நியமிக்கப்பட்டவருமான துன் அப்துல் ரசாக், துங்குவிற்கு அடுத்த பிரதம மந்திரியானார். மலேசியாவிலுள்ள சீனர்களும் இந்தியர்களும் மலேயர்களோடு ஒத்துப்போகவேண்டும் என்னும் தேவையை உணர ஆரம்பித்தார்கள். பொதுவாக ஆனால் திடமாக இன ஒற்றுமையானது மலேசியாவில் நிலைநாட்டப்பட்டு வந்தது.

கடைசியாக ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1971ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22ஆம் தேதியன்று மலேசியாவின் பாராளுமன்றக் கதவுகள் முதன்முதலாகத் திறக்கப்பட்டன. 1969ஆம் ஆண்டு மே மாதத்தில் கோலாலம்பூர் வீதிகளில் கலகங்கள் தோன்றியபொழுதிலிருந்து அதுவரைக்கும் உண்மையிலே இராணுவ ஆட்சி நடைபெற, அதைத்தொடர்ந்து உடனே பொதுத்தேர்தல்கள் வந்தன. சீனர்களின் சராசரி மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மலேசியச் சீனச் சங்கத்தின் தலைவர்களை அரசாங்கத்தில் சேர்த்துக்கொண்டது மலேசியா அரசாங்கம். இந்த வகையில் இந்தியர்களும் மலேயா இந்தியக் காங்கிரசின் தலைமைப் பதவி பொருத்தமாக இல்லாததால் இதைப்போன்றதொரு கொள்கையை இந்தியர்களுக்காக அரசாங்கம் மேற்கொண்டது.

இதே நேரத்தில், கலகங்களின் விளைவாக, நாட்டில் முதலில் சில வாரங்களுக்கு நிலவி வந்த கிளர்ச்சிக்கும், தெளிவில்லாமைக்கும் பிறகு நாட்டின் பொருளாதாரமானது முன்னேற்றம் அடையத் தொடங்கியது. வெளிநாட்டு முதலீடுகள் நம்பிக்கையோடு வளர்ந்துகொண்டிருந்தன. நாட்டின் லாபத்தைப் பெருக்குவதற்காக எப்படி இவர்களை இணங்கச் செய்வது என்பதை மலேயர்களின் செல்வாக்குப் பெற்ற ஆட்சியானது தெரிந்திருந்தது. ஆனாலும் உண்மையில், சீனர்கள்தான் தனிப்பட்டதொரு பொருளாதார முன்னேற்றத்தை அனுபவித்து வந்தார்கள். அண்மையில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, நூற்றுக்கு ஒன்பது விழுக்காடுகள் அளவில்தான் பெருந்தொழில் அதிகாரிகளாகவும், 14 விழுக்காடுகளுக்குக் குறைவாகத் தொழில்துறை வல்லுநர்களாகவும் மலேயர்கள் இருந்தார்கள்.

ஐக்கிய மலேயா தேசீய நிறுவனத்தின் தலைவர்களுள், நாட்டின் எல்லா இனத்தவர்களின் நம்பிக்கையும் ஆதரவையும் பெற்ற ஒரு தலைவர் துங்குவாகத்தான் இருக்க வேண்டும். மெர்டேகாவிற்கான போராட்டத் தலைவரும் அவரே. இந்தோனேசியாவின் மோதலுக்கு எதிராக மலேசியாவின் பேரணியை இயக்கியவர். மலேசியாவின் பல்வேறு இனங்களையும் ஒரே தேசீய இனமாக ஆக்கியதே அவரது திறமையான ஆளுகையினால் என்று சொல்லலாம். 1970ஆம் ஆண்டு முடிவில் துங்கு அப்துல் ரகுமான் தம்முடைய பதவியிலிருந்து விலகியபொழுது மலேசியாவிலுள்ள மலேசியரல்லாதவர்கள் மலேயர்களோடு ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதை உணர்ந்தார்கள்.

துங்குவின் வாரிசும், தேசீய நடவடிக்கையின் தலைவருமான துன் அப்துல் ரசாக், ஒருபோதும் முக்கியமான வேலைகளில் அவசரப்படுபவர் என்னும் எண்ணத்தை மக்களிடையே உண்டாக்காமலும் தன்னுடையதென வைத்திருக்கும் கொள்கைகளைச் செயல்படுத்தாமல் துங்குவின் கொள்கைகளை நிறைவேற்றி வருவதாலும், உண்மையிலே வாரிசின் முன்மாதிரியாக இருந்தார். உழைப்பாளி என்ற வகையில் அவர் பணி சிறந்த ஒன்றாகும். ஒற்றுமைக்காகப் பாடுபட்டதில் அவர் பணியின் சிறப்பு அளவிடற்கரியது.

வரலாற்றில் உள்ள தன்னிகரற்ற தலைவர்களின் பின் வருகின்ற அரசியல்வாதிகளின் நிலைமையைப் போன்றே துன் ரசாக்கின் நிலைமையும் இருந்தது அவருடைய துரதிருஷ்டமேயாகும். மிகப் பெரிய வேலைகளைச் செய்பவர் என்றும், நாட்டுக்கு நல்லவர் என்றும், குறித்த வேலைகளைச் செய்வதில் ஆர்வம் உள்ளவர் என்றும், தன் கீழ் இருப்பவர்களிடம் மதிப்புள்ளவர் என்பதும் அவருடன் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும். பல தடவைகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாட்டின் பெருமையைத் திறமையாக நிலைநாட்டியிருந்தபோதிலும் வானொலி அறிவிப்பாளர்களிடமும், பத்திரிகையாளர்களிடமும், இடையறாத தொடர்பு கொண்டிருந்ததாலும் துங்குவிடம் அவர்கள் காட்டிய ஈடுபாடு போல, துன் ரசாக்கிடம் அவர்கள் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை. எப்படியோ, திட்டமிட்டுப் பணிபுரிபவராகவும், திறமையானவராகவும், அதேநேரத்தில் நண்பர்கள் இல்லாதவராகவும் இருக்கின்ற ஒருவர் என்னும் எண்ணத்தை உருவாக்கி வந்தார். இந்த எண்ணம் மாற இன்னும் கொஞ்ச காலம் பிடிக்கும்.

துங்குவும், துன் ரசாக்கும் திறமை வாய்ந்ததொரு குழுவை உருவாக்கினார்கள். ஆனால் நடந்தது என்ன? மலேசியாவின் மக்களுக்கு அவர்களின் நம்பிக்கைகளையும் நம்பிக்கையின்மைகளையும் தாங்கிக் கொள்ளும் மனிதக் குறியீடாக இருப்பது என்பது ரசாக்கிற்குக் கடினமானதொரு செயலாக இருந்தது. ஐக்கிய மலேசியா தேசீய நிறுவனத்தின் தலைவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று அவைகளைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு வாய்ப்புகள் இருந்ததால் அவர் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் அவரால் மிகச் சிறந்த முறையில் வெற்றிகரமாகப் பணியாற்ற முடிந்தது.

ஆஸ்திரேலியாவுக்கும், தென்கிழக்காசியாவுக்கும் பாதுகாப்பின் பொருட்டுப் பேச்சு வார்த்தைகள் நடத்த துன் ரசாக் பயணம் செய்தபொழுது, அவருடைய இடத்தில் தேசீய ஒழுங்கு நடவடிக்கைத் தலைவராக பணியாற்றி வரும் உள்துறை அமைச்சரான டாக்டர் இஸ்மாயிலுக்குக் கடந்த தேர்தலுக்குப் பிறகு யு. எம். என். ஓ. வின் இன்னுமொரு தலைவராக முன்னுக்கு

வருவதற்கு ஏற்றவாறு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. மலேசியா அரசாங்கம் எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தைத் தெளிவாகவும் குறைந்த அளவு உணர்ச்சி வேகத்துடனும் எடுத்துச் சொன்னார்.

பொதுநலம் பேணுபவராகவும், பண்புள்ளவராகவும், திறமையானவராகவும் உள்துறை அமைச்சர் விளங்கினார். தேசீய ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமானால் மலேசியாவின் மக்கள் தொகையில் காணப்படும் இன அமைப்புகளுள் ஒன்றுக்கொன்று தங்களுக்குள்ளாகவே எடுத்துக் கொள்ளும் சலுகைகளினால் நிலைநாட்ட முடியும் என்பதை உணர்ந்தவர். துரதிருஷ்டவசமாக அவருடைய கட்சிகளுக்குள்ளாகவே அடுத்து அதிகாரத்துக்காக இருப்பவர்களைத் "தீவிரவாதிகள்" என எண்ணினார்.

மலேசியாவில் நிலவிய தீமைகளின் மயான அமைதியானது தன்னுடைய வேர்களை நாட்டு வரலாற்றில் பதித்திருக்கின்றது. இன்று காணப்படும் இனப் பிரச்சினைகளின் தோற்றமானது உண்மையிலே ஒப்பந்தப்படி வேலைகளை அதிகப்படுத்துவதிலும், தவிர்க்க முடியாத நிலையில் உள்ளூர்க் குடிகளைப் பலம் குறைந்தவர்களாகச் செய்யும் முகமாக வேற்றுநாட்டவர்களை கணக்கு வரையறையின்றிக் குடியேற அனுமதிக்கச் செய்ததும் முதலான செயல்களில் ஈடுபட்டு வந்தபொழுது குடியேற்ற வாதிகளின் செயல்களில் காணப்படுகிறது எனவும் இக்குடியேற்ற வழிகளில் தீர்வுகள் இல்லை எனவும் சொல்லலாம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து நாட்டிற்கு விடுதலை வேண்டுமென்று ஒன்று திரண்டபொழுது, அந்த விடுதலை இயக்கத்தில் அக்கறையில்லாதவர்களாகச் சீனர்கள் இருந்தார்கள் என்பது உண்மையாக இருந்தது. குடியேற்ற அதிகாரிகளால் பாதுகாப்புப் பெற்ற பொருளாதாரச் சலுகைகளினால் சீனர்கள் பயந்து இவ்விதம் நடந்துகொண்டார்கள் என்று சொல்லுவதில் புதிதாக ஒன்றுமில்லை. இந்த ஒரு காரணத்திற்காகத்தான் மலேயர்கள் தங்களைப்போன்றே எல்லா உரிமைகளையும், சிறப்புச் சலுகைகளையும் அனுபவிக்க உரிமையுள்ளவர்கள் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தயங்கினார்கள்.

மலேயர்கள் அனுபவித்துவரும் சிறப்புச் சலுகைகளினால் கலவரப்படாத டாக்டர் இஸ்மாயில் போன்ற மலேயர்கள் பலர் இருப்பினும், உண்மையிலே, அப்படிக் கிடைத்த அச் சலுகைகளை எந்த வகையிலாவது காப்பாற்றிக்கொள்ள விரும்பினார்கள். அவருக்கு மலாய்ப் பரம்பரைமீது போதுமான அளவுக்கு மதிப்பு உண்டு. மற்ற இனங்களுக்குச் சமமாக உயர்த்துவதற்குப் பல சிறப்புச் சலுகைகள் மலேயர்களுக்கு நிச்சயம் தேவை என்பதைக் கேவலம் என உணருகிறார். வரலாற்றுச் சிக்கல்களுக்கான விடைகளைத் தவிர பிரச்சினைகளைத்தான் உண்டுபண்ணுகிறது என்றும் மலேசியாவின் இப்பொழுதுள்ள பிரச்சினைகளையெல்லாம் தற்போதுள்ளதோர் உண்மை நிலைகளிலே காணவேண்டும் என்பதுவே இதற்குரிய விடைகளாகும்.

ஒழுங்குமுறை அமைச்சராகவும் தேசீய ஒற்றுமைக்காக அமைச்சராகவும் இருந்த தன் சிரி கஜாலி சப்ஃபியா (Tan Sri Ghazali Shafie) பொறுப்புடன் பணியாற்றி வருகிறார். துங்கு அப்துல் ரகுமான் பிரதம மந்திரியாக இருந்தபொழுது, துங்குவின் நம்பிக்கையைத் துன் ரசாக் பெற்றதைப் போன்று, துன் ரசாக்கின் மதிப்பைப் பெற்ற கஜாலி சப்ஃபியா இளைஞராகவும் ஆர்வமுள்ளவராகவும் இருக்கிறார். இவர் முன்னாள் மலேசியாவின் தூதராகப் புதுதில்லியில் இருந்தவர்.

"கிராமீய நகர்ப்புறமாதல்" எனப்படும் திட்டத்தின்மூலம் மலேயர்களை நகரங்களுக்குக் கொண்டு வரவும், ஒழுங்கான முறையில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திலிருந்து விலகிய தொழிற்சாலை மூலமாக உருவாகும் புதிய நகரங்களுக்கு மலேயர்களைக் கொண்டு வரவும் செய்தால் இச் சண்டைக்கு முடிவு இருக்கும் என்பதே கஜாலியின் விடையாகும். அரசாங்கத்தின் நெருங்கிய மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் தொழில்மயமாக்குதலானது மலேயர்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுக்க வேண்டும் என்னும் நோக்கத்திற்காகவும், அதேநேரத்தில், இந்தத் தொழிற்சாலைகளைச் சொந்தம் கொண்டாடுவதற்கு அதிகப் பங்குகள் மலேயர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பதற்காகவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. கஜாலி ஒரு கற்பனைவாதியே தவிர இனவாதியல்ல. விரைவில் எதையும் பெறவேண்டும் என்று

துடிக்கும் "முரட்டு இளைஞர்களை" அவர் திறமையாகச் சமாளிக்க வேண்டியதிருந்தது. நாட்டிலுள்ள மலேயர்களல்லாதவர்களுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்தார் என்பதுகூட அதன் பொருளாக இருக்கும்.

இவ்விதமாகத் துன் அப்துல் ரசாக் தம்முடைய விசுவாசமும், நாட்டுப்பற்றும், அதிகப் பொறையுடைமையும் உடையவர்களைத் தம்மோடு வைத்திருந்தார்.

மலேயர்கள் தங்களுக்குரிய மலேசியாவில் இருக்கிறார்கள். மலேயர்களல்லாதவர்கள் இந்த உண்மையை உணர்ந்து மலேசியா நாட்டின் குடிமக்கள் ஆவதற்கு ஏற்ற வகையில் தங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

மலேசியாவிலுள்ள பெரும்பான்மையான இந்தியர்கள் இந்த உண்மைக்கு ஏற்றவகையில் மாறிவந்திருக்கிறார்கள் எனலாம். வரும் ஆண்டுகளில் பெரும்பான்மை மக்களைக்கொண்ட சீனச் சமூகமும் இதற்குப் பொருந்தும் வகையில் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கின்றார்கள்.

உண்மையிலே சீனர்களும், இந்தியர்களும், மலேயர்களும் தங்களுக்குள்ளாகவே ஒத்துப்போவது என்பது கடினமானதொரு செயலாகும். ஆனால் இதற்கு மாற்றுவழி இன்னும் நினைத்துப்பார்க்க முடியவில்லை.